Issued 8—2—1966]

MADRAS LEGISLATIVE ASSEMBLY DEBATES

OFFICIAL REPORT

THURSDAY, 11TH NOVEMBER 1965

VOLUME XXXII—No. 8

191

CONTENTS

	PAGES
I Questions and Answers	789–834
II Government Motions—	
(1) Suspension of rule 41 (3)	835
(2) Report of the Committee of Privileges on 'Nathigam' case	839
III Calling attention to—	
(1) Accumulation of stocks of yarn	835–836
(2) Non-availability of baby foodstuffs	836–838
(3) Hardships of match factories	838
IV Announcements—	
(1) The Madras Forest (Amendment) Bill, 1964	838
(2) The Madras University (Amendment) Bill, 1965 ..	901
V Presentation of Reports—	
(1) Report of the Committee of Privileges on 'Nathigam case	838
(2) Reports of the Committee on Subordinate Legislation—Eleventh and Twelfth Reports	839

[P.T.O.

©
GOVERNMENT OF MADRAS
1966

Le... Assembly Department
...rge, Madras-9

PRICE 50

211, 31. N65
N65·32-8
64,998

CONTENTS—cont.

	Pages
VI Government Bills—	
(1) The Madras Appropriation (No. 5) Bill, 1965 (L.A. Bill No. 43 of 1965) ..	839
(2) The Madras Appropriation (No. 6) Bill, 1965 (L.A. Bill, No. 44 of 1965) ..	839–901
(3) The Madras University (Amendment) Bill, 1965 (L.A. Bill No. 42 of 1965) ..	901–906
(4) The Madras General Sales Tax (Third Amendment) Bill, 1965 (L.A. Bill No. 36 of 1965) ..	906–908
VII Papers laid on the Table of the House ..	908

THE MADRAS LEGISLATIVE ASSEMBLY

Thursday, 11th November 1965.

The House met in the Assembly Chamber, *Fort St. George*, at half past eight of the clock, Mr. Speaker (THE HON. SRI S. CHELLAPANDIAN) in the Chair.

I.—QUESTIONS AND ANSWERS.

STARRED QUESTIONS

மணப்பாறை பஞ்சாயத்து யூனியன் மருந்தகம்.

*3—குறுகியகாலக் கேள்வி—திரு. என். பி. எம். சின்னய்யா கவுண்டர் : கனம் சுகாதார அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) மணப்பாறை நகரப் பஞ்சாயத்து எல்லைக்குள் இருந்த பஞ்சாயத்து யூனியன் மருந்தகத்தை, 2—10—1965-ம் தேதியிலிருந்து, மேற்படி யூனியனின் சம்மதம் பெறுமல், ஆரம்பச் சுகாதார நிலையமாக மாற்றிவிட்டது உண்மையா ?

(இ) ஆமெனில், காரணமென்ன ?

(உ) மறுபடியும், மேற்படி மருந்தகத்தை சர்க்கார் மருந்தகமாக மாற்ற உத்தேசமுண்டா ?

THE HON. SRIMATHI JOTHI VENKATACHELLUM : (*a*) & (*b*) In order to implement the scheme of maintenance of the National Malaria Eradication Programme, the Government sanctioned the opening of 120 Primary Health Centres in the State in December 1964. The Government of India wanted that orders on the implementation of the maintenance programme of the National Malaria Eradication Programme through Primary Health Centres, should be issued immediately. In view of urgency the Government sanctioned the opening of 120 new Primary Health Centres. With a view to economise the Government of India have suggested that a few existing Panchayat Union and Government dispensaries could be converted, if found suitable. Orders were accordingly issued for the conversion of some of the dispensaries into Primary Health Centres. The Panchayat Union Dispensary at Manaparai was one such converted into a Primary Health Centre.

(*c*) No.

திரு. என். பி. எம். சின்னய்யா கவுண்டர் : மணப்பாறைக்குச் சுற்றுப்புறத்திலே 30 மைல் தூரத்திற்கு வேறு எந்த ஆஸ்பத்திரியும் கிடையாது. ஹெல்த் சென்டராக இருப்பதால் பிரேத பரிசோதனை செய்யமாட்டேன் என்கிருர்கள். ஆக்சிடன்ட் கேஸ்களையும், இன்னும் விஷம் சாப்பிட்டவர்கள் கேஸ்களையும் பார்க்க முடியாது

64928

[11th November 1965

என்று சொல்லிவிடுகிறார்கள். இதை கவர்ன்மென்ட் ஆஸ்பத்திரியாக மாற்றவேண்டுமென்று பஞ்சாயத்து யூனியனில் தீர்மானம் போடப்பட்டது. ஆனால், இதைப் பிரைமரி ஹெல்த் சென்டராக மாற்றிவிட்டார்கள். புத்தானத்தம் பஞ்சாயத்திற்கு இந்த ஹெல்த் சென்டரை மாற்றி மணப்பாறையிலே கவர்ன்மென்ட் ஆஸ்பத்திரியை ஆரம்பிக்க ஏற்பாடு செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம்: மணப்பாறையிலே பிரைமரி ஹெல்த் சென்டர் ஆரம்பிக்கப்பட்டுவிட்டது. இதை இப்போது மாற்றுவதற்கு இயலாது. மணப்பாறையில் கவர்ன்மென்ட் ஆஸ்பத்திரி வேண்டுமென்றால் தனியாக எழுதியனுப்பினால் கவனிக்கப்படும்.

திரு. மீ. கலியாணசுந்தரம்: மணப்பாறை ஒரு சப் தாலுக்காவாக இருக்கக்கூடியது. 25 மைல் தூரத்திற்கு வேறு ஆஸ்பத்திரி இடையாது. அங்கேயிருந்த ஆஸ்பத்திரியை பிரைமரி ஹெல்த் சென்டராக மாற்றியதைப் பற்றி ஆட்சேபிக்கவில்லை. இந்தப் பிரைமரி ஹெல்த் சென்டரை ஆரம்பித்தது இன்னொரு கவர்ன்மென்ட் ஆஸ்பத்திரியை ஏற்படுத்துவதற்குத் தடையாக இருக்கக் கூடாது. அந்த வகையில் ஒரு கவர்ன்மென்ட் ஆஸ்பத்திரியை ஆரம்பிப்பதற்கு உத்தேசம் உண்டா ?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம்: இந்த டிஸ்பென்சரியில் நேஷனல் மலேரியா ஏராடிகேஷன் ப்ரோக்ராம் மெயின்டனன்ஸ் ஸ்கீம் இருந்தது. அவைகள் இருக்கிற இடத்திலே உள்ள ஆஸ்பத்திரிகளை மாற்றி பிரைமரி ஹெல்த் சென்டர்களாக்க வேண்டுமென்று கவர்ன்மென்ட் ஆப் இந்தியா ஆர்டர் செய்திருக்கிறது. அதன் பிரகாரம் மணப்பாறையிலே பிரைமரி ஹெல்த் சென்டர் ஏற்படுத்தப்பட்டது. மணப்பாறையில் தனியாக ஒரு ஆஸ்பத்திரி வேண்டுமென்று கேட்டால் அது கவனிக்கப்படும்.

திரு. எம். தண்டாயுதபாணி: தலைவர் அவர்களே, இந்த பஞ்சாயத்துக் கூட்டுமன்றங்களிலிருந்து அனுப்பப்பட்ட தீர்மானத்திற்குப் புறம்பாக ஆஸ்பத்திரிகளைப் பிரைமரி ஹெல்த் சென்டர்களாக மாற்றி அமைத்ததன் நோக்கம் என்ன ? சர்க்காரிடமிருந்து ஒரு இடத்தில் பிரைமரி ஹெல்த் சென்டர் ஆரம்பிக்க வேண்டுமென்று வந்து பஞ்சாயத்துக் கூட்டுமன்றம் வேறு இடத்தில் ஆரம்பிக்க வேண்டுமென்று தீர்மானம் போட்டால் அதை மறு பரிசீலனை செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம்: மணப்பாறையிலிருந்து மாற்ற வேண்டுமென்று அரசாங்கத்திற்குத் தீர்மானம் வரவில்லை. மெயின்டனன்ஸ் ஆப் மலேரியா எராடிகேஷன் ப்ரோக்ராம் இருக்கிற இடத்திலே ஆஸ்பத்திரியை பிரைமரி ஹெல்த் சென்டராக கன்வர்ட் பண்ணவேண்டுமென்று கவர்ன்மென்ட் ஆப் இந்தியா உத்தரவின்பேரில் மாற்றப்பட்டது. இதைத் தவிர, பஞ்சாயத்து யூனியன் ரெசல்யூஷனுக்கு எகென்ஸ்டாக ஒன்றும் செய்யவில்லை.

11th November 1965]

திரு. என். பி. எம். சின்னய்யா கவுண்டர்: புத்தானத்தம் பஞ்சாயத்தில் யூனியன் சாவடி இருக்கிறது. சாவடியில் ஹெல்த் சென்டரை வைக்கலாம். மணப்பாறை பஞ்சாயத்து யூனியன் மருந்தகத்தை பிரைமரி ஹெல்த் சென்டராக மாற்றுவது பஞ்சாயத்து யூனியனுக்கே தெரியாது. 100 நல்ல காரியம் செய்கிறோம். அங்கு ஒரு ஏழை இறந்துவிட்டால் டாக்சி வைக்கப் பணத்திற்காக வீடு வீடாகப் பிச்சை எடுக்க வேண்டியிருக்கிறது;

கனம் சபாநாயகர்: கனம் அங்கத்தினர் கேள்வியாகப் போட வேண்டும்.

191

திரு. என். பி. எம். சின்னய்யா கவுண்டர்: எப்படியும் அதைக் கவனித்து மணப்பாறையில் அரசாங்க ஆஸ்பத்திரியாக மாற்ற வேண்டுமென்றும், புத்தானத்தம் பஞ்சாயத்திலுள்ள யூனியன் சாவடியில் பிரைமரி ஹெல்த் சென்டராக மாற்றி நியமனம் செய்யுமாறு கேட்டுக்கொள்ளுகிறேன்.

கனம் சபாநாயகர்: அதையெல்லாம் கனம் அமைச்சருக்கு எழுதி அனுப்புங்கள்.

திரு. மீ. கலியாணசுந்தரம்: ஹெல்த் சென்டராக மாற்றுவதற்கு மணப்பாறை பஞ்சாயத்து யூனியனைக் கலந்தாலோசிக்கப்பட்டதா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம்: பஞ்சாயத்து யூனியனிலிருந்து ரெசல்யூஷன் வந்ததா என்பதுதான் கேள்வி. ரெசல்யூஷன் ஒன்றும் வரவில்லை. மற்ற விவரங்களுக்குத் தனியாகக் கேள்வி போட்டால் விவரம் கொடுக்கப்படும்.

திரு. கரு. சீலமச்சாமி: கிராமங்களிலெல்லாம் வைத்திய வசதி செய்து கொடுக்க வேண்டும் என்பது அரசாங்கத்தின் நோக்கம். எம்.பி.பி.எஸ். டாக்டர்கள் இருக்கிற இடங்களை பிரைமரி ஹெல்த் சென்டராக மாற்றுகிறார்கள். இதை விட்டுவிட்டு வேறு இடத்தில் ஆரம்பித்தால் நல்லது. பஞ்சாயத்து யூனியனிலிருந்தும் அப்படித்தான் தீர்மானம் போடப்பட்டிருக்கிறது. ஆகையால் அதை எல்லாம் அரசாங்கம் எடுத்துக்கொள்ளாமல் இப்படிச் செய்வதன் கருத்து என்ன ?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம்: எம்.பி.பி.எஸ். டாக்டர் இருக்கிற இடத்தை பிரைமரி ஹெல்த் சென்டராக மாற்றவேண்டுமென்று சொல்லவில்லை. எப்படியெல்லாம் ஜனங்களுக்கு சௌகரியம் செய்ய முடியுமோ அப்படியெல்லாம் செய்யப்பட்டு வருகிறது.

திரு. எம். தண்டாயுதபாணி: தலைவர் அவர்களே, பஞ்சாயத்து கூட்டுமன்றத்திலே தீர்மானம் போடப்பட்டு . . .

MR. SPEAKER: The hon. Member is putting a hypothetical question. Let the hon. Member please put a specific question. If the hon. Member wants any clarification regarding the rules or any other matter, he may write to the Government and get a reply.

திரு. எம். தண்டாயுதபாணி : குறிப்பாக, பட்டுக்கோட்டை தாலுக்காவிலே திருவனத்தில் பிரைமரி சுகாதார நிலையம் ஆரம்பிக்க வேண்டுமென்று தீர்மானம் செய்யப்பட்டது. ஆனால் கந்தர்வக்கோட்டையில் ஆரம்பிக்க வேண்டுமென்று சர்க்காரிடமிருந்து உத்திரவு வந்திருக்கிறது. ஆகையால், இதைப் பரிசீலனை செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : இது மணப்பாறையைப்பற்றிய கேள்வி. பட்டுக்கோட்டையைப் பற்றியவரை பஞ்சாயத்து ரெசல்யூஷன் போட்டிருக்கிறது. கனம் அங்கத்தினருடைய ரிக்வஸ்ட் வேறு இருக்கிறது. ஆகையால், கலக்டரிடம் அவர்களுடைய ஒபினியன் கேட்ட பிறகுதான் இதை முடிவு செய்கிறோம்.

(சில கனம் அங்கத்தினர்கள். 'சார், சார்' என்றார்கள்.)

கனம் சபாநாயகர் : உப கேள்வி கேட்க விரும்பும் அங்கத்தினர்கள், 'சார், சார்' என்று கூப்பிடக் கூடாது என்று ஏற்கனவே சொல்லியிருக்கிறேன். கையைத் தூக்கினால் போதும்.

திரு. து. ப. அழகமுத்து : மணப்பாறையில் சர்க்கார் மருந்தகம் வேண்டுமென்றால் தனியாக எழுதியனுப்பினால் கவனிக்கப்படும் என்று அமைச்சர் அவர்கள் கூறினார்கள். பஞ்சாயத்து யூனியன் மருந்தகத்தை அரசாங்க மருந்தகமாக மாற்ற வேண்டுமானால் பெட் வசதிகள் இருக்க வேண்டுமென்று விதி இருக்கிறது. அப்படிப்பட்ட வசதிகள் எல்லாம் மணப்பாறையில் இருக்கிறது. ஆகவே, மணப்பாறை பஞ்சாயத்து யூனியன் மருந்தகத்தை பிரைமரி ஹெல்த் செண்டராக மாற்றுவதைவிட்டு கவர்ன்மென்ட் ஆஸ்பத்திரியாக ஆக்க வேண்டுமென்று அரசாங்கம் உத்தேசிக்குமா என்று அறிய விரும்புகிறேன். மேலும், பிரைமரி ஹெல்த் சென்டராக மாற்றிவிட்டால் பின்னால் அதை ஆஸ்பத்திரியாக மாற்றுவது கஷ்டம். ஆகையால், பிரைமரி ஹெல்த் சென்டராக இருக்கவேண்டுமென்ற உத்திரவை மாற்றுமா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : பிரைமரி ஹெல்த் சென்டரை சர்க்கார் மருத்துவமனையாக ஏற்றுக்கொள்ள முடியாது.

திரு. மீ. கலியாணசுந்தரம் : சார், நான் கேட்ட கேள்விக்கு கனம் அமைச்சர் அவர்கள் பதில் சொல்லும்போது, "பஞ்சாயத்து யூனியன் நிர்மானம் அனுப்பியதா? என்பதுதான் கேள்வி" என்று சொன்னார்கள். கேள்வியைப் பார்த்தால் தெரியும்.

"Whether it is a fact that the Panchayat Union Dispensary within Manaparai Town Panchayat limits was converted into a Primary Health Centre from 2nd October 1965 without obtaining the approval of the said Panchayat Union".

என்றுதான் கேள்வி கேட்கப்பட்டிருக்கிறது. பஞ்சாயத்து யூனியனைக் கலந்து ஆலோசிக்காமல் பஞ்சாயத்து யூனியன் ஆஸ்பத்திரியை மாற்றியிருக்கிறார்கள். அப்படி விதிமுறையை மீறி மாற்றி அமைப்பதன் காரணம் என்ன என்பதை கனம் அமைச்சர் அவர்கள் தயவு செய்து சொல்ல வேண்டும்.

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : பஞ்சாயத்து யூனியனை கலந்தாலோசித்து பிரைமரி ஹெல்த் சென்டர் ஆரம்பிக்கவேண்டுமென்று சொல்லும்போது, டிஸ்ட்ரிக்ட் ஹெல்த் ஆபீசர், கலெக்டர் அவர்கள் எல்லாம் பஞ்சாயத்து யூனியன் சேர்மேனைக் கலந்தாலோசித்த பிறகுதான் கன்வர்ட் பண்ணவேண்டுமா அல்லது புதிதாக ஆரம்பிக்கவேண்டுமா என்பதைப் பற்றி முடிவு செய்யப்படுகிறது.

திரு. என். பி. எம். சின்னய்யா கவுண்டர் : கவர்ன்மென்ட் ஆஸ்பத்திரியாக மாற்றவேண்டுமென்று பஞ்சாயத்து யூனியன் தீர்மானம் போட்டது. அப்படியில்லாவிட்டாலும் ஏற்கனவே இருந்தமாதிரி மருத்துவமனையாக இருக்கவாவது அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : ஒவ்வொரு கம்யூனிட்டி டெவலப்மென்ட் பிளாக்கிலும் ஒரு ப்ரைமரி ஹெல்த் சென்டர் கொடுக்க வேண்டும் என்று இருக்கிறது. 'கண்டிஷன்ஸ்' ஸ்டேபிளாக இருந்த காரணத்தால் இதை 'கன்வர்ட்' பண்ணி இருக்கிறார்கள். தனிப்பட்ட முறையிலே டிஸ்பன்சரி இருக்கவேண்டுமென்று எழுதி அனுப்பினால் பரிசீலனை பண்ணி சொல்ல முடியும்.

High Schools

*441 Q.—SRI V. SANKARAN :
SRI T. P. ALAGAMUTHU : } Will the Hon. the Chief Minister be pleased to state—

(a) whether there is any proposal before the Government to open Model High Schools in the district headquarters of the State; and

(b) if so, the details thereof?

THE HON. SRI M. BHAKTAVATSALAM :

(a) No.

(b) Does not arise.

புலவர் கா. கோவிந்தன் : தலைவர் அவர்களே, மாவட்டங்களிலே உயர்நிலைப் பள்ளிகளின் எண்ணிக்கை அதிக அளவில் பெருகி வருகிறது. பள்ளிகள் துவக்குகிற நோக்கிலே பள்ளிக்கு வேண்டிய முழுத் தேவைகளைக் கணக்கிட்டு துவக்கப்படுவது இல்லை, பள்ளிகள் என்றால் எவ்வாறு இருக்கவேண்டும் என்பதற்கு

[11th November 1965

ஒவ்வொரு மாவட்டத் தலைநகரிலும் ஒரு 'மாடல் ஸ்கூல்' நடத்தினால் நல்லதுதான். அதை அரசாங்கம் பரிசீலனை செய்து நடவடிக்கை எடுப்பார்களா?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: பள்ளிகள் எப்படி இருக்க வேண்டும் என்று பரீட்சார்த்தமாகத் தனியாக ஒரு பள்ளி வைக்க வேண்டிய அவசியம் இல்லை. அப்படி ஒரு தனியாக பள்ளி வைத்தால், அது உயர்ந்த பள்ளி, அதிலே படிக்கிற மாணவ, மாணவிகள் உயர்ந்தவர்கள், மற்றவர்கள் எல்லாம் தாழ்ந்தவர்கள் என்ற கருத்து ஏற்படும். ஆகையினால் இப்போது அரசாங்கம் 'மாடல் ஸ்கூல்' வைப்பதாக இல்லை. மத்திய அரசாங்க உத்தியோகஸ்தர்களின் குழந்தைகள் பல மொழி பேசுகிறவர்கள். அவர்கள் நிமித்தமாக இப்போது மாவட்ட தலைநகரில் 'மாடல் ஸ்கூல்' வைக்கலாம் என்ற யோசனையை மத்திய அரசாங்கம் வைத்துக்கொண்டு இருக்கிறார்கள்.

திரு. வை. சங்கரன்: அது மத்திய அரசாங்கத்தின் அமைப்பாக இருந்தாலும் கல்வியானது மாகாண ராஜ்யங்கள் சம்பந்தப்பட்டதாக இருப்பதால், இப்பள்ளியை நடத்தும் பொறுப்பு நம் ராஜ்ய அரசாங்கத்தினிடம் விடப்படுமா? அப்படி விடப்பட்டால் எப்படி நடத்தப்படும்?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: ராஜ்ய அரசாங்கத்தின் பொறுப்பாக இருந்தாலும், தனிப்பட்டவர்கள் இப்போது பள்ளிக்கூடங்களை நடத்துகிறார்கள்.

திரு. மீ. கலியாணசுந்தரம்: மாடல் ஹைஸ்கூல் என்றால் அதன் அமைப்பு என்ன? எதற்கு மாடலாக இருக்கலாம் என்பதை அறியலாமா?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: மாடல் ஸ்கூல் என்றால் ஸ்கூலுக்கு மாடல். வேறு ஒன்றும் இதிலே சந்தேகத்திற்கு இடமில்லை. மேலும் விளக்கம் சொல்வதற்கு என்னால் முடியவில்லை. எப்படி இந்தத் திட்டம் உருவாகப்போகிறது என்பது எனக்குத் தெரியவில்லை.

திரு. ம. கமலநாதன்: தலைவர் அவர்களே, புதிதாக ஆரம்பிக்கப்பட இருக்கும் உயர்நிலைப் பள்ளிக்கு முன்பணமாக ரூ. 5,000 கொடுக்க வேண்டும். இப்போது அது சற்று அதிகமாக ஆக்கப்பட்டிருக்கிறது என்று சொல்லப்படுவது உண்மையா?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: இது இரண்டு ஆண்டுகளுக்கு முன்பே ஆயிற்று. ரூ. 10,000 டிபாசிட் கட்ட வேண்டும். கட்டிக் கொண்டு வருகிறார்கள். மூன்று தவணையாகக் கொடுக்கலாம் என்று இருக்கிறது. ரூ. 10,000 டிபாசிட் கட்டினாலும் அரசாங்கத்தின் பொறுப்பு ஏராளமாக இருக்கிறது.

11th November 1965]

* 442 **கேள்வி.—திரு. பி. முருகையன்:** கனம் முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) திருச்சிராப்பள்ளி மாவட்டம், ஆலங்குடியில் பெண்களுக்கு என்று தனியாக உயர்நிலைப்பள்ளி ஒன்று ஏற்படுத்த மாவட்ட கலெக்டரிடமிருந்து பரிந்துரைக் கடிதம் அரசாங்கத்திற்கு வந்ததா?

(இ) ஆம் எனில், அதன் மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: (*a*) Yes.

(*b*) The Director of Public Instruction was asked to take into consideration the request for the opening of a High School at Alangudi, while sending consolidated proposals for the year 1964–65.

திரு. வி. எஸ். எஸ். மணி: தலைவர் அவர்களே, பெண்களுக்கு உயர்நிலைப் பள்ளி வசதி செய்து கொடுக்க வேண்டுமென்பது அரசாங்கத்தின் கொள்கை. தனியார் ஒரு பெண் உயர்நிலைப் பள்ளி துவக்க ஆரம்பத்தால் கட்டவேண்டிய தொகை ரூ. 70,000 ஆக இருக்கிறது. இதைக் குறைக்க உத்தேசம் உண்டா?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: இப்போதுதான் உயர்த்தப்பட்டு இருக்கிறது. ரொம்ப நாளைக்கு முன்பு ரூ. 35,000 ஆக இருந்தது. இந்த நிதியிலிருந்து பள்ளிக்கூட பராமரிப்புச் செலவு செய்யலாம் என்று ஏற்பாடு. இப்போது செலவு எல்லாம் அதிகமாகி இருக்கிறது. ஆகையால் ரூ. 35,000-த்தை ரூ. 70,000 ஆக உயர்த்தி இருக்கிறோம். இன்னொரு ரூ. 35,000-த்தை, 7 தவணைகளில் 7 ஆண்டுகளில் ரூ. 5,000 ஆகக் கட்டலாம் என்று இருக்கிறது. இதைக் குறைப்பதாக உத்தேசம் இல்லை.

புலவர் கா. கோவிந்தன்: தலைவர் அவர்களே, உயர்நிலைப் பள்ளியைத் துவக்க ரூ. 10,000 பணம் கட்டவேண்டுமென்று சொல்லப்படுகிறது. தவணைகளாகக் கட்டலாம் என்றிருக்கிறது. பள்ளிக்கூடத்தை ஆரம்பிக்கவேண்டும் என்ற ஆர்வத்தில் முதல் தவணைப் பணத்தை கட்டிவிடுகிறார்கள். அடுத்த தவணைப் பணம் கட்டப்பட வரும்போது பணம் கட்ட வாய்ப்பு ஏற்படுவதில்லை. அதனால் அடுத்த வகுப்பு துவங்குவதற்கு அனுமதி அளிக்கப்பட மாட்டாது என்று சொல்லப்படுகிறது. யாரோ செய்த தவறினால், மாணவர்கள் பாதிக்கப்படும் நிலைமை ஏற்படுகிறது. இதை அரசாங்கம் பரிசீலித்ததா?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: மாணவர்கள் சரியான பள்ளியைப் பார்த்துத்தான் சேருவார்கள். மாணவர்களுக்கே சந்தேகம் இருந்தால் வேறு பள்ளியைப் பார்த்துப் போகலாம்.

*** 443 Q.—SRI V. SANKARAN: Will the Hon. the Chief Minister be pleased to state whether there is any proposal to improve the syllabus, in elementary and secondary stages, in schools particularly in respect of Science?**

[11th November 1965

THE HON. SRI M. BHAKTAVATSALAM : The revision of syllabi for standards I to XI have been under consideration of the Government. The revised syllabi for Standards I to XI have been published. It has been decided to introduce one Elective in the syllabi for Standards X and XI. General Science is included in the Core subjects. One Elective may be chosen either from the Science subjects or from Humanities.

திரு. வை. சங்கரன் : தலைவர் அவர்களே, இப்போது பள்ளிகளிலுள்ள விஞ்ஞானப் படிப்புத் தரத்தை உயர்த்த சர்க்கார் முயன்று இருக்கிறார்களா என்று அறிய விரும்புகிறேன். நம்முடைய தொழில் வளர்ச்சிக்கும், சர்க்கார் போட்டிப் பரிட்சைகளுக்கும் விஞ்ஞான அறிவு அதிகம் தேவையாக இருப்பதால், இப்போதுள்ள தரத்தை மாற்றி, உயர்த்த அரசாங்கம் தீர்மானித்து இருக்கிறதா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : விஞ்ஞானப் படிப்பின் தரத்தை உயர்த்த, நான் இப்போது குறிப்பிட்டுள்ள 'எலெக்டிவ்' சப்ஜெக்ட்டிலிருந்து எடுத்துக்கொள்வது நன்றாக அறிவு பெறுவதற்கான ஒரு முறை.

*444 கேள்வி.—திரு. செ. மாதவன் : கனம் முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) மும்மொழித்திட்டத்தை நிறைவேற்றுவதற்காக உயர்நிலைப் பள்ளிகளிலும், கல்லூரிகளிலும் கல்வித் திட்டத்தில் மாற்றம் செய்யும் திட்டம் ஏதேனும் இம்மாநில அரசாங்கத்தின் பரிசீலனையில் இருக்கின்றதா ?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (a) No.

(b) Does not arise.

* 445 கேள்வி.—திரு. து. ப. அழகமுத்து : கனம் முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) மதுரை டிவிஷனில் மாவட்ட மன்ற பள்ளிக்கூடங்களில் பரீட்சை நடத்தும் முறையில் மாற்றம் ஏதேனும் செய்யப்பட்டுள்ளதா ?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (a) No.

(b) Does not arise.

* 446 கேள்வி.—திரு. எம். வி. கரிவேங்கடம் : கனம் முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) பத்தாம் வகுப்புவரை படிக்கும் மாணவர்களின் தேர்வு முடிவிற்கு அவர்கள் மாதாந்திரத் தேர்வில் பெற்ற எண்கள் கணக்கில் எடுத்துக் கொள்ளப்படுகிறதா ?

11th November 1965]

(இ) ஆம் எனில், பதினோராம் வகுப்பிற்கு நடத்தப்படும் அரசினர் பொதுத் தேர்விலும் இம்முறை கையாளப்படுமா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (அ) Principles governing promotions up to Standard X are laid down by Headmasters of schools in consultation with the Staff Council for each standard.

(இ) The marks obtained in the S.S.L.C. Public Examination alone are taken into consideration.

போதனா மொழி

* 447 கேள்வி.—திரு. கே. ஏ. மதியழகன் : கனம் முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) 1965-66-ம் ஆண்டில் தமிழ்நாட்டில் எல்லாக் கலைக் கல்லூரிகளிலும் தமிழைப் போதனா மொழியாக்கும் திட்டம் ஏதேனும் இம் மாநில அரசாங்கத்தின் பரிசீலனையில் இருக்கின்றதா ?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (a) No. There is no such proposal at present.

(b) Does not arise.

கல்லூரிகள்

* 448 கேள்வி.—திரு. கோ. சி. மணி : கனம் முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) குடந்தை அரசினர் கல்லூரியில் பட்ட மேற்படிப்பு வகுப்புகள் ஆரம்பிக்கும்படி கோரிய தீர்மானம் ஏதேனும் குடந்தை நகராட்சியிடமிருந்து சர்க்காருக்கு வந்ததா ?

(இ) ஆம் எனில், அதன்மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (a) Yes.

(b) The University of Madras is the authority to grant affiliation to Colleges to start post-graduate courses. The University is not in favour of granting affiliation to the Government College for Men, Kumbakonam, to start post-graduate courses. The Commissioner, Kumbakonam Municipal Council, was informed accordingly.

திரு. இரா. நெடுஞ்செழியன் : கனம் அவைத்தலைவர் அவர்களே, தஞ்சை மாவட்டத்தில் 5, 6 கல்லூரிகளிருந்தும் போஸ்ட்-கிராஜுவேட் கோர்ஸஸ் அமைக்க வாய்ப்பு எற்படவில்லை. ஆகவே, கும்பகோணம் அரசினர் கல்லூரியில் போஸ்ட்-கிராஜுவேட் கோர்ஸஸை விரிவான வகையிலே அமைக்க அரசாங்கம் முயற்சி எடுக்குமா ?

[11th November 1965

கனம் திரு. எம். பக்தவத்சலம் : கட்டட வசதி, மற்ற வசதிகள் இருந்தால்தான் பல்கலைக்கழகம் அனுமதி கொடுப்பார்கள். இதற்கு வேண்டிய கட்டட விஸ்தரிப்பு வேலையிலே கவனம் செலுத்திவிட்டால், மேலும் போஸ்ட்-கிராஜுவேட் கோர்சுக்கு தாம் அங்கீகாரம் பெற முடியும்.

* 449 **கேள்வி.—திரு. மு. கருணாநிதி :** கனம் முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) மாநிலக் கல்லூரி பெண்கள் விடுதியில் காப்பாளர் (Warden) யாரேனும் நியமிக்கப்பட்டிருக்கின்றார்களா ?

(இ) இல்லை எனில் நியமிக்கப்படாததற்குக் காரணம் என்ன?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (a) Yes. The Principal, Presidency College is the ex-officio Warden of the Woman Students' Hostel of the Presidency College.

(b) Does not arise.

* 450 **கேள்வி.—திரு. சோ. ஆறுமுகம் :** கனம் முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

இந்த ஆண்டு தமிழ்நாட்டில் நடைபெற்ற P.U.C., S.S.L.C. பரீட்சைகளில் தேர்வு பெற்ற மாணவர்களின் சதவிகிதம் என்ன ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : P.U.C. 45.1 per cent.

S.S.L.C. 56 per cent.

வீடு கட்டும் திட்டங்கள்

* 451 **கேள்வி.—திரு. எம். எல். மணி :**
திரு. வை. சங்கரன் : } கனம் கைத்தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) வீடு கட்டும் திட்டங்களுக்காக மூன்று ஐந்தாண்டுத் திட்டங்களிலும் மத்திய அரசினரிடமிருந்து நமது மாநில அரசு பெற்ற தொகை எவ்வளவு ?

(இ) அதில் திட்டங்களை நிறைவேற்றுவதற்கு செலவழிக்கப்பட்ட தொகை எவ்வளவு ?

THE HON. SRI R. VENKATARAMAN : (a) The Central assistance received by this Government from the Government of India from the beginning of the First Five-Year Plan till the end of the fourth year of the Third Five-Year Plan is Rs. 9[illegible]8.85 lakhs from Central Government funds and Rs. 358.17 lakhs from Life Insurance Corporation Funds.

11th November 1965]

(b) The assistance of Rs. 1,346.52 lakhs received from the Government of India and the Life Insurance Corporation has been disbursed to the various Housing agencies.

திரு. வை. சங்கரன் : இந்த ஹௌசிங் ஸ்கீமிற்குக் கொடுக்கப்பட்ட பணத்திலே ஒரு கணிசமான பகுதி மின்சாரத் திட்டங்களுக்காகப் பயன்படுத்தப்பட்டு வந்ததா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : இதற்கு விரிவான பதில் சொல்ல வேண்டும். சாதாரணமாக இது பட்ஜெட்டிலே விவாதிக்கப்படவேண்டிய விஷயம். மத்திய சர்க்கார் நமக்குப் பல துறைகளில் நிதி ஒதுக்கியிருக்கிறார்கள். அதற்கு அதிகமாக நாம் 'ஹௌசிங்'-ல் செலவழித்து இருக்கிறோம். அதிகமாகச் செலவழித்தது, 'நான்-ப்ளான்ஃ பண்ட்ஸ்' லிருந்து செலவழித்து இருக்கிறோம்.

Bus permits

* 452 Q.—SRI C. KOTHANDARAMA BAGAVATHAR : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(a) the number of temporary permits granted to spare buses and route buses by the Regional Transport Officers of North Arcot and Chingleput districts to meet the traffic demand during the Audi-Krithigai festival to Thiruthani in 1965; and

(b) the income accrued to the Government by way of surcharge in granting the above temporary permits?

THE HON. SRI R. VENKATARAMAN : (a) 329.

(b) Rs. 11,563.37.

SRI S. NANJUNDA ROW : Normally a bus plies a distance of two hundred miles. But during festival days some excess miles are permitted. Certain Regional Transport Officers permit an excess of twenty or thirty miles. Will the Government be pleased to consider the question of permitting an excess of fifty miles?

THE HON. SRI R. VENKATARAMAN : This is a request, not a question.

திரு. வி. எல். எல். மணி : சார், இந்த உற்சவ காலங்களில் ஸ்பெஷல் பர்மிட் என்று மோட்டார் வெகிக்கிள்ஸ் இன்ஸ்பெக்டர்கள் கொடுக்கிறார்கள். அது அரசாங்கத்தின் பார்வைக்கு வருமா ? சர்சார்ஜ் கொடுக்கவும் வழி செய்திருக்கிறார்களா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : ஸ்பெஷல் பர்மிட் கொடுத்தால் அதற்குக் கட்டணம் கட்டவேண்டுமென்று விதிகள் இருக்கின்றன.

[11th November 1965

திரு. எஸ். ஜே. ராமசாமி: தலைவர் அவர்களே, திருத்தணி ஆடிக் கிருத்திகைக்காக விடப்பட்ட பஸ்களுக்கு ஸ்பெஷல் பர்மிட்டுக்கு மனுச் செய்துகொண்டு—ஆடிக் கிருத்திகை 10-ம் தேதி என்று சொன்னால்—9-ம் தேதி அல்லது 10-ம் தேதி கொடுத்தார்கள். ஏன் இதை முன்பாகவே கொடுக்கக் கூடாது ? இன்ஸ்பெக்டர்களுக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தை கலெக்டருக்கு மாற்றுவாவது அரசாங்கத்திற்கு உத்தேசம் உண்டா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : இந்தமாதிரி புகார் சர்க்காரிடத்தில் வரவில்லை. இதைப் பற்றி எழுதி அனுப்பினால் பரிசீலிக்கப்படும்.

திரு. ஆ. தங்கவேலு : இந்த தாற்காலிக பர்மிட் வழங்கப்படுவதற்கு சர்சார்ஜ் வசூலிக்கப்படுகிறது. இது ஆடிட் செய்யப்படுகிறதா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : சர்க்கார் கணக்குகள் எல்லாம் தணிக்கை செய்யப்படுகின்றன.

பொறியியற் கல்லூரிகளில் வகுப்பு நாட்கள்

* 453 கேள்வி.—திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி: கனம் கைத்தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) மாநிலத்தில் உள்ள எஞ்சினீயரிங், பாலிடெக்னிக் கல்லூரிகளில் வாரத்திற்கு ஐந்து நாள் மட்டும் வகுப்புகள் நடத்த உத்தேசிக்கப்பட்டுள்ளதா ?

(இ) ஆம் எனில், எப்போதிலிருந்து அமுல் செய்யப்படும் ?

THE HON. SRI R. VENKATARAMAN : (a) & (b) As an experimental measure the Engineering Colleges and Polytechnics under the control of the Director of Technical Education are working for five days in a week with effect from the second term of the academic year 1965–66.

திரு. இரா. நெடுஞ்செழியன் : கனம் அவைத்தலைவர் அவர்களே, என்ஜினீயரிங் கல்லூரி, பாலிடெக்னிக் பள்ளிகள் போன்றவைகளில் அதிகமான மாணவர்களைச் சேர்த்துக்கொள்ள இட வசதியைப் பெருக்கும் வகையில் ஷிஃப்ட் சிஸ்டம் ஏற்படுத்துவது பற்றி அரசாங்கம் யோசிக்குமா ? எல்லா இடங்களிலும் முடியாது என்றாலும் வசதி உள்ள இடங்களிலாவது ஷிஃப்ட் சிஸ்டம் ஏற்படுத்துவது பற்றி ஆலோசிக்கப்படுமா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : சென்ற ஆண்டே செய்யப்பட்டு விட்டது. 120 மாணவர்கள் சேர்க்கவேண்டிய இடங்களில் 180 மாணவர்களைச் சேர்த்திருக்கிறோம். அதற்கு அதிகமாகச் சேர்த்தால் கொடுக்கும் பயிற்சியின் தரம் குறைந்து விடும் என்று நினைக்கிறோம். 60 மாணவர்கள் அதிகமாக எடுக்கப்பட்டவர்

V2ll, 3! N 805
N65.32-3

11th November 1965]

களுக்கு வேறு வேறு நேரங்களில் லாபரட்டரி, ப்ராக்டிகல் முதலியவைகளுக்கு ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. அதனால் தான் புதிதாகக் கொண்டு வந்திருக்கிற திட்டத்தில் காலையில் 8 மணி முதல் 12 மணி வரையில் பள்ளிப் பாடங்கள் என்றும், மாலையில் 1 முதல் 5 மணி வரையில் ப்ராக்டிகல் என்றும் பிரித்து வைக்கப் பட்டிருக்கிறது.

திரு. இரா. நெடுஞ்செழியன் : கனம் அவைத்தலைவர் அவர்களே, ஐந்து நாட்கள் மட்டும் வகுப்புகள் நடத்துகிற முறை பரிட்சார்த்தமாக மேற்கொள்ளப்பட்டிருக்கிறது என்று கூறினார்கள். எந்தக் காரணத்திற்காக, எந்த அடிப்படையில் இந்த முறை மேற்கொள்ளப்பட்டிருக்கிறது ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : மேல் நாடுகளில் இப்படித் தான் நடைபெறுகிறது. இந்தத் திட்டம் கொண்டுவரப்படுவதற்கு முன்னால் சில மாணவர்களுக்கு ஒரு நாள் காலையில் பாடம், சிலருக்கு ப்ராக்டிகல் என்று இருந்தது. இப்போது திருத்தி அமைத்ததில் எல்லா மாணவர்களுக்கும் காலை 8 முதல் 12 மணி வரை பாடம், மாலை நேரத்தில் ப்ராக்டிகல் என்று திட்டவட்டமாக ஏற்பாடு செய்திருக்கிறோம். இந்த முறை பல மேல் நாடுகளில் அனுஷ்டிக்கப்படுகிறது. அதைப் படிப்படியாகக் கொண்டு வரவேண்டுமென்று பரீட்சார்த்தமாக ஏற்பாடு செய்திருக்கிறோம்.

திரு. மீ. கலியாணசுந்தரம் : பயிற்சி நாட்களை 5 நாட்களாகக் குறைத்திருப்பது 6-வது நாள் மற்ற மாணவர்கள் பயிற்சி பெறுவதற்காகவா ? அல்லது பூர்ணமாக விடுமுறையா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : 6-வது நாள் படிப்பதற்காக. அவர்கள் தாங்களாகப் படித்து தகுதியை அதி[illegible] கொள்ள இப்போது அவகாசம் இல்லை, அவகாச[illegible] என்று செய்யப்பட்டிருக்கிறது.

Kodavanar Scheme

* 454 Q.—SRI S. NANJUNDA ROW : Will the Hon. the Minister for Food be pleased to state whether there is any proposal to take up the Kodavanar Scheme in Vedasandur Constituency during the Fourth Five-Year Plan period?

கனம் திரு. வெ. ராமைய்யா : இல்லை.

SRI S. NANJUNDA ROW : In view of the acute shortage of food and the backwardness of Vedasandur, will the Government be pleased to modify the irrigation scheme and take up the Kodavanar Project?

THE HON. SRI V. RAMAIAH : With a view to increase food production, the Government have considered schemes in the Kodavanar on a number of occasions, if not in one big scheme, in a number of small schemes to tap the waters.

[11th November 1965

New Kattalai High Level Canal

* 455 Q.—SRI M. KALYANASUNDARAM: Will the Hon. the Minister for Food be pleased to state—

(a) whether any representations were received recently by the Collector of Tiruchirappalli, from the ryots of the ayacut of New Kattalai High Level Canal protesting against the collection of water rates; and

(b) if so, the action taken thereon?

THE HON. SRI V. RAMAIAH: (a) Yes.

(b) The Government directed that the arrears of enhanced wet assessment for 5 faslis from fasli 1369 to 1373 due from the ayacutdars under New Kattalai High Level Canal and Pullambadi Canal in Tiruchirappalli district be collected in five instalments from fasli 1374 to 1378 at the rate of one arrear demand along with the kist in each fasli.

* 456 Q.—SRI M. V. KARIVENGADAM: Will the Hon. the Minister for Food be pleased to state the acreage proposed and the acreage actually irrigated under the Kattalai High Level Canal Scheme?

THE HON. SRI V. RAMAIAH:

Acreage proposed:

			Acres.
In Tiruchirappalli district	...	...	16,092.00
In Thanjavur district	...	...	4,564.12
Total		...	20,656.12

Acreage actually irrigated upto 31st December 1964:

In Tiruchirappalli district	...	...	14,265.00
In Thanjavur district	...	...	3,864.60
Total		...	18,129.60

திரு. மீ. கலியாணசுந்தரம்: சார், சர்க்கார் போட்ட திட்டப் படி இன்னும் திருச்சி தாலுகாவில் போதுமான விஸ்தீரணத்திற்கு பாசன வசதி செய்வதில் காலதாமதம் ஆவதற்குக் காரணம் என்ன? அதோடு அந்தப் பகுதியில் ஹெவி எலெக்ட்ரிகல்ஸ் வந்த காரணத்தினால், ஏற்கெனவே பாசன வசதி பெறுவதாக இருந்தது இப்போது தேவையில்லை; ஏனென்றால் அங்கே கட்டடங்கள் வந்து விட்டன. அதற்குப் பதிலாக இன்னும் வேறு இடங்களுக்கு பாசன வசதியை விஸ்தரிக்க நடவடிக்கை எடுக்கப் படுமா?

கனம் திரு. வெ. ராமையா: பொதுவாக இந்தத் திட்டத் தைப் பொறுத்தவரையிலே மொத்தம் எத்தனை ஏக்கர் பாசனத் திற்கு வரும் என்று திட்டவட்டமாகச் சொன்னேன். ராஜ்யத்தில்

11th November 1965]

இருக்கிற மற்ற திட்டங்களைப் போல் இல்லை புள்ளம்பாடி, நியூ கட்டளை சானல். பெரிய திட்டத்தோடு இணைக்கப்பட்ட திட்டம். நாம் நிர்ணயம் செய்திருப்பதைவிட அதிகம் கொடுப்பது கஷ்டம். அதே நேரத்தில் இந்தத் திட்டத்திற்கு நிர்ணயம் செய்யப்பட்டு இருக்கிற ஏக்கரேஜிலும் சில இடங்களுக்குப் பாசனம் செய்து கொடுக்க முடியாத நிலை இருக்கிறது. காரணம் அங்கு இருக்கக் கூடிய பூமி அமைப்பு. அதோடு இந்தத் திட்டம் அமலுக்கு வந்த பிறகு பல தொழில் ஸ்தாபனங்கள் இந்தத் திட்ட எல்லையில் வந்திருக்கின்றன. இந்த முறையில் அதில் மீதம் ஆகக் கூடிய பூமிக்கு புது இடம் கண்டுபிடித்துக் கொடுக்க முடியுமா என்று பார்க்கவேண்டும். நான் கொடுத்த புள்ளிவிவரங்களைப் பார்த்தால் பாசன வசதி பெறுது அதிக ஏக்கர் நிலங்கள் இல்லை. (திரு. மீ. கலியாணசுந்தரம் குறுக்கீடு) இரண்டையும் சேர்த்து. சமீபத்திலே ஒரு ரெவ்யூ செய்ததில் அப்பேற்பட்ட சில இடங் கள், புறம்போக்கு நிலங்கள், அடைமானம் செய்யப்பட்ட நிலங் கள், ஓடை புறம்போக்கு எல்லாம் 420 ஏக்கர் வரை இருக்கின்றன. புது இடங்கள் கண்டுபிடிக்கவேண்டுமா என்று பரிசீலனையில் இருக்கிறது.

Parambikulam—Aliyar Project 9-00 a.m.

* 457 Q.—SRI V. SANKARAN: Will the Hon. the Minister for Food be pleased to state—

(a) whether there is any proposal to construct overbridges wherever necessary in the Parambikulam-Aliyar Project Main Canal route; and

(b) if so, the details thereof?

THE HON. SRI V. RAMAIAH: (a) & (b) A paper* is placed on the Table of the House.

Feeding of tanks in Coimbatore district

* 458 Q.—SRI A. K. SUBBIAH: Will the Hon. the Minister for Food be pleased to state—

(a) whether there is any proposal to include in the Fourth Five-Year Plan, the scheme of letting water from Kundah or Upper Bhavani river to 35 tanks in Avinashi, Palladam and Erode taluks of Coimbatore district;

(b) whether any resolution passed by the District Development Council, Coimbatore on 26th June 1965 requesting the Government to fill up tanks in the said taluks has been received; and

(c) if so, the action taken thereon?

THE HON. SRI V. RAMAIAH: (a) It is proposed to include the scheme relating to the pumping of water from the Bhavani river below the Pillur Reservoir of the Kundah Hydro-Electric Scheme in the Fourth Five-Year Plan.

* Printed as Appendix I on pages 909-914 infra.

[11th November 1965

(b) & (c) The resolution of the District Development Council was received by the Collector of Coimbatore. He has requested the Superintending Engineer, Coimbatore circle to investigate the scheme and take necessary action.

திரு. ஆ. கு. சுப்பையா : இந்தத் திட்டத்தின் மூலம் எத்தனை ஏக்கர் நிலம் பாசன வசதி பெறும் என்பதை அறியலாமா ?

கனம் திரு. வெ. ராமையா : இதெல்லாம் இப்பொழுது 'இன்வெஸ்டிகேஷனில்' இருக்கிறது. 'இன்வெஸ்டிகேஷன்' முடிவதற்கு முன்னால் எத்தனை ஏக்கர் நிலங்களுக்கு நன்மை ஏற்படும் என்று சொல்லுவது பொருத்தமாக இருக்காது.

Family Planning

* 459 *Q.*—SRI V. SANKARAN : Will the Hon. the Minister for Public Health be pleased to state—

(a) whether it is a fact that an intensive family planning scheme is to be conducted in a selected district in Tamil Nad; and

(b) if so, the details thereof?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : (அ) & (இ) இந்திய அரசாங்கம் ஆலோசனை கூறியுள்ளபடி புதுமுறையில் குடும்பக் கட்டுப்பாட்டுத் திட்டத்தை சென்னை மாநகர், செங்கற்பட்டு, மதுரை, திருநெல்வேலி மாவட்டங்களில் நடைமுறைக்குக் கொண்டுவரும் செயற்குறிப்பு ஒன்று உள்ளது. இத்திட்டத்தின் விவரங்கள் தயாரிக்கப்பட்டு வருகின்றன.

திரு. வை. சங்கரன் : சமீப காலத்தில் மத்திய அரசாங்கம் சிபார்சு செய்துள்ள லூப் முறை என்பது அருவருப்பு தரக் கூடியதும், கௌரவத்திற்கு இழுக்கு விளைவிப்பதுமான ஒரு முறை என்று ஒரு பெரிய மனிதர் கருத்து தெரிவித்திருப்பது சரிதானா என்று அறிய விரும்புகிறேன்.

MR. SPEAKER : The question is abont the opinion of somebody. Srimathi Rajathi Kunchithapatham.

திருமதி ராஜாத்தி குஞ்சிதபாதம் : தலைவர் அவர்களே, தொழு நோய் பிடித்தவர்களும், தொத்து வியாதி பிடித்தவர்களும் ஆகிய பிச்சைக்காரக் கூட்டம் சமுதாயத்தில் பெற்றுப் பெருகிக்கொண்டு வந்து, பெரிய குடும்பங்களை நடத்தி வருகின்றன. நம்முடைய சமுதாயத்தில் அதைத் தடுப்பதற்கு, அவர்கள் வாழ்கின்ற இடத்தில் தீவிர குடும்பக் கட்டுப்பாடு திட்டத்தை அமல் நடத்த அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா ?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : பல தீராத நோய் வாய்ப்பட்டவர்களுக்கு இதைக் கண்டிப்பாக, சம்பல்சரியாகச் செய்துகொண்டு வருகிறார்கள்.

11th November 1965]

திரு. வி. எஸ். எஸ். மணி : அதிகமான மக்கள் இருப்பதன் காரணமாக சீனாக்காரன் அன்னிய நாட்டை ஆக்கிரமிக்க, படையெடுக்க முயற்சி செய்கிறான். ஆகவே, பாகிஸ்தான், சீனா படையெடுப்பு ஆபத்து இருக்கும் சமயத்தில் இந்தக் குடும்பக் கட்டுப்பாடு திட்டத்தை எதாவது தளர்த்துவதற்கு உத்தேசம் உண்டா ?

(பதில் இல்லை.)

* 460 *Q.*—SRI M. V. KARIVENGADAM : Will the Hon. the Minister for Public Health be pleased to state—

(a) the number of vasectomy and salpingectomy operations performed during the year 1963 by various agencies under the Family Planning Scheme;

(b) whether there were any unsuccessful operations; and

(c) if so, the reasons for the same?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : (அ) 1963-ம் ஆண்டில் குடும்பக் கட்டுப்பாடு சம்பந்தமாக, ஆண்களுக்கு 24,352 அறுவைச் சிகிச்சைகளும், பெண்களுக்கு 3,681 அறுவைச் சிகிச்சைகளும் செய்யப்பட்டன.

(இ) & (உ) இந்த அறுவைச் சிகிச்சைகளில் வெற்றி பெறவில்லையென்று எந்தக் கேசும் அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டுவரப்படவில்லை.

* 461 கேள்வி.—திரு. மு. கருணாநிதி : கனம் சுகாதார அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) 'கருச்சிதைவை' சட்டமாக்க வேண்டும் என்பதற்கான யோசனை ஏதேனும் மத்திய அரசு இம்மாநில அரசிடம் கேட்டுள்ளதா ?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : (அ) ஆம்.

(இ) மத்தியக் குடும்பக் கட்டுப்பாடு போர்டு பரிவுரை செய்ததன் மேல் இந்திய அரசாங்க சுகாதார அமைச்சகம் கருச்சிதைவைச் சட்ட சம்மதமாக்கும் பிரச்சினையைக் குறித்து ஆராய்வதற்காக மகாராஷ்டிர சுகாதார அமைச்சர் ஸ்ரீ ஷாந்திலால் ஷாவைத் தலைவராகக் கொண்ட குழு ஒன்றை அமைத்துள்ளது, அந்தக் குழு இது குறித்து ஒரு வினாப்பட்டியல் வெளியிட்டது. கீழ்க்கண்ட விஷயங்களில் தவிர ஏனையவற்றில் கருச் சிதைவு செய்து கொள்வதைச் சட்ட சம்மதமாக்குவது அவசியமில்லையெனக் குழுவின் தலைவருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது:—

(1) தாய்க்கு உடல்நலமின்மை, உடல் குறைபாடு அல்லது நலிவு காரணமாக, மகப்பேறு ஏற்படின் தாயின் உயிருக்கு ஆபத்தோ உடல் அல்லது உள நலனுக்கு மிகுந்த ஊறோ ஏற்படும் என்பது.

[11th November 1965

(2) கற்பழிக்கப்பட்டது காரணமாகவோ, குற்றவகையில் வலுக்கட்டாயமாகப் புணர்ந்தது காரணமாகவோ அல்லது தகாப் புணர்ச்சி காரணமாகவோ கர்ப்பமடைந்திருப்பது.

(3) தாய் பைத்தியம் அல்லது பித்துப்பிடித்தவள் என்பது.

மூலிகை

* 462 கேள்வி.—திரு. எம். செல்லையா : கனம் சுகாதார அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) ஸ்ரீவில்லிப்புத்தூர் தாலுகா வத்திராயிருப்புக்கு வடக்கேயுள்ள சதுரகிரி மலையில் சஞ்சீவி மூலிகை இருப்பது உண்மையா ?

(இ) ஆம் எனில், அது குறித்த ஆராய்ச்சி நடத்தும் திட்டம் ஏதேனும் அரசாங்கத்தின் பரிசீலனையிலிருக்கிறதா ?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : (அ) சதுரகிரி மலையில் சஞ்சீவி மூலிகை இருப்பதாகச் சில பாடப் புத்தகங்களில் தெளிவற்ற முறையில் குறிப்பிடப்பட்டிருப்பதைத் தவிர, அங்கு சஞ்சீவி மூலிகை கிடைப்பது குறித்து ஆதாரபூர்வமான தகவல் எதுவுமில்லை.

(இ) இது குறித்து ஆராய்ச்சி நடத்தும் செயற்குறிப்பு ஏதுமில்லை.

அரசாங்க ஊழியர்களுக்கு மருத்துவச் சலுகை

* 463 கேள்வி.—திரு. து. ப. அழகமுத்து : கனம் சுகாதார அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) கெஜட் பதிவில்லாத சர்க்கார் ஊழியர்களுக்கு மருந்துச் செலவை திரும்பப் பெறுவதற்கான சலுகையை பயன்படுத்தும் வகையில் சிகிச்சை அளிப்பதில் திருச்சி மாவட்ட மருத்துவ மனையில் கவனம் செலுத்துவதில்லை என சர்க்காருக்குப் புகார் வந்ததா ?

(இ) ஆம் எனில், அதன் மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது ?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : (அ) இல்லை.

(இ) இந்தக் கேள்விக்கு இடமில்லை.

திரு. து. ப. அழகமுத்து : சமீபத்தில் நடந்த கெஜட் பதிவில்லாத சர்க்கார் ஊழியர்கள் மகாநாட்டில் இம்மாதிரி புகார்களை அவர்கள் கூறியிருக்கிறார்கள். மருந்திற்கான செலவை திரும்பப் பெறுவதற்கு உள்ள சலுகைப்படி, உயர்ந்த ரக

11th November 1965]

மருந்துகளை மருத்துவர்கள் சிபார்சு செய்வதில்லை என்று அவர்கள் புகார் கூறியிருக்கிறார்கள். எனவே அந்தப் புகார் பற்றி அரசாங்கம் பரிசீலிக்குமா ?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : திருச்சியில் நடந்த கான்பரன்சில் அவர்கள் கொடுத்த ரிசல்யூஷனை டைரக்டர் ஆப் மெடிகல் சர்வீசசுக்கு அனுப்பி, அதைப் பரிசீலனை செய்து ரிப்போர்ட்டு அனுப்பும்படி அரசாங்கம் கூறியுள்ளது.

Physically Handicapped

* 464 Q.—SRI V. SANKARAN : Will the Hon. the Chief Minister be pleased to state—

(a) whether there is any proposal to impart industrial training to the physically handicapped and the blind; and

(b) if so, the details thereof?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (a) & (b) Proposals for the establishment of two Light Engineering Projects for the training of the Adult Blind, one sponsored by the Government of India and the other by the American Foundation for Overseas Blind, are under examination.

திரு. வை. சங்கரன் : ஏற்கனவே நம்முடைய ராஜ்யத்தில் பல பயிற்சி பெற்ற கண் இழந்த இளைஞர்கள் இருக்கிறார்கள். நான் ஒன்றிரண்டு பேர்களை மந்திரி அவர்களிடம் கொண்டுவந்து, அவர்களுக்கு வேலை கொடுக்கவேண்டுமென்று கேட்டேன். ஆனால் மந்திரி அவர்கள் வேலை கிடைப்பது அரிது என்று கையை விரித்துவிட்டார்கள். ஏற்கனவே வேலை தெரிந்த, தொழிற் பயிற்சி பெற்ற கண் இழந்த இளைஞர்களுக்கு வேலை கொடுப்பதற்கு சர்க்கார் ஏதாவது திட்டம் தயாரிக்க நடவடிக்கை எடுக்குமா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : இது தொழிற் பயிற்சி வசதி கொடுப்பது பற்றிய கேள்வி. பயிற்சி பெற்றவர்களுக்கு வேலை கொடுப்பது பற்றித் தனியாகக் கேள்வி கேட்டால், விவரம் சொல்லலாம்.

சரஸ்வதி மஹால் நூல் நிலையம், தஞ்சை

* 465 கேள்வி.—திரு. து. ப. அழகமுத்து : கனம் முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) தஞ்சை சரஸ்வதி மஹால் நூல் நிலையத்தை தேசிய நூல் நிலையமாக மாற்றும் திட்டம் ஏதேனும் அரசாங்கத்தின் பரிசீலனையில் உள்ளதா ?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (a) No, Sir.

(b) Does not arise.

[11th November 1965

திரு. து. ப. அழகமுத்து : தஞ்சை சரஸ்வதி மஹால் நூல் நிலையத்தின் முக்கியத்துவத்தை உத்தேசித்து, அதை தேசிய நூல் நிலையமாக மாற்றுவதற்கான திட்டத்தை இனிமேலாகிலும் சர்க்கார் மேற்கொள்ள முற்படுமா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : இந்த நூல் நிலையத்தின் முக்கியத்துவத்தை சர்க்கார் நன்கு உணர்ந்திருக்கிறது. அதை எவ்வாறு பராமரிப்பது, மேலும் எவ்வாறு விஸ்தரிப்பது என்பதில் பரிபூரண கவனம் செலுத்தி வருகிறது. அதற்கு மேலே தேசிய நூல் நிலையம் என்று ஒரு பெயர் கொடுப்பதிலே என்ன இருக்கிறது என்று தெரியவில்லை. மத்திய அரசாங்கம் சில திட்டங்களை வைத்துக்கொண்டிருக்கிறார்கள். அந்தத் திட்டங்களினால் இந்த நூல் நிலையத்திற்கு என்னென்ன பலன் கிடைக்குமோ அதிலும் அரசாங்கம் கவனம் செலுத்திக்கொண்டிருக்கும்.

புலவர் கா. கோவிந்தன் : இந்த நூல் நிலையத்தில் பழைய அருமையான நூல்கள் பல இருக்கின்றன. அந்த நூல்களைப் படிக்க வேண்டுமென்றால், எல்லோரும் அங்கே போய் படிப்பது என்பது முடியாது. ஆகையால் அந்தப் புத்தகங்களை அச்சடித்து மக்களுக்கு வழங்க உத்தேசம் உண்டா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : அவ்வாறு ஆண்டு தோறும் அச்சிடப்பட்டு பல பிரசுரங்கள் வெளி வந்திருக்கின்றன.

திரு. ப. உ. சண்முகம் : அப்படி வெளியிடப்படுகின்ற புத்தகங்களின் விலை ரொம்பவும் கூடுதலாக இருக்கிறது. ஆகவே, அந்த புத்தகங்களின் விலையைக் குறைப்பதற்கு அரசாங்கத்திற்கு உத்தேசம் உண்டா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : அதைப்பற்றி என்னிடம் யாரும் தெரிவிக்கவில்லை. இந்தப் புத்தகங்கள் அதிகமாக விற்பனை ஆவதில்லை. அதிகமாக விற்பனையானால், இன்னும் அதிகமான பிரதிகள் போடலாம், அச்சு செய்வதற்கான செலவு குறையும். இப்பொழுது அச்சிடுவதற்கான செலவைப் பெறவேண்டும் என்ற நோக்கத்தோடு தான் விலை நிர்ணயிக்கப்பட்டு வருகிறது.

சென்னை அடிஷனல் லேபர் கோர்ட்

** 466 கேள்வி.—திரு. ஆ. தங்கவேலு :* கனம் முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) சென்னையில் உள்ள அடிஷனல் லேபர் கோர்ட் மூடப்பட்டது உண்மையா ?

(இ) ஆம் எனில், அதன் காரணங்கள் என்ன ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) Yes.

(*b*) Since the constitution of the additional Labour Court at Madras with effect from 11th September 1964, it had disposed of 203 out of 227 cases transferred to it from the Labour Court at

11th November 1965]

Madras, thus achieving a considerable reduction in the pendency of cases before the Labour Court at Madras. The additional Labour Court was therefore abolished, as recommended by the High Court on the expiry of its period of sanction of six months, on 10th March 1965.

திரு. ஆ. தங்கவேலு : இந்த லேபர் கோர்ட்டு நீதிபதிகள் அடிக்கடி மாற்றப்படுகிறார்கள். சென்ற ஆண்டில் மட்டும் நான்கு முறை மாற்றப்பட்டிருக்கிறார்கள். இந்த ஆண்டில் லேபர் கோர்ட்டு அடிஷனல் ஜட்ஜு பதவியேற்று ஒரு மாதம் தான் ஆகிறது. நேற்று அவரை மாற்றிவிட்டதாகக் கேள்விப்பட்டேன். அடிக்கடி இப்படி நீதிபதிகள் மாற்றப்படுவதால், வழக்குகள் ஏராளமாக பெண்டிங்காக இருந்து, அதனால் தொழிலாளர்கள் பாதிக்கப்படுகிறார்கள். ஆகவே, குறைந்தது மூன்று ஆண்டுகளுக்கு தொடர்ந்து நீதிபதிகள் மாற்றப்படாமல் இருக்க வேண்டும் என்று அரசாங்கம் உத்தரவிடுமா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : உயர் நீதி மன்றத்தினர் அவசியம் என்று கருதுகிறபொழுது தான் இந்த நீதிபதிகள் மாற்றப்படுகிறார்கள்.

தமிழ் வகுப்புகள்

** 467 கேள்வி.—திரு. கே. ஏ. மதியழகன் :* கனம் முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) தமிழைத் தாய் மொழியாகக் கொள்ளாத அரசாங்க ஊழியர்களுக்கு தமிழில் அறிவாற்றல் பெற வேண்டி வகுப்புகள் நடத்தப்படுவது உண்மையா ?

(இ) ஆம் எனில், எங்கெங்கு வகுப்புகள் நடத்தப்படுகின்றன ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) Yes.

(*b*) The instruction classes are being conducted in the following places :—

1. Madras City.
2. Ambattur.
3. Red Hills.
4. Avadi.
5. Thiruvannamalai.
6. Vellore.
7. Ranipet.
8. Cuddalore.
9. Tiruchirappalli.
10. Tirunelveli.
11. Dindigul.

[11th November 1965

12. Oddanchatram.
13. Periakulam.
14. Nagercoil.
15. Vadasseri.
16. Kottar.
17. Thuckalay.
18. Kuzhithurai.
19. Ootacamund.
20. Gudalur.
21. Coimbatore.
22. Erode.
23. Dharapuram.
24. Tiruppur.
25. Chinchona.
26. Salem.
27. Hosur.

ஆட்சி மொழி

*** 468 கேள்வி.—திரு. மு. கருணாநிதி :** கனம் முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) ஆட்சி மொழிப் பிரச்னையின் மீது சட்டமன்றத்தில் நடைபெற்ற விவாதங்கள் மொழிபெயர்க்கப்பட்டு மத்திய அரசாங்கத்திற்கு அனுப்பப்பட்டதா ?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) Yes.

(*b*) Extracts from the proceedings of the Legislative Assembly and the Legislative Council relating to the discussion of the Official Language issue, with English translations of the Tamil speeches, were sent to the Government of India for being placed before the Home Minister and the Prime Minister.

திரு. இரா. நெடுஞ்செழியன் : கனம் அவைத் தலைவர் அவர்களே, ஆங்கில மொழி பெயர்ப்பின் படிகள் சட்ட மன்ற உறுப்பினர் களுக்கு வழங்கப்படுமா என்று அறியலாமா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : ஆங்கிலம் எதற்காக வழங்க வேண்டும் என்று தெரியவில்லை. அங்கே தமிழ் தெரியாதவர் களுக்கு ஆங்கிலம் அனுப்பியிருக்கிறோம். (திரு. ப. உ. சண்முகம் : டிரான்ஸ்லேஷன் சரியா என்று பார்ப்பதற்குத்தான்). இந்த மன்றம் அப்படி ஒரு 'டெஸ்ட்' வைப்பது என்றால் அப்பொழுது பார்க்கலாம்.

11th November 1965]

Renovation of temples

* 469 *Q*.—SRI V. SANKARAN : Will the hon. the Chief Minister be pleased to state the names of temples in the State that are getting aid from the UNESCO and the details thereof?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : No temple in the State is getting aid from the UNESCO. The matter is under correspondence with the Government of India.

திரு. வை. சங்கரன் : இம்மாதிரி பிரசித்திபெற்ற ஆலயங்கள் யூனெஸ்கோ உதவி பெற வேண்டும் என்பது பரிசீலனையில் இருக் கிறதா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : பரிசீலனையில் இருக்கிறது. யூனெஸ்கோ உதவி எந்த வகையில் பெறலாம் என்பதில் அரசாங் கம் கவனம் செலுத்தி வருகிறது.

Arrest of Sarvodaya Workers

* 470 *Q*.—SRI M. KALYANASUNDARAM : Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) whether it is a fact that Sarvodaya Workers have been arrested in Madurai district;

(*b*) if so, the number of such workers arrested so far; and

(*c*) the reasons for their arrest?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) Yes.

(*b*) & (*c*) Three hundred and sixty-seven Sarvodaya workers were arrested as they trespassed into the temple lands given on lease at Vilampatti village and for obstructing the lessees from carrying on agricultural operations.

Fourth Five-Year Plan

* 471 *Q*.—SRI V. SANKARAN : Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) whether it is a fact that the Fourth Five-Year Plan for Madras State is to be pruned and revised in view of the importance that has to be given to defence preparation of the country both in Civil and Military; and

(*b*) if so, the details thereof?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) & (*b*) In the wake of the present Emergency, the Planning Commission has considered it necessary to have the Fourth Five-Year Plan Defence-oriented. The proposed reorientation is aimed mainly at identifying programmes which can yield quick results. Higher priority will be given to certain programmes in the fields of agriculture, irrigation and power, transport and communications and

[11th November 1965

technical education. The process of reorientation has been set in motion and the States Annual Plan for 1966–67, the first year of the Fourth Plan, which will be placed before the House in due course will reflect such reorientation.

திரு. வை. சங்கரன் : யுத்த தளவாடத் தொழிற்சாலைகள் பல ஆரம்பிக்க மத்திய சர்க்காரோடு கலந்து மாநில சர்க்கார் நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன் ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : எல்லா விஷயங்களைப் பற்றியும் அரசாங்கம் பரிசீலனை செய்து கொண்டிருக்கிறது. அவசியம் ஏற்பட்டால் மத்திய சர்க்காரோடு கலந்தும் ஆலோசிக்கும்.

திருச்சியில் விமானப் பயிற்சிச் சங்கம்

* 472 **கேள்வி.—திரு. து. ப. அழகமுத்து** : கனம் உணவு அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

திருச்சியில் (Flying Club) ஆரம்பமாக இருக்கிறதா ?

THE HON. SRI V. RAMAIAH : Necessary preliminary steps are being taken for the establishment of a Flying Club at Tiruchirappalli.

திரு. து. ப. அழகமுத்து : தலைவர் அவர்களே, மிகக் குறுகிய காலத்தில் இதை அமைக்க சர்க்கார் ஏற்பாடு செய்யுமா ?

கனம் திரு. வெ. ராமையா : ஃப்ளையிங் க்ளப் அமைப்பது சர்க்கார் முன்வந்து செய்வதில்லை. நகர முக்கியஸ்தர்கள் இப்படிப்பட்ட க்ளப் ஏற்படுத்த அதற்கான நடவடிக்கை எடுக்க வேண்டும். இப்பொழுது இருக்கக் கூடிய அவசியத்தைக் கருதி தனியார் முன்வந்து ஆரம்பிக்க வேண்டும் என்றால், மாவட்டக் கலெக்டர்கள் வேண்டிய உதவியளிக்க வேண்டும் என்று சொல்லியிருக்கிறோம். அம்மாதிரி விரைவில் அமைக்க நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

கம்பி இல்லாத் தந்தி கேந்திரங்கள்

* 473 **கேள்வி.—திரு. கரு. சீமைச்சாமி** : } **திரு. வை. சங்கரன்** : } கனம் உணவு அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் கம்பி இல்லாத் தந்தி கேந்திர நிலையங்கள் அமைக்கும் திட்டம் ஏதேனும் அரசாங்கத்தின் பரிசீலனையில் இருக்கின்றதா ?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

11th November 1965]

THE HON. SRI V. RAMAIAH : (a) & (b) The Government sanctioned in May last, a scheme for the installation of wireless transreceivers and transmitters at seven important places in the State, in the interests of efficient and quick means of communication in times of flood and cyclone emergencies. These sets will also be used for general administration purposes, as in times of natural calamities or when law and order situation arises near about the area. The sets will be operated and maintained by the Police Department. The places for locating the sets will be decided shortly.

திரு. கரு. சீமைச்சாமி : சார், ஏழு இடங்களில் அமைக்கப்படும் என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அது எந்தெந்த ஊர்களில் அமைக்கப்படும் என்று தெரிவிக்க முடியுமா ?

கனம் திரு வெ. ராமையா : இடங்கள் இன்னும் நிர்ணயம் ஆகவில்லை.

வீடூர் நீர்த்தேக்க நிலையப் பணியாளர்கள்

* 474 **கேள்வி.—திரு. ப. உ. சண்முகம்** : கனம் உணவு அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) தென்னாற்காடு மாவட்டம், வீடூர் நீர்த்தேக்க நிலையத்தில் பணியாற்றும் ஊழியர்களில் சிலர் சம்பளம் வாங்கவில்லை என்று கூறப்படுவது உண்மையா ?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

THE HON. SRI V. RAMAIAH : (a) & (b) The members of the non-provincialised workcharged establishment of the Vidur Reservoir Project refused to receive their pay for the month of March payable in April 1965 and for the subsequent months agitating for revision of their pay on a par with Provincialised staff. Their request is under consideration. All of them have since received treir pay on 1st July 1965 including arrears.

ஸ்பெஷல் பில்டிங் சர்க்கிளில் வேலை பார்க்கும் தொழிலாளர்கள்

* 475 **கேள்வி.— திரு. அ. தியாகராசன்** : கனம் உணவு அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) சென்னை P.W.D. Special Building Circle-ல் வேலை பார்க்கும் மேஸ்திரிகளும் தொழிலாளர்களும் எத்தனை பேர் ?

(இ) அவர்கள் எத்தனை ஆண்டு காலமாக காயமாகாமல் இருக்கிறார்கள் ?

(உ) அதற்குக் காரணம் என்ன ?

[11th November 1965

THE HON. SRI V. RAMAIAH : (a) Maistries—164.

Other Workers like Head Mazdoors, Work Inspectors, Work Assistants, etc.—269.

(b) Most of them have put in 1 to 7 years.

(c) The staff are borne on the workcharged establishment of the Public Works Department and their pay is charged to the expenditure of sanctioned works subject to 2-1/2 per cent of the total outturn of expenditure. The Special Building Circle itself is functioning temporarily based on Government's sanction year after year. There is therefore no question of the staff being made permanent now. Only when the Circle is made permanent, the question of confirmation of these staff will arise. However after completion of the works such of these staff required for the maintenance of the buildings constructed will be retained to the extent the posts are available and of permanent vacancies arise and subject to suitability of personnel.

திரு. இரா. நெடுஞ்செழியன் : கனம் அவைத்தலைவர் அவர்களே, பொதுப்பணித் துறையில் தாற்காலிகத் தொழிலாளர்கள் ஐந்தாண்டுகளுக்கு மேல் தொடர்ந்து வேலை செய்தால், அவர்களை நிரந்தரமாக்கவேண்டும் என்று சம்பளக் கமிஷன் சிபாரிசு செய்திருக்கிறதே, அந்த வகையில் என்ன நடவடிக்கை எடுக்கப் படுகிறது என்று அறியலாமா?

கனம் திரு. வெ. ராமைய்யா : சம்பளக் கமிஷன் சிபாரிசு செய்திருக்கிறார்கள் 'காடிகரி' வாரியாக. அதைப் பரிசிலனை செய்து அவ்வப்பொழுது நடவடிக்கை எடுக்கப்படுகிறது. கேள்வி பில்டிங் சர்க்கிள் பற்றியது. அது டெம்பரரியாக இருக்கிறது; வருஷா வருஷம் சாங்ஷன் ஆகி, நடத்த வேண்டிய கட்டத்தில் இருக்கிறது.

திரு. கரு. சீமைச்சாமி : இந்த பொதுப்பணி இலாகா பில்டிங் சம்பந்தப்பட்டவரை, மேஸ்திரிகள் அவ்வப்பொழுது டெம்பரரி-யாக நியமிக்கப்படுகிறார்கள், வேலை முடிந்தவுடன் நீக்கப்பட்டு விடுகிறார்கள். ஆகவே, அவர்களை நிரந்தரமாக்க நடவடிக்கை எடுக்க, திட்டம் இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. வெ. ராமைய்யா : அந்த சர்க்கிளே டெம்பரரியாக இருக்கிறது.

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் : தலைவர் அவர்களே, இந்த மேஸ்திரிகள் நீண்ட நாட்களாக வேலை செய்துகொண்டு வருகிறார்கள். அவர்களுக்கு ஸ்பெஷலாக என்.ஜி.ஓ.-க்களுக்குக் கொடுக்கும் சலுகையையாவது கொடுத்து உதவி செய்யமுடியுமா?

கனம் திரு. வெ. ராமைய்யா : அந்த சர்க்கிளே டெம்பரரி என்று சொன்னேன்.

11th November 1965]

Staff of erstwhile Travancore-Cochin State

* 476 *Q.*—SRI R. PONNAPPA NADAR : Will the Hon. the Minister for Food be pleased to state—

(a) the number of Work Superintendents from the erstwhile Travancore-Cochin State that have been allotted to the Highways and Rural Works Department, Kanyakumari district;

(b) whether the pay has been fixed for them; and

(c) if not, the reasons therefor?

THE HON. SRI V. RAMAIAH : (a) 56.

(b) & (c) The question is under active consideration.

Before taking up the question of pay fixation of these Work Superintendents, orders integrating their services had to be issued. Orders in respect of integration were issued in May 1963. Subsequent to this, the question of pay fixation was taken up and the option of the individuals had to be obtained and the particulars of their services were also to be verified. After observing all the formalities, the pay fixation statements were submitted by the Chief Engineer to the Government for approval in April 1965. The Chief Engineer has been asked to rectify certain defects in the statements. As soon as the defects are rectified, the pay fixation statements will be approved.

SRI R. PONNAPPA NADAR : Sir, Will the Government be pleased to expedite the matter?

THE HON. SRI V. RAMAIAH : The hon. Member can be confident that the Government are very anxious to settle the matter.

சங்கரபரணி, சாரம் ஆறுகளின் குறுக்கே பாலங்கள்

*** 477 கேள்வி.—திரு. ஆ. தங்கவேலு :** கனம் உணவு அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) திண்டிவனம் தாலுகாவிலுள்ள சங்கராபரணி ஆற்றின் மீதும் சாரம் ஆற்றின் மீதும் பாலங்கள் கட்டும் திட்டம் ஏதேனும் அரசாங்கத்தின் பரிசீலனையில் இருக்கின்றதா?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

THE HON. SRI V. RAMAIAH : (a) There is a proposal to construct a bridge across Sankaraparani river at mile 86/4 of National Highway 45 in Tindivanam taluk. There is no proposal at present to construct a bridge across Saram river in Tindivanam taluk.

(b) The approval of the Government of India to the revised estimate for the bridge work across Sankaraparani river is awaited.

திரு. ஆ. தங்கவேலு : நான் கேட்டிருந்த கேள்வி, திண்டிவனம் வட்டத்தில் சங்கராபரணி ஆற்றில் இரட்டணை என்ற கிராமத்திற்கு போக்குவரத்து வசதி இல்லை என்று கேட்டிருந்தேன்.

[11th November 1965

ஆனால் இங்கு அது மாற்றப்பட்டு ஹைவேஸ் ரோட்டில், மெயின் ரோட்டில் கட்ட திட்டமிட்டிருப்பதாகச் சொன்னார்கள். சங்கர பரணி ஆற்றில் இரட்டணைக்கு அருகே கட்டவேண்டிய பாலத்தையும், சாரம் ஆற்றில் கட்ட வேண்டியதையும் நான்காவது திட்டத்தில் சேர்ப்பார்களா ?

கனம் திரு. வெ. ராமைய்யா : அவர்கள் கொடுத்திருக்கக்கூடிய கேள்விக்குத்தான் பதில் கொடுத்திருக்கிறேன். ஆனால் கனம் அங்கத்தினர் அவர்கள் வேறு ஒரு இடத்தில் பாலம் கட்டுவது குறித்து கேட்கிறார்கள். அதற்கு, தனிக் கேள்வி போட்டால் பதில் சொல்கிறேன்.

திரு. ஆ. தங்கவேலு : கேள்வியே மாற்றப்பட்டிருக்கிறது.

MR. SPEAKER : " To construct bridges across the Sankaraparani and Saram rivers in Tindivanam Taluk ". என்று தானே இருக்கிறது ?

திரு. ஆ. தங்கவேலு : கொடுத்த கேள்வி, எழுதி அனுப்பியது, எனக்கு வந்திருப்பது, இவை எல்லாவற்றிலும் " சங்கரபரணி ஆற்றில் இரட்டணைக்கு அருகில் " என்று தான் இருக்கிறது. அது மாற்றப்பட்டிருக்கிறது.

கனம் சபாநாயகர் : நீங்கள் குறிப்பிட்ட இடம் இல்லையா ? I think the Hon. Member wants to know about the construction of abridge at Rettanai. அதைப்பற்றி ஏதாவது தகவல் இருந்தால் அமைச்சர் அவர்கள் சொல்லலாம்.

கனம் திரு. வெ. ராமைய்யா : அந்த மாதிரி கேள்வியே இல்லையே. ஆகவே, தனிக் கேள்வி போட்டால் சொல்கிறேன்.

MR. SPEAKER : The mistake may be in the translation by the office. They might have left out the name of the place. The river may be one hundred miles long. The hon. Member is interested in the construction of a bridge in a particular place. But the question is whether there are schemes for constructing bridges across the rivers. Sometimes the translation in the office is so bad.

Madras Dairy and Milk Project

*478 Q.—SRI M. V. KARIVENGADAM : Will the Hon. the Minister for Food be pleased to state—

(a) whether the Madras Dairy and Milk Project had incurred any loss during the year 1963–64; and

(b) if so, the reasons therefor?

THE HON. SRI V. RAMAIAH : (a) Yes. According to the Pro forma Accounts, 1963–64, the Project incurred a net loss of Rs. 40·05 lakhs.

11th November 1965]

(b) The reasons are as follows :—

(i) Inclusion of depreciation and interest on capital;

(ii) Low selling prices of milk which were well below the prevailing market prices;

(iii) The deficit on account of the Colony;

(iv) Very high price paid for the milk procured from the licensees in the Colony which is largely on account of the scale of facilities provided and the expenditure thereon;

(v) High cost of rural collection;

(vi) Conversion of surplus milk into by-products;

(vii) Spillage and spoilage of milk; and

(viii) Breakages of bottles, loss in transit and loss in machinery.

திரு. சா. கணேசன் : அமைச்சர் அவர்கள் கொடுத்த பதிலில் இருந்து சேதாரங்கள், அல்லது கொள்முதல் துறையில் ஏற்படுகிற அதிக விலை இவைகள்தான் காணப்பட்டன. ஆனால் இந்த மாதவரம் பால் பண்ணையில் தேவைக்கு அதிகமான சிப்பந்திகளும், தேவைக்கு அதிகமான சம்பளங்கள் கொடுக்கப்படுவது முதலான செலவுகளே நஷ்டத்திற்கு ஒரு அடிப்படைக் காரணம் என்பதை அரசாங்கம் ஏற்றுக் கொள்கிறதா ? ஏற்றுக்கொண்டால் என்ன அதற்குப் பரிகாரம் தேட முனைந்திருக்கிறது ?

கனம் திரு. வெ ராமைய்யா : நான் கொடுத்த புள்ளிவிவரம் 1963-64-க்குள்ளது. அதற்குப் பிறகு எஸ்டிமேட்ஸ் கமிட்டி, இன்னும் ஒரு ஸ்பெஷல் ஆபீசர் இதைப் பூர்வாங்கமாகப் பரிசீலனை செய்து பல சிபார்சுகள் கொடுத்திருக்கிறார்கள். எஸ்டிமேட்ஸ் கமிட்டி கொடுத்த சிபார்சு, ஆட்குறைப்பு ஏற்படவேண்டும் என்பது. இந்தக் கூட்டத் தொடரில் முன்பு ஒரு கேள்விக்குப் பதில் சொல்லுகையில் பல ஊழியர்களை நிறுத்தியிருப்பதை நான் குறிப்பிட்டது எனக்கு ஞாபகம் இருக்கிறது. அது தொடர்ந்து பரிசீலனையில் இருக்கிறது. இதைத் தீவிரமாகப் பரிசீலனை செய்து ஸ்பெஷல் ஆபீசர், சீஃப் செகரட்டரிக்கு ஒரு அறிக்கை கொடுத்திருக்கிறார்கள். இது கட்டுப்படியாகக் கூடிய திட்டமாக இருக்க என்னென்ன நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதும் பரிசீலனையில் இருக்கிறது.

திரு. இராம. அரங்கண்ணல் : Conversion of milk into milk products என்று சொன்னார்கள். எந்தெந்த ப்ராடக்ஸ் அங்கு உற்பத்தி செய்யப்பட்டன ? இப்போது அந்த உற்பத்தி நிறுத்தப் பட்டுவிட்டதா ?

கனம் திரு. வெ. ராமைய்யா : அந்த ஆண்டு மீதமான பால் கெட்டு விடாமல் பாலை வேறு பொருள்களாக உற்பத்தி செய்திருக்கிறார்கள், பட்டர், சீஸ் என்றெல்லாம். அந்தக் குளிர் அமைப்புக்கள், குளிர்ப்பதன அமைப்புக்கள் நன்றாக இருக்கின்றன என்று

தான் ஞாபகம். எதற்கும் தனிக் கேள்வி போட்டால் சொல்கிறேன்.

திரு. இரா. நெடுஞ்செழியன் : மாதவரம் பால் பண்ணையில் நஷ்டம் ஏற்பட்டதற்கு ஏழெட்டு காரணங்கள் தெரிவித்தார்கள். அந்த நஷ்டம் ஏற்படக் காரணமாக இருக்கிற அடிப்படை நிலைமையைத் தவிர்க்க என்ன நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கின்றன ?

கனம் திரு. வெ. ராமையயா : கனம் சுதந்திராக் கட்சித் தலைவர் அவர்கள் குறிப்பிட்டதுபோல், ஆள் குறைப்பு, பால் கெட்டு விடாமல் பார்த்துக் கொள்ள வேண்டிய முயற்சிகள், குறைந்த விலையில் ஏராளமான பாலை வாங்கி விநியோகிக்கும் முயற்சி, ப்ரொடக்ஷன் ஸைடில் இன்னும் அதிகக் கவனம் காட்ட வேண்டும் என்பது தான் இப்போதிருக்கக்கூடிய முயற்சிகள். அங்குள்ள இயந்திர வசதிகள், கட்டட வசதி இவற்றையெல்லாம் கொண்டு இப்போது எவ்வளவு பாலைப் பக்குவப்படுத்தித் தொடுக்கிறார்களோ அதை விட அதிகப்படியான பாலைப் பக்குவப்படுத்திக் கொள்ள வேண்டும், கொள்ள முடியும். இப்போது கட்டுப்படியான முறையில் எவ்வளவு பால் கிடைக்க வேண்டுமோ அதில் ஒரு பாதி அல்லது 30 சதவிகிதம் தான் கிடைக்கிறது. அதை உயர்த்த வேண்டும். அதுமட்டுமில்லாமல் இத்திட்டத்தைக் கவனித்துப் பார்த்தால் இது பால் உற்பத்திக்காக அமைந்த திட்டம் அல்ல. இதன் ஆரம்பநிலை, சென்னை நகரில் இருக்கக்கூடிய மாடுகள் எல்லாம் சென்னை நகரில் உள்ள போக்குவரத்திற்குத் தொந்தரவு கொடுப்பதைப் போக்கும் முறையில் மாதவரத்திற்கு அவற்றை எடுத்துச் செல்ல வேண்டுமென்ற முறையில் மாடுகளை வைத்துக் கொள்ள ஏராளமான வசதிகளைச் செய்து கொடுத்திருக்கிறார்கள். கட்டடங்கள், மாடுகள் தங்கவேண்டிய வசதிகள் இவை எல்லாம் இருக்கின்றன. அவற்றிற்கு ஏராளமான மூலதனம் போட்டிருக்கிறார்கள். அதற்குள்ள டிப்ரீஸியேஷன், வட்டி இவற்றையெல்லாம் பார்க்கிறபோது சாதாரணமாகப் பால் உற்பத்திக்காக அமையக் கூடிய ஒரு திட்டத்திற்கு இவ்வளவு மூலதனம் போட்டிருக்க வேண்டிய அவசியம் இருக்காது. ஆகவே, இந்த டிப்ரீஸியேஷன் தான் இந்த நஷ்டத்தில் அதிகமான இடம் பெறுகிறது.

திரு. சா. கணேசன் : அமைச்சர் அவர்கள் கூறிய விடையில் இப்போதுள்ள இயந்திர சாதனங்களைக் கொண்டு எவ்வளவு பால் பக்குவப்படுத்த முடியுமோ அந்த அளவு பக்குவப்படுத்தப்படவில்லை, இன்னும் ஏராளமான அளவிற்குப் பால் பக்குவப்படுத்தப்பட வேண்டும், அப்போது கட்டுபடியாகக்கூடிய நிலை ஏற்படலாம் என்ற கருத்தைத் தெரிவித்தார்கள். இப்போதே ஏராளமான அளவில் பால் உற்பத்தி செய்ய வசதியுள்ள இடத்தில் ஒரு பகுதி தான் உற்பத்தி செய்யப்படுகிறது. அப்படியிருக்கிறபோது இன்னும் பக்குவப்படுத்துவதற்குரிய கருவி சாதனங்களை சுமார் 30, 40 லட்சம் ரூபாய்க்கு வாங்க வேண்டுமென்ற கருத்து ஏற்கனவே சபையில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. அது நிவர்த்திக்கப்படுமா அல்லது கைவிடப்படுமா ? அல்லது அதை வைத்துக் கொண்டு இன்னும் மேலே அதைப் பக்குவப்படுத்துகிற அளவைக் கூட்டப் போகிறார்களா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. வெ. ராமையயா : பால் உற்பத்தி பெருகவேண்டும் என்று சொல்லும்போது அங்குள்ள இயந்திரங்களை, இன்னும் அதிக மூலதனம் போட்டு வாங்கவேண்டுமென்று சொல்லவில்லை, மாடுகள் அதிகம் வாங்கவேண்டும். பால் கிடைக்கக்கூடிய இடத்தை அதிகமாக விஸ்தரிக்கவேண்டும். பால் அதிகம் வரக் கூடிய முயற்சியில் அரசாங்கம் ஈடுபடும்.

திரு. இரா. நெடுஞ்செழியன் : மாதவரம் பால் பண்ணையில் இயந்திரங்கள் இருக்கின்ற அளவுக்குப் பாலினுடைய அளவு அதிகமாகக் கிடைக்கவில்லை என்று அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். அதிகமான பால் வசதியைப் பெறுவதின் மூலம் இயந்திரங்களை இயக்கி வைக்க முடியும். ஆகவே, பால் பெறுகின்ற பரப்பளவை, செங்கற்பட்டு, வட ஆற்காடு முதலிய மாவட்டங்களுக்கும் நீட்டி பால்-உற்பத்தியைப் பெருக்குவதற்கு முயற்சிகள் எடுக்கப்பட்டு இருக்கின்றனவா ? 9·30 a.m.

கனம் திரு. வெ. ராமையயா : அதற்கு வேண்டிய முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு நடவடிக்கைக்குக்கூட வந்திருக்கின்றன. இரண்டு, மூன்று தினங்களுக்கு முன்பு மில்க் ஷெட் ஏரியாக்கள் எங்கே அமைப்பது என்ற கேள்வி வந்தபொழுது, மாதவரம் பண்ணைக்குப் பால் கஷ்டம் இல்லாமல் மாதவரத்தைச் சுற்றியுள்ள ரேடியஸுக்குள்ளாகவே அவைகளை அமைப்பதற்கு முயற்சிகள் எடுக்கப்பட்டு வருகின்றன. சென்னை நகரத்திற்கு வேண்டிய அளவு பால் உற்பத்தியைப் பெருக்குவதற்கு எல்லா முயற்சிகளும் எடுக்கப்படுகின்றன.

திரு. ஜே. மாதா கவுடர் : சென்னை நகரத்தைச் சுற்றி மேய்ச்சல் நிலம் இல்லாத காரணத்தாலே, எல்லாப் பொருள்களையும் விலைக்கு வாங்க வேண்டியிருப்பதால் செலவு அதிகமாகிறது. ஆகவே, மேய்ச்சல் நிலம் அதிகமாக இருக்கக்கூடிய இடங்களில், அதாவது நீலகிரி போன்ற இடங்களில்—ஏற்கனவே அங்கே ஒரு பால்பண்ணை இருக்கிறது, அதன்மூலம் பால் கொடுத்துக் கொண்டிருக்கிறோம்—பெரிய அளவில் ஒரு பண்ணையை ஏற்படுத்திப் பால் உற்பத்தியைப் பெருக்குவதற்கு அரசாங்கம் உத்தேசிக்குமா ?

கனம் திரு. வெ. ராமையயா : ஏற்கனவே ஊட்டியிலிருந்து பால் வந்து கொண்டிருக்கிறது. அங்கத்தினர் அவர்கள் குறிப்பிட்டது போல் சென்னை நகரத்திற்குப் பால் சப்ளை செய்வதற்கு சென்னை நகரைச் சுற்றியுள்ள செங்கற்பட்டு, வட ஆற்காடு ஜில்லாக்களிலோ அல்லது தென் ஆற்காடு ஜில்லாவிலோ கட்டுபடியாகக்கூடிய ரேடியஸுக்குள்ளாக கிராமப் பகுதிகளில் மாடுகளை வளர்க்கக் கூடிய முயற்சியை அரசாங்கம் பரிசீலனை செய்து கொண்டிருக்கிறது.

திரு. ஏ. ஆர். சுப்பையா முதலியார் : இன்று வரையிலும் இந்த இலாகா நஷ்டத்தில் ஓடிக் கொண்டிருக்கிறது. நிர்வாகமே சரியாக நடத்தப்படவில்லை. இந்த நிலையில் மாகாணத்திலே இருக்கிற எல்லாக் கோவாப்ரேடிவ் மில்க் சொஸைடிகளையும் இத்துடன் இணைப்பதாகத் தெரிகிறது. ஆகவே, தற்சமயம் அதை நிறுத்தி வைப்பதற்கு சர்க்கார் உத்தேசிக்குமா ?

[11th November 1965

கனம் திரு. வெ. ராமையா : பால் உற்பத்தியைப் பொறுத்த வரையில் தீவிரமாகக் கவனம் செலுத்த வேண்டும். கோவாப்-ரேடிவ் இலாகா கடன் கொடுப்பதால் மட்டும் உற்பத்தி பெருகி விடாது. கடந்த 15, 16 வருஷங்களாகக் கடன் கொடுக்கப்பட்டு வருகிறது. இப்படி 15, 16 வருஷங்களாகக் கோவாப்ரேடிவ் சொஸைடிகள் மூலமாகக் கடன் கொடுக்கப்பட்ட இடங்களை எல்லாம் நான் போய்ப் பார்த்தேன். கடன் கொடுப்பதால் உற்பத்தி கணிசமாக உயர்ந்திருக்கிறதா என்று பார்த்தால் இல்லை. கடன் கொடுப்பதற்குத் தகுந்த முறையில் தான் உற்பத்தி இருக்கிறது, அதிகமாக இல்லை. ஆகவே, உற்பத்தியை அதிகமாக்க மில்க் கமிஷனர் நுணுக்கமாகவும், அதிகத் தீவிரமாகவும் கவனிக்க வேண்டுமென்ற முறையில்தான் இப்பொழுது இந்த நடவடிக்கை எடுக்கிறோம். கோவாப்ரேடிவ் சொஸைடிகளின் மூலம் நடப்பது போல் நடக்கட்டும் என்று விட்டுவிட்டால் 50, 60 வருஷங்களிலே கூட பால் உற்பத்தி அதிகமாகாது. ஆகவே தான் உற்பத்தியைத் தீவிரமாக்க நடவடிக்கை எடுக்கிறோம்.

திரு. கே. ஏ. மதியழகன் : ரிண்டர்பெஸ்ட் வியாதியால் ஏராளமான மாடுகள் இறந்துவிட்டனவே, அந்த மாடுகளுக்குப் பதிலாகப் புதிய மாடுகள் வாங்கப்பட்டு நிரப்பப்பட்டுவிட்டனவா? அதனுடைய விவரங்கள் என்ன?

கனம் திரு. வெ. ராமையா : இந்த மாடுகள் எல்லாம் மாதவரம் பால் பண்ணையைப் பயன்படுத்திக் கொண்ட தனிப்பட்டவர்களுடைய சொத்து. அவர்களுக்கு எல்லாம் திரும்ப மாடுகள் வாங்குவதற்காக அரசாங்கம் கடன் உதவியெல்லாம் கொடுத்திருக்கிறது. மாதவரம் பால் பண்ணையைப் பொறுத்த வரையில் நல்ல மாடுகளை எல்லாம் வாங்குவதற்கு முயற்சிகள் எடுத்துக் கொள்ளப் பட்டிருக்கின்றன.

SRI K. S. G. HAJA SHERIFF : Sir, in view of the continuous heavy loss sustained by the Madhavaram Milk Colony, will the Government consider the desirability of appointing a Committee of Experts to find out how best it could be worked successfully and profitably?

THE HON. SRI V. RAMAIAH : This has been fully gone into and I do not think that there is need for another Committee of Experts.

திரு. இராம. அரங்கண்ணல் : கூட்டுறவுக் கொள்கையை நாம் ஏற்றுக் கொண்டிருக்கிறோம். ஆகவே கூட்டுறவுத் துறையிலேயிருந்து பால் உற்பத்தியை அதிகப்படுத்தும் வேலையைப் பிரிப்பதற்குப் பதிலாக கூட்டுறவுத் துறைக்குள்ளே இதையும் செய்வதற்கு அரசாங்கம் ஆலோசிக்குமா?

கனம் திரு. வெ. ராமையா : கூட்டுறவுக் கொள்கையிலிருந்து இந்தத் திட்டம் ஒன்றும் விடுபடவில்லை. மில்க் கமிஷனரே கோவாப்ரேடிவ் ரிஜிஸ்திராராக இருந்து கூட்டுறவுக் கொள்கையின் அடிப்படையில் இதற்கு உதவி செய்வார்கள். ஆகவே இது அவருடைய தீவிரமான கவனத்தில் இருக்கும்.

11th November 1965]

வத்திராயிருப்பிலிருந்து தாணிப்பாறை சாலை

*** 479 கேள்வி.—திரு. எம். செல்லையா :** கனம் உணவு அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) ஸ்ரீவில்லிபுத்தூர் தாலுகா, வத்திராயிருப்பிலிருந்து சதுரகிரிக்குப் போக, தாணிப்பாறைவரை போக்குவரத்து சாலை போடும் திட்டம் ஏதேனும் அரசாங்கத்தின் பரிசீலனையிலிருக்கின்றதா?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

THE HON. SRI V. RAMAIAH : (*a*) There is no proposal under consideration for the formation of the road referred to by the Member; and

(*b*) Does not arise.

தரிசு நிலத்தைப் பண்படுத்தல்

*** 480 கேள்வி.—திரு. ஆ. கு. சுப்பையா :** கனம் உணவு அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) தஞ்சை மாவட்டம், மன்னார்குடி தாலுகாவிலுள்ள திருமேனி ஏரி எண் 218 தரிசு நிலத்தை உணவு உற்பத்தித் திட்டத்தின் கீழ் சாகுபடி செய்யக் கொண்டுவரும் திட்டம் ஏதேனும் உண்டா?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

கனம் திரு. வெ. ராமையா : (அ) இல்லை.

(இ) இந்த வினாவிற்கு இடமில்லை.

திரு. ஆ. கு. சுப்பையா : சார், இந்த ஏரி, ஏரியாக இருப்பதால் 600 ஏக்கர் நிலம் பிரயோஜனமில்லாமல் இருக்கிறது. முன்னாலே சாகுபடி செய்தவர்களையெல்லாம் வெளியேற்றி விட்டார்கள். ஆகவே, அந்த நிலங்களை மீண்டும் சாகுபடிக்குக் கொண்டுவருவதன் மூலமாக உணவு உற்பத்தியைப் பெருக்குவதற்கு முயற்சி எடுக்கப்படுமா?

கனம் திரு. வெ. ராமையா : இப்பொழுது இருக்கக்கூடிய நிலைமையைப் பார்த்தால் ஏரிகளாக வாய்த்திருப்பதுதான் லாபம் என்பதைக் கனம் அங்கத்தினர் அவர்கள் ஒப்புக்கொள்வார்கள். பெருமளவுக்கு மழை பெய்யும்பொழுது பயன்படுத்திக் கொள்ள முடியும் என்ற அடிப்படையிலேதான் ஏரியை ஏரியாகவே வைத்திருக்க வேண்டுமென்று மராமத்து இலாகா உத்தரவு போட்டு இருக்கிறது.

திரு. எம். தண்டாயுதபாணி : அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டது போல் ஏரி ஏரியாகவே இருக்கவேண்டும். ஒரு ஆண்டு காலத்திற்கு முன்பு மூன்று அடித் தண்ணீரில் சாகுபடி செய்யக் கூடிய புதிய ரக நெல்லைக் கேரள அரசினர் கொடுத்திருந்தனர். ஆனால் அது சாகுபடி செய்யப்படவில்லை. அதைச் சாகுபடி செய்வதற்கு அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா?

கனம் திரு. வெ. ராமையா : தனிக் கேள்வி வேண்டும்.

[11th November 1965

Food Testing Laboratories

* 481 *Q.*—SRI V. SANKARAN : Will the Hon. the Minister for Public Health be pleased to state—

(*a*) whether there is any proposal to open additional food testing laboratories in the State; and

(*b*) if so, the details thereof?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : (அ) ஆம்.

(இ) (1) கோயம்புத்தூரிலுள்ள தலைமை ஆய்வுக் கூடத்தில் உணவுப் பரிசோதனை ஆய்வுக் கூடம் ஒன்று ஏற்படுத்தப்படும்.

(2) சென்னையில் மாநில உணவு, மருந்துகள் ஆய்வுக் கூடமொன்றையும், மதுரையிலும், தஞ்சாவூரிலும் மாவட்ட ஆய்வுக் கூடங்களையும் ஏற்படுத்துவதற்கான செயற் குறிப்புகள் நான்காவது திட்டக் காலத்தில் மேற்கொள்வதற்காக ஆலோசிக்கப் பட்டு வருகின்றன.

திரு. வை. சங்கரன் : சில்லரை வியாபாரிகள் உணவுப் பொருள்களில் கலப்படம் இருக்கிறதா என்று கண்டுபிடிக்க வாய்ப்பு இல்லாததால் சேம்பர் ஆப் காமர்ஸ் போன்ற ஸ்தாபனங்கள் ஃபுட் டெஸ்டிங் கார்ப்பரேஷன் அமைத்தால் அதற்குச் சர்க்கார் உதவி செய்யுமா ?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : தனிப்பட்ட ஸ்தாபனங்களுக்கு உதவி செய்ய சர்க்காரால் இயலாது.

திரு. இராம. அரங்கண்ணல் : இந்த ஆய்வுக் கூடங்களில் மஞ்சள் போன்ற பொருள்கள் பரிசோதனை செய்யப்படுமா ?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : எதில் எல்லாம் கலப்படம் வருகின்றதோ அதெல்லாம் அனலைஸ் செய்யப்படும்.

மதுரை எர்ஸ்கின் ஆஸ்பத்திரி

* 482 கேள்வி.—திரு. கரு. சீமைச்சாமி : கனம் சுகாதார அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) மதுரை எர்ஸ்கின் ஆஸ்பத்திரியில் எத்தனை ஸ்பெஷல் வார்டு இருக்கிறது ?

(இ) அதனை விரிவு படுத்தும் உத்தேசம் அரசாங்கத்திற்கு உண்டா ?

(உ) ஆம் எனில், எப்போது ?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : (அ) மதுரை அரசாங்க எர்ஸ்கின் மருத்துவ மனையில் 3 'A' வகுப்புப் படுக்கைகளும் 23 'B' வகுப்புப் படுக்கைகளும், 99 'C' வகுப்புப் படுக்கைகளும் உள்ளன.

(இ) இல்லை.

(உ) இக் கேள்விக்கு இடமில்லை.

11th November 1965]

திரு. கரு. சீமைச்சாமி : மதுரை எர்ஸ்கின் ஆஸ்பத்திரியில் ஸ்பெஷல் வார்டுகளின் எண்ணிக்கை மிகவும் கம்மியாக இருக்கிறது. நகரம் பெரிதாவதற்கேற்ற வகையில் ஸ்பெஷல் வார்டுகளின் எண்ணிக்கை அதிகரிக்கவில்லை. இதைப்பற்றி சென்ற பட்ஜெட் கூட்டத்திலே கூட நான் சொல்லியிருக்கிறேன். இதையெல்லாம் கருதி, மதுரை ஆஸ்பத்திரியில் ஸ்பெஷல் வார்டுகளின் எண்ணிக்கையை அதிகரிக்க ஏதாவது ஏற்பாடு செய்யப்படுமா ?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : இப்பொழுது தான் சமீபத்தில் சாங்ஷன் கொடுத்திருக்கிறோம். ஏற்கனவே 1,110 படுக்கைகள் இருந்தன. இப்பொழுது 1,310 படுக்கைகளாக எண்ணிக்கையை உயர்த்தும்போது, இந்த ஸ்பெஷல் வார்டுகளின் எண்ணிக்கையை அதிகப்படுத்த வேண்டுமா, வேண்டாமா என்று அரசாங்கம் பரிசீலனைசெய்யும்.

திரு. இரா. நெடுஞ்செழியன் : கனம் அவைத் தலைவர் அவர்களே, சென்னை பெரிய மருத்துவ மனை, மதுரை பெரிய மருத்துவ மனை போன்றவைகளில் ஸ்பெஷல் வார்டுகள் மிகக் குறைவாக இருக்கின்றன. ஆகவே, அவற்றினுடைய எண்ணிக்கையைப் பெருக்க வேண்டும். சென்னை பெரிய மருத்துவ மனையில் ஆறு இடங்கள் தான் இருக்கின்றன. அவற்றில் ஒன்று எமர்ஜன்ஸிக்காக ஒதுக்கி வைத்திருக்கிறார்கள். உயர்ந்த பதவியில் இருப்பவர்களும் மற்றவர்களும் இடம் பிடித்துக் கொள்கிறார்கள். பொது மக்களுக்கு இடம் கிடைப்பது கஷ்டமாக இருக்கிறது. எனவே, ஸ்பெஷல் வார்டுகளினுடைய படுக்கை எண்ணிக்கையைப் பெரிய மருத்துவ மனைகளில் அதிகமாக்கும் எண்ணம் உண்டா ? அந்த வகையில் உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படுமா ?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : ஒரு சமயத்தில், இந்த அரசாங்க மருத்துவ மனைகள் ஏழை பொது ஜனங்களுக்கு வைத்திய வசதி செய்ய வேண்டும் என்பதற்காகவே இருக்க வேண்டும் என்ற நோக்கத்தில் ஸ்பெஷல் வார்டுகளையே அபாலிஷ் செய்துவிடலாமா என்று நினைத்தோம். ஆனால் கனம் அங்கத்தினர்களைப் போன்றவர்கள் அத்தகைய வசதியும் அங்கே இருக்க வேண்டும் என்று கருதுவதை உத்தேசித்து, ஜெனரல் ஆஸ்பத்திரியில் ஏற்கனவே நான்கு ஸ்பெஷல் வார்டுகள் அதிகப்படுத்தப் பட்டிருக்கின்றன.

திண்டிவனம் அரசாங்க மருத்துவ மனை

* 483 கேள்வி.—திரு ஆ. தங்கவேலு : கனம் சுகாதார அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) திண்டிவனம் அரசாங்க மருத்துவ மனையை விரிவு படுத்தும் திட்டம் ஏதேனும் அரசாங்கத்தின் பரிசீலனையில் இருக்கின்றதா ?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

THE HON. SRIMATHI JOTHI VENCATACHELLUMH (*a*) & (*b*) The Government have sanctioned a scheme for the construction of an additional ward of 32 beds and a labour room and for the

conversion of the existing ward into out-patient block, X-ray Department, etc., for execution during the current year.

திரு. ஆ. தங்கவேலு : இந்த வேலை எப்பொழுது துவக்கப்படும் ?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : அந்த வேலைகள் எல்லாம் ஆரம்பிக்கப்பட்டிருக்கின்றன.

Mental Hospital

* 484 *Q.*—SRI V. SANKARAN : Will the Hon. the Minister for Public Health be pleased to state—

(*a*) whether there is any proposal under consideration of the Government to open a second mental hospital in the State: and

(*b*) if so, the details thereof?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : (அ) ஆம்.

(இ) 200 படுக்கைகளைக் கொண்ட மனநோய் மருத்துவ மனையொன்றை நிறுவுவதற்கு, நான்காம் ஐந்தாண்டுத் திட்ட முதற் குறிப்பில் 76 லட்ச ரூபாய் வகை செய்யப்பட்டுள்ளது.

திரு. வை. சங்கரன் : அந்த மனநோய் மருத்துவ மனையை எந்த இடத்தில் ஆரம்பிக்க உத்தேசம் இருக்கிறது? அது எப்பொழுது ஆரம்பிக்கப்படும் ?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம்: அது நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்திலே சேர்க்கப்பட்டிருக்கிறது. பிறகு தான் அது ஆரம்பிக்கப்படும்.

சினிமாக் கொட்டகைகள்

* 485 கேள்வி.—**திரு செ. மாதவன் :** கனம் சுகாதார அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) திரைப்படக் காட்சி முடிந்த உடன் சினிமாக் கொட்டகையில் தேசியக் கொடி காண்பிக்கும்பொழுது பொது மக்கள் வெளியே போகாமல் தடுக்கக் கதவுகளை எல்லாம் மூடி-விடும்படி அரசாங்கம் உத்தரவு பிறப்பித்தது உண்மையா ?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : (அ) ஆம்

(இ) இந்திய அரசாங்கம் தெரிவித்த கருத்திற்கிணங்க இந்த அரசாங்கம், சினிமாக் கொட்டகைகளில் தேசிய கீதம் பாடி முடிந்த பின்னர்தான் கொட்டகைக் கதவுகளைத் திறக்கவேண்டுமென்று உத்தரவு பிறப்பித்துள்ளது. தேசிய கீதத்துடன் தேசியக் கொடி காண்பிக்கப்படும்போது அதற்குரிய மரியாதையை மக்கள் செலுத்த வேண்டும் என்பதே இந்த உத்தரவின் நோக்கமாகும்.

திரு. இராம. அரங்கண்ணல் : மாதத்திற்கு ஒரு முறை, தேசியக் கொடி இருக்கிற ரீலை மாற்ற வேண்டும் என்று அரசாங்கம் உத்தரவிடுமா ? படம் முடியும்போது அந்த ரீலை மிகவும் வேகமாக

முடுக்கிவிட்டு விடுகிறார்கள். அதனால், தேசிய கீதமே சரிவரக் கேட்க முடியாமல் போகிறது. அது அப்படியிருக்கக் கூடாது என்றும் அரசாங்கம் உத்தரவிடுமா ?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : அதற்கெல்லாம் பள்ளிக் கூடங்களில் குழந்தைகளுக்குச் சொல்லி வைத்திருக்கிறார்கள். சினிமாவிலே சாதாரணமாகத் தான் போடுகிறார்கள், அவசரமாக ஒன்றும் போடவில்லை என்று நினைக்கிறேன்.

திரு. இரா. நெடுஞ்செழியன் : கனம் அவைத் தலைவர் அவர்களே, நாட்டுப் பண்ணை, காட்சிகள் முடிந்து பாடப்படும் நிலையில் வைத்திருக்கும் காரணத்தால், பலர் அதன் முக்கியத்துவத்தை உணராத அளவு கொட்டகையை விட்டுச் செல்லும் முயற்சியிலே ஈடுபடுகிறார்கள். ஆகவே, படம் துவங்கும்போதே அந்தப் பண்ணைப் பாடச் செய்வதன் மூலமாக நல்லதொரு நிலையை ஏற்படுத்துவதற்கு அரசாங்கம் முன்வருமா ?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : கதை முடிந்த பிறகு தான் பாடவேண்டுமென்று இருக்கிறது. அது முடிகிற வரைக்கும் மக்கள் வெளியே போகாமலிருப்பதற்காகத்தான் கதவை அடைக்கச் சொல்லி உத்தரவு போடப்பட்டிருக்கிறது.

திரு. கோ. சி. மணி : தேசிய கீதம் பாடப்படும் நேரத்தில் மக்களெல்லாம் வெளியே சென்று விடுகிறார்கள் என்று ரிபோர்ட் வந்த பின்னர் தான் இந்தப் புதிய உத்தரவு பிறப்பிக்கப்பட்டதா ? அல்லது, ஆரம்ப காலத்திலேயே போடப்பட்டதா ?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : எதையும் அனுபவத்திற்குப் பிறகு தானே செய்ய முடியும் ?

திரு. வை. சங்கரன் : தேசிய நெருக்கடி நிலை ஏற்பட்ட பிறகும், தேச பக்தி ஏற்படாமல் இது போன்று வெளியே வரும் நபர்களைக் கண்டுபிடிக்க, கதவுகளைத் திறந்தே வைத்திருந்து, அவர்கள் வெளியே வரும்போது, அப்படிப்பட்டவர்களைச் சுட்டுத் தள்ளுவதற்குச் சர்க்கார் உத்தரவு பிறப்பிக்குமா ?

MR. SPEAKER : A dictator is required for that

திரு. இராம. அரங்கண்ணல் : படம் ஆரம்பிப்பதற்கு முன்னதாகவே தேசிய கீதம் பாடும்படிச் செய்யலாம் அல்லவா ?

(பதில் இல்லை)

குடிநீர் வழங்குதல்

* 486 கேள்வி.—**திரு. கரு. சீமைச்சாமி :** கனம் சுகாதார அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) தென்காசிக்கு குடி நீர் வழங்கும் திட்டம் ஏதேனும் அரசாங்கத்தின் பரிசீலனையில் இருக்கின்றதா ?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

[11th November 1965

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம்: (அ) & (இ) தென்காசி, குற்றாலம், இலஞ்சி, மேல் அகரம் பஞ்சாயத்துக்களுக்கு இணைந்த நீர் வழங்கு திட்டம் ஒன்றை ரூபாய் 29 லட்சம் மதிப்பீட்டுச் செலவில் 1956-ல் அரசாங்கம் அனுமதித்தது. 1964 ஆகஸ்டு மாதத்தில் இத் திட்டத்திற்காக ரூபாய் 36 லட்சத்திற்குத் திருத்த மதிப்பீடு ஒன்று அங்கீகரிக்கப்பட்டது. எனினும் இது பற்றிய எத் திட்டமும் தற்போது அரசாங்கத்தின் பரிசீலனையில் இல்லை.

திரு. கரு. சீமைச்சாமி: தென்காசி குடி நீர் வழங்கும் திட்டத்திலே, குற்றாலத்து அருவிக்கு மேலிருக்கும் அருவித் தண்ணீர் எடுக்கப்படுவதால், குற்றாலத்து அருவி பாதிக்கப்படுவதாகச் சொல்லப்படுகிறதே, அது உண்மையா?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம்: அதனால் தான் இது ஒத்திவைக்கப்பட்டது.

திரு. ஏ. ஆர். சுப்பையா முதலியார்: ஸம்மர் ஸ்டோரேஜ் டாங்கைத் தாமதமாகக் கட்டுவதன் காரணமாக, குடி நீர்த் திட்டத்தில் அடிக்கடி தண்ணீர்த் தட்டுப்பாடு ஏற்படுகிறது. இதில் துரிதமாக நடவடிக்கை எடுக்கும்படி சர்க்கார் உத்தரவிடுமா?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம்: இதனுடைய மதிப்பீடு அதிகப்படியாக இருப்பதால். அந்தப் பஞ்சாயத்துக்களுக்கும் முனிசிபாலிடிக்கும் நாம் எழுதிக் கேட்டிருக்கிறோம். அவர்கள் திட்ட இன்வெஸ்டிகேஷனுக்கு ஆகும் செலவை ஏற்றுக்கொள்ள முடியாது என்று சொல்லியிருக்கும் காரணத்தால், இது ஒத்திப் போடப்பட்டிருக்கிறது.

*** 487 கேள்வி.—திரு. ஆர். அப்துல் கலீல்:** கனம் சுகாதார அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) வடாற்காடு மாவட்டம், விஷாரம் பஞ்சாயத்திடமிருந்து குடி தண்ணீர் திட்டத்திற்காக உதவி மானியம் கோரி இரண்டு வருடங்களுக்கு முன் அரசாங்கத்திற்கு விண்ணப்பம் வந்ததா?

(இ) ஆம் எனில், அதன் பேரில் எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம்: (அ) & (இ) 1961 நவம்பரில் மேல் விஷாரம் பஞ்சாயத்துக்கான நீர் வழங்குத் திட்டம் ஒன்றை, அத் திட்டத்திற்காகும் மதிப்பீட்டுச் செலவில் பாதியை மானியமாக வழங்க வேண்டுமென்கிற அடிப்படையில் அனுமதிக்குமாறு அரசாங்கத்தைக் கேட்டுக் கொண்டது. இவ் வேலை மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் சேர்க்கப்படாததால், இந்தப் பஞ்சாயத்துக்கு எந்த நிதி உதவியும் கொடுக்க முடியவில்லை. அப் பஞ்சாயத்து இவ் வேலைக்காகும் செலவைத் தனது நிதி வசதியிலிருந்தே ஈடுசெய்ய முடியுமானால், இதற்கு அனுமதி வழங்கப்படுமென்று மேற்படி பஞ்சாயத்துக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. இப் பஞ்சாயத்து குறிப்பான பதில் எதையும் அனுப்பாததால், இத் திட்டம் ஒத்திப் போடப்பட்டது.

11th November 1965]

திரு. ஆர். அப்துல் கலீல்: தலைவர் அவர்களே, இந்த வேலை நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்திலே சேர்ந்துள்ளதா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம்: 1965-ம் ஆண்டு மார்ச் மாதத்தில் மறுபடியும் அந்த மேல் விஷாரம் பஞ்சாயத்து, அரசாங்கத்தை இதற்கு அனுமதி அளிக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்கள். அதன் பிறகு, அவர்கள் இந்த இன்வெஸ்டிகேஷன் செலவை ஏற்றுக்கொள்வதாக ஒப்புக் கொண்டால், அதை இன்வெஸ்டிகேஷனுக்கு எடுத்துக்கொள்வதாக அரசாங்கம் தெரிவித்தது. அதன்படி பஞ்சாயத்தும் ஒப்புக் கொண்டிருக்கிறார்கள்.

* 488 Q.—SRI V. SANKARAN: SRI V. KRISHNAMOORTHY: } Will the Hon. the Minister for Public Health be pleased to state—

(a) whether it is a fact that a representation was made by the public of Tuticorin to the Hon. Minister for Local Administration recently that the drinking water coming through house taps and public fountain in the town is polluted by drain water; and

(b) if so, the action taken thereon?

THE HON. SRIMATHI JOTHI VENCATACHELLUM: (a) Yes; and

(b) The defects have been rectified.

*** 489 கேள்வி.—திரு. கரு. சீமைச்சாமி:** கனம் சுகாதார அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

இராமநாதபுரம் மாவட்டம், சிவகெங்கைக்குக் குடிநீர் வழங்கும் திட்டம் தற்சமயம் எந்த நிலையில் உள்ளது?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம்: சிவகங்கை நகரப் பஞ்சாயத்துக்குக் குடிநீர் வழங்கும் திட்டம் ஒன்று 1958-ல் அனுமதிக்கப்பட்டது. 1962 முதல் இத் திட்டம் செயலாக்கப்பட்டு வருகிறது. குடிநீர் வழங்குவதை மேம்படுத்தும் ஒரு திட்டம் சம்பந்தமாய் புலனாய்வு செய்யும்படி 1965 மார்ச் மாதத்தில் அரசாங்கம் அனுமதியளித்துள்ளது.

* 490 Q.—SRI M. KALYANASUNDARAM: Will the Hon. the Minister for Public Health be pleased to state—

(a) the details of the scheme under consideration for the supply of protected water to Vickramasingapuram Town Panchayat; and

(b) when the sanction would be accorded to the scheme?

[11th November 1965

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம்: (அ) & (இ) விக்கிரம சிங்கபுரம் நகரப் பஞ்சாயத்துக்குக் குடிநீர் வழங்கு திட்டமொன்றைப் பரிசீலனை செய்வதற்கு 1962-ல் அரசாங்கம் அனுமதி வழங்கியுள்ளது. குடிநீர் வழங்கு திட்டத்திற்கான பொது விவரச் செயற்குறிப்புகள் (பொதுநலப் பொறியியல்-நகராட்சி வேலைகள்) தலைமைப் பொறியாளரிடமிருந்து பெறப்பட்டதும் அவற்றை அரசாங்கம் ஆலோசிக்கும்.

திரு மீ. கலியாணசுந்தரம்: இதற்கு அனுமதி வழங்கி மூன்று ஆண்டுகளுக்கு மேல் ஆகிறது. பஞ்சாயத்தும் தான் கட்ட வேண்டிய பங்குத் தொகையைக் கட்டியிருக்கிறது. அதைத் துரிதப்படுத்துவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம்: இப்பொழுது தான் இன்வெஸ்டிகேஷன் முடித்து ரிபோர்ட் வந்திருக்கிறது. 'அவுட்லைன்-ப்ரபோஸல்ஸ்' எல்லாம் (பப்ளிக் ஹெல்த் என்ஜினீரிங்) பிரதம இன்ஜினீரிடமிருந்து எதிர்பார்க்கப்படுகிறது. அது வந்தவுடனே கவனிக்கப்படும்.

UNSTARRED QUESTIONS.

Konasamudram Tank.

16 *Q.*—SRI C. CHIRANJEEVULU NAIDU: Will the Hon. the Minister for Home be pleased to state—

(*a*) whether there is any proposal to close the breach of Konasamudram Tank in Pallipat sub-taluk in Chingleput district; and

(*b*) if so, when it will be taken up for execution?

A.—(*a*) The answer is in the affirmative.

(*b*) The proposal is under the consideration of the Superintending Engineer (Food Production) and if found feasible it will be taken up for execution.

(அ) ஆம்.

(இ) இத் திட்டம் (உணவு உற்பத்தி) மேற்பார்வைப் பொறியாளரின் ஆலோசனையில் இருக்கிறது; இதை மேற்கொள்ள முடியும் என்று தெரிந்தால், இதை நிறைவேற்றுவதற்காக எடுத்துக்கொள்ளப்படும்.

11th November 1965]

நிலக்கோட்டை கண்மாய்க்குத் தண்ணீர்

17 கேள்வி.—திரு. வி. எஸ். எஸ், மணி: கனம் உள்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) மதுரை மாவட்டம், நிலக்கோட்டை வட்டம், செங்கற்பட்டு கிராமத்திற்கு 'ஓடைகுளம்' கண்மாய் உபரித் தண்ணீரை சிறு அணை கட்டித் தேக்கிப் பிறகு வாய்க்கால் வெட்டி அதன் மூலம் நிலக்கோட்டை கண்மாய்க்கும் தண்ணீர் கொண்டுபோகும் திட்டத்திற்கு எவ்வளவு தொகை செலவழிக்கப்பட்டது?

(இ) இத் திட்டம் ஆரம்பித்து எத்தனை ஆண்டுகளாயின?

(உ) இதுவரை எத்தனை ஏக்கரா நிலத்திற்குப் பாசன வசதி கிடைத்தது?

பதில்—(அ) 1964-ல் நவம்பர் வரையில் தொண்ணூற்று ஆறாயிரத்து நானூற்று ஐம்பத்தொன்பது ரூபாய் பதினேழு காசுகள் மட்டும் (ரூ. 96,459.17).

(இ) ஆறு ஆண்டுகள்.

(உ) ஏறத்தாழ முன்னூற்று நாற்பத்து மூன்று (343) ஏக்கரா நிலம் சாகுபடிக்குக் கொண்டு வரப்பட்டுள்ளது.

(*a*) Rupees ninety-six thousand four hundred and fifty-nine and paise seventeen only (Rs. 96,459·17 P.) up to November 1964.

(*b*) Six years.

(*c*) About three hundred and forty-three (343) acres have been brought under cultivation.

குடும்பப் பென்ஷன் விண்ணப்பங்கள்

18 கேள்வி.—திரு. து. ப. அழக்முத்து: கனம் முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) 1962, 1963 ஆகிய வருடங்களில் இறந்துபோன அரசாங்க ஊழியர்களின் குடும்பத்தைச் சேர்ந்தவர்களுக்கு வழங்கும் குடும்பப் பென்ஷன் தொகை கோரி வந்த விண்ணப்பங்கள் எத்தனை?

(இ) அவைகளுள் இன்னும் எத்தனை விண்ணப்பங்களின் மீது முடிவெடுக்கப்படவில்லை?

(உ) அதற்கான காரணங்கள் என்ன?

பதில்.—(அ) குடும்பப் பென்ஷன் வழங்கும்படி கேட்டு, பதவியிலிருந்தபோதே இறந்துவிட்ட அரசாங்க ஊழியர்களின் குடும்பத்தினரிடமிருந்து 1962-ல் 319 விண்ணப்பங்களும், 1963-ல் 266 விண்ணப்பங்களும் வந்தன.

[11th November 1965

(இ) 1962-ம் ஆண்டிற்குச் சம்பந்தப்பட்ட 8 விண்ணப்பங்கள் விஷயமாகவும், 1963-ம் ஆண்டிற்குச் சம்பந்தப்பட்ட 52 விண்ணப்பங்கள் விஷயமாகவும் இன்னும் முடிவு செய்யப்படவில்லை.

(உ) முடிவுறு நிலையில் உள்ள விண்ணப்பங்கள் விஷயமாகத் தீர்வு காண்பதில் தாமதம் ஏற்பட்டுள்ளது. இறந்துபோன அரசாங்க ஊழியர்களின் குடும்பத்தினர் காலங்கடந்தும், குற்றங் குறைகளுடனும் விண்ணப்பங்களை அனுப்பியதும், குடும்பப் பென்ஷன் கேட்பவர்கள் சட்ட சம்பந்தமான வாரிசுச் சான்றிதழை அல்லது பாதுகாவலருக்குரிய சான்றிதழைத் தாமதித்து அனுப்பியதும், இந்த தாமதத்திற்கு, முக்கியமான காரணங்கள் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. சில விஷயங்களில் அரசாங்க ஊழியர்களின் பணிப் பதிவேடுகளில் அவர்களது பணி குறித்த பொருத்தமான விபரங்கள் இராததால், அவ் விஷயங்களில் தீர்வு காண்டதில் தாமதம் ஏற்பட்டது. முடிவுறு நிலையில் உள்ள பெரும்பாலான விண்ணப்பங்கள், இறுதி நிலையில் உள்ளனவென்றும், விரைவில் அவை குறித்து முடிவு செய்யப்படும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

(*a*) 319 applications in 1962 and 266 applications in 1963 were received from the families of the Government Servants who died, while in service, for sanction of family pension.

(*b*) Eight applications relating to 1962 and 52 applications relating to 1963 have been reported to have not yet been settled.

(*c*) It is reported that the main reason for the delay in the settlement of the pending cases is due to belated and defective applications made by the families of the deceased Government Servants and the delay in the production of legal heirship or guardianship certificate by the claimants. In certain cases, the delay was due to the absence of relevant service particulars in the Service Registers of the Government Servants. It has been reported that almost all the pending cases are in the final stages and will be finalised shortly.

புதிய கலைக் கல்லூரிகள்

19 கேள்வி.—திரு. கி. நாராயணசாமிப் பிள்ளை : கனம் முதல் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) நம் மாநிலத்தில் 1964-ம் ஆண்டில் எத்தனை புதிய கலைக் கல்லூரிகள் திறக்கப்பட்டன ?

(இ) ஒவ்வொரு கல்லூரியிலும் எத்தனை மாணவர்கள் சேர மனு செய்து கொண்டனர் ?

(உ) எத்தனை மாணவர்கள் சேர்த்துக்கொள்ளப்பட்டனர் ?

11th November 1965]

பதில்—(*a*) Ten.

(*b*) & (*c*)

	Pre-University Course. Number of applications received. (1)	Pre-University Course. Number admitted. (2)
1 Dwarkadas Goverdhan Doss Vaishnav College, Arumbakkam, Madras-29.	951	450
2 Government Arts College for Women, North Arcot.	241	196
3 Sri Ramakrishna Mission Vidyalaya Arts College, Perianaickenpalayam, Coimbatore.	564	175
4 Government Arts College, Cuddalore, South Arcot District.	675	360
5 Government Arts College, Krishnagiri	545	337
6 G.T.N. Arts College, Dindigul ..	470	255
7 Christian College, Marthandam (Kanyakumari District).	241	171
8 Lakshmipuram College of Arts and Science, Neyyoor (Kanyakumari District).	269	180
9 Sri Parasakthi Arts College for Women, Courtallam.	135	135
10 Government Thirumagal Mills Arts College, Courtallam.	380	170

புதிய உயர்நிலைப் பள்ளிகள்

20 கேள்வி.—புலவர் கா. கோவிந்தன் : கனம் முதல் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

1964-ல் நம் மாநிலத்தில் புதிதாக எத்தனை உயர்நிலைப் பள்ளிகள் துவக்கப்பட்டுள்ளன ? மாவட்ட வாரியாகத் தகவல் தரப்படுமா ?

பதில்—

Districts.	*Total.*
Madras City	12
Chingleput	11
South Arcot	6
North Arcot	17
Salem	28
Coimbatore	21
The Niligiris	4
Thanjavur	17
Tiruchirappalli	14
Madurai	25
Tirunelveli	11
Ramanathapuram	9
Kanyakumari	6
Total ..	181

[11th November 1965

சினிமா, தமாஷா வரிச் சட்டம்

21 கேள்வி.—திரு. எஸ். ஜே. ராமசாமி : கனம் கைத்தொழில் அமைச்சர் தயவு செய்து கீழ்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) சினிமா, தமாஷா வரிச் சட்டம் அமுலுக்கு வந்த பிறகு வரி கொடுக்காமல் ஏமாற்றப்பட்டு வந்த குற்றத்திற்காகத் தொடரப்பட்ட வழக்குகள் எத்தனை ?

(இ) அவைகளுள் தண்டனையில் முடிந்தவை எத்தனை ?

(உ) அதன் காரணமாக லைசென்ஸ்கள் பறிமுதல் செய்யப்பட்ட சினிமா கொட்டகைகள் எத்தனை, மாவட்ட வாரியாக ?

பதில்—(அ) The Madras Cinemas (Regulation) Amendment Act, 1964 (Madras Act 20 of 1964) came into force with effect from 30th September 1964. For the period from 30th September 1964 to 30th June 1965, 377 offences relating to evasion of tax under the Madras Entertainments Tax Act, 1939, were detected.

(இ) Out of 377 offences, 5 cases were prosecuted and out of these, 4 cases were convicted.

(உ) No licence issued under the Madras Cinemas (Regulation) Act, 1955, was cancelled consequent on the cases ending in conviction.

தமிழ்நாடு இனும் எஸ்டேட்டுகள் (ஒழிப்பு ரயத்துவாரி மாற்றச்) சட்டம்

22 கேள்வி.—திரு. ஆ. கு. சுப்பையா : கனம் உணவு அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) தஞ்சை மாவட்டத்தில் தாலுக்கா வாரியாக எத்தனை கிராமங்கள் இனும் ஒழிப்புச் சட்டப்படி ரயத்துவாரியாக மாற்றப்பட்டன ?

(இ) அதன் விவரம் என்ன ?

பதில்.—(அ) & (இ) 1963-ம் ஆண்டு தமிழ்நாடு இனும் எஸ்டேட்டுகள் (ஒழிப்பு ரயத்துவாரி மாற்றச்) சட்டத்தின் கீழ் அறிக்கையிடப்பட்ட இனும் எஸ்டேட்டுகளை கனம் அங்கத்தினர் குறிப்பிடுகிறார் என்று நினைக்கிறேன். தஞ்சாவூர் மாவட்டத்தில் அறிக்கையிடப்பட்ட இனும் எஸ்டேட்டுகளின் எண்ணிக்கை கீழே கொடுக்கப்பட்டுள்ளது :

சீர்காழி தாலுக்கா	15
மாயவரம் தாலுக்கா	12
நன்னிலம் தாலுக்கா	24
திருத்துறைப்பூண்டி தாலுக்கா	19
கும்பகோணம் தாலுக்கா	72
நாகப்பட்டினம் தாலுக்கா	50
பாபநாசம் தாலுக்கா	28
மன்னார்குடி தாலுக்கா	67

11th November 1965]

பட்டுக்கோட்டை தாலுக்கா	47
ஒரத்தநாடு தாலுக்கா	16
தஞ்சாவூர் தாலுக்கா	29
அறந்தாங்கி தாலுக்கா	179
மொத்தம் ..	558

1965 ஏப்ரல் 15-ம் தேதியன்றும் மே 1-ம் தேதியன்றும், மே 15-ம் தேதியன்றும், அக்டோபர் 1-ம் தேதியன்றும் நான்கு பிரிவுகளாக அவைகளை எடுத்துக்கொள்ள அறிக்கையிடப்பட்டது. இனும் எஸ்டேட்டுகள் சம்பந்தமாக உயர்நீதி மன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட ரிட் மனுக்களின் விளைவாக சில இனும் எஸ்டேட்டுகள் சம்பந்தமாய் இச் சட்டத்தின்கீழ், எடுத்துக் கொள்ள வேண்டிய நடவடிக்கை நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. மற்ற இனும் எஸ்டேட்டுகள் சம்பந்தமாக அவைகளை ரயத்துவாரியாக மாற்ற இச் சட்டத்தின் கீழ் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

(*a*) & (*b*) It is presumed that the member has in mind the inam estates notified under the Madras Inam Estates (Abolition and Coversion into Ryotwari) Act, 1963. The following is the number of inam estates notified in Thanjavur district:—

Sirkali taluk	15
Mayuram taluk	12
Nannilam taluk	24
Thiruthuraipoondi taluk	19
Kumbakonam taluk	72
Nagapattinam taluk	50
Papanasam taluk	28
Mannargudi taluk	67
Pattukottai taluk	47
Orthanad taluk	16
Thanjavur taluk	29
Arantangi taluk	179
Total ..	558

They were notified to be taken over in four batches on 15th April and 1st and 15th May and 1st October 1965. Consequent on Writ Petitions filed in the High Court, action under the Act has been stayed in respect of some of the inam estates. In respect of other inam estates, action is being taken under the Act for converting them into Ryotwari.

Licences to tap neera

23 Q.—Sri M.V. KARIVENGADAM: Will the Hon. the Minister for Co-operation be pleased to state the number of licences issued to tap neera in the State so far, districtwise ?

[11th November 1965

Number of licences issued up to 30th June 1965.

	Districts.		*Palmyrah.*	*Coconut.*
1	Chingleput	..	1,124	...
2	North Arcot	..	901	..
3	South Arcot	..	1,006	..
4	Salem	..	12,416	..
5	Coimbatore	..	14,201	3,412
6	Tiruchirappalli	..	2,394	..
7	Thanjavur	..	1,671	..
8	Madurai	..	1,116	..
9	Ramanathapuram	..	9,088	..
10	Tirunelveli	..	6,543	..
11	Kanyakumari	..	***	***
	Total	..	50,460	3,412

*** No licencing system is in vogue.

30—6—1965 வரை வழங்கப்பட்ட உரிமங்கள்.

	மாவட்டம்.		பனை.	தென்னை.
1	செங்கற்பட்டு	..	1,124	..
2	வட ஆற்காடு	..	901	..
3	தென் ஆற்காடு	..	1,006	..
4	சேலம்	..	12,416	..
5	கோயம்புத்தூர்	..	14,201	3,412
6	திருச்சிராப்பள்ளி	..	2,394	..
7	தஞ்சாவூர்	..	1,671	..
8	மதுரை	..	1,116	..
9	இராமநாதபுரம்	..	9,088	..
10	திருநெல்வேலி	..	6,543	..
11	கன்னியாகுமரி	..	***	***
	மொத்தம்	..	50,460	3,412

*** உரிமங்கள் கொடுக்கும் ஏற்பாடு அமலில் இல்லை.

Gramasahayaks

24 Q.—SRI M. V. KARIVENGADAM : Will the Hon. the Minister for Home be pleased to state the number of Gramasahayaks in the State and their functions?

A.—The answer * is placed on the Table of the House.

இது குறித்து சபையின் முன் விவர அறிக்கை* ஒன்று வைக்கப்பட்டுள்ளது.

* Printed as Appendix XI on pages 836–844 infra.

[*Note.*—An asterisk (*) at the commencement of a speech indicates revision by the Member.]

MR. SPEAKER : Judging from the nature of the work pending, may I take it that we are sitting to-morrow also? Hon. Members may be aware that I announced at the beginning of the sitting that the House would be sitting till the 12th November. However, I find there were suggestions that the House should adjourn to-day. But as it may not be possible to finish the business to-day, I wish to announce that we are sitting to-morrow also.

II.—GOVERNMENT MOTIONS.

(1) SUSPENSION OF RULE 41 (3).

THE HON. SRI M. BHAKTAVATSALAM : Sir, under Rule 244 of the Assembly Rules, I move—

"That sub-rule (3) of rule 41 of the Madras Legislative Assembly Rules, in so far as it requires that not more than one matter shall be raised under Rule 41 at the same sitting, be suspended".

The motion was put and carried, unanimously.

III.—CALLING ATTENTION TO.

(1) ACCUMULATION OF STOCKS OF YARN.

SRI V. SANKARAN : Sir, I wish to call the attention of the Hon. Minister for Industries to a matter of urgent puplic importance, namely the glut and the accumulation of stocks of yarn with the spinning mills in the State, the consequent danger of large scale unemployment of thousands of labourers in these mills and the prompt steps to be taken to avert the same.

THE HON. SRI R. VENKATARAMAN : I wish to make the following statement :—

There are 156 textile mills in the State producing about 70,000 bales of cotton yarn per month of which 50,000 bales are available for civil consumption. The optimum capacity of the handloom industry is about 20,000 bales a month.

Yarn produced by the textile mill in our State is surplus to our requirements and nearly 50 to 60 per cent of yarn intended for civil consumption is sold to consumers in other States. Due to national emergency and the credit squeeze initiated by the Reserve Bank of India there was unprecedented shrinkage of trade resulting in accumulation of stocks.

The Southern India Mill Owners' Association requested the Government to grant reliefs to tide over the difficulty by way of removal of excise duty on cone yarn and fine yarn, advance by

[Sri R. Venkataraman] [11th November 1965

commercial banks of loans up to 90 per cent of the value of cotton yarn and cloth as against 70 per cent now in force, advance by commercial banks on block account, postponement of collection of block loans obtained from banks and financial institutions, postponement of payment of electricity charges and condonation of delays in payment of provident fund contributions, issue of guarantee by the Government to Reserve Bank of India for a sum of Rs. 5 crores to enable finance being made available to the co-operatives to buy handloom cloth and stock the same and procurement of stocks of cotton yarn by the State society. The requests were examined by the Government. The following reliefs have been extended to the industry :—

(i) With a view not to hamper free trading in yarn, the voluntary price regulation scheme was withdrawn from 1st July 1965.

(ii) The Textile Commissioner has discontinued from the same date the voluntary yarn distribution scheme and the hank yarn obligation in respect of Nf. 50 and above.

(iii) The Reserve Bank of India has introduced as a temporary measure a scheme of special accommodation to Banks under the Bill market scheme for facilitating financial assistance to the textile mills which have fully utilised relative credit limits in their favour prevailing as on 1st October 1965 up to the limit of the value of two weeks' production of cloth and yarn. This special accommodation would be available for a period of three months.

(iv) Electricity dues have been deferred for a period of one month.

Six textile mills have so for applied for block loan facilities and they are being examined. The recent power cut imposed by Government had some salutary effect on the stock position of yarn by way of low production and reduction of existing stock. The accumulation of yarn is mostly with the weaker units and larger units with chain of dealers are not holding sizable stocks. Government feel that the accumulation of stocks will gradually thin down and there would be no closure of mills resulting in unemployment.

(2) NON-AVAILABILITY OF BABY FOODSTUFFS

SRI V. R. NEDUNCHEZHIYAN : Sir, I call the attention of the Hon. Minister for Food to a matter of urgent public importance, namely the non-availability of baby foodstuffs in markets and the consequent sufferings of the people of our State.

THE HON. SRI V. RAMAIAH : Sir, as early as October 1964 it was brought to the notice of the Board of Revenue that infant and invalid foods were not available to bona fide consumers at reasonable rates in Madras City and that the entire stock found

11th November 1965] [Sri V. Ramaiah]

its way to the blackmarket. The Collector of Madras was consulted in the matter and the Collector recommended the imposition of an informal control of the distribution and sale of infant and invalid foods. The Board examined the position and recommended to Government that informal control on the distribution and sale of infant and invalid foods was necessary for ensuring adequate and regular supply at reasonable rates. The Government accepted the recommendation and introduced informal control over distribution and sale of infant and invalid foods in Madras City in the first instance, to be extended to other cities in the State at a later date.

Under the scheme of informal control introduced by the State Government, the dealers in baby food are required to execute an agreement and furnish a security of Rs. 50 with the Collector of Madras. The manufacturers and distributors have been asked to supply the goods to their dealers only after ascertaining from the Collector that the dealer has executed an agreement and remitted the security deposit. The products under control are Horlicks, Glaxo, Ovaltine, Ostermilk, Amul Baby food, Cow and Gate, Dumex, Lactogen, Lactodex and Nestomalt.

The dealers shall sell baby food only on production of family card, which has been issued by the State Government to enable a household to get its requirements of rice and wheat on the prescribed scale from fair price shops. The scale of issue of baby food is restricted to one bottle or tin of any one variety to a purchaser at a time and for a week. The following is the issue price to the consumer for each of the infant foods.

	RS.	P.
Horlicks (1 lb.)	5	50
Glaxo (450 grams)	5	10
,, (900 grams)	9	50
Ostermilk (900 grams)	9	50
Amul Baby Food (500 grams) ..	4	50
,, (1,000 grams) ..	8	50
Lactogen (500 grams)	5	65
Lactodex (450 grams)	6	60

It has since been noticed that the sale of baby food by the retailers simply on the basis of the production of a family card does not ensure restriction of distribution of baby food to bonafide consumers alone. It is quite easy for unscrupulous elements to gather a few family cards, purchase baby food from retailers and secrete it in the blackmarket. The distribution of baby food has come in for lot of adverse criticism in Madras City. It has therefore become necessary for the State Government to see that the distribution and issue of baby food on cards is done by selected dealers so that every item of baby food is distributed in accordance with permits. The Government have therefore issued necessary

orders in G.O. Ms. No. 156, Civil Supplies, dated 27th October 1965 introducing statutory control over distribution of baby food. The Collector of Madras has been requested to work out a scheme under which distribution will be made by the Rationing staff in Madras City in an orderly manner.

(3) HARDSHIPS OF MATCH FACTORIES

SRI M. S. SELVARAJAN : Sir, I wish to call the attention of the Hon. Minister for Industries to a matter of urgent public importance, namely the hardship caused to the hand-made match factories, co-operative match societies and match workers in the State, especially in Tirunelveli and Ramanathapuram districts, due to the accumulation of stocks resulting in closure of factories.

THE HON. SRI R. VENKATARAMAN : Sir, I wish to make the following statement.

There was a slump in the disposal of the products of the hand-made match factories in this State during July—October this year owing to poor offtake by the North Indian traders.

The position has, however, now greatly eased since the beginning of this month and there is now an active demand for matches. No difficulties are now being experienced in regard to the disposal of stocks either by the co-operative sector or by private hand-made match producers.

The small match producers can get over their marketing difficulties by forming themselves into co-operatives.

IV.—ANNOUNCEMENTS.

(1) THE MADRAS FOREST (AMENDMENT) BILL, 1964.

MR. SPEAKER : I have to announce to the House that I have
10-00 a.m. received the following message from the Hon. Chairman, Madras Legislative Council :—

In accordance with Rule 133 of the Madras Legislative Council Rules, I transmit a copy of the Madras Forest (Amendment) Bill, 1964 (L.A. Bill No. 39 of 1964) as passed by the Council on the 8th November 1965 with the amendments set out in the Annexure and signed by me for the concurrence of the Assembly.

Annexure.

1. In the enacting formula, for the words 'Fifteenth Year', substitute the words 'Sixteenth Year'.
2. *Clause* 1.—In sub-clause (1) of clause 1, for the figures '1964', substitute the figures '1965'.
3. *Clause* 3.—In the Explanation proposed to be added by sub-clause (iii) of clause 3, for the words 'the property of landholders such as *Jenmies*, *Dewaswoms* or holders of inam lands', substitute the words '*the property of jenmies or Devaswoms*'.
4. *Clause* 4.—For the heading to new section 40-B, substitute the heading '*Notice to claimants of timber collected under section 40-A*'.

V.—PRESENTATION OF REPORTS.

(1) REPORT OF THE COMMITTEE OF PRIVILEGES ON 'NATHIGAM' CASE.

SRI K. PARTHASARATHY : Mr. Speaker, Sir, I rise to present the Report of the Committee of Privileges on 'Nathigam' case.

(2) REPORTS OF THE COMMITTEE ON SUBORDINATE LEGISLATION —ELEVENTH AND TWELFTH REPORTS.

SRI K. PARTHASARATHY : Mr. Speaker, Sir, I rise to present the Eleventh and Twelfth Reports (Third Assembly) of the Committee on Subordinate Legislation.

II.—GOVERNMENT MOTIONS—*cont.*

(2) REPORT OF THE COMMITTEE OF PRIVILEGES ON 'NATHIGAM' CASE.

THE HON. SRI M. BHAKTAVATSALAM : Mr. Speaker, Sir, I move—

'That the recommendation made by the Committee of Privileges in its report on 'Nathigam' case be approved'.

The motion was put and carried.

VI.—GOVERNMENT BILLS.

(1) THE MADRAS APPROPRIATION (NO. 5) BILL, 1965 (L.A. BILL NO. 43 OF 1965).

THE HON. SRI M. BHAKTAVATSALAM : Mr. Speaker, Sir, I move—

'That the Madras Appropriation (No. 5) Bill, 1965 ◆ (L.A. Bill No. 43 of 1965) be taken into consideration'.

The motion was put and carried and the Bill was taken into consideration.

Clauses 2 and 3 and the Schedule were put and carried.

Clause 1, the Enacting Formula and the Long Title were put and carried.

THE HON. SRI M. BHAKTAVATSALAM : Sir, I move—

'That the Madras Appropriation (No. 5) Bill, 1965 (L.A. Bill No. 43 of 1965) be passed'.

The motion was put and carried and the Bill was passed.

(2) THE MADRAS APPROPRIATION (NO. 6) BILL, 1965 (L.A. BILL NO. 44 OF 1965).

THE HON. SRI M. BHAKTAVATSALAM : Mr. Speaker, Sir, I move—

'That the Madras Appropriation (No. 6) Bill, 1965 ◆ (L.A. Bill No. 44 of 1965) be taken into consideration'.

◆ Published in the *Fort St. George Gazette* Extraordinary, dated 10th November 1965.

[11th November 1965

MR. SPEAKER : Motion moved—

'That the Madras Appropriation (No. 6) Bill, 1965 (L.A. Bill No. 44 of 1965) be taken into consideration'.

The motion is now before the House for discussion. Hon. Member, Sri Govindan will speak.

* **புலவர் கா. கோவிந்தன் :** தலைவர் அவர்களே, நம்முடைய முதலமைச்சர் அவர்கள் 7½ கோடிக்கான துணை மானியக் கோரிக்கைக்கு நிதி ஒதுக்கீடு மசோதாவைச் சமர்ப்பித்திருக்கிறார்கள். அதையொட்டிய கருத்துக்களைக் கூற முன் வந்திருக்கிறேன். இதில் தேர்தல் என்ற தலைப்பின் கீழ் 20 லட்சத்திற்கு மானியம் கேட்டிருக்கிறார்கள். வாக்காளர் பட்டியல் தயாரிக்கப்பட இருக்கிறது என்று கூறியிருக்கிறார்கள். இப்போது நாட்டிலே நெருக்கடி நேரம் என்று கூறுகிறோம். இந்த நேரத்தில் தேர்தலைப் பற்றிய சிந்தனை நமக்கு வேண்டுமா என்பதைப் பற்றிப் பல உறுப்பினர்களும் எடுத்துக் கூறியிருக்கிறார்கள். நாடு இருந்தால்தான் நாட்டிலே அரசியல் கட்சிகள் இருக்க முடியும். தேர்தலை மனத்திலே வைத்துக் கொண்டு வாக்காளர் பட்டியலைத் தயாரிக்க அரசாங்கம் 20 லட்சம் செலவு செய்வதும், அரசியல் கட்சிகள் தேர்தல் நிதியைச் சேர்த்து வருவதும் முறையாகுமா? இந்த நெருக்கடி நிலைமையில் தேர்தலுக்கு என்று சேர்த்து வைத்திருக்கிற நிதியை நாட்டிலே இருக்கிற அத்தனை அரசியல் கட்சிகளும் தேசப் பாதுகாப்புக்குக் கொடுத்துவிட வேண்டுமென்று கூறிக் கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து, தமிழ் வரலாற்றுக் கழகம் கல்வெட்டுப் பட்டயங்களை ஆராய மானியம் கோரியிருக்கிறார்கள். அதைப் பற்றிய விவாதம் விரிவாகச் சபையிலே நடந்து கருத்துக்கள் எடுத்துக் கூறப்பட்டிருக்கின்றன. டிஸ்ட்ரிக்ட் கெஜட்டியர்கள் கூட ஓரளவுக்கு வரலாற்றுக்குத் துணை புரியக் கூடியன. அதை வெளியிடவும் வழிவகை செய்யவேண்டும். தஞ்சைப் பெரிய கோவில் சுவற்றில் சுண்ணாம்பை அடித்து காரை ஏறியிருக்கிறது. அந்தக் காரைகளைப் பெயர்த்து விட்டுப் பார்க்கும்போது அந்தச் சுவர்களில் அஜந்தா சித்திரங்களுக்கு நிகரான ஓவியங்கள் இருக்கின்றன என்பதை அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் தமிழ்ப் பேராசிரியராக இருந்த திருவாளர் மு. கோவிந்தசாமி அவர்கள் கண்டு வெளியிட்டிருக்கிறார்கள். அதையொட்டிய ஆராய்ச்சி அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் நடைபெறுகிறதா என்று தெரியவில்லை. அதை முதலமைச்சர் அவர்கள் கருத்தில் கொண்டு அந்தக் கோயிலில் இருக்கும் ஓவியங்களை எடுத்து வெளியிட முயற்சி செய்ய வேண்டும்.

மாவட்ட நிர்வாகம் என்ற தலைப்பில் தாசில்தார்களுக்கு ஜீப் கொடுக்க வேண்டுமென்று கூறியிருக்கிறார்கள். அதை நான் வரவேற்கிறேன். தாசில்தார்களுக்கு இப்போது வேலை அதிகமாக இருக்கிறது. அவர்களுக்கு மாநில மின்சார போர்டார் சில கட்டமைகளையும் ஏற்படுத்தியிருக்கிறார்கள். கிணறுகளுக்கு மின்சாரம்

11th November 1965] [புலவர் கா. கோவிந்தன்]

கொடுக்கவேண்டுமென்று சொன்னால் அவர்கள் சொந்துரிமைச் சான்றுகள் கொடுக்க வேண்டும். வட ஆற்காடு மாவட்டத்தில் பாலாறு இருக்கிறது. அதிலே நீர் ஓடுவது இல்லையென்றாலும் பாலாறு பேசின் கிளிரன்ஸ் சர்டிபிகேட் கொடுக்க வேண்டுமென்று மாநில அரசாங்கம் ஏற்படுத்தியிருக்கிறது. ஏழை எளியவர்களிடமிருந்து தங்களுக்குப் புறம்போக்கு நிலங்களை அடமானம் செய்ய வேண்டுமென்று மனுக்கள் வருகின்றன. இந்த வேலைகளை எல்லாம் துரிதப்படுத்த தாசில்தார்களுக்கு ஜீப் இருக்க வேண்டியது மிகவும் அவசியம் என்ற கருத்தைக் கூறிக்கொள்ள விரும்புகிறேன். தாசில்தார்கள் என்ற பட்டியலிலே ஹரிஜன நல இலாகா தாசில்தார்களும் இருக்கிறார்கள். மூன்று தாலுகாக்களுக்கு ஒரு தாசில்தார் போட்டிருக்கிறார்கள். அவர்கள் ஹரிஜன மக்களுக்கு மனை வழங்கும் பணியைத் துரிதமாகச் செய்ய முடியவில்லை. அவர்களுக்கும் ஜீப் கொடுத்தால் நல்லது என்ற கருத்தையும் கூறிக் கொள்ள விரும்புகிறேன்.

கல்வி என்ற தலைப்பின் கீழ் பயிற்சிப் பள்ளிகளில் ஆய்வுக் கூடம் அமைக்கவும், நூலகம் அமைக்கவும் மானியம் கோரியிருக்கிறார்கள். அண்மையில் ஆசிரியர் பயிற்சிக்கு மாணவர்களைச் சேர்க்கும் குழுவிலே அதிகாரப் பற்றற்றவர்களைப் போட்டார்கள். அதிகாரப் பற்றற்றவர்கள் அதிலே இருக்க வேண்டுமென்று தென் வேலூர் மாவட்ட மன்றத்தில் பாராளுமன்ற உறுப்பினரும், திரு. சண்முகமும் தான் தீர்மானம் கொண்டு வந்து நிறைவேற்றினார்கள். எப்படிப்பட்டவர்கள் அந்தக் குழுவிலே இருக்க வேண்டுமென்று எதிர்பார்க்கப்பட்டது என்றால், மருத்துவக் கல்லூரி, பொறி இயற் கல்லூரி ஆகியவற்றுக்கு மாணவர்களைத் தேர்ந்தெடுக்கும் குழுவில் எப்படிக் கட்சிச் சார்பற்றவர்கள் இடம் பெற்றிருக்கிறார்களோ அப்படிக் கட்சிச் சார்பற்றவர்களாகவும் இருக்க வேண்டுமென்று எதிர்பார்த்தோம். ஆனால் வட ஆற்காடு மாவட்டத்தில் அந்தக் குழுவில் ஆளும் கட்சியைச் சேர்ந்தவர்களே இடம் பெற்றிருக்கிறார்கள். அவர்கள் கட்சி நோக்கத்தைக் கருத்தாக வைத்து மாணவர்களைத் தேர்ந்தெடுக்கிறார்கள். மாணவர்கள் வந்தால் எந்தத் தொகுதியில் இருந்து வருகிறார்கள், திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர்கள் இருக்கிற தொகுதியிலிருந்தா, கழகத்தைச் சேர்ந்தவரா, என்றெல்லாம் பார்க்கிறார்கள். 300, 320 மார்க்குகள் பெற்றிருந்தாலும் திராவிட முன்னேற்றக் கழகச் சார்புடையவர்கள் என்று இருந்தால் அவர்களைத் தேர்ந்தெடுக்காத நிலை வட ஆற்காடு மாவட்டத்தைப் பொறுத்தவரை இருக்கிறது. இதைப் பற்றிக் கனம் முதலமைச்சர் அவர்கள் சிந்திக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இது 1967-ல் நடைபெறக் கூடிய தேர்தல் வரையிலும் நடந்து கொண்டிருந்தால், நிச்சயமாக திராவிட முன்னேற்றக் கழகத்தைப் பொறுத்த வரையிலும்—லாபக் கணக்குத்தான். இனிமேலும் ஆட்சியாளர்கள் இவ்விதமே தான் நடந்து கொண்டிருப்பார்கள் என்றால் தேர்தல் காலத்தில் எங்களுடைய வேலை மிகமிக எளிதாகிவிடும். என்றிருந்தாலும் கூட, இதனால் பாதிக்கப்படுகின்றவர்களுடைய எண்ணிக்கை பெருகிவிடும். ஆகவே கட்சி வேறுபாடு காட்டாதவர்களைப் பார்த்து

[புலவர் கா. கோவிந்தன்] [11th November 1965

இப்பேர்ப்பட்ட கமிட்டியில் போட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். இவர் இருந்தாலும் கல்வி அதிகாரி இருக்கிறாரே என்று காரணம் சொல்லக்கூடும். ஆனால் கட்சிப்பற்றில்லாதவர் என்ற நிலையில் இருக்கும் நபருடைய அரசியல் செல்வாக்கைப் பார்த்து, அவர்களுடைய தயவு காரணமாக, அதிகாரிகள் அச்சப்பட்டு அவர்களுடைய சொல்லுக்குக் கட்டுப்பட்டுவிடுகிறார்கள். கட்சிகளுக்கு அப்பாற்பட்டு இந்த விஷயத்தைக் கவனிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்ள நான் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்து, எந்தவிதத்தில் எல்லாம் சிக்கனத்தைக் கையாள்வது என்பதுபற்றி ஆராய்வதற்காக நாம் ஒரு குழுவையும் போட்டிருக்கிறோம். முக்கியமாக இப்போது கட்டடச் செலவைக் குறைப்பது எப்படி என்பதைப்பற்றி ஆராயவும் மான்யம் கோரப்பட்டிருக்கிறது. இந்த மன்றத்தில் இருக்கின்ற சட்டமன்ற உறுப்பினர்களுக்கென்று தனியாக விடுதி ஒன்றிருக்கிறது. விடுதி இல்லாமல் இல்லை—சட்டமன்ற உறுப்பினர்கள் நான் சொல்வதை ஆட்சேபிக்க மாட்டார்கள் என்று நம்புகிறேன். இப்போது 44 லட்சம் ரூபாய் செலவில் புதிதாக ஒரு விடுதியைக் கட்டவேண்டும் என்று திட்டம் போட்டிருந்தோம். அது இப்போது ஓரளவுக்கு வேலையும் நடந்து கொண்டிருக்கிறது. ஆனால் இந்த நெருக்கடி காலத்தை உத்தேசித்து, சிக்கனம் என்று பேசப்படுகின்ற இந்த காலத்தில், நெருக்கடியும் சிக்கனத்தைப்பற்றியும் பேசுகின்ற சட்டமன்ற அங்கத்தினர்களுக்கு விடுதி கட்டுவது நியாயம்தானா என்பதை ஆலோசித்து, அதை ஓரளவுக்கு நிறுத்தி வைக்க முடியாதா என்பதைப்பற்றி சிந்திக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, எஸ்ப்ளனேட்டில் காதி இலாகாவுக்கென்று ஒரு கட்டிடத்தைக் கட்ட வேண்டும் என்று தீர்மானித்து வேலையும் ஆரம்பித்து இடையில் அந்த வேலையும் நிறுத்தப்பட்டது. இப்போது எப்படியும் அந்த வேலையை எடுத்துக் கொள்வது என்று தீர்மானித்திருப்பதாக தெரிகிறது. இதைக் கொஞ்ச காலத்திற்கு நெருக்கடி தீரும் வரை கட்டாமல் விட்டுவைப்பது நல்லது என்ற கருத்தை நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து, நில ஆர்ஜிதம் சம்பந்தமாக, ஆதிவாசிகள், அரிஜன நலன் ஆகிய துறைகளில், துரிதமாக வேலை நடப்பதற்காக சிறப்புப் பணியாளர்களை நியமிப்பதற்காக மான்யம் கோரப்பட்டிருக்கிறது. இது சேலம் மாவட்டத்திற்கு மட்டும் என்றில்லாமல் மற்ற மாவட்டங்களுக்கும் எங்கெல்லாம் தேவைப்படுகிறதோ அங்கெல்லாம் சிறப்புப் பணியாளர்களை நியமித்து இந்தப் பணியைத் துரிதப்படுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, மாணவர்களுடைய விடுதியை அதிகப்படுத்துவதற்கும், மாணவர்களுடைய எண்ணிக்கையை அதிகப்படுத்துவதற்கும் முயற்சிகள் எடுக்கப்பட வேண்டும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. அதை நான் வரவேற்கிறேன். குறிப்பாக எங்கள் வட ஆற்காடு மாவட்டத்தில் இதனுடைய எண்ணிக்கையை அதிகப்படுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

11th November 1965] [புலவர் கா. கோவிந்தன்]

நிலமற்ற ஏழைக் குடும்பங்களுக்கு அதாவது சுமார் 10 ஆயிரம் குடும்பங்களுக்கு 60,000 ஏக்கர் நிலங்கள் கொடுக்கப்பட வேண்டும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. இந்த நிகழ்ச்சியின் படி மாதந்தோறும் ஐந்து ப்ரப்போஸல்களாவது அனுப்ப வேண்டும் என்று விதியிருப்பதாகச் சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால் அது நடைபெறுவதில்லை. அதே நேரத்தில் புறம்போக்கு நிலங்களில் எத்தனையோ விவசாயிகள் பயிர் செய்து வருகின்றார்கள். அவர்களுக்கு இதுவரையிலும் அந்த நிலங்கள் அடமானம் செய்து கொடுக்கவில்லை. ஜமாபந்தி நடைபெறுகின்ற நேரத்தில் இதைப்பற்றி முறையிட்டும் இதுவரையிலும் அடமானம் செய்து கொடுக்கவில்லை. ஆகவே, இதை துரிதப்படுத்த வேண்டும். என்னுடைய வட ஆற்காடு ஜில்லாவில் மோரணம் பகுதியில் காடுகளை அழித்து சுமார் 2,000 ஏக்கர் புறம்போக்கு நிலங்கள் தரிசு நிலமாகக் கிடக்கிறது. இதை மத்திய அரசாங்கத்திலிருந்து வேஸ்ட் லாண்ட் இம்ப்ரூவ்மென்ட் கார்ப்பரேஷன் வந்து பார்வையிட்டிருப்பதாக அறிகிறேன். இந்த நிலங்களை நிலமில்லாத ஏழை விவசாயிகளுக்குக் கொடுக்க வேண்டும் என்ற கருத்தையும் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

அதே நிலையில், பல இடங்களிலும் தீர்வை விதிக்காத புறம்போக்கு நிலங்கள் பல ஆயிரக்கணக்கான அளவில் இருக்கின்றன. இவைகளை நிலமில்லாத ஏழை விவசாயிகளுக்கும் அடமானம் செய்து கொடுப்பதில்லை. இப்போதுள்ள பஞ்சாயத்துகளில் சட்டபூர்வமாக ஒப்படைக்கப்பட்டிருப்பதால் இதை வருவாய்த் துறையினர் எடுத்து அடமானம் செய்து கொடுக்க முடியாது என்று சொல்கிறார்கள். இதற்காகப் பஞ்சாயத்து சட்டத்தைத் திருத்த வேண்டும் என்று சொல்கிறார்கள். இதில் அரசாங்கம் கவனம் செலுத்தி அடமானம் செய்து கொடுப்பதற்குத் துரிதமாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இதைப் பற்றி ஒருமுறைக்கு இருமுறை மனு அனுப்பி கோரியும் இவ்விதம் ஒரு குறிப்பும் வரவில்லை என்று இரண்டு நாட்களுக்கு முன்னால் கேள்விக்குப் பதில் அளிக்கின்ற நேரத்தில் கூறினார்கள். ஆனால் நான் எழுதின கடிதத்திற்கு அரசாங்கத்திலிருந்து பதில் வந்தது. அதாவது 14991 எஃப்-2/64, 10 என்ற நம்பரில் 1965 ஜனவரி 2-ம் தேதி என்று குறிப்பிட்ட ஒரு தபால் வந்திருக்கிறது. அதில்

"I am directed to state that the matter is under the consideration of the Government in the R.D. & L.A. Department".

என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. இப்படியிருந்தும் நம்முடைய அமைச்சர் அவர்கள் இவ்விதமாக எந்தவிதமான கோரிக்கையும் வந்ததாகத் தெரியவில்லை என்று பதில் தெரிவித்திருக்கிறார்கள். ஆகவே அன் அஸெஸ்ட் வேஸ்ட் நிலத்தை அடமானம் செய்து கொடுக்கின்ற விஷயத்தில் அரசாங்கம் கவனம் செலுத்தவேண்டும் என்ற கருத்தையும் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

கடைசியாக ஒரு விஷயத்தை மட்டும் கூற விரும்புகிறேன். அதாவது இப்போது 14 ஆயிரம் கிணறுகள் வெட்டப்போவதாகவும் அதில் உடனடியாக 2,000 கிணறுகள் வெட்ட முன்வந்தி

ருப்பதாகவும் சொல்லப்பட்டிருக்கிறது. என்னுடைய வட ஆர்க்காடு ஜில்லாவில், கிணறுகளைப் பொறுத்த வரையில் பாறைக் கிணறுகள் தான் அதிகம். ஒரு கன கெஜம் தோண்ட வேண்டுமென்றால் 15 ரூபாய் 20 ரூபாய் ஆகிறது. ஒரு கிணறுக்கு 100 கன கெஜம் தோண்டவேண்டியிருக்கிறது. அக் கிணறுகளைத் தோண்ட சுமார் 2,000 ரூபாய் செலவாகும். முக்கியமாக இதில் பம்பு செட்டுகள் அமைக்க வேண்டுமென்றால் 3 குதிரை வேகம், அல்லது 5 குதிரை வேகமுள்ள பம்புசெட்டுகளை அமைத்தாலும், அவற்றிற் கேற்ப தண்ணீர் கிடைப்பது இல்லை. அதனால் ஏழை விவசாயிகள் இதற்காக முதலீடு செய்து மிகவும் நஷ்டம் அடைகிறார்கள். ஆகவே இந்தப் பகுதியிலுள்ளவர்களுக்குப் பவர் ட்ரில்ஸ் இருந்தால் தான் வசதியாக இருக்கும். தமிழ்நாட்டில் உணவை அதிகமாக உற்பத்தி செய்வதில் தஞ்சைக்கு அடுத்தபடியாக இருக்கும் இந்த மாவட்டத்தில், கிணற்றுப் பாசனத்தை மட்டும் நம்பியிருக்கும் இந்த விவசாயிகளுக்கு உதவி செய்கின்ற முறையில் இந்த மாவட்டத்தில் பவர் ட்ரில்ஸ் வாங்கிக் கொடுப்பதற்கு அரசாங்கம் முன்வர வேண்டும் என்ற கருத்தையும் தெரிவித்துக் கொண்டு என் உரையை முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

* திரு. ம. கமலநாதன் : மதிப்பிற்குரிய தலைவர் அவர்களே, இந்த நிதி ஒதுக்கல் மசோதாவின் மீது ஒரு சில கருத்துக்களைச் சொல்ல ஆசைப்படுகிறேன். பொதுவாக எப்போதும் இல்லாமல் இப்போது நாம் சிக்கனத்தைப்பற்றிப் பேச முற்பட்டிருக்கிறோம். கனம் தொழில் அமைச்சர் அவர்கள் ஒரு பொது நிகழ்ச்சியில் கலந்து கொண்டு பேசிய நேரத்தில், எந்தப் பக்கத்தில் பார்த்தாலும் சிக்கனத்தைக் கடைபிடிக்க வேண்டும் என்று சொல்லியிருக்கிறார்கள். அது வரவேற்கக்கூடியதொன்று என்றாலும் சிக்கனத்தை நாம் எந்த முறையில் கடை பிடிக்க வேண்டும் என்பதைச் சிக்கனக் குழுவுக்கு நாம் ஆலோசனை சொல்லலாம். பொதுவாக பஞ்சாயத்து யூனியனைப் பொறுத்தவரையில் சமுதாய நலத் திட்டத்தின் மூலமாக நடைபெறுகின்ற வேலைத் திட்டங்களில் அதிகாரிகள் அதிகமாக இருக்கிறார்கள் என்று ஆளும் கட்சியிலிருந்தும் சரி, எதிர்க் கட்சியிலிருந்தும் சரி பலர் எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். குறிப்பாக விஸ்தரிப்பு அதிகாரிகள் ரூ. 200, ரூ. 300 சம்பளம் வாங்கிக் கொண்டு பலர் எந்தவிதமான வேலையும் இல்லாமல் இருந்து கொண்டிருக்கிறார்கள். இவர்களை 'ரிட்டேர்ஞ்ச்மென்ட்' செய்வதற்கு அரசாங்கம் அக்கறை எடுத்துக்கொள்ள வேண்டும். பஞ்சாயத்து யூனியன் மிக ஆர்வமாக பல முக்கியமான வேலைகளை செய்யவேண்டும் என்ற நோக்கத்திற்காக ஜீப் கொடுக்கப்பட்டது. ஆனால் இப்போது அதிகப்படியான வேலைகள் இல்லை என்ற நிலையில் பல வேலைகளை நாம் செய்து முடித்திருக்கிறோம். அதோடு ஒவ்வொரு பஞ்சாயத்து யூனியனும் ஒரு ஜீப்பில் 325 லிட்டர் பெட்ரோலுக்கு மேல் செலவு செய்யக் கூடாது என்று உத்தரவு இருக்கிறது. இதைக் குறைத்து 250 லிட்டருக்கு மேல் உபயோகிக்கக் கூடாது என்று உத்திரவு போட்டால் அதிகாரிகள் கட்டுப்பாடாக ஜீப்பை உபயோகித்துக் கொள்வார்கள். ஜீப் அதிகமாகப் பயன்படுத்தாத

நிலையும் இருக்கும். மேலும் தாசில்தார்களுக்கு 19 ஜீப்கள் கொடுப்பதற்காக இப்போது 5 லட்சம் ரூபாய் ஒதுக்கியிருக்கிறோம். இது வரவேற்கக்கூடியதாக இருந்தாலும், பஞ்சாயத்து யூனியனிலிருந்து மாதத்தில் ஒரு வாரத்திற்கு தாசில்தாருக்கு ஜீப்பை கொடுப்பது என்று ஒதுக்கிக் கொடுத்துவிட்டால் இப்போதுள்ள முறையில் தாசில்தாரும் தன் வேலையை சரிவர நடத்திக்கொண்டு இருக்க முடியும் என்பதை சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

அடுத்து, குடும்பக்கட்டுப்பாடு சம்பந்தமாக, நாம் திட்டமிட்டிருக்கிற அளவுக்கு வெற்றிபெறுவதற்காக வாய்ப்பு இல்லையென்றாலும், ஒன்று நான் சொல்ல ஆசைப்படுகிறேன். அதாவது சேலம், தர்மபுரி இந்த மாவட்டங்களில் எங்களுடைய பஞ்சாயத்து யூனியன் தான் குடும்பக்கட்டுப்பாடு திட்டத்தை—அதாவது அறுவை சிகிச்சையை—ஸ்டேட் ரிகார்ட்—ஏற்படும் அளவுக்கு நடத்தியிருக்கிறது. நாள் ஒன்றுக்கு 56 அறுவை சிகிச்சைகள் என்ற அளவுக்கு செய்யப்பட்டிருக்கிறது. இதில் இருக்கின்ற சங்கடம் என்னவென்றால், அறுவை சிகிச்சை செய்து கொள்ளும் ஒவ்வொருவருக்கும் 30 ரூபாய் மானியமாக கொடுக்கப்பட வேண்டும். ஆனால் ஒவ்வொரு நாளும் 500 ரூபாய்க்கு மேல் மானியமாக வாங்கிக்கொள்ள முடியாத நிலையும் இருந்து கொண்டிருக்கிறது. இதனால் 56 பேர்களுக்கும் அந்த மான்யத்தை கொடுத்து அனுப்புவதற்காக அவர்கள் மூன்று நான்கு நாட்களாக வீணாக அங்கேயே தங்கும் படியான தொல்லையை கொடுக்க வேண்டியதாக இருக்கிறது. ஆகவே இதற்காக கொடுக்க வேண்டிய ரூபாயை ஒவ்வொரு நாளும் 1,000 அல்லது 1,500 என்ற அளவுக்கு உயர்த்திக் கொடுப்பதற்கு வழிவகை செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். குடும்பக் கட்டுப்பாடுத் திட்டத்தை விஸ்தரிப்பது மிகவும் அவசியம் என்ற கருத்தை அடிக்கடி நமது முதல் அமைச்சர் அவர்கள் கூட சொல்லியிருக்கிறார். அதன்படி பார்க்கும்போது எங்கள் வட்டாரம் மிகவும் முன்னணியில் இருக்கிறது என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

பொதுவாக கிராம சேவக்குகளைப் பற்றி அடிக்கடி சொல்லுகிறோம். கிராம சேவக்குகள் தங்கள் முழு நேரத்தையும் விவசாயத் துறையில் செலவழித்து அதில் கவனம் செலுத்தவேண்டுமென்று உத்தரவு போட்டிருக்கிறதே தவிர, அவர்கள் தங்கள் முழு நேரத்தையும் அந்த அளவுக்கு பயன்படுத்த முடியவில்லை. அதற்கு பதிலாக 10 கிராம சேவக்குகளில் 5 சேவக்குகள் விவசாய விஸ்தரிப்பு அதிகாரியின் கீழ் பணி புரிய வேண்டும் என்று விட்டு விட்டால் ஓரளவு வேளாண்மைத் துறையில் மேற்கொண்டிருக்கும் பணிகளை அவர்கள் மூலம் செய்ய முடியும் என்று சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

எவ்வளவுதான் உணவு உற்பத்தி பெருகவேண்டும் என்றும், வேறு மாநிலங்களுக்குப் போகக் கூடாது என்றும் சொல்லிக் கொண்டிருந்தாலும், உணவுப் பொருள்கள் வேறு மாநிலங்களுக்குப் போய்க்கொண்டிருக்கிறது என்று சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

கிருஷ்ணகிரி வட்டத்தில் மைசூர் மாநிலத்தையும் ஆந்திர மாநிலத்தையும் தொட்டுக்கொண்டிருக்கும் பகுதிகள் இருக்கின்றன. நம் மாநிலத்திலிருந்து அரிசி மில்லெட்லெல்லாம் கிருஷ்ணகிரி வட்டத்திலுள்ள காடு வழியாகவும், ரோடு வழியாகவும் தினத்திற்கு ஆயிரம் இரண்டாயிரம் மூட்டை என்று வண்டிகள் மீதும், கழுதைகள் மீதும், ஆட்கள் மூலமாகவும் கொண்டு செல்லப்படுகிறது. இது டி.எஸ்.ஓ., கலெக்டர் எல்லோருக்கும் தெரியும். சர்க்காரிடத்திலும் தகவல் அனுப்பியிருப்பதாகச் சொன்னார்கள். அமைச்சர் அவர்கள் துணைக் கேள்வி கேட்டபோது 'அப்படிப்பட்ட தகவல் வரவில்லை' என்று சொன்னார்கள். இதை முக்கியமாகக் கட்டுப்படுத்த வேண்டும். எவ்வளவு தான் உற்பத்தி பெருக்கப்பட்டாலும், ஆயிரம் மூட்டைகள், இரண்டாயிரம் மூட்டைகள் வேறு மாநிலங்களுக்குப் போய் ஒன்றுக்கு இரண்டு மடங்கு லாபம் சம்பாதிக்கும் நிலையை வைத்தால் பின்னால் நாமே பாதிக்கப்படும் சூழ்நிலை வரும் என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

எங்கள் நீண்ட நாள் விருப்பமான, சேலம் இரண்டாகப் பிரிக்கப்படவேண்டும், கிருஷ்ணகிரி தலைநகராக அமையவேண்டும் என்று மன்றத்திலே நான்கு ஆண்டுகளாகப் பேசிக்கொண்டிருந்தோம். எப்படியோ சண்டை ஓய்ந்தது. ஆனால் தர்மபுரி வட்டத்தில் நிலம் ஆர்ஜிதம் செய்வது, கட்டடங்கள் கட்டுவது என்று அறிக்கையில் பார்க்கிறோம். கிருஷ்ணகிரி வட்டத்தில் கட்டடங்கள் கட்ட, நிலஆர்ஜிதம் செய்ய பணம் ஒதுக்குவது பற்றி ஒன்றும் இல்லை. மேலும் கிருஷ்ணகிரி கலைக் கல்லூரியில் மாணவர்கள் அதிகமாகச் சேர்ந்து படிக்கிற காரணத்தினாலும்—தென் சென்னையில் பணமே இல்லாமல் கல்லூரி ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது—நாங்கள் ஒரு லட்சம் ரூபாய் நிதி கொடுத்து, கட்டடம் கட்டிக் கொடுத்திருப்பதினாலும், மேலும் நிதி வசூலிக்க முடியாத காரணத்தினாலும், அரசினர் கலைக் கல்லூரிக்கு வேண்டிய கட்டடங்களைக் கட்டிக் கொடுக்க வேண்டுமென்று கேட்டு என் உரையை முடிக்கிறேன்.

திருமதி ராஜாத்தி குஞ்சிதபாதம்: கனம் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கிற இந்த நிதி ஒதுக்கல் மசோதாவை ஆதரித்து ஒரு சில வார்த்தைகள் கூற ஆசைப்படுகிறேன்.

நம் நாட்டின் பொருளாதாரத்தில் தனியார் துறையிலே அதிகமாகப் பணம் முடக்கப்படக் கூடாது என்ற அளவிலே பொருளாதாரத்தை விரிவு படுத்த நாம் மேற்கொண்டிருப்பது கூட்டுறவு. ஆனால் அந்த கூட்டுறவில் ஒதுக்கப்பட்டிருக்கிற முதல்களும், அல்லது தொழில்களும் ஒரே இடத்திலோ அல்லது ஒரு சிலர் கையிலோ இருந்து விடாது இருக்கவேண்டும் என்று நாம் பொருளாதாரக் கொள்கையை வகுத்திருப்பதைப் பார்க்கிறோம். இப்போது இருக்கும் நிலையில் பார்க்கும்போது காப்பிடலிஸ்ட் ஜாதியை ஒழிக்கவேண்டும், சிறிது சிறிதாகப் பரவல் முறையைக் கொண்டுவரவேண்டும் என்று கொள்கையை வகுத்துக்கொண்

டிருக்கும் நேரத்தில் மற்றொரு பயம் நாடிக்கொண்டிருக்கிறது. காப்பிடலிஸ்டைக் குறைக்க வேண்டுமென்று இருக்கும்போது கோவாப்பரேட்டிவ் காப்பிடலிஸ்ட் என்ற புது ஜாதியை உண்டு பண்ணும் நிலை வந்துக்கொண்டிருக்கிறது என்று நான் குறிப்பிட விரும்புகிறேன். குறிப்பாக எங்கள் தொகுதியில் ஒரு ஸ்பின்னிங் மில் இருக்கிறது பேட்டையில். நெல்லை மாவட்டத்தில் இருக்கிறது. எங்கள் பகுதி தொழிலில் பின் தங்கிய பகுதி; வேலையில்லாத் திண்டாட்டம் அதிகம். நன்செய் நிலம் தான் வைத்துக்கொண்டிருக்கிறோம். ஒரு சில மாதம் தான் வேலை இருக்கிறது என்று தயை கூர்ந்து கொண்டு வந்தார்கள் இந்த ஸ்பின்னிங் மில்லை அப்படி வந்தாலும் பட்டா பாத்தியதை ஒருவருக்கு, அனுபவ பாத்தியதை ஒருவருக்கு என்ற நிலை இருக்கிறது. அங்கு இருக்கிற மில்லின் சேர்மன் சென்னையிலிருந்து வந்து அங்கே கூட்டத்தை நடத்தும் நிலைமை இருக்கிறது. டைரக்டர்கள் மற்றவர்களைப் போட்டிருக்கிறார்கள். இதற்கு பை-லாஸ் முதலிலேயே ஆக்கப்பட்டது, இது தனியாக அமைக்கப்பட்டது என்று அமைச்சர் அவர்களைக் கேட்டால் சொல்லி விடுகிறார்கள். இந்த பதில் எங்களுக்கு ஆறுதல் தருவதாக இல்லை. காரணம் மற்ற மாவட்டங்களில் இருக்கிற ஸ்பின்னிங் மில்களுக்கு அந்தந்த மாவட்டங்களில் இருக்கிறவர்களையே போட்டிருக்கிறார்கள். நெல்லையில் இருக்கிற மில்லுக்கு 120 பேர்களை எடுப்பதிலே கோயம்புத்தூர், சேலம் போன்ற மற்ற மாவட்டங்களிலிருந்து எடுக்கிறார்களே தவிர, எங்கள் ஊரில் இருக்கிறது என்று ஆசையுடன் பார்க்கிற மில்லில், எங்கள் மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள் 10-12 பேர்களாவது வருவார்களோ என்ற பயத்தில் இருக்க வேண்டிய நிலைமை இருக்கிறது. கேட்டால், அந்த மாவட்டங்களைச் சேர்ந்தவர்கள் பணம் கொடுத்திருக்கிறார்கள், ஆகையால் அவர்கள் எடுக்கப்படவேண்டும் என்று சொல்லப்படுகிறது. வேறு மாவட்டத்தில் அமைத்திருப்பதற்கு திருநெல்வேலியிலிருந்து 75,000 ரூபாய் கொடுத்திருக்கிறோமே, அந்த வீதாசாரத்தில் எங்கள் மாவட்டத்தைச் சேர்ந்த ஆட்களை எடுக்கிறார்களா என்றால் இல்லை. எங்கள் மாவட்டத்தைச் சேர்ந்தவர்களுக்கு மற்ற மாவட்டங்களில் வேலை இல்லை, எங்கள் மாவட்டத்தில் மற்ற மாவட்டத்தைச் சேர்ந்தவர்களுக்கு வேலை என்றால், நெல்லை மாவட்டம், கைக்குழந்தை இருக்கும்போது கருத்தரித்தால் கைப்பிள்ளை சவலைப் பிள்ளை என்று சொல்லுகிற மாதிரி, சவலைப் பிள்ளை பார்ப்பது போல் பார்த்துக்கொண்டிருக்கிற எங்கள் பரிதாப நிலையை அமைச்சர் அவர்கள் பார்த்து அதை நீக்க வேண்டுமென்று முறையிட்டுக்கொண்டு, எங்கள் ஊர் வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்க எங்கள் ஊர் ஆட்களை எடுத்துக் கொள்ளவேண்டும் என்று கூறிக்கொள்கிறேன். இது எங்கள் மாவட்டத்துக்கு 17 எம்.எல்.ஏ.-க்களும் குறையாக இருக்கிறது; தீராத வேதனையாக இருக்கிறது என்று சொல்லவேண்டும். நூற்று இருபது பேர்களை எடுப்பதில் 50 சதவீதத்தினரையாவது எங்கள் ஊரிலிருந்து எடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். முதலீடு 52 லட்சத்தில் 17 லட்சம் சர்க்கார் கொடுத்திருக்கிறது. பதினேழு லட்சம் ரூபாய் சார்பிலாவது எடுக்கவேண்டுமென்று

[திருமதி ராஜாத்தி குஞ்சிதபாதம்] [11th November 1965

கேட்டுக்கொள்கிறேன். நூல் உற்பத்தி செய்தாலும், கன்ஸ்யூமர்ஸ் ஆதரவு வேண்டாமா? வாங்கிக் கட்டுகிறவர்கள் இருந்தால் தானே வேலை நடந்துக்கொண்டிருக்கும்? ஆகையால் கன்ஸ்யூமர் சார்பில் ஆட்களை எடுத்துக்கொள்ளவேண்டும் என்று கேட்டுக்கொள் கிறேன்.

ஆசிரியர் பயிற்சி பள்ளி பற்றி கனம் அங்கத்தினர் புலவர் கோவிந்தன் அவர்கள் சொன்னார்கள். அந்தக் குழுவில் காங்கிரஸ் கட்சி அல்லாதவர்களும் இருக்கிறார்கள் என்று சொல்லிக்கொள் கிறேன். கன்னியாகுமரி மாவட்டத்தைச் சேர்ந்த அம்மையார் எந்தக் கட்சியையும் சேர்ந்தவர் அல்ல. அதுவும் கூட திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர்களும் மற்ற பேர்களும் வரும் போது நாங்கள் பாரபட்சம் இல்லாமல் எங்களால் இயன்றதைச் செய்திருக்கிறோம். நான்-அஃபிஷல்ஸாக காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்தவர்கள் கூட தனிச் சலுகை காட்ட முடியாது செய்திருக் கிறார்கள். டிவிஷனல் இன்ஸ்பெக்டர் ஜாதி வாரியாக மார்க்குப் படி லிஸ்ட் தயார் செய்து விடுகிறார்கள். அந்த லிஸ்டிலிருந்து பிற் பட்ட சமூகத்தை எடுத்துக்கொண்டாலும் யாருக்கு அதிக மார்க்கு இருக்கிறதோ அவர்கள் தான் எடுக்கப்படுகிறார்கள். மார்க் குறைவாக இருக்கிறபோது அவர்கள் விரும்பினாலும் கொண்டுவர முடியாத நிலை இருக்கிறது. மார்க் அதிகமாக இருந்து செலெக்ஷன் ஆகும்போது, தாங்கள் கவனித்து நடந்தது என்று நடத்திக் காட்டும் நிலையைத் தந்ததே தவிர, அதிகாரப் பற்றற்றவர்கள் இருந்ததால் எந்தக் கட்சியைச் சேர்ந்தவர்களுக்கும் சலுகை காட்ட முடியாத நிலையில் சர்க்கார் அதிகாரிகள் இருந்தார்கள்.

இறுதியாக ஒரு வேண்டுகோள். போர் முனைக்கு பாராளுமன்ற உறுப்பினர்களை அழைத்துச் சென்றிருக்கிறார்கள். ஐந்து எம்.எல்.ஏ.-க்கள் தொகுதிக்கு ஒரு எம்.பி.; அவர் போர் முனைக்குச் சென்று பார்த்து வந்ததை எடுத்துச் சொல்ல முடியாத நிலைமை இருக்கிறது. எம்.எல்.ஏ. என்றால் லட்சம் பேர்களுக்கு ஒரு பிரதி நிதி. நாங்கள் சென்று பார்த்து வந்தால் எங்கள் தொகுதி மக்களுக்கு போர் முனையில் ஈடுபட்டிருக்கும் போர் வீரர்களைப் பற்றி எடுத்துச் சொல்ல முடியும். போர் முனைக்கு கலைஞர்களை அழைத்துச் சென்றிருக்கிறார்கள். கலைஞர்களை அழைத்துச் சென்றது போர் வீரர்களை உற்சாகமூட்ட. போர் முனைக்கு அடுத்தபடி சமுதாய முனை. சமுதாய முனைக்கு அடுத்தது வீட்டு முனை. போர் முனைக்கு அடுத்து சமுதாய முனையை கவனிக்க வேண்டும். அதற்கு இங்கு இருக்கிற எம்.எல்.ஏ.-க்களை அழைத்துச் சென்று காட்டினால், போய்ப் பார்த்து விட்டு வந்து சமுதாயத் திலே, அங்கு என்ன நடக்கிறது என்று மக்களுக்குச் சொல்லி, மக்களுக்கு அதிகமாக உற்சாகத்தையும், நடவடிக்கைகளில் ஊக்கத்தையும் கொடுக்க முடியும். ஆகவே, நமது சபாநாயகர் தலைமையில், முதல் அமைச்சர் தலைமையில், எதிர்க்கட்சித் தலைவர் தலைமையில், சர்க்கார் கட்சி கொறடா அவர்கள் தலைமையில் இப்படி நான்கு பிரிவுகளாகப் பிரித்து ஒவ்வொரு பிரிவிலும் 50-50 பேர்கள் என்று ஏற்பாடு செய்து, போர் முனைக்கு அழைத்துச் சென்று பார்த்து வர . . . .

11th November 1965]

கனம் திரு. எம். பக்தவத்சலம் : சட்டமன்ற உறுப்பினர்களை அழைத்துக் கொண்டு போகலாம், போனால் நல்லது. ஆனால், அது அங்கு இருப்பவர்களுக்கு ரொம்ப சங்கடத்தை விளைவிக்கும். இப்பொழுதே காஷ்மீர் முதல் அமைச்சர் அவர்கள் கூறுகிறார்கள், "ஒரு வேலையையும் கவனிக்க முடியவில்லை, வந்தவர்களை கவனிப்ப தற்கு, நிறைய வண்டிகள் வேண்டியிருக்கிறது, போக்குவரத் திற்கு கார் வசதி வேண்டியிருக்கிறது" என்று சொல்லுகிறார்கள். முதலில் அவர்கள் வேலையைக் கவனிக்கட்டும். கொஞ்சம் பொறுத்து பார்க்கலாம். அது குறித்து இப்பொழுது ஒன்றும் எதிர்பார்க்கவேண்டாம் என்று கேட்டுக்கொள்கிறேன்.

திருமதி ராஜாத்தி குஞ்சிதபாதம் : தலைவர் அவர்களே, 200-க்கு மேற்பட்ட அங்கத்தினர்கள் அத்தனை பேர்களையும் கூட்டிக்கொண்டு போவது கஷ்டமாக இருக்கும் என்று சொன்னால், வீட்டு முனையை பாதுகாக்க வேண்டும், சட்டசபையில் பெண்கள் இருக்கிறார்கள், எங்களையாவது அமைச்சர் அம்மையார் தலைமையின் கீழ் போர் முனைக்கு அழைத்துச் சென்று காண்பிக்கும்படி கேட்டுக்கொள் கிறேன்.

கனம் சபாநாயகர் : பந்தோபஸ்துக்கு நிறைய செலவு ஆகுமே.

* **திரு. சி. வே. வேலப்பன்** : கனம் சட்டமன்றத் தலைவர் அவர் களே, கனம் அமைச்சர் அவர்கள் கொண்டுவந்திருக்கிற நிதி ஒதுக்கும் மசோதாவின் மீது ஒரு சில வார்த்தைகளைக் கூற விரும்புகிறேன். இந்த நாட்டிலிருக்கிற இன்றைய நிலைமையில் நாடு பூராவும் போர் முனை, ஏர் முனை என்ற முறையிலே பிரசாரத் தில் ஈடுபட்டிருக்கிறது. நாட்டில் இருக்கிற அரசியல் கட்சிகள் அனைத்தும் போர் முனையைப் பலப்படுத்தவேண்டும், அதற்கும் அதிகமாக ஏர் முனையை பலப்படுத்தவேண்டும் என்ற ரீதியிலே ஈடுபட்டு வருகின்றன. அந்த முறையை கைக்கொண்டு, இருக்கிற அரசியல் கட்சிகள் அனைத்தும் நிதி திரட்டுகிற முயற்சியில் ஈடு பட்டிருக்கின்றன. நமது தமிழகத்தில் ஆளுகின்ற அரசைச் சார்ந்த கட்சி, காங்கிரஸ் கட்சியின் சார்பில் தேர்தலுக்காக நிதி திரட்டப்பட்டது. அந்த நிதி பூராவும், பல லட்ச ரூபாய் யுத்த நிதிக்காக கொடுக்கப்பட்டிருப்பதாக நான் நண்பர்கள் மூலமாக அறிந்தேன். அப்படி கொடுக்கப்பட்டிருந்தால் அவர்களுக்கு நன்றி செலுத்துவதற்கும், பாராட்டுதல் தெரிவிப்பதற்கும் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்து, அரசு போடுகின்ற திட்டங்களில்; விவசாயத்தை மிகவும் முன்னணியாகக் கொண்டு பெருக்கவேண்டும், பிற நாடு களை எதிர்பார்க்கக் கூடாது என்ற நிலையை நாம் அனுபவித்துக் கொண்டிருக்கிறோம் என்று கூறுகிறார்கள். அதன் அடிப்படையில் விவசாயிகளுக்கு ஆக்கம் கொடுக்கவேண்டும், உற்சாகம் கொடுக்க வேண்டும், பல கோடிக்கணக்கான ரூபாய் விவசாயத்திற்காக ஒதுக்கவேண்டும், பல ஆயிரக்கணக்கான கிணறுகளை வெட்டுவ தற்கு பண உதவி செய்யவேண்டும் என்று திட்டங்கள் போடு

[திரு. சி. வே. வேலப்பன்] [11th November 1965

கிறோம். ஆனால், திட்டங்கள் நல்ல முறையில் போடப்பட்டாலும், நடைமுறையில் அந்தத் திட்டங்கள் மக்களுக்கு பயன்படுகிறதா என்று பார்க்கிறபொழுது உண்மையில் பயன்படுவதில்லை. எப்படியெனில், மேல் நிலையில் அரசாங்கத்தில் போடுகிற உத்திரவுக்கும், அதனை படித்து புரிந்துகொள்கின்ற கீழே இருக்கும் அதிகாரிகள் புரிந்து கொள்கின்ற அளவுக்கும் எத்தனையோ மாறுபாடுகள் உண்டு. உதாரணமாகச் சொல்லவேண்டுமானால், என்னுடைய தொகுதியைப்பற்றி கூட எடுத்துச் சொல்லுகிறேன். 1949-ம் ஆண்டில் என்னுடைய தொகுதியைச் சார்ந்த பகுதியிலே இப்பொழுதுள்ள முதல் அமைச்சர் அவர்கள் தலைமையில் நடந்த ஒரு மகாநாட்டில் எங்களுக்கு ஒரு அணைக்கட்டு கட்டுவதாகச் சொன்னார்கள். காவேரி ஆற்றில் ரூ. 8 லட்சம் சொச்சத்தில் அணை கட்டப்படும் என்று முதல் அமைச்சர் அவர்கள் வாக்குறுதி கொடுத்துவிட்டு, கட்ட இருக்கிற அந்த அணைக்கட்டுக்கு விவசாயிகள் ரூ. 1,67,000, பத்து ஆண்டு தவணைக்குள் கொடுக்க வேண்டுமென்று சொன்னார்கள். அதன்படி விவசாயிகள் கொடுத்துள்ளார்கள். இப்பொழுது அபிவிருத்தி வரி என்ற முறையில் ஒரு வரி போட்டிருக்கிறார்கள். அரசாங்கத்தினால் போடப்பட்ட வரிகள், பஞ்சாயத்தினால் போடப்பட்ட வரிகள், பஞ்சாயத்து யூனியன்களால் போடப்பட்ட வரிகள் இப்படிப்பட்ட பல வரிகளினால் மக்கள் அவதிப்பட்டுக்கொண்டிருக்கிற இந்த நேரத்தில் அரசாங்கம் இப்பொழுது அபிவிருத்தி வரி என்ற ஒரு வரியை போட்டு, எங்களுடைய் பகுதியில் அது நடைமுறைக்கு வந்திருக்கிறது. அரசாங்கம் சொன்னபடி நாங்கள் பத்து ஆண்டுகளில் அந்தத் தொகையை செலுத்தியிருக்கிறோம், அந்தப் பகுதி விவசாயிகள் செலுத்தியிருக்கிறார்கள். ஆனால், இப்பொழுது அபிவிருத்தி வரி என்ற முறையில் வரி போடப்பட்டிருக்கிறது 1965-ம் ஆண்டில். இந்த அணை கட்டப்பட்டது 1950-ம் ஆண்டில். விவசாயிகள் கட்டவேண்டிய தொகை 1960-ம் ஆண்டில் கட்டி முடிந்தாகிவிட்டது. இந்த நிலையில் இப்பொழுது அபிவிருத்தி வரி என்று போட்டிருப்பது மக்கள் வெறுப்படையக்கூடிய நிலையை உருவாக்கியிருக்கிறது. இந்த பெட் ரெகுலேடர் மூலமாக விவசாயிகள் புதியதாக பலன் அடைந்திருக்கிறார்களா என்று பார்க்கும் பொழுது, பழைய ஆயக்கட்டு விவசாயிகள் இம்மியளவும் பயன் அடையவில்லை, அரசாங்கம் விதித்திருக்கின்ற இந்த வரியை இப்பொழுது நடைமுறைக்குக் கொண்டுவர அதிகாரிகள் முயற்சிகள் எடுத்துக்கொண்டிருக்கிறார்கள். அது சரியல்ல, முறையல்ல. அது விவசாயிகளை நசுக்குகின்ற ஒரு வரியாக இருக்கிறது. ஆகவே, இதை அமைச்சர் அவர்கள் கூர்ந்து கவனிக்க வேண்டும். முதல் அமைச்சர், நீர்ப்பாசன அமைச்சர் விவசாய அமைச்சர் ஆகியோர்களுக்கு இது நன்கு தெரிந்த விஷயம். இதனால் விவசாயிகள் பாதிக்கப்பட்டு தொடர்ந்து விண்ணப்பங்கள் அனுப்பிக் கொண்டிருக்கிறோம். அதே வாய்க்காலைச் சேர்ந்த அந்தப் பகுதியில் தண்ணீர் எடுக்கிறார்கள், பெர்மிட் இல்லாமல் தண்ணீர் எடுக்கிறார்கள் என்ற முறையில் விவசாயிகளுக்கு ஒரு ஏக்கருக்கு ரூ. 400 தண்டத் தீர்வை விதிக்கிறார்கள். அப்படி

11th November 1965] [திரு. சி. வே. வேலப்பன்]

விதிப்பது சரி தான். ஆனால், நெல், கேழ்வரகு போன்ற உணவுப் பண்டங்களை விவசாயம் செய்கின்ற விவசாயிகளுக்கு தீர்வை ரூ. 400, கரும்பு, மஞ்சள், வாழை போன்ற ஒரு போகம் சாகுபடி செய்கிறவர்களுக்கு ரூ. 200 வரி விதிக்கப்படுகிறது. இதனால் ஏதாவது தண்ணீர் தட்டுப்பாடு நீக்கப்பட்டதா என்றால் இல்லை, தண்ணீர் தட்டுப்பாடு ஏதாவது வந்திருக்கிறதா என்றால் இல்லை. தண்ணீர் தட்டுப்பாடு உண்டா, இல்லையா என்பதுபற்றி மாவட்ட அபிவிருத்தி கவுன்ஸில் கூட்டத்தில் ஆகஸ்டு மாதத்தில் ஒரு தீர்மானத்தைக் கொண்டுவந்தேன். என்ஜினியர் பிரதிநிதிகள், தண்ணீர் தட்டுப்பாடு நான்கு ஆண்டுகளாக கட்டாயமாக இல்லை, கடைசி கிராமங்களில் அந்தப் பிரச்னைக்கு இடமே இல்லை என்று புள்ளி விவரம் கொடுத்து அவர்கள் உறுதி மொழி கொடுத்தார்கள். ஆகவே விவசாயிகளுக்கு உள்ள பிரச்னைகளையெல்லாம் நல்ல முறையில் ஆராய்ந்து, அந்தப் பகுதிகளில் உள்ள மக்களுக்கு நல்ல காரியங்களை உடனயாகச் செய்து கொடுக்கவேண்டும். மேலே உத்தரவு போட்டால், கிணறு வெட்டுவதற்கு பணம் கொடுக்கிறோம் என்று சொல்லிவிட்டால், பணம் எல்லாம் மக்களுக்கு போய்ச் சேர்ந்து விடுகிறதா என்றால் இல்லை. அரசாங்கம் அதை நல்ல முறையில் கண்காணிப்பதற்கு சில பிரதிநிதிகளை நியமிக்க வேண்டும். அரசாங்கம் இதை மிகவும் தீவிரமாக கண்காணிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இதில் எத்தனையோ கோளாறுகள் இருக்கின்றன. போடப்படுகின்ற திட்டங்களெல்லாம் நல்ல முறையில் இருக்கலாம், ஆனால் அவைகள் நடைமுறைக்கு வரும் பொழுது எவ்வளவோ சிக்கல்கள் இருக்கின்றன. அதனால் மக்கள் அவதிப்படுகிறார்கள். காலணா லஞ்சம் கொடுக்காமல் லோன் வாங்கியதாக யாராவது சொல்ல முடியுமா, முடியவே முடியாது. எல்லா இடங்களிலும் லஞ்சம் தாண்டவமாடுகிறது. நிர்வாகத்தைச் சரிபடுத்தவேண்டும். எல்லா இலாக்காக்களிலும் நிர்வாகம் சரிவர நடைபெறவேண்டும். திட்டங்களை போட்டால் மட்டும் போதாது. அமைச்சர் அவர்கள் இதைக் கூர்ந்து கவனிக்க வேண்டும். தொடர்ந்து சொல்லிக்கொண்டு வருகிறோம். ஆனால், கவனிப்பாரற்ற நிலையில் இருக்கிறது. இந்த நிலைமைகளை நல்ல முறையில் மாற்றி, செவ்வனே செய்யவேண்டும் என்று கேட்டுக் கொண்டு எனது உரையை முடித்துக் கொள்கிறேன்.

* **திரு. எம். எஸ். செல்வராஜன் :** கனம் சபாநாயகர் அவர்களே, கனம் முதல் அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கக்கூடிய நிதி ஒதுக்கீடு மசோதாவை வரவேற்கிறேன். ராஜ்யம் முழுவதிலும் ஒப்பிட்டுப்பார்ப்போமேயானால், திருநெல்வேலி ஜில்லா மழையில்லாத ஜில்லா, சமீப காலத்தில் கூட மழையில்லாத ஜில்லா. நேற்று முன் தினம் வந்த புயலினால் கூட மழையில்லாத ஒரு ஜில்லாவாக, ராஜ்யத்திலேயே மிகவும் பாதிக்கப்பட்ட ஒரு ஜில்லாவாக இருக்கிறது. அங்கே ஓரளவுக்கு பஞ்ச நிவாரண வேலைகள் தொடர்ந்து நடந்து வருகின்றன. என்றாலும் கூட, ஒரு குறிப்பிட்ட சில பகுதிகளில் தான் பஞ்ச நிவாரண வேலைகள் நடப்பதற்கு அரசாங்கம் ஏற்பாடு செய்திருக்கிறது. அந்தப் பகுதி

[திரு. எம். எஸ். செல்வராஜன்] [11th November 1965

களுக்குக் கிடைக்கக்கூடிய சலுகைகள் மற்ற எல்லா பகுதிகளுக்கும் கிடைக்கக்கூடிய வகையில், அந்த அளவுக்கு ரஸ்தா பராமரிப்பு வேலைகள், குளங்களை தூர் எடுத்து செப்பனிடும் வேலைகள் ஆகிய வேலைகளை எல்லாப் பகுதிகளிலும் தொடர்ந்து எடுத்து நடத்த வேண்டிய அவசியம் இப்போது ஏற்பட்டிருக்கிறது. அதைப் பற்றி அரசாங்கம் அவசரமாகக் கவனிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

ஏராளமான கிணறுகள் வெட்டுவதற்கு ராஜ்யம் முழுவதிலும் ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன. ஒரு கிணறுக்கு ரூ. 2,000 ஒதுக்கப்பட்டபோதும் ரூ. 500 தான் மான்யமாகக் கொடுக்கப்பட்டது. இப்பொழுது ரூ. 5,000 வரை கொடுப்பதென்றாலும், அதை ரூ. 500 மான்யமாக கொடுக்காமல், அந்த மான்ய அளவை ஓரளவுக்கு அதிகப்படுத்திக் கொடுத்தால், முறையாக கிணறுகளெல்லாம் வெட்டப்படுவதற்கு ஏதுவாக இருக்கும். மற்றொரு அங்கத்தினர் சுட்டிக்காட்டியது மாதிரி, பவர் டிரில்ஸ் இல்லாத குறை மிகவும் உணரப்படுகிறது. இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு, திரு. டி. டி. கிருஷ்ணமாச்சாரியும், நமது ரெவின்யூ அமைச்சர் அவர்களும் சேர்ந்து சுற்றுப்பிரயாணம் செய்தபொழுதே அதற்குரிய திட்டம் போடப்பட்டு, ராஜ்ய அரசாங்கத்திலிருந்து அந்தத் திட்டம் மத்திய அரசாங்கத்திற்குச் சென்றிருப்பதாகத் தெரிகிறது. பவர் டிரில்ஸ் பெறுவதிலே என்ன கஷ்டம் இருக்கிறது? அவற்றைப் பெற்றுக் கொடுத்தால், வேலைகளைத் துரிதமாக செய்வதற்கு உபயோகமாக இருக்கும் என்று நான் நினைக்கிறேன். சர்ஃபேஸ் வாட்டரை, மேலெழுந்தவாரியாக இருக்கும் தண்ணீர் குறைவால், பூமிக்கு அடியில் இருக்கும் தண்ணீரை உபயோகத்திற்குக் கொண்டு வர ஏற்பாடு செய்யமுடியுமா என்பதை, அதன் அவசியத்தை உணர்ந்து, பரிசீலனை செய்து பார்க்கலாம். தூத்துக்குடிப் பகுதியில் பெரிய தொழிற்சாலைகள் வருவதற்கு வேண்டிய அளவுக்கு நல்ல தண்ணீர் இல்லாதது உணரப்படுவதாக நிபுணர்கள் ஒரு கருத்துத் தெரிவித்திருக்கிறார்கள். ஆகவே, அண்டர் கிரௌண்ட் வாட்டர் தொழில் நிறுவனங்களுக்குக் கொடுத்து உதவ முடியுமா என்பதையும் பரிசீலிக்க வேண்டும்.

திருநெல்வேலி ஜில்லாவிற்கு வேண்டிய உணவு தானியங்களில், தஞ்சை ஜில்லாவிலிருந்து அரிசியாகவே வருகிறது. அந்த அரிசி அவ்வளவு நல்லதாக இல்லை. அதே நேரத்தில் திருச்சி ஜில்லா அரிசி நல்லதாக இருக்கிறது. ஆனால் அந்த அரிசியைக் கேரளாவிற்கு அனுப்பிவிடுகிறார்கள். ஆகவே, தஞ்சையிலிருந்து வரும் அரிசி நல்லதாக இல்லை என்ற புகார் வருகிறது. எந்த வகையில் நல்லதாக அரிசி கொடுக்க முடியுமோ அந்த அளவு கொடுக்கவும், அதோடு ரேஷனில் அரிசிக்குப் பதிலாக நெல்லாகவே வழங்க முடியுமா என்பதையும் கவனிக்க வேண்டும். பல இடங்களில் ஒரு வார ரேஷனைக்கூட வாங்குவதில் கஷ்டம் உணரப்படுகிறது. ஆக, வாரத்திற்கு இரண்டு முறையாக வினியோகம் செய்ய முடியுமா என்பதைப் பரிசீலனை செய்யலாம். மாடுகளுடைய தீவனங்கள்கூட குறைந்திருக்கிறது. தவிடுக்கும் கஷ்டம் ஏற்பட்-

11th November 1965] *[திரு. எம். எஸ். செல்வராஜன்]*

டிருக்கிறது. அங்கே இருந்து அரிசியாக வந்துவிடுவதால், நெல் இல்லாததால், தவிடும் கிடைப்பது கஷ்டம். நெல்லாகவே கொடுப்பது பெரும்பாலும் நலமாக இருக்கும் என்பதால், அந்த வகையில் உதவி செய்ய முடியுமா என்பதையும் பரிசீலனை செய்யலாம்.

பர்மா அகதிகளுக்கு உதவி செய்ய என்று தொகை ஒதுக்கப்படுகிறது. ஏராளமான, ஆயிரக்கணக்கான அகதிகள் இலங்கையிலிருந்து வருகிறார்கள். அவர்கள் சிறியசிறிய தொழில்கள், ரூ. 500, 1,000-த்தில் துவங்க அவர்களுக்கு உதவி செய்ய வேண்டும் என்கிற கருத்தை சர்க்கார் பரிசீலனை செய்தது, ஒத்துக் கொண்டது. இருந்தும், இன்றைக்கு ஆயிரக்கணக்கான மனுக்கள் தேங்கிக் கிடக்கின்றன. கேட்பாரற்றுக் கிடக்கின்றன. பர்மா அகதிகளுக்கு உதவி செய்வது போல, இந்த இலங்கை அகதிகளுக்கும் உதவி கொடுப்பது நியாயம். பர்மா அகதிகளுக்குச் சொந்த வீடு இருக்கிறது என்பதற்காக, மனுக்கள் மறுக்கப்பட்டிருக்கின்றன. ஆகவே இது சம்பந்தமாக தீவிரமாகப் பரிசீலனை செய்யவேண்டும்.

சமீபத்திலே விதித்திருக்கிற நிலை நீர் வரி உயர்வினால், ஏற்பட்டிருக்கும் பாதகம் திருநெல்வேலியில் கூடுதல். அதே நேரத்தில் பெட்டர்மெண்ட் டாக்ஸ் போட்டு அதை வசூலிக்க ஸ்பெஷல் ஆபீசர் போட்டு இருக்கிறார்கள். இதிலே அரசாங்கம் யோசித்துச் செய்யவேண்டும். இன்றைய தினம் வரட்சி காலம் காரணமாக, தாம்பரபர்ணியின் எல்லாக் கால்வாய்களுமே புனரமைப்புச் செய்ய முயற்சி எடுக்கலாம். நேற்றையதினம் முதல் அமைச்சர் இந்தத் தீர்வை பற்றிப் பேசும்போது, இதை மாற்றலாம், இதையெல்லாம் நேஷனலைஸ் செய்ய அடுத்த வருஷம் முற்படலாம் என்கிற கருத்தைத் தெரிவித்தார்கள். அந்த நிலையில் இந்த வேலைகள் துரிதமாக, சீக்கிரமாகச் செய்ய அதைப் பற்றி அரசாங்கம் பரிசீலனை செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

இந்த ஜில்லாவில் குளங்கள் ஆழப்படுத்துவது சம்பந்தமாக, பேய்க்குளத்தை முன்னோடித் திட்டமாக எடுத்திருக்கிறோம். அது ஆறு லட்ச ரூபாய் செலவில் திட்டம் போட்டுச் செய்ததில், 10 வருஷங்களுக்குப் பிறகு இப்பொழுது அது சாத்தியமில்லை, முடியாது என்று ரிபோர்ட் கொடுத்திருக்கிறார்கள். மற்ற குளங்கள் ரிபேர் செய்யமுடியாத அளவுக்கு, இந்த முன்னோடித் திட்டம் காரணமாக இருந்திருக்கிறது. கடைகோடிக் குளங்களையாவது செய்யமுடியுமா என்று பரிசீலனை செய்யவேண்டும் என்று நான் நினைக்கிறேன். இந்த ஜில்லாவில் இருக்கும் நிலை மற்ற ஜில்லாக்களுக்கும் பொருந்தும் என்று நம்புகிறேன்.

(திருமதி பி. கே. ஆர். லட்சுமிகாந்தம் தலைமை)

ஆசிரியர்கள் விகிதாசாரப்படி போடப்படவில்லை. போட வேண்டிய ஆசிரியர்கள் போடவில்லை என்பதால், ஆயிரக்கணக்கான ஆசிரியர்கள், பயிற்சி பெற்றுவிட்டு, எம்ப்ளாய்மெண்ட் எக்ஸேஞ்சில் ரிஜிஸ்தர் செய்துகொண்டு அவதிப்படும் நிலைமை ஏற்படுகிறது.

ஆகவே அதைத் தீவிரமாகப் பரிசிலனை செய்து, அதற்கான ஏற்பாடு செய்வது நல்லது என்று தெரிவித்துக்கொண்டு, இந்த மானியத்தை ஆதரிக்கிறேன்.

திரு. வை. சங்கரன்: கனம் தலைவர் அவர்களே, இப்பொழுது நாட்டிலே ஏற்பட்டிருக்கிற தேசீய நெருக்கடி, தேசீய பாதுகாப்பை ஒட்டி, நம்முடைய ஐந்தாண்டுத் திட்டங்களை மாற்றி அமைக்கப் பட்டு இருக்கின்றன. நாட்டுப் பாதுகாப்போடு, உணவுக்கும் என்னென்ன காரியங்கள் செய்யவேண்டும், அவற்றிற்கெல்லாம் முதல் இடம் கொடுத்து அந்த அளவிலே நாட்டின் திட்டமெல்லாம் மாற்றி அமைக்கப் படுகின்றன. குறிப்பாக, தொழில்களை எடுத்துக்கொண்டால், யுத்த காலத்தில், யுத்தப் பொருள்களை, தளவாடங்களை, போருக்கும், சேனைகளுக்கும் படைகளுக்கும் வேண்டிய பொருள்களைச் செய்துகொடுக்கும் வகையில் மாற்றி அமைந்து பொருள்களை உற்பத்தி செய்யும் வண்ணம் ஏற்பாடு செய்து கொண்டிருக்கிறோம். தொழில்கள் இரண்டுக்கும் பயன்படும் வகையில் அமைக்கப்படவேண்டும் என்று தெரிவிக்க விரும்புகிறேன். ஏற்கனவே கூறியது போல, மத்திய சர்க்கார் யுத்த தளவாட, டிபன்ஸ் எக்விப்மெண்ட் தொழில்களை தெற்கே, நம் ராஜ்யம் போன்ற இடங்களிலே அமைத்தால் ஓரளவு நன்மை உள்ளதாக இருக்கும். நாட்டின் எல்லைக்குப் பக்கத்தில் இல்லாமல் தள்ளி இருப்பது நல்லது. நாம் ஆயிரக்கணக்கான மைல்கள் தள்ளி இருக்கிறோம். ஆகவே யுத்த தளவாட, டிபன்ஸ் எக்விப்மெண்ட் தொழிற்சாலையை நம் ராச்சியத்தில் அமைக்க, அதற்கு வேண்டிய முயற்சி மத்திய சர்க்காரோடு பேசி ஆவன செய்யவேண்டும் என்று சொல்ல விரும்புகிறேன்.

சேலம் உருக்காலையும் வேண்டும். முன்னே இருந்த வாதங்கள் எல்லாம் இப்பொழுது இருக்கும் நிலையில் பொருந்தாது. இன்றைக்கு எவ்வளவு உருக்காலைகள் இருந்தாலும் நல்லது. ஆந்திராவில் ஆரம்பித்தாலும் பரவாயில்லை. நாமும் இங்கே ஒன்று ஆரம்பிக்கலாம். பல தொழிற்சாலைகளை ஏற்படுத்தி, பல நாடுகள் யுத்த காலத்தில்தான் முன்னேறியிருக்கின்றன. தொழில் வளர்ச்சி அடைந்திருக்கின்றன. அந்த வகையில் தொழில்களை ஏற்படுத்த வேண்டும்.

அடுத்தபடியாக ஜவான்களுக்கு உதவி செய்வது. என்னென்ன வகைகளில் அவர்களுடைய குடும்பத்திற்கும், சந்ததியார்களுக்கும் உதவி செய்யவேண்டுமோ அந்த அளவுக்குச் செய்ய வாக்குறுதி கொடுக்கவேண்டும். ஜவான்கள் போருக்குப் போவதை எவ்வளவு அட்ராக்டிவாகச் செய்யமுடியுமோ அவ்வளவு செய்யவேண்டும். நாம் அவர்களுக்கு எவ்வளவு வசதிகள், சலுகைகள் கொடுக்க வேண்டுமோ அவ்வளவும் செய்துகொடுக்கவேண்டும். அதைப் பற்றி விவரமாகச் சொல்ல நினைக்கவில்லை. அதெல்லாம் அரசாங்கத்திற்குத் தெரியும். கல்வி சம்பந்தமாக இருந்தாலும், பிற்கால பென்ஷன் சம்பந்தமாக இருந்தாலும், என்ன வசதிகளானாலும், என்ன செலவானாலும் அதை நாம் கொடுக்க வாக்குறுதி கொடுக்க வேண்டும். போருக்கு சென்று திரும்பி வரும் ஜவான்கள் ஊனம்

உற்றவர்களாக இருந்தால், அவர்களுக்கும், அவர்கள் குடும்பத்திற்கும், இறந்தவர்கள் குடும்பத்திற்கும் எல்லாவித உதவிகளும் செய்ய முன்வரவேண்டும்.

பத்திரிகையில் வெளியாகும் முக்கியமான விஷயம் பற்றிச் சொல்ல வேண்டும். ஜவான்கள் மரணம் அடைந்ததைப் பற்றிப் பிரசுரிக்கும்போது, தவறு ஏற்படுகிறது. சில பத்திரிகைகள் போடுகிறார்கள், தமிழ் இளைஞன் மரணம் அடைந்தார் என்று போட்டு, அவர் திருமணம் ஆன காலத்தில் மனைவியோடு எடுத்த போட்டோவை பிரசுரித்து, அவர் தாயார் அலறினாள், அரிசி கொடுக்கப் பட்டது என்றெல்லாம் பிரசுரிக்கிறார்கள். இந்த மாதிரி குழந்தைகள் அனாதையாகிவிட்டனர். என்றெல்லாம் அதைரியம் ஊட்டும் வகையில் பிரசுரிக்கிறார்கள். ராணுவத்தில் சேர வேண்டும் என்பதற்கு மாறான எஃபெக்ட் தான் ஏற்படும். கொஞ்சநஞ்சம் சேரவேண்டும் என்று நினைப்பவர்கள் கூட, இப்படிப்பட்ட பத்திரிகைகள் ஸென்ஸேஷனலாக இருக்க—பிரசுரிக்கும் முறையால் கலக்கம் அடைந்து போவார்கள். இந்த முறையில் பிரசுரிக்கும் பத்திரிகைகளைத் தடை செய்ய சர்க்கார் நல்ல முறையில் ஏற்பாடு செய்யவேண்டும். அவர்கள் இப்படிப் பிரசுரிக்கக்கூடாது என்று கண்டிப்பாக அதை நிறுத்தவேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

அதே போன்று, இப்பொழுது அஸிஸ்டெண்ட் சர்ஜன் வேலைக்கு வர ஒரு வருஷம் ஆர்மி சர்வீஸ் வேண்டும் என்று நிபந்தனை போடுகிறோம். அதே போல எஞ்ஜினியர்களை ட்ராப்ட் செய்யவும், நிபந்தனை போடவேண்டும். பல்வேறு தொழில்களில் சேரும் இளைஞர்களுக்கும் கண்டிஷன் போடவேண்டும்.

இத்தனைக்கும் மேலாக, போர் முனையில் போலவே, உணவு முனையிலும் நெருக்கடி இருக்கிறது. அதை நாம் மறந்துவிடக்கூடாது. சர்க்கார் இந்த முறையில் பல முயற்சிகள் செய்து கொண்டிருக்கிறார்கள். இன்றைக்கு இயற்கை ஒத்துழைக்காத நேரத்தில் நமக்குப் பெரிய கஷ்டம் காத்திருக்கிறது. பின்னால் இதன் விளைவுகள் தெரியும். ஆகவே நாம் போர் முனையில் போல உணவு முனையிலும் கவலை கொள்ளவேண்டும். இன்றைக்குப் பெரியார் பிராஜெக்டில் இரண்டு போகம் பயிர்செய்ய இருக்க, ஒரு போகத்திற்குக் கூட தண்ணீர் விடமுடியாத நிலைமை இருக்கிறது. நல்ல நிலை வரும் வரை என்ன செய்யவேண்டும் என்று லாங் ரேஞ்ஜாகத் திட்டமிட்டுச் செயல்படவேண்டும். இல்லாவிட்டால் உணவு நிலையில் பெரிய நெருக்கடி வந்த பிறகு, உணவு முனை போர் முனையை விட அதிகமான நெருக்கடியை உண்டாக்கிவிடலாம் என்பதைக் கவலையோடு சொல்ல விரும்புகிறேன்.

கல்வி சம்பந்தமாக எடுத்துக்கொண்டால், விஞ்ஞானத்திற்கு முதல் இடம் தரவேண்டும், கல்வியின் தரத்தை உயர்த்த வேண்டும், ஆங்கிலத்தின் தரம் உயர்த்தப்பட வேண்டும் என்றெல்லாம் சொல்வதைப் பார்க்கிறோம். ஆங்கிலத்தில் நல்ல தரம் பெறவேண்டுமானால் அதற்கு எக்ஸ்ட்ரா-ரீடிங் தேவை. பாடப் புத்தகங்களை

வீட் எக்ஸ்ட்ரா-ரீடிங்குக்கான புத்தகங்களை மாணவர்கள் படிக்க வாய்ப்பு ஏற்படுத்தவேண்டும். எக்ஸ்ட்ரா புத்தகங்கள் படிப் பதற்கென்று தனி 'பீரியட்' வைத்து, அதற்கு அதிக ஊக்கம் அளிக்கவேண்டும். பள்ளிக்கூடப் பாடங்களையோ, அது சம்பந்தப்பட்ட நோட்ஸ்களையோ படித்து ஒப்பித்தால் மட்டும் போதாது. எக்ஸ்ட்ரா-ரீடிங்குக்கும் தனி ப்ரொவிஷன் வைத்து, மாணவர்களை ஊக்குவித்தால், ஆங்கிலத்தின் தரத்தை உயர்த்த முடியும் என்று நான் தெரிவித்துக் கொள்கிறேன். முன்பெல்லாம் நல்லொழுக்க போதனைக்காகத் தனி பீரியட் இருந்தது. நல்லொ ழுக்கம், பக்தி இவைகளை மாணவர்களுக்குப் போதிக்கும் வகையில் பாடத் திட்டங்கள் திருத்தியமைக்கப்பட வேண்டும்.

பொது சுகாதாரத் திட்டங்களை எடுத்துக்கொண்டால் உணவுப் பொருள்களில் கலப்படம் செய்வதைத் தடுக்கத் தீவிர நடவடிக்கை எடுத்துக் கொண்டு வருகிறார்கள். சில்லரை வியா பாரிகள் அடிக்கடி தண்டிக்கப்படுகிறார்கள். குறிப்பாக, மஞ்சள் வியாபாரம் செய்யும் சில்லரை வியாபாரிகள், இதில் கலப்படம் செய்ததாகத் தண்டிக்கப்படுகிறார்கள். அவர்கள் பெரிய வியா பாரிகளிடம் இந்தப் பொருளை வாங்கும்போது, அதில் கலப்படம் செய்யப்பட்டிருக்கிறதா என்பதைத் தெரிந்து கொள்வதற்கான வாய்ப்பு வசதி இல்லாத காரணத்தினால், மஞ்சளில் கலப்படம் இருக்கிறதென்று சொல்லி, இன்னசன்ட் பீபிளும் அரெஸ்ட் செய்யப்பட்டு, கன்விக்ட் செய்யப்படுகிறார்கள். முதல் குற்றமாக இருந்தாலும் கன்விக்ட் செய்யலாம் என்று சட்டத்தைத் திருத்தி யமைத்திருக்கும் காரணத்தால், முதல் தடவையே கூட சில்லரை வியாபாரிகள் தண்டிக்கப்படும் நிலைமை ஏற்படுகிறது. பெரிய நகரங்களிலாவது Food Testing Laboratory வைத்து, உணவுப் பொருள்களில் கலப்படம் செய்யப்பட்டிருக்கிறதா என்பதைக் கண்டுபிடிப்பதற்கான போதிய வசதிகளைச் செய்துகொடுக்க வேண்டும். அத்தகைய வசதி இருந்தால், கலப்படம் எந்த அளவிற்குச் செய்யப்பட்டிருக்கிறது என்பதைப் பரிசோதித்துக் கொள்ள முடியும். வியாபாரிகளுக்கும் இதனால் நன்மை ஏற்படக் கூடும். அத்தகைய வசதிகளைச் செய்யவேண்டும்.

கூட்டுறவு இலாகாவில் சீனியர் இன்ஸ்பெக்டராகப் பணியாற்று கிறவர்கள் பதினைந்து ஆண்டுகளுக்கு மேலாக டெம்பரரியாகவே வைத்துக்கொள்ளப்பட்டிருக்கும் நிலைமை தொடர்ந்து இருந்து கொண்டு வருகிறது. அவர்களுக்குரிய பரீட்சையில் அவர்கள் தேறிவிட்டாலும் கூட, பதினைந்து ஆண்டுகளாக அவர்கள் டெம் பாரியாக வைக்கப்பட்டிருப்பது அநீதமாகும். கீழ் மட்டத்தில் இருக்கும் உத்தியோகஸ்தர்களை ஒரு ஜில்லாவிலிருந்து இன்னொரு ஜில்லாவிற்கு மாற்றுகிறார்கள். 100 ரூபாய், 150 ரூபாய் சம்பளம் பெறும் உத்தியோகஸ்தர்களை ஒரு ஜில்லாவிலிருந்து மற்றொரு ஜில்லாவிற்கு மாற்றுவது நன்றாக இருக்காது. இன்றிருக்கும் விலைவாசியில் அவர்களால் நிலைமையைச் சமாளிக்க முடியாது.

சப்-மாஜிஸ்ட்ரேட்டுகளின் சர்விஸ் கண்டிஷன் திருப்திகரமாக இல்லை என்று அவர்களுடைய சங்கத்தார் விண்ணப்பித்துக் கொண்டிருக்கிறார்கள். அவர்களுடைய சர்விஸ் கண்டிஷனை நல்ல முறையில் மாற்றியமைக்க வேண்டும்.

மதுரையில் கோர்ட் கட்டடம் அபாயகரமான நிலையில் இருக் கிறது. அதுபற்றி கேள்வி கூடக் கேட்கப்பட்டது. அது பற்றி திட்டவட்டமான நடவடிக்கை எடுக்க வேண்டும். திடீரென்று ஆபத்து வந்துவிட்டால் அரசாங்கம் மக்களுக்குப் பதில் கூற வேண்டிய நிலைமை ஏற்பட்டுவிடும். ஆகவே, கோர்ட் கட்டடத் தைப் பரிசோதித்து ஆவன செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகின்றேன்.

கல்விச்சாலைகளில் வேலை பார்க்கும் Non-teaching staff னுடைய சர்விஸ் கண்டிஷனிலும் முன்னேற்றம் இல்லாமல் இருக் கிறது. டீச்சிங் ஸ்டாஃப்புக்கு உள்ள பென்ஷன், ப்ராவிடென்ட் பண்டு போன்ற எல்லா வசதிகளும் இவர்களுக்கு இல்லாத நிலை இருக்கிறது. அதையும் கவனிக்கவேண்டும். ஓர்க்-சார்ஜ்டு எஸ்டாபிளிஷ்மென்ட், இன்னும் ப்ரொவின்ஷியலைஸ் செய்யப்படா மலிருக்கிறார்கள். அவர்களையும் படிப்படியாக ரெகுலரைஸ் செய்ய ஏற்பாடு செய்யவேண்டுமென்று கேட்டு என் உரையை முடிக்கின்றேன்.

* திரு. எ. கோ. பாலகிருஷ்ணன்: கனம் தலைவர் அவர்களே, முதல் அமைச்சர் அவர்களால் கொண்டுவரப்பட்டிருக்கிற இந்த நிதி ஒதுக்கீடு மசோதாவைக் குறித்து நான் சில வார்த்தைகள் சொல்ல ஆசைப்படுகிறேன். இதிலே இரண்டு பகுதிகள் முக்கிய மாகக் கருதப்படுகின்றன. ஒன்று போர் முனை; மற்றொன்று ஏர் முனை. ஏர் முனையைப் பற்றி இந்தச் சட்ட மன்றத்திலே பல பேர் பேசிக்கொண்டே போகிறார்களே தவிர, அதைக் குறித்து முடிவு எதுவும் எடுத்ததாகத் தெரியவில்லை. ஏர் முனையைப்பற்றிப் பேசும்போது பரிதாபப்பட்டு பேசுகிறார்கள்; கருணையோடு பேசு கிறார்கள். ஆனால், நடைமுறையில் பார்க்கும்போது, என்ன ஆயிருக்கிறது என்று சொல்ல முடியாத அளவிற்குத் தான் இருக் கிறது. ஏர்முனை, போர் முனை இவைகளை ஒப்பிட்டுப் பேசிய நம் நாட்டின் முதல் அமைச்சர் அவர்கள் நல்ல கருத்துப்படத்தான் சொல்லியிருக்கிறார்கள். ஆனால், நிறைவேற்றுகிறபோது எப்படி நிறைவேற்றப் போகிறார்கள் என்பது காத்திருந்து பார்க்க வேண்டிய ஒன்றாகும். அதே நிலையில், முக்கியமாக விவசாய உற்பத்தி என்றால், அதை எப்படி அபிவிருத்தி செய்வது என்று இப்பொழுது தான் கேட்கிற மாதிரி இருக்கிறது. நாங்கள் 1962-ம் ஆண்டிலிருந்து இதுவரைக்கும் என்ன கருத்தைச் சொல்லி வந்தோமோ, அதே கருத்தைத் தான் நம்முடைய நாட்டின் முதல் அமைச்சர் அவர்கள் இன்றைக்கு வெளியிட்டிருக்கிறார்கள்.

ஏர் முனை என்று சொல்லும்போது, நாங்கள் சொல்லி வருவது என்ன? கிராமப் புறங்களில் உள்ள புறம்போக்கு நிலங்களை யெல்லாம் நிலமில்லாத ஏழை விவசாயிகளுக்கு ஆர்ஜிதம் செய்து

கொடுக்க வேண்டும் என்ற கருத்தை இன்று வரைக்கும் சொல்லிக் கொண்டே வருகிறோம். அதைத்தான் அவர்களும் குறிப்பிட்டிருக்கிறார்கள். ஆற்றுப் பாசனம் இல்லாத பகுதிகளில் ஏராளமான கிணறுகள் வெட்டிக் கொடுக்க வேண்டும் என்ற கருத்தையும் நாங்கள் வலியுறுத்துகிறோம். அதைத்தான் இன்றும் அவர்கள் சொல்கிறார்கள். நாங்கள் சொல்கிற கருத்திலே உண்மை இருக்கும் என்று இப்போதாவது நம்முடைய முதல் அமைச்சர் அவர்கள் நம்புவார்கள் என்று நான் நினைக்கிறேன். அதன்படி நடப்பார் என்றும் நான் நம்புகிறேன்.

இதுவரை, புதிய கிணறு வெட்ட 2,000 ரூபாய் கடனாகக் கொடுத்து வந்தார்கள். அதிலே 500 ரூபாய் மான்யம் என்று சொல்லப்படுகிறது. இப்பொழுது புதிய கிணற்றுக்கு 5,000 ரூபாய் கடனாகக் கொடுக்க முன்வந்திருக்கிறார்கள். கடன் கொடுக்கும் விஷயத்தில் எவ்வளவு சிக்கல்கள் இருக்கின்றன என்று எனக்கு முன் பேசிய கனம் அங்கத்தினர்கள் அத்தனை பேரும் தெளிவுபட எடுத்துச் சொன்னார்கள். அந்தச் சிக்கல்களைப் போக்க அரசாங்கம் வழிவகை செய்ய வேண்டும். 5,000 ரூபாய் கடனில், நாங்கள் 2-ந் தேதி, மாவட்டக் கலெக்டரைச் சந்தித்தபோது, கால் பங்கு மானியமாக வழங்கப்படும் என்று சொன்னார்கள். கால் பங்கு மானியம் என்று அவர் சொன்னதாகத்தான் எனக்குப் பட்டது. ஆனால், எனக்கு முன் பேசிய அங்கத்தினர் ஒருவர் ரூ. 500 தான் மானியம் என்று சொன்னார். எது உண்மை என்று எனக்குப் புரியவில்லை. அதை முதல் அமைச்சர் அவர்கள் பதில் சொல்லும்போது திட்டவட்டமாக விளக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

புதிய கிணறு வெட்ட ஐயாயிரம் ரூபாய் கடன் கொடுக்க வேண்டும் என்று இப்பொழுது சர்க்கார் கங்கணம் கட்டிக்கொண்டிருக்கிறதே தவிர, பழைய கிணறுகளைப் பொறுத்த வரையில் என்ன செய்யவேண்டும் என்று சொல்லவில்லை. பழைய கிணறுகளைக் கொண்டு விவசாயம் செய்கிறவர்களுக்கும் உற்சாகமும் ஊக்கமும் கொடுக்கவேண்டும். இரண்டு ஏக்கர், மூன்று ஏக்கர் கிணற்றுப் பாசனத்தின் கீழ் விவசாயம் செய்து கொண்டிருக்கிறவர்களுக்கு உற்சாகம் அளிக்கக்கூடிய வகையில் திட்டம் ஒன்றும் காணப்படவில்லை. புதிய கிணறு வெட்டக் கடன் கொடுப்பதைப் போல, பழைய கிணறுகளைச் சீர் செய்வதற்கும், ஆழமாக வெட்டிக் கொள்வதற்கும் வாய்ப்பு வசதி செய்து கொடுத்தால் நன்றாக இருக்கும்.

புதிய கிணறுகளுக்கு அளிக்கும் உதவி எப்படி யார் யாருக்குக் கொடுக்கவேண்டும் என்று சில கருத்துக்கள் சொல்லப்பட்டன. மூன்று ஏக்கருக்குக் குறையாது நிலம் இருக்க வேண்டுமாம். ஐயாயிரம் கடன் கொடுக்கப் போதுமான ஷ்யூரிடி வேண்டுமாம். அப்படிப் பார்க்கும்போது, கிராமப் புறங்களில் ஐயாயிரம் ரூபாய்க்குக் கிணறு வெட்டுவதற்கு ஒரே இடத்தில் 3 ஏக்கர், 4 ஏக்கர் நிலம் இருக்காது. ஏழை விவசாயிகள் கிணறு வெட்ட

வேண்டுமென்று விரும்பினால் ஒரே இடத்தில் அந்த நிலம் இருக்காது. அரைக் காணி ஓரிடத்திலும், ஒரு காணி இன்னோர் இடத்திலும், இப்படியாக இருக்கும். இம்மாதிரி பல இடங்களில் இருக்கும். இப்படி ஒரு நிலைமை உருவாகும்போது, அதிகமாக நிலம் வைத்திருக்கும் விவசாயிக்குத்தான் இந்த ஐயாயிரம் ரூபாய் பயன்படுமே தவிர, ஒரு ஏக்கர், இரண்டு ஏக்கர் நிலம் வெவ்வேறு இடங்களில் வைத்திருக்கக்கூடியவர்களுக்கு இந்தக் கடன் பயன்படாது. நான்கைந்து ஏக்கர் நிலம் வைத்திருப்பவர்கள் கூட, ஒரே இடத்தில் அந்த நிலம் பூராவும் இல்லாத நிலையில், அந்தக் கிணறு வெட்டும் கடனைப் பெற முடியாமல் போகும். அப்படிப் பல இடங்களில் துண்டு துண்டாக நிலம் வைத்திருக்கும் விவசாயிகள் அந்தப் பகுதியிலே கிணறு வெட்ட வேண்டுமென்றால் பல விவசாயிகளுக்கு அது பயன்படுகிற அளவிற்கு 'கம்யூனிடி வெல்' என்று சொல்லக்கூடிய அளவிற்கு கிணறுகளை வெட்டிக் கொடுத்தால் நலமாக இருக்கும்.

நில ஆர்ஜிதம் என்று சொல்லும்போது, அதிலே தீவிரமாக நடக்க வேண்டியது தான். அதிலும், குறிப்பாக, அரிசனங்களுக்கு மனை வாங்கிக் கொடுக்கும் அளவிலே இந்த மான்யத்திலே 15 கோடி ரூபாய் ஒதுக்கவேண்டும் என்று சிபார்சு செய்யப்பட்டதாகக் கேள்விப்பட்டேன். இந்த 15 கோடி ரூபாயைச் செலவிடுவதற்கு துரிதமான நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று சொன்னார்கள். அந்த அளவிலே தாசில்தார்களுக்கு ஜீப் வாங்கிக் கொடுக்கவேண்டும் என்ற அந்த கோரிக்கையும் இருக்கிறது. அதே நேரத்தில், தனித் தாசில்தார்களுக்கும் ஜீப் கார்கள் வாங்கிக் கொடுத்தால் 15 கோடி ரூபாயைச் சீக்கிரமாக நல்ல முறையில் செலவு செய்ய முடியும் என்று நான் தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

இப்பொழுது விவசாயத்தைப் பெருக்க வேண்டும் என்ற அடிப்படையில், மேல் அவையிலே அறிஞர் அண்ணா அவர்கள் நல்லதொரு கருத்தைச் சொன்னார்கள். அதையாவது நமது அரசாங்கம் பரிசீலிக்குமா என்று நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். முக்கியமாக, தென்னாற்காடு, செங்கற்பட்டு, வடாற்காடு ஆகிய இந்த மூன்று மாவட்டங்களிலும் ஜீவ நதிகள் ஓடுவது இல்லை. ஆனால், 1962-ம் ஆண்டிலிருந்து இதுவரைக்கும் கிருஷ்ணா-கோதாவரி நீரைக் கொண்டுவருவது பற்றி நாங்கள் சொல்லிக் கொண்டே வருகிறோம். வந்தபாடில்லை. அடுத்து, சாத்தனூர் நீர்த் தேக்கத்தைப் பற்றியும் சொல்லிக்கொண்டே வருகிறோம். வீடூர் தேக்கத்தைப் பற்றியும் நாங்கள் சொல்கிறோமே தவிர, அதற்கு ஏதாவது பரிகாரம் இருக்கிறதா என்று பார்த்தால், இல்லை. இதைத் தயவு செய்து இந்த நெருக்கடி நேரத்திலாவது பரிசீலனை செய்து, கிருஷ்ணா-கோதாவரி நீரைத் தென் மாநிலங்களுக்குக் கொண்டுவருவதற்கு அண்டை மாநில அமைச்சர்களோடு கலந்து பேசி ஆவன செய்யவேண்டும். நேற்று அமைச்சர் அவர்கள் கேள்விக்குப் பதில் சொல்லும்போது, மைசூர் மாநில

அமைச்சரோடு கலந்து பேசுவதாகச் சொன்னார்களே தவிர ஆந்திர மாநில அமைச்சர்களோடு கலந்து பேசியதாகப் பதிலிலே காணோம். அப்பொழுது நான் உப கேள்வி கேட்பதற்கு அரை மணி நேரமாகக் கையைத் தூக்கிக், கை கூட வலி கண்டுவிட்டதே யொழிய எனக்கு அந்தச் சந்தர்ப்பம் கிடைக்கவில்லை. ஆந்திர அமைச்சர்களோடு கலந்து பேசி, கிருஷ்ணா, கோதாவரித் தண்ணீரை செங்கற்பட்டு, வடாற்காடு, தென்னாற்காடு மாவட்டங்களுக்குக் கொண்டு வருவதற்கு வழிவகை செய்தால் உணவு உற்பத்தியைப் பெருக்க முடியும், அதனால் பலன் கிடைக்கும் என்று இந்த நேரத்தில் நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். சாத்தனூர் நீர்த்தேக்கத்தில் இருந்து சங்கராபரணி ஆற்றுக்கு ஒரு கால்வாய் வெட்டிக் கொடுத்தால் வீடூர் தேக்கத்தில் நீரை நிரப்பிக்கொள்ளலாம். இதன்மூலம் பல விவசாயக் குடும்பங்கள் பயன்பெறும் என்று தெரிவித்துக் கொள்கிறேன். அதோடு தற்
11-00 a.m. போது வீடூர் நீர்த் தேக்கத்தில் ஒரு பக்கமாகத் தண்ணீர் பாய்கிறது. புஞ்சைக்குப் பாயாவிட்டாலும் ஏரிகளுக்காவது பருவகாலங்களில் மற்றப் பக்கங்களில் பாய்வதற்கு வழிவகை செய்து தரப்படவேண்டும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

அதே நேரத்தில் என்னுடைய பகுதியில் மாக்காணத்திற்கு அருகில் 9 மைல் சுற்றளவுக்குக் கழிவு நீர்த்தேக்கம் இருக்கிறது. இதுவரை விவசாயத் திட்டத்தின் கீழ் அதைப் பயன்படுத்துகிற முயற்சி மேற்கொள்ளப்படவில்லை. குறிப்பாக கிளியனூர், தாண மானியம், மரக்காணம் முதலான பகுதியில் பாரஸ்ட்டு என்ற பேரிலே அந்தப் பகுதியில் உள்ள நிலங்களை ஏழைகளுக்குப் பட்டா செய்து கொடுத்து விவசாயத் திட்டத்தின் கீழ் கொண்டு வரவேண்டுமென்று கேட்டுக்கொண்டு என் வார்த்தைகளை முடித்துக் கொள்கிறேன். . வணக்கம்.

திருமதி சி. குழந்தையம்மாள்: கனம் தலைவர் அவர்களே, கனம் அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கிற நிதி ஒதுக்கீடு மசோதாவை ஆதரித்து ஒருசில கருத்துக்கள் சொல்ல விரும்பு கிறேன்.

குறிப்பாக நமது நாட்டின் பாதுகாப்புக்காக சிறப்பாக படை பலத்தை அதிகப்படுத்துவதற்காக நாம் அதிகபட்சம் செலவழிப்பதற்கு நிதி ஒதுக்கீடு செய்திருக்கிறோம். அதை ஆதரிக்கிறேன். அடுத்தபடியாக உணவு உற்பத்தி என்ற தலைப்பில் நமது அரசாங்கம் தாராளமாக முன்வந்து, விவசாயத் திட்டங்களை தீவிரமாக அமுல் நடத்த, நாட்டு மக்களின் சுயதேவையைப் பூர்த்தி செய்கின்ற அளவுக்கு நல்லபல திட்டங்களை வகுத்திருப்பதற்காக நான் என்னுடைய பாராட்டுதல்களைத் தெவித்துக் கொள்கிறேன். அதோடு எங்கள் வட்டாரங்களில் இருக்கக் கூடிய குறைகளைப் பற்றி அடிக்கடி நான் இங்கே நினைவுபடுத்தி வந்திருந்தாலும் கூட, சென்ற காலத்தை விட இப்போது அதிகச் சிரமங்கள் பெருகியிருக்கின்றன என்பதை இன்றைக்கு வற்புறுத்திக் கூற விரும்புகிறேன். அதிலும் சிறப்பாக கோயம்பத்தூர், பல்லடம்,

அவிநாசி தாலுக்காக்கள் ஏற்கனவே மிகவும் வறண்ட பகுதியாக இருப்பது எல்லோருக்கும் தெரிந்த உண்மை. வாய்க்கால்களில் தண்ணீர் வரத்து இல்லை. மழையும் கிடையாது. எந்த ஆண்டையும்விட இந்த ஆண்டு ஐப்பசியில் அதிக வெப்பத்தை அந்த பகுதிகள் உணர்கின்றன. ஐப்பசி அடைமழை என்று சொல் வார்கள். அடைமழை இல்லாவிட்டாலும் ஒருமழை கூட இல்லை. போட்ட விதைகள் வீணாகிவிட்டன. அடுத்த ஆண்டுக்கு விதை முதல் கூடக் கிடையாது. முன்பு எல்லாம் ஒரு மோட்டார் இறைத்தால் ஒரு மணி தண்ணீர் கிடைக்கும். உடன் வறண்டுவிடும். இப்போது 20 நிமிஷத்திற்கு மேல் தண்ணீர் இல்லை. அதுவும் ஒரு மோட்டாருக்குப் பதிலாக இரண்டு மோட்டார் வைக்க வேண்டியிருக்கிறது. முதலில் ஒரு மோட்டாரில் இருந்து இறைத்து ஓரிடத்தில் தேக்கி, இன்னொரு மோட்டாரைக் கொண்டு மேலே கொண்டுவரவேண்டியதாக இருக்கிறது. ஒரு மோட்டாருக்கு 120 ரூபாய் செலவழித்து வந்த விவசாயி இப்போது 240 ரூபாய் இரண்டு மோட்டார்களுக்குக் கட்டவேண்டியிருக்கிறது. இருந்தும் முன்பு பயிர் செய்து வந்த அளவு அதே நிலத்தை இப்போது பயிர் செய்ய முடிகிறதா என்றால் இல்லை.

அதோடு கிணறு வெட்ட உதவி செய்கிறோம் என்றாலும் 500 ரூபாய் மானியமாகவும் பாக்கி 4,500 ரூபாய் கடனாகவும்—ஆக ஐயாயிரம் ரூபாய் பெற்று ஒரு விவசாயியினால் நிச்சயம் கிணறு வெட்ட முடியாது. காரணம் என்னுடைய பகுதியிலேயே 30 ஆயிரம் ரூபாய், 50 ஆயிரம் ரூபாய் செலவில் கிணறு எடுத்துள்ள விவசாயிகள் நூற்றுக்கணக்கான பேர்கள் இருக்கிறார்கள். அப்படிச் செலவழித்தும் பாசன வசதி பெற முடிகிறதா என்றால் இல்லை. சர்க்காரிடத்திலும், இந்த அமைச்சரவையிடத்திலும் நாங்கள் கேட்டுக்கொள்வது எங்களுக்கு பவர் ட்ரில்கள் வாங்கிக் கொடுங்கள் என்பதுதான். ஒரு பவர் ட்ரில் வைத்து குழி போடுவது முதற்கொண்டு மோட்டார் பம்பு செட்டுகள் வைப்பது வரை ஆகும் செலவு 15 ஆயிரத்திற்கு மேல் ஆகாது.

இன்றைக்கு உணவு உற்பத்தித் திட்டத்தின் கீழ் பல திட்டங்களை நம் அரசாங்கம் செயல்படுத்துகிறது. குறிப்பாக, பயிர் பாதுகாப்புத் திட்டம் என்று இருக்கிறது. எங்கள் பகுதியை எடுத்துக்கொண்டால் தண்ணீர் இல்லை, மழை இல்லை, பயிர் இல்லை. எப்படி நாங்கள் இந்தப் பயிர் பாதுகாப்புத் திட்டத்தின் கீழ் ஒதுக்கப்படுகிற தொகையைக் கொண்டு பயன்பெற முடியும்? பல ஆயிரம் ரூபாய் பயிர் பாதுகாப்புத் திட்டத்தின் கீழ் ஒதுக்கப்பட்டிருக்கிறது என்றால் எங்கள் பகுதியைப் பொறுத்தவரையில் ஒரு அணா கூடப் பெற முடியாத கஷ்டம் இருக்கிறது. அதுபோலவே எங்கள் பகுதியில் மழை இல்லை, தண்ணீர் இல்லை, புல்லே முளைக்க வில்லை. ஆடு வளர்ப்புத் திட்டத்திற்காக ஆயிரக்கணக்கான ரூபாய்களை ஒதுக்கியிருக்கிறீர்கள் என்றாலும் எங்களால் ஒரு அணா பெறுவதற்கில்லை. அதுபோலவே மழை இல்லாக் காரணத்தினால் குளம், குட்டைகளில் தண்ணீரே கிடையாது. மீன் வளர்ப்புத் திட்டத்திற்காக ஆயிரக்கணக்கான ரூபாய்களை ஒதுக்கியும் எங்கள் பகுதிக்கு எந்தவிதமான பயனும் கிடைக்கப்போவதில்லை. உரம் வாரம்

[திருமதி சி. குழந்தையம்மாள்] [11th November 1965

என்று கொண்டாடுகிறோம். உர மூட்டைகளை நாங்கள் வாங்கினால் வீடுகளில்தான் அடுக்கி வைத்துக் கொள்ள முடியும். வயல்களில் போட்டுச் சாகுபடி செய்ய எங்களுக்குத் தண்ணீர் வசதி கிடையாது. எங்களுடைய கஷ்டங்களை இந்தச் சபையில் எடுத்துச் சொல்வதைத் தவிர வேறு வழியும் எங்களுக்குத் தெரியவில்லை. நாங்கள் சொல்கிற முறைபாடுகளை நீங்கள் கவனிக்கவில்லை என்றும் நான் குற்றம் சாட்ட வரவில்லை. நீங்கள் கவனிக்கிறீர்கள். இந்த நிலையை நினைக்கிறபோது எனக்கு ராமலிங்க சுவாமிகளுடைய பாடல் ஒன்றுதான் நினைவுக்கு வருகிறது. அவர் ஆண்டவனிடத்தில் முறையிட்டுக் கொள்கிறார். தான் கஷ்டப்படுவதற்கு ஆண்டவன் காரணம் அல்ல. ஏனென்றால்

" வளமருவும் உன் திருவருள் குறைவதில்லை
வந்து இரப்போர்க்கு இல்லை என்பதில்லை நீ"

என்று அவர் சொல்வது போல நாங்கள் இந்த அரசாங்கத்திடம் வந்து ஒன்று கேட்கும்போது இங்குள்ளவர்கள் இல்லை என்பதில்லை.

இருந்தும் எங்கள் பகுதியில் இருக்கக் கூடிய கஷ்டம் தண்ணீர் இல்லாக் கொடுமைதான். ஆகவே எங்கள் தொகுதியில் உள்ள மக்களுக்கு உடனடியாக உணவு கொடுக்கவேண்டும். வேலை செய்யத் தொழில் கொடுக்க வேண்டும். பயிர் பாதுகாப்புக்காக, ஆடு வளர்ப்புக்காக, மீன் வளர்ப்புக்காக என்று நீங்கள் ஒதுக்குகிற பணத்தை அவர்கள் பெற வழி செய்தல் வேண்டும்.

இப்படிச் சொல்கிறபோது எனக்கு முன் பேசிய உறுப்பினர் டெல்லியில் திரு. அண்ணாத்துரை பேசிய பேச்சைக் குறிப்பிட்டு —அவர் இப்போதுதான் பேசியுள்ளார். மகாத்மா காந்தி அவர்கள் இதைத்தான் பல ஆண்டுகளுக்கு முன்னரே தமது நிர்மாணத் திட்டத்தில் குறிப்பிட்டார்கள்—அதை உணராது "நாங்கள் 1962-இல் இருந்து சொல்லி வருகிறோம்" என்பதாகச் சொன்னார்கள். ஒரு மாமியார் சொன்னது போல "என் மருமகள் தீவளிக்குத் தீவளி, தீவளிக்குத் தீவளி எண்ணெய் தேய்த்துக் கொள்கிறாள். என் மகளோ சனியோடு சனிதான் எண்ணெய் தேய்த்துக் கொள்கிறாள் என்று சொன்னதைப் போல "நாங்கள் 1962-இல் இருந்து சொல்லி வருகிறோம்" என்கிறார். இதற்கு முன்பே பல ஆண்டுகளுக்கு முன்பாகவே மகாத்மா காந்தி அவர்கள் சொன்னதுதான் இது. இன்னும் சொல்லப்போனால் ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பாகவே வள்ளுவப் பெருந்தகையார்

"உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார் . . ."

"தொடிப்புழுதி கஃசா உணக்கின் பிடித்தெருவும்
வேண்டாது சாலப்படும்"

என்பதாக எல்லாம் கூறியிருக்கிறார். ஆகவே கனம் அங்கத்தினர் "1962-இல் இருந்து நாங்கள் சொல்லி வருகிறோம்" என்று சொல்ல வேண்டியதில்லை.

11th November 1965] [திருமதி சி. குழந்தையம்மாள்]

நான் கனம் அமைச்சரிடத்திலும் குறிப்பிட்டு இருக்கிறேன். பாங்குகளில் வைப்பதற்குப் பதிலாக உங்களிடத்தில் வேண்டிய தங்க நகைகளைத் தங்கப் பத்திரத்திற்கு நான் வாங்கிக் கொடுக்கத் தயாராய் இருக்கிறேன். எங்கள் பகுதிக்குத் தேவையான பவர் டில்லர்களை மட்டும் வாங்கிக் கொடுங்கள் என்று கேட்டுக் கொண்டு என் உரையை முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

* திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி : கனம் தலைவர் அவர்களே, இந்த நிதி ஒதுக்கீடு மசோதா சம்பந்தமான விவாதத்தில் நானும் என் கருத்துக்களை உங்கள் மூலமாகத் தெரிவித்துக் கொள்ளலாம் என்று இருக்கிறேன். கடந்த ஒரு வார காலமாக சட்டசபை நடவடிக்கைகளில் நம் முன்னுள்ள பிரச்சினைகளைப் பற்றிக் கனம் அமைச்சர் அவர்களும், எதிர்க்கட்சியில் இருக்கிறவர்களும் மனம்விட்டு ஒருவருக்கொருவர் பேசினார்கள். ஆனால் இன்றைய தினம் சட்டசபை முடிகிற சமயத்தில் நாம் அனைவரும் குறிப்பிட்டுள்ள பிரச்சினைகளைப் பற்றி மனத்தில் வைத்து நமது மந்திரி சபை செயல்படவேண்டும் என்று இங்கே கூறிக்கொள்ள விரும்புகிறேன். நம்முடைய நாட்டை எதிர்நோக்கியுள்ள சின ஆபத்தும், அதே போல் வெளிநாட்டு ஆதிக்கத்திலுடைய ஆபத்தும், பாகிஸ்தானுடைய ஆபத்தும் சமாளிக்கப்படவேண்டிய நேரடியான பொறுப்பு மாநில சர்க்காருக்கு இல்லையென்றாலும், அகில இந்திய அரசு சொல்கின்ற மாதிரி அனைவரும் ஒருமுகப்பட்டு, பிரதம மந்திரி லால்பகதூர் அவர்கள் சொல்லுகின்றபடி இந்த நாட்டிலே ஒற்றுமையுணர்ச்சியை உண்டாக்கவேண்டும். அதற்கு உறுதுணையாக நமது முதலமைச்சர் அவர்கள் செயல்படவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். பிரதம மந்திரி அவர்கள் இங்கு வருவார்கள். வருகின்ற சமயத்திலே நமது முதலமைச்சர் அவர்கள் இங்கே சட்டசபையிலே நடைபெற்ற நிகழ்ச்சிகளைப்பற்றியும், நிறைவேற்றிய தீர்மானங்களைப் பற்றியும் சமர்ப்பிக்கின்றபோது, இங்கே இருக்கின்ற லோகல் ப்ராப்ளம்ஸ் பற்றிச் சட்ட சபையிலே காரசாரமாகப் பேசினாலும்கூட, பொதுவாக நாட்டினுடைய பிரச்சினையைப் பொறுத்தவரையிலே தமிழகத்திலே உள்ள எல்லா மக்களும் ஒன்றுசேர்ந்து உற்சாகத்துடன் எல்லாப் போர் நடவடிக்கைகளிலும் ஈடுபட்டுக்கொண்டிருக்கிறார்கள், ஒத்துழைப்புத் தந்துகொண்டிருக்கிறார்கள் என்று முதலமைச்சர் அவர்கள் சொல்வார்கள் என்று கருதுகிறேன். இதை விளக்குகின்ற சமயத்தில் நான் ஒன்று சொல்வேன். இன்றைக்கு நாட்டுக்கு ஆபத்து ஏற்பட்டிருக்கின்ற சமயத்தில் கட்சி அரசியல் என்பதை மறந்துவிட்டு நாம் அனைவரும் ஒன்றுசேர்ந்து நடத்துகின்ற அரசாங்கமாகச் செயல் படவேண்டும். ஆனால் நம்முடைய நாட்டைப் பொறுத்த வரையிலே அப்படிப்பட்ட அரசாங்கம் கொண்டுவரப்படவில்லை. நாட்டுக்கு ஆபத்து என்றால், ஒற்றுமையுணர்ச்சி ஏற்படவேண்டுமென்றால், நாட்டிலே இருக்கிற எல்லா மக்களும் அரசாங்கத்தினுடைய கொள்கையையும் போர் நடவடிக்கைகளையும் பொருளாதாரத் துறை நடவடிக்கைகளையும் ஆதரிக்கவேண்டுமென்றால், நாட்டிலே ஒரு தேசிய சர்க்காரை ஏற்படுத்தவேண்டும். மத்திய அரசு அளவிலே மட்டுமல்ல, மாநில அரசாங்கத்திலே

கூட தேசிய அரசு, எல்லாக் கட்சிகளையும் கொண்ட ஒரு அரசு செயல்பட வேண்டும். நேற்று இங்கே காரசாரமாக விவாதங்கள் நடந்துகொண்டு இருந்த சமயத்தில், வெளிநடப்புச் செய்த சமயத்தில் முதலமைச்சர் அவர்கள் மனக்கஷ்டம் அடைந்து சொன்னார்கள், 'முறையல்ல' என்று சொன்னார்கள். அவர்களுக்கு நான் ஒன்று சொல்லிக்கொள்வேன். இங்கே நடக்கின்ற நடவடிக்கைகளும், பேச்சுக்களும், விவாதங்களும் மாநிலத்தைப் பொறுத்த அளவிலேதான் தவிர, அகில இந்தியப் போர் நடவடிக்கைகளைப் பொறுத்தவரையில் அல்ல. எல்லோரும் ஒற்றுமையுணர்ச்சியுடன், ஒருமைப்பாட்டு உணர்ச்சியுடன், காங்கிரஸ் அல்ல, திராவிட முன்னேற்றக் கழகமல்ல, கம்யூனிஸ்ட் அல்ல, எல்லோரும் ஒருவர் தான் என்ற முறையில் ஈடுபட்டிருக்கிறோம். பாகிஸ்தான் படையெடுத்தாலும் சரி, சீனா படையெடுத்தாலும் சரி, அமெரிக்கா கோதுமை கொடுக்காமல் இருந்தாலும் சரி, பிரிட்டிஷ் யுனைடெட் நேஷன்ஸ் ஆர்கனைசேஷனில் துரோகம் செய்தாலும் சரி, அகில இந்திய அடிப்படையிலே நாம் ஒன்றுபட்டுச் செயல்பட்டு வருகிறோம் என்பதை முதலமைச்சர் அவர்கள் சொல்வார்கள் என்று நினைக்கிறேன். நமக்குள்ளே சட்டசபையிலே ஒருவருக்கொருவர் காரசாரமாகப் பேசிக்கொண்டாலும், நாட்டுக்கு ஆபத்து வருகின்ற சமயத்திலே ஒன்றுபட்டு நிற்போம். 1942 அல்லது 1943-ஆம் ஆண்டு என்று நினைக்கிறேன், இரண்டாவது உலக யுத்தத்தின் போது, ஹிட்லருடன் ஜப்பான்காரர்களும் சேர்ந்து உலகத்தையே நாசமாக்கக்கூடிய முயற்சியிலே ஈடுபட்டார்கள். அந்தச் சமயத்தில் இங்கிலாந்தின் பிரதமராக சர்ச்சில் இருந்தார்கள். பர்மாவை ஜப்பானியர் ஆதிக்கத்தில் சரண்டர் செய்த சமயத்தில், இங்கிலாந்திலே ஹவுஸ் ஆப் காமன்சிலே விதாவம் நடந்து கொண்டிருந்தது. இலண்டன் மாநகரத்தின்மேல் குண்டு விழுந்து கொண்டிருந்தது. துறைமுகங்களில் எல்லாம் விமானத் தாக்குதல் நடந்து கொண்டிருந்தது. அந்தச் சமயத்திலும்கூட அரசாங்கத்தைக் கண்டிக்க வேண்டும் என்ற நோக்கத்திலே அல்ல, அரசாங்கம் நல்ல வழியிலே செல்லவேண்டும் என்ற நோக்கத்திலே நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டுவந்தார்கள். அந்தத் தீர்மானத்தின் மேல் விவாதம் இரவு பகல் என்று இல்லாமல் தொடர்ந்து மூன்று நாட்கள் நடைபெற்றது. கடைசியில் சர்ச்சிலை வார் டைம் பிரைம் மினிஸ்டராக ஏற்றுக்கொள்கிறோம் என்று சொன்னார்கள். அவர்கள் அந்த நேரத்தில் நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொடுத்துவிட்டார்கள் என்ற காரணத்திற்காக அவர்கள் ஹிட்லரோடு ஒப்பந்தம் செய்துகொண்டார்கள் என்றோ அல்லது ஜப்பானுடன் ஒப்பந்தம் செய்துகொண்டார்கள் என்றோ இங்கிலாந்தில் உள்ள யாரும் நினைத்திருக்கமாட்டார்கள். ஸ்டாபோர்ட் கிரிப்ஸ் என்பவர் எந்தக் கட்சியையும் சேராதவர். (மணியடிக்கப்பட்டது.)

கனம் அம்மையார் அவர்கள் இன்னும் இரண்டு நிமிடங்கள் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

ஸ்டாபோர்ட் என்பவருக்கு அமைச்சர் பதவி தரப்பட்டது. எதிர்க்கட்சித் தலைவராக இருந்த அட்லி ராஜாங்க மந்திரியாக்கப்பட்டார். அதேபோல் அனுரின் பெவான் என்பவரும் தொழிலாளர் துறை மந்திரியாக்கப்பட்டார். அதுபோன்ற நடவடிக்கைகளை நம் நாட்டிலே ஆபத்தான காலத்தில் மேற்கொள்ளவில்லை என்றாலும், கட்சிப் பாகுபாடுகள் இல்லாமல் போர் நடவடிக்கைகளிலே ஈடு படுகின்ற நேரத்திலே காங்கிரஸ் கட்சியாக இருந்தாலும், மற்றக் கட்சிகளாக இருந்தாலும், எல்லாக் கட்சிகளுமே போர் நடவடிக்கைகளிலே நல்ல முறையில் ஈடுபட்டிருக்கிறார்கள் என்பதையும் முதலமைச்சர் அவர்கள் பிரதமர் சாஸ்திரியிடம் சொல்வார்கள் என்று நினைக்கிறேன். அதேபோல் இந்த இடது சாரிக் கம்யூனிஸ்டுகளை விடுதலை செய்துவிடலாம் என்று நினைக்கிறேன். ஆதித்தனார், அவரையும்கூட விடுதலை செய்துவிடலாம். நான் 10 நாட்களுக்கு முன்பு கம்யூனிஸ்ட்காரர் ஒருவரைப் பரோலில் விடவேண்டும் என்று கேட்டுக்கொள்வதற்காக முதலமைச்சர் அவர்களைச் சந்தித்தேன். அப்பொழுது சென்னையில் இருப்பவர்களுக்கும், சீனாக்காரர்களுக்கும் என்ன தொடர்பு இருக்கப் போகிறது, பார்டர்களில் வேண்டுமென்றால் அந்த மாதிரித் தவறுதல்கள் செய்யமுடியும், ஆகவே அவர்களை விடுதலை செய்யலாம் என்று கேட்டேன். முதலமைச்சர் அவர்கள், அவர்கள் சீனாக்காரர்களுடன் ஒப்பந்தம் செய்துகொண்டிருப்பார்கள். மறைமுகமாக வேலை பார்ப்பார்கள் என்று சொன்னார்கள். நான் அப்படிச் செய்வார்கள் என்று எண்ணவில்லை. எதற்கும் அவர்களை ஒரு வாரம் வெளியே விட்டு, அவர்கள் எப்படி நடந்துகொள்கிறார்கள், அரசாங்கத்திற்கு ஆதரவாக இருக்கிறார்களா, இல்லையா என்று பார்ப்போம். மீண்டும் அவர்களை சிறைசெய்வதற்கு அரசாங்கத்திற்கு அதிகாரம் இருக்கிறது. பிடித்து உள்ளே போடலாம். அப்படி தனிப்பட்ட முறையில் எந்தக் கம்யூனிஸ்டாவது நாட்டுக்கு விரோதமாக நடந்தால், ஐ.பி.சி. யின் கீழ், 124 (ஏ) யின் கீழ் அவர்களுக்குத் தூக்குத் தண்டனை கூட விதித்து தூக்கில் போடலாம். இதை மனதிலே வைத்து அப்படிச் செய்வதின்மூலம் அவர்களுடைய ஒற்றுமையையும் திரட்டுவதற்கு முயற்சிக்க வேண்டும். போருக்குப் பணம் வேண்டுமென்றால் லேபர் யூனியன் பணம் கொடுக்கிறது. ஆகவே லேபர் யூனியன் தலைவர்களை எல்லாம் வெளியேவிட்டால்—நிறையப் பணம் கொடுப்பார்கள். இதையெல்லாம் கருத்திலேகொண்டு செயல்படவேண்டும். ஆதித்தனார் அவர்களைக்கூட முதலமைச்சர் அவர்கள் கூப்பிட்டு மாநாடு நடத்தவேண்டாம் என்று சொல்லியிருந்தால் அவர் நடத்தாமல் விட்டிருப்பார் என்று கருதுகிறேன். இனிமேல் இப்படிப்பட்ட சமயங்களில் இதுமாதிரியான நடவடிக்கைகளில் ஈடுபடமாட்டார் என்று கருதுகிறேன். நாட்டிலே உள்ள எந்த ஒரு தனிப்பட்டவரையும் போர் முயற்சியில் ஈடுபடுத்தாமல் விடக்கூடாது. நாட்டிலே உள்ள அத்தனை பேருடைய ஆதரவையும் பெற்று எதிரியை விரட்டுவதற்கு முதலமைச்சர் அவர்கள் செயல்படவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். உணவு உற்பத்தியை

[திரு. எம். கொளந்தைசாமி கவுண்டர்] [11th November 1965

ஜாதி ஏழை மக்கள் வாழ்கிறார்கள். டென்னிஸ்பேட்டைக்குப் பக்கத்தில் ஜாகீர்தார்களுக்குக் கொடுத்த நிலம் போக மீதியிருப்பதை மலை ஜாதியினருக்குக் கொடுக்கவேண்டுமென்று நீலகிரி மலைஜாதியினர் மாநாட்டில் தீர்மானம் கொடுத்தேன். அதைக் கனம் அமைச்சர் அவர்கள் வந்து பார்த்துக் கவனிக்கிறேன் என்று சொன்னார்கள். இரண்டு வருஷம் ஆகிவிட்டது, இன்னும் வந்து பார்க்காமலே இருக்கிறார்கள். முனிசிபாலிடி பகுதியில் இருக்கிற நிலத்தையும் மலை ஜாதியினருக்குக் கொடுக்க வேண்டுமென்று பாபனாசத்தில் நடந்த மாநாட்டில் தீர்மானம் கொடுத்தேன். அதையும் வந்து பார்க்கிறேன் என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அழுகிற பிள்ளைக்கு வாழைப்பழம் கொடுப்பது போல் அமைச்சர் அவர்கள் வந்து பார்த்தால் அந்த மக்களுக்குக் கொஞ்சம் ஆறுதலாக இருக்கும். அந்த ஏழை மலை ஜாதி மக்களுக்கு நிலம் கொடுப்பதற்கு உடனடியாக ஏற்பாடு செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

* திரு. கே. ஏ. மதியழகன்: மன்றத் தலைவர் அவர்களே, கனம் முதலமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கிற நிதி ஒதுக்கீடு மசோதாவின் மீது சில வார்த்தைகள் கூற விரும்புகிறேன். நேற்றையதினம் இந்த மன்றம் நிறைவேற்றிய துணை மதிப்பீடுகள் நம்முடைய பொதுக் கணக்குக் குழு விதித்திருக்கிற நிபந்தனைகளுக்குட்பட்டு வந்திருப்பது உண்மையிலேயே நல்ல ஒரு ஆரோக்கியமான அரசியலை ஏற்படுத்துகிற வகையில் அமைந்திருக்கிறது. புதுப் பணிகளுக்காக (நியூ ஸ்கீம்ஸ்) துணை மானியக் கோரிக்கையைச் சமர்ப்பித்திருப்பது வரவேற்கத்தக்கது. இந்த நல்ல ஆரோக்கியமான அரசியலை, பப்ளிக் அக்கவுண்ட்ஸ் கமிட்டியின் சிபாரிசை அமல் படுத்த வேண்டுமென்ற எண்ணம் செயல்பட்டிருப்பதை வரவேற்கிறேன், பாராட்டுகிறேன் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்றைக்கு அவர்கள் கோரியிருக்கிற 7½ கோடி ரூபாய் நிதி ஒதுக்கீட்டை எதிர்க்கவில்லை. அதற்காகப் பணம் திரட்டுகிற முறைகளிலேதான் கருத்து வேறுபாடு இருந்ததே தவிர, இந்தக் காரியங்கள் செவ்வனே நடைபெறவேண்டுமென்பதிலே இந்த மன்றத்திலே எந்தப் பகுதியினருக்கும், எந்த விதமான ஆட்சேபணையும் இல்லை. போர்ச் சூழ்நிலைகளின் காரணமாகப் பல்வேறு விளைவுகளும், பல பொறுப்புக்களும் ஏற்பட்டிருக்கின்றன என்பதை அவர்களே மிகத் தெளிவாகச் சொன்னார்கள். இன்றைக்கு ஏற்பட்டிருக்கிற பொறுப்புக்கள் எல்லாம் இந்திய அரசாங்கமானாலும் சரி, நம்முடைய அனுபவம் மிகுந்த முதலமைச்சர் அவர்களைக் கொண்ட தமிழ் நாட்டு அரசாங்கமானாலும் சரி, நல்ல முறையிலே நிறைவேற்றி வந்திருக்கிறது என்பதைக் கண்டு நாம் எல்லோரும் பெருமைப்பட நியாயம் இருக்கிறது. கடந்த இரண்டு மாத காலமாக நம்முடைய முதலமைச்சர் அவர்கள் தமிழகத்திலே 3½ கோடி மக்களின் திருவுருவமாகத் தென்படுகிறார்கள். எந்த நிகழ்ச்சியிலே பார்த்

11th November 1965] [திரு. கே. ஏ. மதியழகன்]

தாலும் முதலமைச்சர் அவர்களைக் காண்கிறோம். முதலமைச்சரின் வயதில் இருபது வயது குறைந்து வாலிபமாகி விட்டாரோ என்னும் அளவுக்கு அவர்கள் செயலிலே ஈடுபட்டிருக்கிறார்கள். இந்த நாட்டிலே இருக்கிற எதிர்க்கட்சிகளும் கட்சி வேறுபாடுகளை எல்லாம் மறந்து இன்றைக்கு ஏற்பட்டிருக்கும் 11-30 a.m. பொறுப்புக்களை நிறைவேற்றுவதில் வீர சபதம் செய்து கொண்டிருக்கிறார்கள். 12 அவுன்ஸ் போதாது 16 அவுன்ஸ் வேண்டுமென்று போராடுகிற எதிர்க்கட்சிகள்தான் இன்றையதினம் பட்டினி இருப்பதற்கு நாங்கள் முன்வருகிறோம், நாங்கள் முன்வருகிறோம் என்று முன்வருகிற சூழ்நிலை, நம் லட்சியங்களில் மாறுதல், நம் எண்ணங்களில் மாறுதல், நாடு செயல்படவேண்டிய காரியங்களில் மாறுதல் இவற்றை ஏற்படுத்திக் கொண்டிருக்கிறோம். நான் பணிவோடு, வணக்கத்தோடு சில விவரங்களைச் சொல்லிக் கொள்வேன். மானியக் கோரிக்கைகள் பற்றிச் சொன்னார்கள். அவற்றைப் பற்றி மேலும் சொல்ல நேரம் இல்லை. நமக்கு ஒரு பெரிய நெருக்கடி ஏற்பட்டிருக்கிறது. ராஜதந்திர முனையை விட, போர் முனையை விட, கட்சி விசுவாசத்தை விட இன்று இந்த நெருக்கடி நிலையில் நமக்கு முதலில் வேண்டியது இந்த நாட்டின் தலைமை. அதாவது 'நாஷனல் லீடர்ஷிப்' ஆகும். கட்சித் தலைவராக ஒருவர் இருக்கலாம், அரசாங்கத் தலைவராக ஒருவர் இருக்கலாம், ஆனால் நாட்டுக்கு ஒரு தலைவர் இருக்கவேண்டும். ஒரு நாட்டின் தலைமை எவ்வளவு வலிமை பொருந்தியதாக இருக்கிறதோ அந்த அளவிற்குத்தான் நெருக்கடியைச் சமாளிக்க முடியும். சில வலிவான நாடுகளில் கூட தலைமை இல்லாததினால் வலிவு இழந்திருக்கின்றன. கோடிக் கணக்கான மக்களிடத்தில் நம்பிக்கை ஏற்படவேண்டும். அதற்கு ஒரு தலைமை ஏற்படவேண்டும். நாம் சரித்திரத்தைப் பார்க்கிறோம். ஃபிரான்ஸ் நாட்டில் ஜோன் ஆஃப் ஆர்க் என்ற குடியானவப் பெண் அந்த நாட்டு மக்களுக்கு நம்பிக்கை ஊட்டியதை, வீராவேசத்தை உண்டுபண்ணியதை நாம் அறிவோம். அவள் தலைமையில் வெள்ளைக்காரனை அந்த மண்ணிலிருந்து விரட்டியது பற்றியெல்லாம் கேள்விப்படுகிறோம். லண்டன் மாநகரத்தை சாம்பலாக்கி விடுவோம் என்று பெர்லின் பேயன் ஹிட்லர் கூறியபோது சர்ச்சில் அவர்கள் ஏற்படுத்திய நம்பிக்கையாலும், சர்ச்சிலின் சாமர்த்தியத்தாலும் அவர்கள் வெற்றி பெற்றதை நாம் கேள்விப்படுகிறோம். அன்னிய ஏகாதிபத்தியத்தை அகற்ற இந்த நாட்டு மக்களிடையே ஒரு நம்பிக்கையை ஏற்படுத்தினார்கள் காந்தி அடிகள். இதுபோன்ற ஒரு நம்பிக்கை இன்று மக்களிடையே ஏற்பட்டிருக்கிறது. அந்த நம்பிக்கையை நாம் மேலும் வளர்க்க வேண்டும். ஒரு நெருக்கடி நேரத்தில் வலுவான ஒரு தலைமை நாட்டுக்கு வேண்டும். இன்று அந்தத் தலைமை நமக்குக் கிடைத்திருக்கிறதா? அது கட்சித் தலைமையாக இருக்கக்கூடாது, அது சாதாரண அரசாங்கத் தலைமையாக இருக்கக்கூடாது. நாட்டின் தலைமை என்ற முறையில் அவர்கள் சொன்னால் ஊமையும் பேசவேண்டும், முடவனும் மலை ஏற வேண்டும். மக்களின் நம்பிக்கையை ஈர்க்க

[திரு. கே. ஏ. மதியழகன்] [11th November 1965

வேண்டும், மக்களின் முழு நம்பிக்கையையும் பெற வேண்டும். அது ஏற்படவில்லை என்று நான் சொல்லவில்லை. இந்த நினைவு ஏற்பட எதிர்கட்சியினர் பெருமளவில் காரணமாக அமைந்திருக்கிறார்கள். அந்த எதிர்கட்சிகளை எல்லாம் நான் பாராட்டுகிறேன். இன்று தமிழ்நாடு பல காரியங்களில் வழி கோல வேண்டும். என்னை மன்னிக்க வேண்டும். 'இன்ஃபீரியாரிட்டி காம்ப்ளக்ஸ்' என்று சொல்வார்கள், தாழ்வு மனப்பான்மை என்று. இங்கு ஆளுகிற சர்க்காருக்கு இன்று ஒரு 'ஸுப்பீரியாரிட்டி காம்ப்ளக்ஸ்', உயர்வு மனப்பான்மை இருக்கிறது. நாம்தான் ஆள்பவர்கள், நாம்தான் ஆளப் பிறந்தவர்கள், நாம்தான் ஆளுகிற கட்சி என்ற மனோபாவம் இருக்கிறது. இது நல்ல சுபாவமல்ல. திரு. நல்லசிவம் அவர்கள் குறிப்பிட்டார்கள், எதிர்க்கட்சிக்காரர்கள் எல்லாம் அரசாங்கத்தோடு ஒத்துழைக்கிறார்கள், அது இன்னும் பரிபூர்ணமாக வேண்டுமென்று. . பாதுகாப்புச் சட்டத்தைப் பற்றி கனம் உறுப்பினர்கள் எடுத்துரைத்தார்கள். பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் சிலர் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். இன்னும் பத்திரிகைகள் மீது வழக்குகள் இருக்கின்றன. பத்திரிகைகள் எல்லாம் இன்று பாதுகாப்பு முயற்சியை ஒருமுகமாக ஆதரிக்கின்றன. ஆகவே அந்த வழக்குகள் எல்லாம் வாபஸ் பெறப்படவேண்டும். அன்றிருந்த சூழ்நிலை வேறு. இன்றிருக்கும் சூழ்நிலை வேறு. அன்று இந்தி எதிர்ப்புப் போராட்டத்தின்போது 'நவமணி', 'சுதேசமித்திரன்', 'முரசொலி', போன்ற பத்திரிகைகளின் மீது வழக்குகள் போடப்பட்டன. அவை இன்னும் நீடிக்கவேண்டுமா? அதேபோல் பாதுகாப்புச் சட்டத்தின்கீழ் பலர் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். திரு. ஆதித்தனார் அவர்களைப் பற்றிச் சொன்னார்கள். அவர் ஒரு பிரபல பத்திரிகைக்காரர். ஏழு லட்சம், எட்டு லட்சம் பத்திரிகைகள் விற்கக் கூடியதற்கு கேந்திரமாக இருக்கக்கூடிய பத்திரிகை நிறுவனத்தின் தலைவர், ஒரு இயக்கத்தின் தலைவர், மேல் அவை அங்கத்தினர் அவர். அவர் தனியாகத் தவறு செய்திருந்தால் வழக்குப் போடுங்கள், வேண்டாம் என்று சொல்லவில்லை. இந்த மன்றத்திலேயே பலநேரம் பேசியிருக்கிறேன் இந்தப் பாதுகாப்புச் சட்டம் தேவை இல்லை என்று. இன்று நெருக்கடி நிலையானதால் அது தேவைதான். ஆனால் அதை அமுல் படுத்தும்போது அரசாங்கத்தின் மீது ஐயம் ஏற்பட்டு விடக்கூடாது. இந்த அரசாங்கத்திற்கு யார் மீது விரோதம், யார் மீது இவர்களுக்குக் கோபம் இருக்கிறதோ, யார் மீது அதிருப்தி இருக்கிறதோ அவர்கள் மீது துஷ்பிரயோகம் செய்தார்கள் என்ற ஐயப்பாடு ஏற்பட்டுவிடக் கூடாது. முஸ்லீம் லீகைச் சேர்ந்த சிலர் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். இன்று ஐந்து கோடி முஸ்லிம்கள் நம் நாட்டில் இருக்கிறார்கள். ஒரு சிலரைக் கைது செய்திருக்கலாம் என்றாலும், வெளியார் மனத்தில் நாம் முஸ்லிம்களின் விரோதிகள் என்று நினைக்கிற நிலை ஏற்படக் கூடாது. வேறு சட்டங்கள் இருக்கின்றன. அதன்படி பிடியுங்கள். எங்கள் கழகத்தைச் சார்ந்த 'மாலை மணி' ஆசிரியர் திரு. இளங்கோ அவர்கள் கைது செய்யப்பட்டார்கள் பாதுகாப்புச்

[11th November 1965 [திரு. கே. ஏ. மதியழகன்]

சட்டத்தின்கீழ். வேறு சட்டத்தின்படி அவரைக் கைது செய்யுங்கள். போலீசார் தவறாக அவரது இல்லத்தில் நடந்து கொண்டார்கள் என்று என்னிடம் புகார் சொன்னார்கள். இந்தி எதிர்ப்புப் போராட்ட காலத்தில் நடந்தது பற்றிப் பல வழக்குகள் இருக்கின்றன. கரூர் கலவர வழக்கு, கோவை கலவர வழக்கு, திருப்பூர் கலவர வழக்கு கடலூர் கலவர வழக்கு போன்று பல வழக்குகள் தொடரப்பட்டிருக்கின்றன. நெருக்கடி காரணமாக சில மசோதாக்களை நிறுத்தி வைத்திருக்கிறோம். ஆக இந்த வழக்குகளை வாபஸ் வாங்க வேண்டும், இந்த நெருக்கடி நேரத்தை முன்னிட்டு, மூன்று முஸ்லீம்களைத்தானே கைது செய்தோம், அவர்களின்மீது இப்படிப்பட்ட குற்றங்கள் இருக்கின்றன என்று சொல்லக் கூடும். அவர்கள் மீது வேறு வழக்குப் போடுங்கள், தண்டியுங்கள். நாட்டிற்குப் பாதுகாப்புச் சட்டம் தேவைதான். ஆனால் இந்த அரசாங்கம் தவறாக நடந்து கொண்டது என்ற பழி ஏற்படுகிற நிலை நிச்சயமாக ஏற்பட்டு விடக்கூடாது. ஒன்று சொல்வேன். இன்று எல்லா மாநில முதல் அமைச்சர்களையும் கொண்ட ஒரு கவுன்சில் அமைத்து மத்திய அரசும் சேர்ந்து ஒரு கவுன்சில் அமைக்க வேண்டும். மாநில முதல் அமைச்சர்களின் அதிகாரங்களும் அவர்களுக்குள்ள பொறுப்புக்களும் இன்று அதிகரித்திருக்கிறது. இன்று ராஜஸ்தான் முதல் அமைச்சர் அவர்கள், பஞ்சாப் முதல் அமைச்சர் அவர்கள், குஜராத் முதல் அமைச்சர் அவர்கள் இவர்கள் எல்லாம் போர்க்கோலம் பூண்டு நிற்கிறார்கள். போர் அங்கே பரவிவிட்டால் நம் மாநில மக்களின் பிரதிபலிப்பாக மத்திய அரசாங்கத்திடம் பேச நமது முதலமைச்சர் இடம் பெறும் ஒரு கவுன்சில் வேண்டும். வேறு காரியங்களுக்காக அமைச்சர்கள் போனார்கள் என்றில்லாமல் முதல் அமைச்சர்களும் மத்திய அரசாங்கமும் சேர்ந்து ஒரு அவசர கால காபினெட் போல் அமைய வேண்டும். நாம் வெளியிலே நண்பர்களைப் பெறவில்லை. தூதுகோஷ்டிகள் எல்லாம் அனுப்பப்பட வேண்டிய நிலை இருக்கின்றன. நம் தூதுவராலயங்கள் எல்லாம் தோல்வி அடைந்து விட்டன. நம் தமிழகத்தைப் பொறுத்தவரையில், எங்கள் தலைவர் அறிஞர் அண்ணா அவர்களை ஏதாவது வெளிநாட்டு தூதுகோஷ்டியில் அனுப்பியிருக்கவேண்டும். அவர்கள் இடம் பெறுவதற்காக நான் பேசவில்லை. மற்ற மாநிலங்களில் உள்ள எதிர்கட்சிகளின் பிரபல தலைவர்களை அனுப்புகிற நிலையில் அறிஞர் அண்ணா அவர்களையும் அனுப்பியிருக்கவேண்டும். அதை முதல் அமைச்சர் அவர்களைப் போன்றவர்கள் கேட்டிருக்கவேண்டும். தூதுகோஷ்டியில் இடம் பெறுவதற்காக அவருக்கு இடம்பெற்றுத் தருவதற்காகச் சொல்வதல்ல இது; உலகத்தில் அவரது திறமையை நிலைநாட்ட அல்ல இதைச் சொல்வது; சேவைக்கான வாய்ப்பை அளித்து, அவரது திறமையினால் வெளி நாட்டுமக்களின் நல்லெண்ணத்தைப் பெற்று இந்த நாடு நன்மை பெற்றிருக்க வேண்டும். ஆட்சி மொழி மசோதா இன்று டெல்லியில் ஒத்திவைக்கப்பட்டிருக்கிறது. ஆக, இந்த நேரத்தில் அதன் காரணமாகப் போடப் பட்டிருக்கிற வழக்குகள் எல்லாம் வாபஸ் பெறப்படவேண்டும். காரணமின்றி பாதுகாப்புச் சட்டத்

தைப் பிரயோகிக்கக் கூடாது. பாதுகாப்புச் சட்டத்தைத் துஷ்பிரயோகம் செய்தார்கள் என்ற நிலை வந்து விடக் கூடாது.

அடுத்தபடியாக, பணக்கார வர்க்கத்தினிடம் கொஞ்சம் கண்டிப்பாக நடந்து அதிக அளவிற்கு நிதி பெறவேண்டும். ஒரு லட்சம் கொடுக்கிறார்கள். பிச்சை கொடுப்பது போல், யாசகம் கொடுப்பது போல் கொடுக்கிறார்கள். ஏழை எளியவர்கள், மாணவர்கள், தொழிலாளர்கள் இவர்கள் எல்லாம் தங்கள் உயிரையும் நாட்டுக்காக அர்ப்பணிக்க முதல் அமைச்சர் அவர்களின் பின்னால் திரண்டு நிற்கும்போது பணம் படைத்தவர்கள், இந்த அரசாங்கத்தினால் தங்கள் உடைமைகளையும் உயிரையும் காப்பாற்றிக் கொள்ள போலீஸ் பாதுகாப்புப் பெற்றவர்கள், இந்த அரசாங்கத்தினால் வசதி பெற்றவர்கள் பாதுகாப்பிற்காகக் கொடுப்பது மிகக் குறைவானதாகும். அவர்களுக்குக் கோடிக் கணக்கில் பணம் இருக்கிறது. திரு. மகாலிங்கம் அவர்கள் கோவையில் ஒரு கூட்டத்தில் சொன்னார்கள், கோவை நகரம் ஆண்டு ஒன்றுக்கு எட்டு கோடி ரூபாய் வருமான வரி தருகிறது என்று. அப்படி எட்டு கோடி ரூபாய் வருமான வரி கொடுக்கக் கூடிய கோவை நகரத்தில் இருந்து கோவை பணக்காரர்கள் எவ்வளவு கொடுத்திருக்கிறார்கள்? அவர்களை உணர வைக்க வேண்டும். 'இந்த நாட்டின் பாதுகாப்பைப் பொறுத்துத்தான் உங்கள் பாதுகாப்பு இருக்கிறது' என்று எடுத்துக் கூறி அவர்களிடம் இருந்து அதிகத் தொகைகள் பெற வேண்டும். அடுத்து, நம் முதல் அமைச்சர் அவர்கள் ஆலயங்களோடு அதிகத் தொடர்பு கொண்டவர்கள். ஆலயங்களில் உள்ள தங்கத்தை எல்லாம் நம் நாட்டின் பாதுகாப்பிற்காகப் பெற வேண்டும். இந்தக் கருத்துக்களை நான் கூறும்போது கண்டித்தோ, கடுமையான முறையிலோ சொல்லவில்லை. இன்று நாட்டின் தலைமையை சிருஷ்டிக்க வேண்டும். அந்தத் தலைமையின்கீழ் எழுகிற வாய்ப்பை மக்களுக்கு அளிக்க வேண்டும். நம் நாட்டின் எதிரிகளாக இருக்கிற, ஜனநாயக முறைக்கு, பண்பாட்டிற்கு எதிராக இருக்கிற மிலேச்சர்களை, நம் பகைவர்களை ஒழித்துக்கட்டி நாம் வெற்றியடைய நம் நாட்டிலும் உலகிலும் நிரந்தரமாக சமாதானம் உருவாக நாம் முயலவேண்டும் என்று வேண்டி விரும்பிக் கேட்டுக் கொண்டு என் உரையை முடித்துக்கொள்கிறேன்.

திரு. கே. டி. கோசல்ராம்: கனம் தலைவர் அவர்களே, இந்த நிதி ஒதுக்கல் மசோதாவில் போர் முனை, ஏர் முனை என்ற இரண்டு முனைகளைத்தான் பிரதானமாக 'எம்ஃபசிஸ்' பண்ணி சொல்லி விட்டு, இன்னின்ன விதத்தில் செலவு செய்யப்போகிறோம் என்று சொல்லப்பட்டிருக்கிறது. போர் முனை மத்திய அரசாங்கத்தின் கன்ட்ரோலில் இருக்கிறது. உழவு முனை ராஜ்ய அரசாங்கத்தின் கீழ் இருக்கிறது. இதை அமைச்சர்களும் ஒப்புக்கொள்வார்கள் என்று நினைக்கிறேன். ஏர் முனை என்பது விவசாயம். போருக்கும் விவசாயத்திற்கும் முக்கியத்துவம் கொடுத்து, நமது பிரதம மந்திரி அவர்கள் வாழ்த்துக் கூறியிருக்கிறார்கள். கிசானுக்கு என்னென்ன செய்யவேண்டும், ஜவானுக்கு என்ன செய்யவேண்டும் என்பதை

எடுத்துக்கூறி அவர்கள் ஜெயிக்கவேண்டும் என்ற முறையில், கிசானுக்கு ஜெய், ஜவானுக்கு ஜெய் என்று அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள். அதே நேரத்தில் இன்றைக்கு விவசாயிகள் மீது 1½ கோடி ரூபாய் வரி போட்டு விட்டோம் என்பதை வைத்துக் கொண்டு மனதில் புண்பட்டு சொல்லக்கூடியவர்களும் இருக்கிறார்கள். அதே நேரத்தில் அரசியல் கண்ணோட்டத்தோடு இதைப் பார்த்து, தேர்தலுக்காக இதை உபயோகித்துக்கொள்ளலாம் என்று நினைக்கின்றவர்களும் இருக்கிறார்கள். ஏர் முனையில் நாம் முன்னேற்றம் காணவேண்டும் என்றால் உணவுப்பிரச்னையை நாம் நன்றாக சமாளிக்கவேண்டும் என்பதுதான் என்னுடைய தாழ்மையான அபிப்பிராயம். இதில் முக்கியமாக அமைச்சர்கள் கவனம் செலுத்தவேண்டும். அமைச்சர்கள் ஒவ்வொருவரும் ஒவ்வொரு கிராமத்தை எடுத்துக்கொண்டு, அங்கு இன்மசியராகச் சென்று, அங்கு இருக்கக்கூடியவர்களைச் சந்தித்து, விவசாயம் அங்கு எப்படி நடக்கிறது, அதிகாரிகள் என்னென்ன வசதிகளைச் செய்து கொடுக்க வேண்டும் என்பதைப்பற்றியெல்லாம் தனியாகக் கவனிக்க வேண்டும். நாம் எவ்வளவோ நல்ல காரியங்களைச் செய்ய வேண்டும் என்று நல்லெண்ணத்தோடு பல திட்டங்களைப் போட்டு வருகிறோம். அந்த நல்லெண்ணத்தை யாரும் குறை கூற முடியாது. எதிர்க்கட்சி அன்பர்கள் கூட அந்த எண்ணத்தைக் குறை கூற முடியாது. போடப்படுகின்ற திட்டங்கள் நல்ல முறையில் நடைபெறவில்லை என்பதைத்தான் இரண்டு பக்கத்திலிருந்தும் சொல்லுகிறார்கள். இதற்கு தக்க நடவடிக்கையை முதல் மந்திரி பக்தவத்சலம் அவர்கள் எடுப்பார்கள் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது. முக்கியமாக ஒவ்வொரு கிராமத்திற்கும் ஒவ்வொரு அமைச்சரை அனுப்புங்கள். அங்கே விவசாயிகளுக்கு என்னென்ன குறைகள் இருக்கின்றன என்பதை இரண்டொரு நாள் அங்கேயிருந்து பார்த்து, அதிகாரிகளோடு பேசுங்கள். . .

கனம் திரு. எம். பக்தவத்சலம்: ஒவ்வொரு கிராமத்திற்கும் ஒவ்வொரு அமைச்சரை அனுப்பவேண்டும் என்றால் அமைச்சர்களை இன்னும் அதிகரிக்க வேண்டியதுதான் . . . .

திரு. கே. டி. கோசல்ராம்: அந்த முறையில் நான் சொல்லவில்லை. தெருவில் போகின்றவர்களை எல்லாம் அமைச்சர்களாக ஆக்கவேண்டும் என்று சொல்லக்கூடிய கோமாளித் தனத்திற்கு நான் வரவில்லை. இப்போது அமைச்சர் குழுவில் இருக்கின்றவர்களே போதும் . . .

கனம் திரு. எம். பக்தவத்சலம்: சட்டமன்ற அங்கத்தினர்கள் ஒவ்வொருவரும் தங்களை அமைச்சர்களாக கருதிக்கொண்டு இந்த வேலையைச் செய்யலாம் . . .

திரு. கே. டி. கோசல்ராம்: இதெல்லாம் இங்கு பேச்சுக்கு வேண்டுமென்றால் சொல்லலாம். சட்டசபை அங்கத்தினர் ஒரு லெட்டர் எழுதினால் கூட, அதைப்பற்றி அதிகாரிகளிடத்தில்

கேட்டால், நீங்கள் எழுதியிருப்பதையெல்லாம் நாங்கள் செய்தாகிவிட்டது, நீங்கள் லெட்டர் எழுதவேண்டிய அவசியமேயில்லை என்று சொல்லிவிடுகிறார்கள். சட்டசபை அங்கத்தினர்களுக்கு என்ன மரியாதை கொடுக்கிறார்கள் என்பதை அங்கு போய் பார்த்தால் தெரியும் . . .

கனம் திரு. எம். பக்தவத்சலம் : சட்டசபை அங்கத்தினர்களுடைய மரியாதையைப்பற்றி குறைவாகப் பேசக்கூடாது. ஒவ்வொரு சட்டசபை அங்கத்தினர்களுக்கும் எவ்வாறு மரியாதை கிடைக்கிறது என்பதை அவர்களே கணித்துக்கொள்ளலாம். ஆனால் அதை வெளியில் சொல்லக் கூடாது. கிடைக்கின்ற மரியாதை குறைவாக இருக்கிறது என்று நினைத்தால்—அதை வெளியிலும் சொன்னால் மேலும் குறைப்பதாக இருக்கும். . .

திரு. கே. டி. கோசல்ராம் : சட்டசபை அங்கத்தினர்களுக்கு கிடைக்கின்ற மரியாதையைப்பற்றி கனம் முதலமைச்சர் அவர்கள் கவனித்துக்கொள்வதற்கு பாராட்டுதலைத் தெரிவித்துக்கொள்கிறேன். வேண்டுமென்றால் கிராமங்களில் சட்டசபை அங்கத்தினர்கள் சென்று பிரசங்கம் செய்யலாம். ஆனால் அதிகாரிகளிடம் ஒன்றும் சொல்ல முடியாது. அதிகாரிகளை உத்தரவிடுகின்ற அதிகாரத்தை வைத்துக்கொண்டிருப்பது அமைச்சர்கள்தான். ஆகையால், அமைச்சர்கள்தான் அவர்களுக்கு உத்தரவிட முடியும். நான் ஒன்றும் செய்ய முடியாது. மற்றவர்களும் ஒன்றும் செய்ய முடியாது. வேறு எந்தத் தலைவர்களாக கிராமத்தில் இருந்தாலும் ஒன்றும் செய்ய முடியாது. சட்டசபை அங்கத்தினர்களாகிய நாங்கள் சேர்ந்து அமைச்சர்களாகிய உங்களிடத்தில் அதிகாரத்தை கொடுத்திருக்கிறோம். அதிகாரங்கள் உங்கள் கையில் இருக்கிறது. நீங்கள் சொல்லுகின்ற வேலைகளை அதிகாரிகள் உடனடியாகச் செய்வார்கள். நான் குறை சொல்லுவதற்காக இதைச் சொல்லுகிறேன் என்று நினைப்பாரானால் அது வருந்தக்கூடிய விஷயம். உண்மையில் அவ்வாறு நினைக்கவேண்டாம். விவசாயிகளுக்கு நன்மை செய்யவேண்டும் என்கின்ற நோக்கத்தின் பேரில்—நான் எண்ணுவதை இருதயபூர்வமாகச் சொல்லுகிறேன். விவசாயிகளுக்காக விவசாயத்திற்காக கோடிக்கணக்கான ரூபாய்களைக் கொடுப்பதற்கு நாம் ப்ரொவிஷனை வைத்திருக்கிறோம். ஆனால், இது எந்த அளவுக்கு கிராமத்தில் போய் பயன்படுகிறது என்பதை நாம் கிராமத்தில் உட்கார்ந்திருந்து பார்க்கவேண்டும். மின்சாரத்தை எடுத்துக் கொண்டால், ஒரு டிரான்ஸ்பார்மர் - இல்லாததால், அல்லது அதை மாற்றாமல் இருப்பதால் என்னென்ன கஷ்டங்கள் இருக்கின்றன, அதை மாற்றி விட்டால் எத்தனை பம்புசெட்டுகள் அமைக்கலாம், அதன் மூலமாக கூடுதலாக எத்தனை ஏக்கர் நிலங்கள் விவசாயத்திற்கு வரும், என்கின்ற விவரங்களை எல்லாம் பார்க்க முடியும், அதற்காக அதிகாரிகளுக்கு அந்த இடத்திலேயே வேண்டிய உத்தரவுகளைக் கொடுத்தால் விவசாயத்தை நிரந்தரமாக அதிகப்படுத்துவதற்கு உதவியாக இருக்கும் என்று நம்புகிறேன். அதே போன்று விவசாய அமைச்சரை எடுத்துக்கொண்டால், அவர்கள் செய்கின்ற காரியங்களைப்பற்றி யாரும் குறை கூற முடியாது.

ஆனால் கொடுக்கப்படுகின்ற பணம் சரியாக விவசாயிகளுக்குக் கிடைப்பதில்லை. இதை எல்லா கிராமங்களுக்கும் போய் பார்க்க வேண்டியதில்லை. பரீட்சார்த்தமாக ஒரு கிராமத்தில் போய் பார்க்கலாம். ஒரு கிராமத்தில் அமைச்சரை நேரடியாகப் போய், இங்கே எத்தனை ஏக்கர் நிலங்கள் இருக்கின்றன, அதற்கு என்னென்ன குறைகள் இருக்கின்றன, அது சம்பந்தமாக என்னென்ன ஃபைல்கள் தூங்கி கிடக்கின்றன என்பதையெல்லாம் பார்த்து, அந்த இடத்திலேயே கொடுக்கவேண்டிய உத்தரவுகளை எல்லாம் கொடுத்துவிட்டால், அதைப் பார்த்து, மற்ற இடங்களிலும் பின்பற்றுவார்கள். இதை நான் ஏதோ சர்க்கார் மீது குறை கூற வேண்டும் என்ற நோக்கத்திற்காக சொல்லவில்லை. நல்லெண்ணத்தோடு நாம் செய்கின்ற காரியங்கள் கிராமத்திலுள்ளவர்களுக்கு பயன்படவேண்டுமென்றால், இதையெல்லாம் செய்யவேண்டும். உண்மையிலே மக்களிடத்தில் நமக்கு நல்ல ஆதரவு இருக்கிறது. ஏதோ விவசாயிகளுக்கெல்லாம் 25 சதவிதம் தீர்வை போட்டு விட்டோம் என்று சொல்லப்படுகிறது. அது அரசியல் பிரச்சாரத்திற்கு வேண்டுமென்றால் அப்படி சொல்லிக்கொள்ளலாம். நிலம் வைத்திருக்கின்றவர்கள் எல்லாம் விவசாயிகள் அல்ல. நாம் இன்றைக்கு தீர்வை போடுகின்றோம் என்றால், நிலத்தினுடைய சொந்தக்காரன் மட்டும்தான் தீர்வை கொடுக்கப்போகின்றான், விவசாயம் செய்கின்ற எல்லா விவசாயிகளும் தீர்வை கட்டப்போவதில்லை. விவசாயிகளைப் பொறுத்தவரையில் எத்தனையோ சிக்கல்கள் இருக்கின்றன. அரசாங்கத்திலிருந்து 5,000 ரூபாய் கடன் வாங்க வேண்டும் என்றால், அதற்காக பட்டாக்களை காண்பிக்கவேண்டும், கிராமத்தில் சாதாரணமாக ஜாயிண்ட் பட்டாவாக இருக்கும். அதையெல்லாம் நீக்கி இந்தப் பணத்தை வாங்குவதற்கு இடையில் ஏதாவது கல்யாணம் வந்துவிட்டால் அதற்கு 2,000 ரூபாய் செலவு செய்துவிடுவான். ஆக இதில் கிணறு வெட்டுவதற்கு என்றோ அல்லது பம்பு செட்டு வைப்பதற்கு என்றோ வாங்கின பணம் சரியாக முழுவதும் பயன்படுவதில்லை. இவற்றையெல்லாம் நாம் கவனிக்கவேண்டும். (மணியடிக்கப்பட்டது)

கடைசியாக நான் ஒரு விஷயத்தை மட்டும் கூற விரும்புகிறேன். அதாவது நமது பிரதம மந்திரி அவர்களும், நமது முதல் மந்திரி அவர்களும் தங்கம் தரவேண்டும் என்பதைப்பற்றி நன்றாக 'எம்ப்பஸிஸ்' பண்ணி சொல்லியிருக்கிறார்கள். அதே நேரத்தில் தங்கத்தை கொடுக்காதீர்கள் என்று சொல்லக் கூடியவர்களும் நாட்டில் இருக்கத்தான் செய்கிறார்கள். பிரதம மந்திரி ஒரு பக்கத்தில் தங்கத்தை தாருங்கள் என்று கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். அதே சமயத்தில் கொடுக்கவேண்டாம் என்று சொல்லக்கூடியவர்களும் இருக்கிறார்கள். அப்படிப்பட்டவர்களுடைய படம் இம்மாதிரி சபைகளில் எதற்காக இருக்க வேண்டும் என்று இங்கு பேசியதாகக்கூட பத்திரிகையில் செய்தி வந்திருக்கிறது. . . (குறுக்கீடு) நானாக சொல்லவில்லை. பத்திரிகையில்தான் பார்த்தேன். பத்திரிகையிலுள்ள ரிப்போர்ட் தவறு என்றால் அதன் மீது நடவடிக்கை எடுத்திருக்க வேண்டும். அப்படி பேசுவது சரி என்றோ, அல்லது நல்லது என்றோ நான் சொல்லவில்லை. அப்படி

[திரு. கே. டி. கோசல்ராம்] [11th November 1965

எதிர்பார்ப்பதும் தப்புத்தான். அப்படி பேசியிருந்தால் இந்த நாட்டில் பிறந்த நம் எல்லோருக்குமே சங்கடமாகத்தான் இருக்கும். தங்கப் பத்திர விஷயத்தில் பல மாநிலங்களில் ஆளும் கட்சியைச் சேர்ந்தவர்களுக்கும், எதிர்கட்சியைச் சேர்ந்தவர்களும் தங்கள் மனைவிமார்களுடைய தங்கத்தை—நகைகளை—எல்லாம் கொடுத்திருப்பதாக நாம் பார்க்கின்றோம் நாமும் அவர்களைப்போன்று மற்றவர்களுக்கு உதாரணமாக இருக்கக் கூடிய அளவில் இருக்கவேண்டும். என்னைப் பொறுத்தவரையில் இறந்து போன என் மனைவியினுடைய நகைகளை பிரதம மந்திரி இங்கு வரும்போது கொடுப்பது அல்லது பாங்கில் கொடுப்பது என்று முடிவு செய்துவிட்டேன். அவ்விதம் கொடுப்பதற்கு நான் தயாராக இருக்கிறேன். நாம் மற்றவர்களுக்கு எக்ஸாம்பிளாக இருக்கக்கூடிய வகையில் இருக்கவேண்டும் என்று பாராளுமன்ற உறுப்பினர்கள் கேட்டிருக்கிறார்கள். முக்கியமாக சட்டசபையில் இருக்கக்கூடிய அமைச்சர்கள் சட்டசபை உறுப்பினர்கள் இது மாதிரியாக நடந்து கொள்ளவேண்டிய கடமை இருக்கிறது. பிரதம மந்திரியை விட நமது முதல் அமைச்சர் அவர்கள் மிகவும் உணர்ச்சியோடு, பிரயோஜனப்படுகிற வகையில் மக்களுக்குச் சொல்லக்கூடியவர்கள், அந்த முறையில் மக்களுக்கு வழிகாட்ட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். பொதுவாக நிர்வாகத்தில் இருக்கின்ற கோளாறுகளைப் பற்றி நாம் சொல்லும்போது, முதல் மந்திரி அவர்கள் அசட்டையாக இருந்து எடுத்துக் கொள்வதாக இருக்கலாம்

கனம் திரு. எம். பக்தவத்சலம்: நான் அசட்டையாக இருக்கிறேன் என்று நினைப்பது ரொம்பத் தவறு. அறுவும் கனம் அங்கத்தினர் பேசும்போது ரொம்பக் கவனமாகக் கேட்டுக்கொண்டிருக்கிறேன்.

திரு. கே. டி. கோசல்ராம்: அசட்டை என்று சொல்லவில்லை. கிரிட்டிஸிஸமாகப் பேசுவதாக நினைக்கவேண்டாம். எல்லாவற்றையும் துரிதமாக எக்ஸிக்யூட் செய்து, பொது மக்களிடத்தில் இன்றைக்கு உணர்ச்சி, துடிப்பு இருக்கிறதே, அதை விவசாயத்திலே திருப்பி விட்டு, அரசாங்கம் இதையெல்லாம் செய்கிறது, போர் முனையைப்பற்றி மட்டும் பேசவில்லை, விவசாய முனையிலும் அதிகாரிகள் மாத்திரம் இல்லாமல் அமைச்சர்களே முன் நின்று காரியங்களைச் செய்கிறார்கள் என்ற எண்ணம் ஏற்படும்படி செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொண்டு என்னுடைய வார்த்தைகளை முடித்துக்கொள்கிறேன்.

கனம் தலைவர் (திரு. சி. பி. கே. ஆர். லக்ஷ்மிகாந்தம்): கனம் அங்கத்தினர்கள் இனிமேல் ஐந்து நிமிஷத்திற்கு மேல் போகாமல் பேசவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

* திரு. சா. ராமசாமி: தலைவர் அவர்களே, நிதி ஒதுக்கீடு மசோதாவின் மீது சில கருத்துக்களைக் கூற விரும்புகிறேன். இப்போது அதிகமான அளவிலே பாதுகாப்பு ஏற்பாடுகளுக்குச் செலவுகள் செய்யப்பட்டு வருகின்றன. அதாவது எந்த அளவுக்கு

11th November 1965] [திரு. சா. ராமசாமி]

இப்போது செலவுகளைச் செய்கிறோமோ அதே போல இராணுவத் துறையை பலப்படுத்தும் பிரச்னையில் எப்போதும் நம் அரசாங்கம் தீவிர கவனத்தைச் செலுத்தி வரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதாவது வந்தபின் காப்பதின் வருமுன் காப்பதே நலம் என்ற பழமொழிக்கிணங்க, யுத்தம் வரும்போதோ அல்லது அபாயம் வரும்போதோ ஏற்பாடுகளை மேற்கொள்ளுவதை விட, ஆரம்பத்திலிருந்தே ஆயத்தங்களைச் செய்துகொள்வது நலமாக இருக்கும். ஆகவே, இனி இந்த மாதிரி முயற்சிகளில் அரசாங்கம் ஈடுபடவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாஜி இராணுவத்தினருக்கு—முன்பு இராணுவத்தில் இருந்தவர்கள்—அங்கஹீனத்திலோ அல்லது உடல் கோளாறிலோ சொந்த நலனைக் கவனிக்க முடியாது இருக்கின்றவர்களுக்கு போதிய அளவு உதவித் தொகை கொடுக்கவேண்டும் அப்படிக் கொடுத்தால் தான் இப்போது இராணுவத்தில் இருக்கிறவர்களும், புதிதாகச் சேருகிறவர்களும் நல்ல முறையில் ஈடுபடுவார்கள் என்று சொல்லிக் கொள்கிறேன்.

இந்த ஆண்டில் என்னுடைய தொகுதியில் புள்ளம்பாடி பாசனப் பகுதியில் தண்ணீர் வரவில்லை. மழை பெய்த போது வாய்க்கால்களில் தண்ணீர் வரும் என்று தண்டோரா மூலம் பிரசித்தம் செய்ததன் காரணமாக, கிணறு மூலமாக தண்ணீர் பாய்ச்சி நட்டு விட்டு அமர்ந்து இருக்கக் கூடிய நிலை ஏற்பட்டது. குறுவை சாகுபடியோ, சம்பா சாகுபடியோ செய்ய முடியாத நிலையில் மக்கள் பாதிக்கப்பட்டு இருக்கிறார்கள். அதோடு மழையை நம்பி புன்செய் பயிர்கூட இடமுடியாது. புள்ளம்பாடி திட்டப் பிரதேசம் பூராவும் வறண்ட பிரதேசமாகக் காட்சி அளிக்கிறது. அப்படி இருக்கும் நிலையில் ஊரளவுக்கு பாதுகாப்பு நிதிக்கு பணம் கொடுத்திருக்கிறார்கள். அவர்கள் வர இருக்கிற ஜனவரியில் தீர்வை செலுத்த வேண்டியிருக்கிறது. போடப்பட்டுள்ள புதிய வரியையும் சேர்த்து கட்ட வேண்டிய நிலை இருப்பதால் இதற்கு முன் வாங்கிய அரசாங்கக் கடன், கூட்டுறவுத் துறையில் வாங்கப்பட்ட கடன் முதலியவைகளையும் கட்ட வேண்டிய நிலை இருப்பதால், அவர்கள் மிகவும் சிரமப்பட்டுக்கொண்டு இருக்கிறார்கள். எனவே, மழையை நம்பி பயிரிடக் கூடிய காரணத்தினால், இட்ட பயிர் கூட தண்ணீர் வராது சாவியாகும் நிலையில் இருப்பதால், நில வரிகளை வஜா செய்ய ஏற்பாடு செய்து, பெறப்பட்டுள்ள கடன்களைத் திருப்பித் தருவதில் ஒரு ஆண்டு காலத்திற்கு தவணை நீடித்துக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு எனது உரையை முடித்துக் கொள்கிறேன்.

* திரு. இரா. நெடுஞ்செழியன்: கனம் தலைவர் அவர்களே கனம் முதல் அமைச்சர் அவர்களால் மன்றத்தின் ஆய்வுக்கு வைக்கப்பட்டுள்ள ஆறாவது நிதி ஒதுக்கீடு மசோதா பற்றிச் சில கருத்துக்களைக் கூற விரும்புகிறேன்.

இந்த ஆறாவது நிதி ஒதுக்கீடு மசோதாவில் 745 லட்சம் ரூபாய்க்கு நிதி ஒதுக்கீடு செய்யக்கோரப்பட்டுள்ளது. இந்த நிதி ஒதுக்கீடு அவசரக் காலத்தை யொட்டி மேற்கொண்டிருக்கிற பணி

[திரு. இரா. நெடுஞ்செழியன்] [11th November 1965

களை நிறைவேற்றுவதற்கும், அரசாங்கம் ஏற்கனவே திட்டமிட்டுள்ள பல்வேறு வளர்ச்சித் திட்டங்களை நிறைவேற்றுவதற்கும் தேவை என்ற முறையில் இந்த மசோதா கொண்டுவரப்பட்டுள்ளது. இந்த மன்றம் எடுத்துக் கூறியிருக்கிற பல்வேறு கருத்துக்களை இந்த நெருக்கடி நிலையையொட்டி அரசாங்கம் பரிசிலனை செய்து அவற்றை நிறைவேற்றும் என்கிற நம்பிக்கையிலே கருத்துக்கள் இங்கே வழங்கப்பட்டிருக்கின்றன.

இப்போது ஏற்பட்டிருக்கிற நெருக்கடி நிலையில் செலவுகள் ஏற்படுகின்றன என்பதை மன்றம் உணர்ந்திருக்கிறது. அதையொட்டி சில பல வரிகளும் இந்த ஆண்டு கொண்டுவரப்பட்டிருக்கின்றன. எந்த நிர்வாகத்திற்கும் நிதி தேவை என்பதையும், வரிகள் போடுவது என்பது இன்றியமையாததாக ஏற்படுகிறது என்பதையும் உணருகிறோம். இப்போது போடப்பட்டிருக்கிற சில பல வரிகளால் ஏற்படும் விளைவுகளிலிருந்து பாதுகாத்துக்கொள்ளும் பொறுப்பு அரசாங்கத்திற்கு இருக்கிறது. இந்த வரிகளால் பண்டங்களின் விலை உயராது தடுத்து நிறுத்தும் முயற்சிகளை அரசாங்கம் மேற்கொள்ளுதல் வேண்டும். வரிகள் கொண்டு வந்து போடும் போது, உற்பத்திச் செலவு உயராது, பண்டங்கள் விலை ஏறாது, குறைந்த அளவுக்குத் தான் மின்சாரக் கட்டணம், மற்றும் எண்ணெய் வரியும் விற்பனை வரியும் மற்றவைகளும் போடப்பட்டிருக்கின்றன. இதன் காரணமாக விலைகள் கணிசமாக உயராது என்று தெரிவிக்கப்பட்டிருந்தாலும், ஏற்படுகிற விளைவு என்னவென்றால், போடப்பட்ட வரிகளின் அளவுக்கு ஏற்ற வேண்டிய நியாயமான விலையை விட, விலைகளை மிக அதிகமாக ஏற்றும் தன்மையைப் பார்க்கிறோம். அதைத் தடுத்து நிறுத்த முடியாத நிலைமையில் அரசாங்கம் அமைந்திருப்பதைப் பார்க்கிறோம். நமக்கு நிதி தேவை, வரி போடுகிறோம் என்றாலும், போடப்படும் வரிகளுக்குத் தகுந்தபடி நியாயமான அளவுக்கு இல்லாமல், நியாயமற்ற முறையில் பண்டங்களின் விலைகள் ஏற்றப்படுகின்றன. இதைத் தடுத்து நிறுத்தும் முறையில் நிர்வாக அமைப்பைச் சரியாக வைத்துக் கொள்ளாத காரணத்தினால், அதன் போக்கிலேயே நடைபெற்று வருகிறது. இதைப்பற்றி அரசாங்கம் கவனம் செலுத்தி, நியாயமற்ற போக்கில் விலை ஏற்றம் ஏற்படுவதைத் தடுத்து நிறுத்தும் முயற்சிகளை மேற்கொள்ளுதல் வேண்டும்.

இன்றைக்கு பாதுகாப்பு முயற்சிகளுக்கு அத்தனை கட்சிகளும் முழு ஒத்துழைப்பை நல்குகிறார்கள். உலகமும், இந்தியாவும் அறியும் வகையில் இந்த மன்றத்திலே அத்தனை கட்சிக்காரர்களும் கருத்துக்களை வழங்கியிருக்கிறார்கள். நம் மாநில அரசின் முயற்சிகளுக்கும் எல்லா கட்சியினரும் முழு ஆதரவை நல்கியிருக்கிறார்கள். அந்த வகையிலே செலவு வகைகளைக் குறைக்க சிக்கனமாக்கவும், வருவாய் வழிகளைப் பெருக்கவும் கருத்துக்களை வழங்கியிருக்கிறார்கள். சிக்கனத்தைக் கையாள உயர் மட்ட குழு ஒன்று இப்போது அமைக்கப்பட்டிருக்கிறது. ஒரு தனிக் குழு அமைப்பதன் மூலமாக எந்தெந்த வகையிலே சிக்கனத்தைக்

11th November 1965] [திரு. இரா. நெடுஞ்செழியன்]

கையாளலாம் என்ற கருத்து இந்த மன்றத்திலே பல வாய்ப்புக்களில் எடுத்துச் சொல்லப்பட்டு வந்துள்ளது; அந்தக் கருத்துக்களினுடைய தன்மையை உணர்ந்து, இந்த நெருக்கடி நிலைமையின் தன்மையை உணர்ந்து உயர் மட்ட குழு அமைத்த முன் வந்திருப்பது பாராட்டுக்குரிய ஒன்று. அதற்கு ஆண்டுதோறும் செலவு ஆவது என்று குறிப்பிடப்பட்டுள்ளது 56,400 ரூபாய் ஆகும். உள்ளபடியே இவ்வளவு செலவு செய்து குழு பணியாற்றும்போது, கணிசமான அளவுக்கு சிக்கனத்தைக் காட்டும் அளவு சிபாரிசுகளைச் செய்யவேண்டும். இந்தக் குழு மேற்கொண்டிருக்கிற நடவடிக்கைகள் மூலமாக எந்தெந்த வகைகளில் எந்த அளவுக்குச் சிக்கனம் மேற்கொள்ளப்பட்டிருக்கிறது, அதன் மூலமாக எந்த அளவுக்கு பணம் மிச்சப்பட்டிருக்கிறது என்ற அறிக்கையை உடனடியாக இப்போது இந்த மன்றத்திற்குத் தெரிவிக்க வாய்ப்பு இல்லையென்றாலும், மன்றம் அடுத்து கூடும்போது, அந்த வாய்ப்பிலே முதல் அமைச்சர் அவர்கள் தெரிவிக்கவேண்டுமென்று வற்புறுத்திக் கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன். ஆண்டுதோறும் நிதி நிலை அறிக்கை விவாதத்திற்கு வரும்போதும் சரி, துணை மானியக் கோரிக்கைகள் விவாதத்திற்கு வரும்போதும் சரி, சிக்கனத்தைக் கடைபிடிக்கவேண்டுமென்று உறுப்பினர்களால் வற்புறுத்தப்பட்டு வருகிறது. அரசாங்கத் தரப்பிலிருந்து தக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன என்று கருத்து வழங்கப்படுகிறது. எந்தெந்த வகையில் சிக்கனம் கையாளப்படுகிறது, எவ்வளவு மிச்சம் என்று திட்ட வட்டமாக அறிய வாய்ப்பு இல்லை. இப்போது குழு அமைக்கப்பட்டிருப்பதால், இதைப் பற்றித் தெளிவாக அறிய வாய்ப்புக் கிடைக்கும் என்று அறிகிறேன். அந்த முறையில் அரசாங்கச் செலவுகளைக் கணிசமான அளவுக்குக் குறைக்கமுடியும்.

விருந்து விழாக்களில் ஆடம்பரத்தை முற்றிலும் நிறுத்தும் அளவுக்கு முயற்சிகளை மேற்கொள்ளுதல் வேண்டும். சாதாரணமாக விருந்துக்களில் கட்டுப்பாடு வைக்கிறோம். பொது நிகழ்ச்சிகளில் விருந்தே இல்லாமல், நிகழ்ச்சியின் தன்மையை உணர்ந்து பொது மக்களுக்கு அறிவிக்கிற வகையில் எந்த அளவுக்கு நடத்த முடியுமோ, அந்த அளவுக்கு விருந்துகள் அற்ற நிகழ்ச்சிகளாக, ஆடம்பரமற்ற நிகழ்ச்சிகளாக, ஆடம்பரச் செலவு மற்றவைகளை மேற்கொள்ளாமல் பொது மக்களுக்கு எந்த அளவுக்கு ஊக்கம் தர 12-00 Noon.
வேண்டுமோ, எந்த அளவுக்கு அவர்களுடைய உணர்ச்சிகளை எழுப்ப வேண்டுமோ, எந்த அளவுக்கு பொது மக்களுடைய ஒத்துழைப்பு பெறவேண்டுமோ, அந்த அளவுக்குப் பெறக் கூடிய முறையில் பொது நிகழ்ச்சிகளை நடத்துதல் வேண்டும். கூடுமான வரையில் அதிகச் செலவு இல்லாமல், ஆங்காங்கு ஏற்படுத்தப் படுகின்ற சிறு சிறு நிகழ்ச்சிகளை ஆங்காங்கு உள்ளூரில் இருக்கின்ற அதிகாரிகளைக் கொண்டே நடத்துகின்ற அளவுக்கும், வெளியிலே இருந்து அதிகாரிகள் வந்து அதனால் அதிகச் செலவு ஏற்படாத அளவுக்கும், பாதுகாத்துக்கொள்ளும் முயற்சிகளை எடுத்துக் கொள்ளுதல் வேண்டும்.

[திரு. இரா. நெடுஞ்செழியன்] [11th November 1965

ஊர்க்காவல் படையினர் அமைப்பதன் மூலம் சிறந்த பணிகளை ஆற்ற முடியும் என்று வற்புறுத்தப்பட்டிருக்கிறது. சென்னையிலே நெருக்கடி காலத்தில், இருட்டடிப்பு ஏற்படுத்தப்பட்டபொழுது, இங்கே இருக்கிற ஹோம் கார்ட்ஸ், அகப்படையினர் சிறந்த முறையில் பணியாற்றியிருக்கிறார்கள். அந்த படையைச் சேர்ந்தவர்கள் போலீஸ் துறையினருடன் சேர்ந்து சிறந்த முறையில் உதவி புரியக்கூடிய ஒரு படையினராக அமைந்திருந்தனர் என்பதையும், நெருக்கடி காலத்தில் அவர்கள் எப்படி எப்படி பயன்படக்கூடும் என்பதையும் நாம் நன்றாக அறிந்திருக்கிறோம். அந்த முறையிலே பெரிய நகரமாயிருந்தாலும் சரி, சிறிய நகரமாயிருந்தாலும் சரி இந்த ஊர்க்காவல் படையினரை பயன் படுத்தக்கூடும். தமிழகத்தைப் பொறுத்தவரையில் 367 ஊர்க்காவல் படைகள் அமைப்பது பொருத்தமாக இருக்கும் என்று இந்திய அரசு அறிவித்திருப்பதாக குறிப்பிலே கூறப்பட்டிருக்கிறது. அதைப் பொறுத்த வரையிலும் 91 ஊர்க்காவல் படைகள் இப்பொழுது அமைக்கப்பட்டுள்ளன. மேலும், 90 ஊர்காவல் படைகளை அமைப்பதற்கு இந்த ஆண்டு திட்டம் தீட்டப்பட்டிருக்கிறது என்று கூறப்பட்டிருக்கிறது. இந்திய அரசின் இலக்கிற்கு ஏற்ப 367 ஊர்க்காவல் படைகளை நிறுவுவதற்கான முழு முயற்சிகளை இந்த அரசு மேற்கொள்ளுதல் வேண்டும்.

வேளாண்மையைப் பெருக்கவேண்டும் என்ற உணர்ச்சியை மக்களிடையே பரப்பவும், காய்கறி உற்பத்தியைப் பெருக்க வேண்டும் என்ற முயற்சியை மக்களிடையே பரப்பவும் முயற்சிகள் எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கின்றன. இத்தகைய பணிகளை பொறுப்புணர்ச்சியோடு வீடு தோறும் சென்று பரப்புவதற்குத் தகுந்த ஒரு படையினராக இந்தப் படையினரைப் பயன் படுத்த வேண்டும். இந்தத் துறையில் ஈடுபட்டிருக்கிற அதிகாரிகள் ஆங்காங்கு சென்று ஊக்கத்தைப் பரப்புவதை விட, பொது மக்களோடு நெருங்கிய தொடர்பு கொண்ட ஊழியர்களைக் கொண்ட இந்த ஊர்க்காவல் படையினர் வீடு தோறும் அணுகி, காய்கறி உற்பத்தி செய்வதற்கான வழி வகைகளைச் சொல்லமுடியும்.

(கனம் சபாநாயகர் தலைமை)

சென்னை மாநகரத்தில் பல இடங்களில் தோட்டங்கள் இருக்கின்றன, கிணறுகள் இருக்கின்றன, மற்ற வசதிகளும் இருக்கின்றன. அத்தகைய வசதிகள் இருந்தாலும், காய்கறிகளைப் பயிரிடவேண்டும் என்ற ஊக்கமும், ஆர்வமும் இருந்தாலும்கூட அவர்கள் அதைச் செய்யத் தொடங்குவதற்கு ஊக்கத்தை அளிக்க, முன் நடவடிக்கை எடுத்துத் தருவதற்கு வழிவகை இல்லாத காரணத்தினால், எண்ணம் இருந்தும்கூட, அதைச் செயலில் நிறைவேற்ற முடியாத அளவுக்கு இருந்து வருகிறார்கள். ஆகவே, ஒவ்வொரு வீடாக அணுகி, வீட்டுத் தன்மையை அறிந்து, இன்னென்ன வகையிலே காய்கறிகள் பயிரிடலாம் என்று எடுத்துச் சொல்லி, அவர்களுடைய வீடுகளுக்கே சென்று விதைகளைத் தந்து அந்த அளவுக்கு ஊக்கம் தந்தால்தான், இந்தத் திட்டத்தினுடைய நோக்கம் நிறைவேற முடியும். இல்லையென்றால், இந்தத் திட்டம்

11th November 1965] [திரு. இரா. நெடுஞ்செழியன்]

ஏட்டளவில் தான் இருக்குமே தவிர, வீட்டு அளவில் சென்று நிறைவேற்றப்படக்கூடிய நிலைமை இருக்கமுடியாது. அதிகாரிகளே எல்லா வீடுகளுக்கும் சென்று இந்தப் பணிகளை ஆற்ற முடியும் என்று எதிர்பார்க்க முடியாது. ஊர்க்காவல் படையினரை இத்தகைய பணிகளுக்கு பயன்படுத்திக் கொள்ள முடியும். அதிகாரிகள் பயிற்சி தந்து, அந்தப் பயிற்சியை ஏற்றுக் கொண்டிருக்கிற ஊர்க்காவல் படையினர் வீட்டுக்கு வீடு சென்று 'உங்களுக்கு வேண்டிய வசதிகளை நாங்களே செய்து தருகிறோம்' என்று கூறுவதற்கான முயற்சிகளை மேற்கொள்ளுதல் வேண்டும். பலருக்கும் விருப்பம் இருக்கிறது, வீட்டிலே இருக்கிற ஆடவர், பெண்டிர் அத்தனை பேர்களுக்கும் ஊக்கம் கொடுத்து, எண்ணத்தை நடைமுறையில் செயல்படுத்துவதற்கான முயற்சிகளை இந்த அகப்படையினர், ஊர்க்காவல் படையினர் ஏற்றுக் கொள்ள முடியும் என்று நினைக்கிறேன். அந்த வகையில் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

ராணுவத்தில் பணி செய்கின்ற மருத்துவர்கள் குடும்ப நிதிக்கு ரூ. 250 கொடுக்க முன்வந்திருப்பது பாராட்டுதலுக்குரியது. அந்த முயற்சிக்கு மேலும் ஊக்கம் தருவதற்கு வழிவகைச் செய்யக்கூடிய ஒன்றாக அது அமையக்கூடும். ஏற்கெனவே பணியாற்றுகின்ற மருத்துவர்களுக்கும், இனி பணியாற்றச் செல்லுகின்ற மருத்துவர்களுக்கும் ஊக்கம் தருகிற இத்தகைய முயற்சியை மேற்கொண்டிருப்பது மகிழ்ச்சிக்குரியது. அதை மேலும் விரிவு படுத்துவதற்கான முயற்சிகளை மேற்கொண்டால் மிக நன்றாக அமையக் கூடிய ஒன்றாக அமையும்.

கல்வித் துறையைப் பொறுத்தவரையில், நெருக்கடி காலத்தை ஒட்டி புதிய விஞ்ஞானத் துறைகளை ஏற்படுத்துவதற்கான முயற்சிகளை தடைப்படுத்தி நிறுத்தாமல், அப்படிப்பட்ட முயற்சிகளை மேற்கொள்ளுவதற்காக நிதி ஒதுக்கீடு செய்திருப்பது வரவேற்கத் தக்க ஒன்றாகும். இப்பொழுது உயர்நிலைப் பள்ளிகளில் விஞ்ஞானத் துறையை விருப்ப பாடமாக எடுத்துப் படிப்பதன் மூலம் மாணவர்கள் கல்லூரிகளுக்கும், என்ஜினியரிங் கல்லூரி, மருத்துவக் கல்லூரி போன்ற வேறு பல கல்லூரிகளுக்கும் செல்லுவதற்கு ஏதுவாக இருக்கும். விஞ்ஞானத்தை விருப்ப பாடமாக எடுத்துப் படிப்பதற்கு வசதியாக ரசாயன ஆய்வுக் கூடங்கள் எல்லாப் பள்ளிகளிலும் அமையவில்லை. புதியதாக துவக்கப்பட்ட பல பள்ளிகளில் இந்த அடிப்படை வசதி இல்லாமல் இருக்கக்கூடிய நிலை இருக்கிறது. அத்தகைய ஒரு முறையை புகுத்திவிட்டதினால், அதில் படித்து வருகிற மாணவர்களுக்குக் கல்லூரிகளில் எளிதாக இடம் தரப்படக்கூடிய நிலைமை ஏற்படாமல் போகலாம். மிகச் சிறிய ஊர்களில், கிராமங்களில் ஏற்படுத்தப்பட்டிருக்கும் புதிய பள்ளிகளில் ஆய்வுக்கூட வசதிகள் இல்லாததினால், அங்குள்ள மாணவர்கள் அந்தத் தனிப் பிரிவை விருப்பப் பாடமாக எடுத்துப் படித்து, பின்னால் கல்லூரிகளிலே, தொழில் கல்லூரி, மருத்துவ கல்லூரி ஆகிய கல்லூரிகளில் எளிதில் இடம் பெற முடியாத நிலையில் இருக்கிறவர்களாக ஆகிவிடக்கூடும். அந்த

[திரு. இரா. நெடுஞ்செழியன்] [11th November 1965

நிலை ஏற்படாத அளவுக்கு, சிற்றூர்களில் இருக்கும் உயர்நிலைப் பள்ளிகளில் படிக்கும் மாணவர்களாக இருந்தாலும், சென்னையில் இருக்கிற மிக உயர்ந்த கிறிஸ்துவ உயர் நிலைப் பள்ளியைப் போன்ற எல்லா வசதிகளையும் கொண்டிருக்கிற பள்ளிகளில் படிக்கும் மாணவர்களாக இருந்தாலும், எல்லா மாணவர்களுக்கும் விஞ்ஞானத்தை விருப்ப பாடமாக எடுத்து, அதில் தேர்ச்சி பெற்று, திறமை பெற்று, கல்லூரிகளில் எளிதில் இடம் பெறுவதற்கான வாய்ப்பு இருக்கவேண்டும். சிற்றூர்களிலுள்ள உயர்நிலைப்பள்ளிகளில் அத்தகைய ஆய்வுக் கூட வசதிகள் செய்துகொடுக்கப்படாவிட்டால் அந்த மாணவர்களுக்கு விஞ்ஞான பாடத்தை விருப்ப பாடமாக எடுத்து, அதிலே அதிக திறமை பெற்று கல்லூரிகளில் எளிதில் இடம் பெறுவதற்கு வாய்ப்பு இல்லாமல் போய்விடும். ஆகவே, அமைச்சர் அவர்கள் அதில் அதிக அக்கறை செலுத்தி, எல்லாப் பகுதிகளிலும் உள்ள பள்ளிகளிலும் மாணவர்கள் விஞ்ஞானத் துறையை விருப்ப பாடமாக எடுத்துப் படித்து, தேர்ச்சி பெற்று வருவதற்கான வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும்.

மற்றொன்றையும், கல்வித் துறையைப் பொறுத்த மட்டில் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் இருக்கிற பி.ஏ., எம்.ஏ. வகுப்பும், சென்னை பல்கலைக்கழகத்தில் இருக்கும் பி.ஏ., எம்.ஏ. வகுப்பும் ஒன்றுக்கு ஒன்று ஈடான மதிப்புள்ளதாக அமைந்துள்ளன. மேல் படிப்பிற்கான நிலையாக இருந்தாலும் சரி, வேலைக்கான நிலையாக இருந்தாலும் சரி, அந்த முறையில் ஒரே மதிப்புடையது என்று ஒப்புக்கொள்ளப்பட்டு, அது நடை முறையில் இருந்து வருகிறது. சென்னை பல்கலைக்கழகத்தில் பி.ஏ., எம்.ஏ. பயிற்சி பெற்று எந்த வேலைக்குச் செல்ல இயலுமோ, அதே வேலைக்கு அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் பி.ஏ., எம்.ஏ. படித்து பயிற்சி பெற்றவர்கள் செல்லக்கூடும். பி.ஏ. படிப்புக்கு ஈடாக விளங்கும் பி.ஓ.எல். படிப்பு படித்தவர்கள் சென்னைப் பல்கலைக்கழகத்தில் எம்.ஏ. வகுப்பில் சேர்ந்து படிப்பதற்கு இன்றைக்கு வாய்ப்பு இருக்கிறது. அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் பி.ஏ.-க்குச் சமமாக இருக்கிற பி.ஓ.எல். படிப்பு இருக்கிறது; சென்னை பல்கலைக்கழகத்தில் பி.ஓ.எல். படித்தவர்களாக இருந்தாலும், அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் பி.ஓ.எல். படித்தவர்களாக இருந்தாலும், அவர்கள் மூன்று ஆண்டுகளுக்குத் தொடர்ந்து ஆசிரியர்களாக இருந்தால், அவர்கள் எம்.ஏ. வகுப்பில் சேர்ந்து படிப்பதற்கு வாய்ப்பு இருக்கிறது என்ற ஒரு விதி இருக்கிறது. ஆனால், இப்பொழுது அதற்கு ஒரு தடை இருக்கிறது. அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் பி.ஓ.எல் படித்தவர்கள், சென்னைப் பல்கலைக்கழகத்தில் மீண்டும் பி.ஏ. படித்து, பரீட்சையில் வெற்றி பெற்று, பின்பு எம். ஏ. பரீட்சை எழுதுவதற்கான ஒரு இக்கட்டான நிலைமை ஏற்பட்டிருக்கிறது. 1960-62 வரையில் பி.ஓ.எல். படித்தவர்கள் நேரடியாக இங்கே எம்.ஏ. படிப்பில் சேர்த்துக் கொள்ளப்பட்டு அவர்கள் சில கல்லூரிகளில் இப்பொழுதும் வேலை செய்கிறார்கள். ஆனால், அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் பி.ஓ.எல். படித்தவர்கள் சென்னை பல்கலைக்கழகத்தில் நேரடியாக எம்.ஏ. வகுப்பு படிப்பதற்கு ஓர் ஆண்டு காலமாக ஒரு தடை

11th November 1965] [திரு. இரா. நெடுஞ்செழியன்]

உத்தரவு விதிக்கப்பட்டிருக்கிறது. அதன் காரணமாக அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் பி.ஓ.எல். படித்தவர்கள், மீண்டும் பி.ஏ. படித்து எம்.ஏ. வகுப்பில் சேரவேண்டிய ஒரு நிலைமை இருக்கிறது. கூடுதலாக இரண்டு, மூன்று ஆண்டுகளை வீணாக செலவழிக்கிற கட்டத்தில் அவர்கள் இருக்கிறார்கள். இதைக் கல்வி அமைச்சரான முதல் அமைச்சர் அவர்கள் கவனித்து, இதில் இருக்கக்கூடிய இக்கட்டான நிலையை நீக்கவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்ளுகிறேன்.

அதிலும்கூட, இங்கே பி.ஓ.எல். பரீட்சைக்கு இருக்கிற பாட திட்டங்களைவிட அதிகமான அளவுக்கு படித்துத் தீரவேண்டிய தன்மையில் அண்ணாமலைப் பல்கலைக்கழக பாடதிட்டங்கள் அமைந்திருக்கின்றன. பி.ஓ. எல் வகுப்பில் முதல் பிரிவு ஆங்கிலம், இரண்டாம் பிரிவு Linguestics with special Reference to Tamil and Part III- -Minor Biology and History of Science just as in the B.A. course.

என்ற அளவுக்கு அமைந்திருக்கிறது. சென்னையிலே இருப்பதற்கு ஈடாகத் தான் அமைந்திருக்கிறது. அந்த வாய்ப்பு மறுக்கப்படுகிற காரணத்தினால், வீணாக மேற்கொண்டு 2, 3 ஆண்டுகளுக்கு பி.ஏ. படித்துத் தீரவேண்டிய நிலையில் இருக்கிறார்கள். அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் பி.ஓ.எல். படித்தவர்கள். இதில் கவனம் செலுத்தி, ஏற்கனவே இருந்த முறையை நீடிக்கச் செய்ய வேண்டும் என்று முதல் அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

மற்றொன்றும் கல்வித் துறை சம்பந்தமாக எடுத்துக் கூற விரும்புகிறேன். ஓய்வு பெற்ற ஆசிரியர்கள் பென்ஷன் பெறுவதைப் பொறுத்தவரையில், கனம் முதல் அமைச்சர் அவர்களைத் தூதுக் குழுவினர் சந்தித்து, அவர்களுடைய குறைகளை எடுத்துக் கூறியிருக்கிறார்கள். முதல் அமைச்சர் அவர்கள் இந்தப் பிரச்னையைக் கவனித்து நல்லதோர் முடிவு எடுக்கக்கூடும் என்று இந்த மன்றத்தில் வாக்களித்திருக்கிறார்கள். 1955-ம் ஆண்டு ஏப்ரல் முதல் தேதிக்கு முன்பு ஓய்வு பெற்ற ஆசிரியர்கள் பென்ஷன் தொகை பெற முடியாத அளவுக்கு இருக்கிறார்கள். அப்படி அவர்கள் பெற்றாலும் கூட, ரூ. 3.85, ரூ. 4.85 ரூ. 5.20, ரூ. 11.25 என்ற அளவுக்கு பென்ஷன் தொகை பெறக்கூடிய நிலைமையில் இருக்கிறார்கள். வயது வந்த முதியோர்களுக்கு குறைந்தபட்சமாக ரூ. 20 பென்ஷன் கொடுக்கின்ற திட்டத்தை மேற்கொண்டிருக்கிற நிலையில், 1955-வது ஆண்டுக்கு முன்பு ஓய்வு பெற்றவர்களுக்கு அதுவும் மாவட்டக் கழகங்களின் கீழ் உள்ள பள்ளிகளில் வேலை செய்து ஓய்வு பெற்றவர்களுக்கு பென்ஷன் இல்லை என்று கூறத் தேவையில்லை. அவர்களுடைய எண்ணிக்கை மிகக் குறைவாகத்தான் இருக்கிறது. ஐந்நூறு, அறநூறு பேர்கள்தான் உயிரோடு இருப்பார்கள். அதற்கு முன்பு ஓய்வு பெற்றவர்கள் இன்னும் ரூ. 3½ பென்ஷன் வாங்கிக்கொண்டிருக்கக்கூடிய நிலையில் தான் இருக்கிறார்கள். இதை ஒரு குறையாக அவர்கள் அடிக்கடி

[திரு. இரா. நெடுஞ்செழியன்] [11th November 1965

எடுத்துத் தெரிவித்திருக்கிறார்கள். அதைக் கவனித்து ரூ. 20 அளவுக்கு ஆக்கலாம் என்ற ஒரு தன்மையை முதல் அமைச்சர் அவர்கள் எடுத்துத் தெரிவித்திருப்பதன் காரணமாகவும், அதைப் பற்றிய உத்தரவு இன்னும் வரவில்லையாதலாலும், மீண்டும் இதை நினைவு படுத்துகின்ற முறையில் இதற்கான முயற்சியை விரைவில் மேற்கொள்ளவேண்டுமென்று கனம் முதல் அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

பொருளாதாரத் தமிழ்ப் பிரிவைப் படிக்கின்ற மாணவர்களுக்குக் கொடுக்கும் உதவித் தொகை நிறுத்தப்பட்டிருக்கிறது. குடந்தையில் 17 மாணவர்கள் பொருளாதாரத் தமிழ் பிரிவை எடுத்துப் படிக்கிறார்கள். அவர்கள் இந்தச் சலுகை தங்களுக்குக் கிடைக்கவில்லை என்று கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். ஆகவே, அந்த முறையைப் புகுத்துவதன் மூலமாகச் சிறிது காலம் அந்தப் படிப்புக்கு மதிப்பு ஏற்படும் வகையில், மாணவர்கள் தாங்களாகவே விரும்பிப் படிக்கும் வரையில், இந்தச் சலுகையை நீடிக்க வேண்டும் என்றும், அதற்கான முயற்சிகளை அரசு மேற்கொள்ள வேண்டும் என்றும் கேட்டுக்கொள்ளுகிறேன்.

இங்கே போடப்படுகின்ற பல்வேறு வரிகளின் மூலம் ஏற்படும் விளைவுகளை கனம் முதல் அமைச்சர் அவர்கள் உன்னிப்பாகக் கவனித்து, இவற்றின் விளைவாக விலைவாசிகள் ஏறாமல் தடுக்கத் தக்க முயற்சிகள் மேற்கொள்ளவேண்டும்.

பாதுகாப்பு முயற்சியில், முதலில் நான் குறிப்பிட்டதுபோல, எல்லா மாவட்டங்களிலும் இருக்கிற பாதுகாப்புக் குழுக்களிலே எல்லா சட்டமன்ற உறுப்பினர்களும் இடம் பெறும் அளவுக்கு, பொது மக்களோடு நெருங்கிப் பழகும் வாய்ப்பு அவர்களுக்கு இருப்பதால், பாதுகாப்பிற்கு என்று எடுக்கப்படுகிற பணிகளைச் சிறப்பாக்கும் வகையில் அமையும் அளவுக்கு ஏற்பாடு செய்யப்படுதல் வேண்டும். போர்க் காலத்திலே கட்சி மாச்சரியங்களுக்கு இடம் இல்லாமல், விருப்பு வெறுப்புகளுக்கு இடம் இல்லாமல், எல்லோரும் பணிகளை ஏற்றுச் செய்ய முன் வருதல் வேண்டும். ஆளும் கட்சி, எதிர்க் கட்சி என்கின்ற நிலை இல்லாமல், போர்க்காலத்திலே கட்சிச் சார்பற்ற பொது அரசு அமைய வேண்டும் என்கிற கருத்து இருந்தாலும், அப்படிப்பட்ட நிலைமை இப்போது ஏற்படாமல் இருந்தாலும், ஆளும் கட்சி எதுவாக இருக்கிறது என்பது இல்லாமல், போர்க்காலத்தில் எல்லோரும் பொது உணர்வோடு எப்படி பணிகளை ஆற்றவேண்டுமோ, அந்த அளவுக்கு ஆற்றி, பொதுமக்களுடைய ஒத்துழைப்பு பூரணமாக இருக்கிறது என்று மாற்றார்களுக்கும், பகைவர்களுக்கும் தெரிவிக்கின்ற முயற்சிகளை ஊக்குவிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

வேளாண்மை பொறுத்தவரையில், உற்பத்தியைப் பெருக்குவதற்கான முயற்சிகள் எடுக்கப் படுகின்றன. பதினாயிரம் கிணறுகள் வெட்டப் போகிறோம், நீர்ப்பாசன வசதியைப் பெருக்க வாய்ப்பு இருக்கிறது என்று சொல்லப் படுகிறது.

November 1965] [திரு. இரா. நெடுஞ்செழியன்]

அதைக் குறித்து 2,000 கிணறுகள் உடனடியாக வெட்ட வாய்ப்பு அளிக்கப்பட்டிருக்கிறது. முன்னால் கிணறுகள் வெட்டுவதில் பல தவறுகள் ஏற்பட்டிருக்கின்றன என்று பல இடங்களில் எடுத்துச் சொல்லப் பட்டிருக்கிறது. அப்படிப் பட்ட தவறுகளை ஆராய்ந்து, மீண்டும் அப்படிப் பட்ட தவறுகள் ஏற்படாமல், கண்காணிப்புச் செய்தால் தான், அந்த நோக்கம் சிறந்த முறையில் நிறைவேறும். அந்த முறையில் பணியாற்றி அரசு குறைப்பாடுகள் வராமல் பாதுகாப்பதன் மூலம்தான் அந்த நோக்கத்தை சிறப்பான முறையில் நிறைவேற்ற முடியும். எந்த வகையில் பணியாற்றவேண்டும் என்பதை மன்ற உறுப்பினர்கள் தெளிவாகச் சொல்லியிருக்கிறார்கள். அத்தகைய கருத்துக்களை ஆராய்ந்து, அதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டும் என்று கனம் முதல் அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொண்டு என் உரையை முடிக்கிறேன். வணக்கம்.

*** கனம் திரு. எம். பக்தவத்சலம்** : கனம் சபாநாயகர் அவர்களே, இந்த விவாதம் சிறிது விரிவாகவே நடந்தது. சட்ட மன்ற விதிகளுக்குப் புறம்பாகக்கூட பல விஷயங்களைப் பற்றி கனம் உறுப்பினர்கள் பேசினார்கள். சட்ட மன்ற விதிகளின்படி, அப்ரோப்ரியேஷன் மசோதா பற்றி, உபமானியங்கள் பற்றிப் பேசவேண்டும். அதில் சம்பந்தப்பட்ட செலவினங்கள் பற்றிப் பேசவேண்டும். அதில் சேர்க்கப் படாத செலவினங்கள் பற்றியோ, சர்க்காருடைய கொள்கையைப் பற்றியோ கூட பேசக்கூடாது என்று விதி குறிப்பிடுகிறது. இருந்தாலும், இப்பொழுது இருக்கும் நிலையில் அங்கத்தினர்களுக்கு கருத்துக்கள் இருக்கின்றன, அந்தக் கருத்துக்களை தெரிந்து கொள்ள அரசாங்கத்திற்கும் ஆவல் இருக்கிறது. எல்லோருடையதும் ஒரே குரல்; எல்லோர் மனமும் ஒரே விதம்; எல்லோர் சிந்தனையும் ஒரே விதமாக இருக்கிறது; உறுதிகூட இருக்கிறது. நாட்டின் பாதுகாப்பில் தான் நம் எல்லோருடைய கவனமும் செல்லுகிறது. பாதுகாப்பை மேலும் வலுப்படுத்தும் வகையில் பல கருத்துக்கள், கொள்கை அளவில் கூட, கூறினார்கள். அது சற்று விவாதத்திற்குப் புறம்பானது என்று ஆட்சேபிப்பதற்கில்லை. அந்த வகையில் உறுப்பினர்கள் பல சீரிய கருத்துக்களைத் தெரிவித்தார்கள். கனம் எதிர்க் கட்சித் தலைவர் வரி உயர்வைப் பற்றிக் குறிப்பிட்டார்கள். வரி உயர்வின் விளைவுகளைக் கவனிக்க வேண்டியதுதான். ஆனாலும், ஒரு விஷயம் கனம் அங்கத்தினர்கள் ஒப்புக்கொள்ளுவார்கள். தவிர்க்கக் கூடாதது ஏற்பட்டுவிடுகிறது. உலக சரித்திரத்தைப் பார்க்கலாம். உலக நாடுகளின் போர்ச் சரித்திரத்தைப் பார்க்கலாம். எந்த சரித்திரத்தையும் பார்க்கலாம். போர் என்று வந்துவிட்டால், எதிர்பாராத செலவினங்கள் ஏற்பட்டுவிடுகின்றன. அவ்வளவு செலவுகளை ஏன் செய்யவேண்டும் என்று யாரும் சொல்வதில்லை. விரயம் ஆகக் கூடாது. ஆனால் போர் முனையில் விரயம் தவிர்க்க முடியாதது தான், நாட்டைப் பாதுகாக்க வேண்டும், என்ன ஆனாலும் சரி; உயிரைவிட வேறு என்ன பெரிது? ஆனால் உயிரினும் அது பெரிது; இன்றைக்கு வரி போடுகிறோம். சமாளிக்கிறோம். உயிரையே கொடுக்கும் போது, பணம் என்ன, சம்பாதித்துக் கொள்ளலாம். என்ன செலவானாலும்,

பாதுகாப்பைப் பலப்படுத்தியே ஆகவேண்டும். ஆகவே, நாட்டிலே இப்படி ஒரு விபரீத நிலைமை ஏற்பட்டு, நாட்டைப் பாதுகாக்க வேண்டும் என்று ஏற்படும்போது, பல வகையில் நிதி திரட்டுகிறோம். வரி உயர்வே தான் வழி என்று சொல்வதற்கில்லை. சிக்கனம் ஒன்று; மக்கள் தாங்களாகவே கொடுப்பது, கடனாகக் கொடுப்பது, வரி உயர்வு, அதையும் மக்களாகவே கொடுப்பது, இப்படி பல வகைகளில் வருவாயைத் தேட வேண்டியிருக்கிறது. ஒன்று கூற விரும்புகிறேன். வரி உயர்வினால் விலைவாசி ஏறுமோ என்கிற கவலை இருக்கிறது. அது ஒரு பிரச்சினைதான். அதில் தொடர்ந்து கவனம் செலுத்த வேண்டும். ஆனாலும், இந்தப் போர் நிலையில், ஓரளவு திருப்தி அளிப்பது என்னவென்றால், போர் நிலைமை ஏற்பட்டும், விலைவாசிகள் சாதாரணமாக எதிர்பார்க்கும் அளவில் ஏறாமல் இருந்திருக்கின்றன. சில இடங்களில் ஏறியிருக்கிறது என்று சொல்லுகிறார்கள். ஆனால் மொத்தத்தில் எதிர்பார்க்கும் அளவுக்கு ஏறவில்லை என்பதை மனத்தில் வைத்துக்கொண்டால், கூடியவரையில், கேட்டுக்கொண்ட அளவுக்கு இல்லையென்றாலும், போதிய அளவு இல்லையென்றாலும், கணிசமான அளவில் ஒத்துழைப்பு இருந்திருக்கிறது.

மற்றொன்று, வரி இனங்கள் வரி உயர்வு, உப மானியங்கள் கேட்கிறோம் என்றால், இப்பொழுது இருக்கும் நிலையில், உடனடியாகப் பலன் அளிக்கும் திட்டங்களுக்குத்தான் கேட்கிறோம். விவசாயத்தை எடுத்துக் கொண்டால், விவசாயத்தில் பூரா கவனமும் செலுத்துகிறோம். உடனடியாகப் பலன் அளிக்கும் திட்டங்களுக்குச் செலவு செய்து திட்டங்கள் பலன் அளிக்கும் என்றால் தவறுகள் தவிர்க்கப்பட்டு, எந்த அளவுக்கு எதிர்பார்க்கிறோமோ, அந்த அளவுக்கு இல்லாவிட்டாலும், கூடியவரையில் தவிர்க்க வேண்டும் என்று செயல்பட்டு, செய்யவேண்டிய காரியங்களைச் செய்தே ஆகவேண்டும். அப்படிப்பட்ட திட்டங்களையே நிறைவேற்ற முற்படுகிறோம். அதே சமயத்தில் சிக்கனத்தையும் கையாளும் வகையில் செய்கிறோம். சிக்கனத்தோடுகூட, செலவைக் குறைத்துக்கொள்ளும் வகையிலும் செயல் படுகிறோம். ஆனாலும், நிர்வாகத் தேவைகளைப் பூர்த்தி செய்தே ஆகவேண்டும். சிக்கனத்தால் நிர்வாகத் திறன் பாதிக்கப் படக்கூடாது. அப்படிப் பாதகம் இல்லாமல், எவ்வளவு தூரம் மாற்றி அமைக்கலாம் என்பதை ஆலோசிக்க என்று 'எகானமி கமிட்டி' அமைக்கப்பட்டிருக்கிறது. அதன் பலன் தெரிய கொஞ்சநாள் ஆகும். இப்பொழுது 57,000 ரூபாய் கேட்டிருக்கிறது. மதிப்பீடுதான். அதற்காக 'எகானமி' என்று போட்டுவிட்டு, தவிர்க்கக் கூடாத செலவை ஒன்றும் செய்யாமல் இருப்பதற்கில்லை. அதையெல்லாம் பற்றி பின்னால்தான் இறுதியாகக் கூறமுடியும். அவர்கள் ஒவ்வொரு இலாகாவாக எடுத்து ஆராய்ந்து, எப்படி மாற்றுவது, எந்த முறையில் இருக்கிறது என்பதையெல்லாம் ஆராய்ந்து, அதன்பிறகு முடிவு செய்யவேண்டும். அடுத்த கூட்டத்திலேயே என்ன முடிவு என்று சொல்லவேண்டும் என்று எதிர்க்கட்சித் தலைவர் எதிர்பார்க்கிறார்கள். அது சாத்தியம் என்று நான்

நினைக்கவில்லை. அவ்வளவு அவசரப்பட்டுப் பயன் இல்லை. இறுதியான முடிவு எடுத்தவுடனே, சட்டமன்றம் கூடும்போது தெரிவிக்கப்படும்.

சாதாரண விழாக்கள், நிகழ்ச்சிகள், கூடியவரைக்கும் சிக்கனமாக நடத்தவேண்டும், செலவைக் குறைக்கவேண்டும், என்பது தான் அரசாங்கத்தின் நோக்கம். நேற்றுகூட, ரூ. 22 லட்சம் செலவில் நூலகத்திற்காகக் கட்டடம் கட்டி சென்னை மவுண்ட் ரோடில் கவர்னர் அவர்கள் திறந்தார்கள், இருந்தாலும் அது வெறும் கட்டடந்தான். நூலகக் குழுவினர் இந்த நெருக்கடி நிலையை உணர்ந்து, சிக்கனத்தின் அவசியத்தை உணர்ந்து, ஆடம்பரம் இல்லாமல், 'ஆஸ்டிரிடியைக்' கையாண்டு இருக்கிறது. இந்த நெருக்கடி இல்லையென்றால் செலவு செய்திருப்போம், அந்தப் பணத்தைப் பாதுகாப்பு நிதிக்குக் கொடுக்கிறோம் என்று சொல்லி, அவர்கள் ரூ. 10,000-க்கு என்னிடம் செக் கொடுத்தார்கள். இந்த முறையே எங்கும் கையாளப்படுகிறது. அரசாங்கம் நடத்துகிற நிகழ்ச்சிகளில் மட்டுமல்ல, தனியார் நடத்துவதிலும் கூட கையாளப்பட்டுவருகிறது.

கட்டடம் சில கட்டப்படுகிறதைப் பற்றி இந்த விவாதத்தைத் துவக்கிவைத்த கனம் உறுப்பினர் புலவர் கோவிந்தன் அவர்கள் குறிப்பிட்டார்கள். சில கட்டடங்கள் தவிர்க்கக் கூடாத கட்டடங்களாக இருக்கின்றன. சில அரைகுறையாகக் கட்டிவிட்டு நின்று இருக்கின்றன. அரைகுறையாகக் கட்டியதை அப்படியே நிறுத்திவிடுவது நல்லதா என்று ஆராயவேண்டும். பொருளாதாரப்படியும் அது நல்லதல்ல. இன்றைக்குக் காதிக்குக் கட்டடம் கட்டுவதைப் பற்றிச் சொன்னார்கள். அது கட்டி நிறுத்தி வைத்திருந்தது. இதுவரையில் செலவு செய்தது விரயம் ஆகிவிடுமோ என்று பரிசீலனை செய்து, அப்படி ஏற்படுவதைத் தவிர்க்கவேண்டும் என்ற நிலை ஏற்படும் என்றால், அந்தக் கட்டடத்தை, அரைகுறையாக இருப்பதை, முடிப்பது பொருளாதார வகையிலும் நல்லது என்றால், அம்மாதிரி முடிவுகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

சட்ட மன்ற உறுப்பினர்களுக்கு வசதி அளிக்க வேண்டியது அவசியம். அவர்களுக்கு ஹாஸ்டல் கட்டடம் ஒன்று கட்ட வேண்டியது மிகவும் அவசியம். ஹாஸ்டல் கட்டட வேலை துவக்கப்பட்டிருக்கிறது. சட்ட மன்ற உறுப்பினர்களுக்கு வேண்டிய வசதிகளில் ஹாஸ்டல் கட்டடம் தவிர்க்கக் கூடாத ஒன்று என்பது என்னுடைய கருத்தாகும். மற்ற எந்தப் பொதுவான கட்டடங்கள் கட்டுவதை நிறுத்திவிட்டாலும், இதை நிறுத்துவதற்கில்லை. ஓரளவு வேலை துவக்கப் பெற்றிருக்கிறது. அதைக் கட்டி முடித்தாக வேண்டும். நெருக்கடி நிலையிலே கூட, சட்ட மன்ற உறுப்பினர்கள் முக்கியமான பணிகளை நிறைவேற்ற வேண்டியிருக்கிறது. குறைந்தபட்ச வசதிகளாவது அவர்களுக்குச் செய்து கொடுக்க வேண்டியிருக்கிறது. இந்த மன்ற உறுப்பினர்கள் அதிக வசதிகளைக் கோர மாட்டார்கள். அந்த வகையிலே தான் சட்ட மன்ற உறுப்பினர்களுக்கான ஹாஸ்டல் கட்டுவது என்று,

அந்த வேலையை எடுத்துக் கொண்டிருக்கிறோம். ஆனால், இப்பொழுதே கூட, கனம் சட்ட மன்ற உறுப்பினர்கள், "எங்களுக்கு இது வேண்டாம், நெருக்கடி நிலை தீரட்டும், வேலையை நிறுத்தி விடுங்கள்" என்று சொன்னால், இந்த நிலையிலே கூட வேலையை நிறுத்துவதற்குத் தயாராயிருக்கிறோம். அதை நான் சட்ட மன்ற கனம் உறுப்பினர்களுக்கே விட்டுவிடுகிறேன்.

"ஹோம் கார்ட்ஸ்" பற்றி இங்கே குறிப்பிடப்பட்டது. "ஊர்க்காவல் படை", "அகப் படை" என்றெல்லாம் கனம் எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் குறிப்பிட்டது, இந்த ஹோம் கார்ட்ஸைப் பற்றித்தான் என்று நான் நினைக்கிறேன். ஹோம் கார்ட்ஸை நாம் சற்றுக் குறைவாகத் தான் வைத்திருக்கிறோம். இதைப் பற்றி இரண்டு மூன்று நாட்களுக்கு முன்பு டெல்லியில் மற்ற மாநில முதலமைச்சர்களோடும், உள்நாட்டு அமைச்சரோடும் கலந்து பேசினோம். வேறு சில மாநிலங்களில் இந்த ஹோம் கார்ட்ஸை அதிகமாக வைத்திருக்கிறார்கள். பம்பாய் எல்லைப்புற மாநிலமாக இல்லையென்றாலும், அவர்கள் நீண்ட காலமாகவே அதைப் பெரிய அளவில் வைத்துக் கொண்டிருக்கிறார்கள். எல்லைப்புற மாநிலங்களில் அதை விரிவுபடுத்த வேண்டியிருக்கிறது. நம்முடைய திட்டம், நாற்பதாயிரம் பேர்கள் வைத்துக் கொள்ள வேண்டும் என்பது. இப்பொழுது எண்ணாயிரம் பேர்கள் தான் இந்தப் படையில் வைத்துக் கொண்டிருக்கிறோம். இதைக் கொஞ்சம் விரிவுபடுத்தலாம்; அதிகமாக விரிவுபடுத்த வேண்டிய அவசியம் இல்லை. காய் கறிகள் பயிரிடும் வேலையில் மக்களை ஊக்குவிக்கும் பணியில் அவர்களை ஈடுபடுத்தலாம் என்ற கருத்து சொல்லப்பட்டது. அதையெல்லாம் அவர்கள் கொஞ்சம் கவனிப்பார்கள். ஹோம் கார்ட்ஸின் பொதுவான வேலை, போலீஸ்காரர்களுக்கு உதவியாக இருப்பது என்பது. போலீசார் கூட போர் முனைக்கு அனுப்பப்படுகிறார்கள். இங்கிருந்து போர் முனைக்குப் போன ஒருவர், ஆகாயப் படைத் தளத்தைக் காவலிட்டுக்கொண்டிருந்தவர், இறந்துவிட்டார். அவருடைய விதவைக்கு ஏதோ உதவி அளித்திருக்கிறோம். அப்படி, போலீசாருடைய சேவை வேறு இடத்தில் வேண்டியிருந்தால், அந்த வேலையைப் பார்ப்பதற்குத் தான் ஹோம் கார்ட்ஸ் தேவைப்படுகிறார்கள். அதே மாதிரி, மாணவர்கள் என்.ஸி.ஸி.-இல் சேர மிகவும் ஆவல் உள்ளவர்களாக இருக்கிறார்கள். "எங்களால் ஆனதை நாங்கள் செய்கிறோம்" என்று மாணவர்கள் மிகுந்த உற்சாகத்தோடு முன் வருகிறார்கள். இவர்களுக்கு என்ன வேலை அளிக்கலாம் என்பது பற்றியும் டெல்லியில் ஆலோசிக்கப்பட்டது. "மாணவர்களுக்கு ட்ராஃபிக் ரெகுலேஷன் வேலை கொடுக்கலாம்" என்ற ஒரு யோசனை டெல்லியில் கூறப்பட்டது. "அது ரொம்ப ஆபத்தானது" என்று ஒரு முதல் அமைச்சர் கூறினார்கள். என்னுடைய கருத்தும் அது தான் என்று நான் அங்கே சொன்னேன். மாணவர்களை ட்ராஃபிக் ரெகுலேஷன் வேலைக்கு அமர்த்துவது சரியல்ல. ஆசிரியர்களாயிருந்தால் அம்மாதிரி வேலை அளிக்கலாம். நான் அமெரிக்கா சென்றிருந்தபோது பார்த்தேன். ஆசிரியர் ஒருவர் ட்ராஃபிக்கை ரெகுலேட் பண்ணிக்கொண்டிருந்தார். "நீங்கள் போலீஸ்

காரரா ?" என்று கேட்டபோது, "நான் ஆசிரியர், விடுமுறையில் இந்த வேலையை எடுத்துக் கொண்டிருக்கிறேன்" என்று அவர் சொன்னார். அம்மாதிரி ஆசிரியர்களை வேண்டுமானால் இந்த வேலைக்கு வைக்கலாமே தவிர, மாணவர்களை வைக்க முடியாது. அவர்களுக்கு வேறு வேலை இருக்கிறது. "நாட்டின் பாதுகாப்பை முன்னிட்டு நாங்கள் எந்த வேலையையும் செய்யத் தயாராயிருக்கிறோம்" என்று மாணவர்கள் கூறுகிறார்கள். அவர்களை எந்த வகையிலே உபயோகப்படுத்த முடியுமோ, அந்த வகையிலே உபயோகப் படுத்தலாம்.

ஹோம் கார்ட்ஸ் என்று இருக்கிறது. வில்லேஜ் வாலண்டியர் ஃபோர்ஸ் என்று இருக்கிறது. இதையெல்லாம் தமிழிலே ஒவ்வொன்றையும் பிரித்துச் சொல்வதற்குத் தான் தகுந்த சொற்களைத் தேட வேண்டியிருக்கிறது. வில்லேஜ் வாலண்டியர் ஃபோர்ஸ் என்ற ஒன்று இருக்கிறது. கடற்கரையோரங்களையெல்லாம் அவர்கள் தான் பாதுகாக்கிறார்கள். சமீபத்தில் கீழ்க் கடற்கரை பூராவும் இருட்டடிப்பு இருந்தது. இராமநாதபுரம், கன்னியாகுமரி மாவட்டங்களில் கடலோரப் பகுதிகளிலெல்லாம் ஊர்க் காவல் படையினர் இரவு பூராவும் காவல் காத்தார்கள். மீனவர்களும் மற்றவர்களும், "எங்களுக்கு அலவன்ஸ்கூட வேண்டியதில்லை" என்று சொல்லிக் காவல் காத்து வந்தார்கள். அவர்களே மண்ணெண்ணெய் வாங்கி ஊற்றி, விளக்குகளை ஏற்றி வைத்துக்கொண்டு காவல் காத்தார்கள். ஊர்க்காவல் படை என்பது சாதாரணமாக ஊர்களில் இருக்கக் கூடியது தான். "அர்பன் ஹோம் கார்ட்ஸ்", "ரூரல் ஹோம் கார்ட்ஸ்" என்று இரண்டு விதமாக வைக்கவேண்டும் என்று டெல்லியில் ஒரு மாநில முதல் அமைச்சர் யோசனை சொன்னார். அது சரியல்ல. ஹோம் கார்ட்ஸ் எவ்வளவு பேர் வேண்டுமோ, அவ்வளவு பேர் வைத்துக் கொள்ளலாம். அவர்கள் செய்யக்கூடிய பணிகள் உண்டு. வில்லேஜ் வாலண்டியர் ஃபோர்ஸ் என்று ஒன்று இருக்கிறது. அது கிராமம் வரைக்கும் பார்த்துக்கொள்ளும். அவர்களுக்கு வேறு என்ன பணி அளிப்பது ? கிராம மக்களை உற்சாகப்படுத்தும் பணிகளை அவர்களுக்குக் கொடுக்கலாம். உணவு உற்பத்திப் பெருக்கத்திற்கான பணிகளில் அவர்கள் அதிகக் கவனம் செலுத்த முடியும். நகரங்களில் உள்ள ஹோம் கார்ட்ஸைப் பொறுத்த வரையில், அதை விரிவு செய்ய வேண்டுமா என்பது தொடர்ந்து அரசாங்கத்தின் கவனத்தில் இருக்கிற விஷயமாகும்.

இந்த விவாதத்தைத் துவக்கிய கனம் உறுப்பினர் புலவர் கோவிந்தன் அவர்கள், "தேர்தலுக்கு என்று எதற்காக இந்த நெருக்கடி நிலையிலே பணம் ஒதுக்குகிறீர்கள்" என்று கேட்டார்கள். தேர்தலுக்காகப் பணம் ஒதுக்கவில்லை. தேர்தலுக்கான வாக்காளர் ஜாபிதா தயாரிக்கிறோம். வாக்காளர் ஜாபிதா தயாரிப்பதெல்லாம் பூர்வாங்கமான வேலையாகும். இப்பொழுது உள்ள குறிப்பிட்டபடி, அதற்கு மாறுபாடான கருத்து எங்கும் இருப்பதாக நான் நினைக்கவில்லை. பொதுத் தேர்தல் 1967-இல் வருகிறது, அதையே நாங்கள் நினைத்துக் கொண்டிருக்கிறோம், அதற்காக

[திரு. எம். பக்தவத்சலம்] [11th November 1965

நாம் தயார் செய்கிறோம். கட்சி ரீதியில் தயார் செய்கிறோம் என்று கனம் உறுப்பினர் சொல்வாரானால், எங்கள் கட்சியைப் பொறுத்த வரையில் அதை நாம் ஒப்புக்கொள்ள முடியாது. தேர்தல் பற்றித் தான் எங்களுக்கு எப்போதுமே நினைப்பு என்பது இல்லை. தேர்தல் வரும்போது வரட்டும் என்று தான் இருக்கிறோம். ஆனால், நெருக்கடி வந்தது. அதன் காரணமாக, இப்பொழுது உப தேர்தல் எதுவும் கூடாது என்று சொல்லியிருக்கிறோம். அரசாங்கமும் சொல்லியிருக்கிறது. கட்சிகளும் ஏற்றுக் கொண்டிருக்கின்றன. இப்பொழுது மக்களுடைய கவனத்தை மாற்றக் கூடாது என்ற அடிப்படையிலே தான் மக்களிடத்திலே போய்ப் பிரசாரம் செய்து ஓட்டு வாங்கும் தேர்தல் நிறுத்தப்பட்டிருக்கிறது. அது முனிசிபல் தேர்தலாக இருந்தாலும், வேறு ஸ்தல ஸ்தாபனத்திற்கான தேர்தலாக இருந்தாலும், சட்ட மன்றம், பாராளுமன்றம் ஆகியவற்றிற்கான உப தேர்தலாக இருந்தாலும், இவையெல்லாம் நிறுத்தப்பட்டிருக்கின்றன. மக்களிடத்திலே போய் ஓட்டு கேட்டு வாங்க வேண்டிய நிமித்தம் இல்லாத நிலையில் தேர்தல்கள் வரும். பஞ்சாயத்து யூனியன் தலைவர் தேர்தல் அல்லது பஞ்சாயத்து யூனியன் துணைத் தலைவர் தேர்தல் என்று வரும். இங்கிருந்து பாராளுமன்றத்திற்கும் மேல் சபைக்கும் பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுக்கக் கூடிய தேர்தல் வர இருக்கிறது. இதெல்லாம் நிறுத்த வேண்டிய அவசியம் இல்லை என்பது தான் இப்போதைய கருத்தாகும். ஐந்தாண்டுகளுக்கு ஒரு முறை வரும் பொதுத் தேர்தலைப் பொறுத்த வரையில், இப்பொழுது இருக்கும் கருத்தை நான் தெரிந்து கொண்ட வரையில், அதைத் தள்ளிப் போடுவது சரியல்ல என்பது தான். தள்ளிப் போட வேண்டும் என்ற கருத்து சிலருக்கு இருக்கலாம். ஆனால், அரசாங்கத்தின் கருத்து அது அல்ல. 1967-ம் ஆண்டில் தேர்தல் வரும். தேர்தல் நடக்கட்டும். அதை ஏன் நாம் நிறுத்த வேண்டும்? அதுவரைக்கும் நெருக்கடி நிலை இருக்காது என்றே நாம் நம்புவோம். அதற்குள் நெருக்கடி நிலை தீர்ந்து விடும் என்ற நம்பிக்கை நமக்கு இருக்கிறது. நமக்குப் பூரணமான வெற்றி ஏற்படும் என்ற நம்பிக்கையும் நமக்கு இருக்கிறது. ஒரு வேளை அந்தத் தேர்தல் வரும்போது, சென்ற செப்டம்பர் 5-ந் தேதியிலிருந்து 22-ந் தேதி வரைக்கும் நடந்ததே அப்படி மும்முரமான சண்டை வந்தால், அது வேறு விஷயம். அது விபரீதமான நிலை. அதை அப்பொழுது பார்த்துக் கொள்ளலாம். இப்பொழுதிருந்தே வாக்காளர் ஜாபிதா தயார் செய்யத் தான் வேண்டியிருக்கிறது. தேர்தல் தள்ளிப்போடப்பட வேண்டிய நிலை எப்பொழுதோ வரலாம் என்று நினைத்துக்கொண்டு இப்பொழுது ஒன்றும் செய்யாமல் கையைக் கட்டிக்கொண்டிருப்பதற்கில்லை. இப்பொழுது நாம் என்ன செய்ய வேண்டுமோ அதைச் செய்யத் தான் வேண்டும். இப்பொழுது வாக்காளர் ஜாபிதா தயார் செய்யும் முயற்சியில் ஈடுபடாமலிருந்துவிட்டு, தேர்தல் வருகிற சமயத்தில் தேர்தல் ஜாபிதா தயாராகாமலிருந்தால், அப்பொழுதும் அரசாங்கத்தின் மீது குற்றச்சாட்டு வரக்கூடும். நெருக்கடி நிலையிலே நாம் விசேஷ கவனம் செலுத்துகிறோம். பாதுகாப்பு முயற்சியிலே முழுக் கவனம் செலுத்துகிறோம்

11th November 1965] [திரு. எம். பக்தவத்சலம்]

என்றாலும், இதெல்லாம் நடப்பது நடந்துகொண்டு தான் இருக்கும். இதெல்லாம் தவிர்க்க முடியாதவை. நிர்வாகத் துறையிலே இதெல்லாம் செய்யக்கூடிய வகையிலே தான், தேர்தலுக்கு என்று நாம் இந்த உப மானியக் கோரிக்கையில் பணம் கேட்கிறோம்.

டிஸ்ட்ரிக்ட் கெஸட்டியர் மீண்டும் புதுப்பிக்கப்பட வேண்டும் என்ற எண்ணம் அரசாங்கத்திற்கு இருக்கிறது. டிஸ்ட்ரிக்ட் கெஸட்டியரில் பல அறிய விஷயங்களைத் தெரிந்துகொள்ள முடியும். அந்த அருமை, புலவர் அவர்களுக்குத் தெரியும். அதனால் தான் அவைகளை மீண்டும் புதுப்பிக்க வேண்டும் என்று அவர்கள் சொன்னார்கள். அது கவனிக்கப்பட்டுத் தான் வருகிறது என்று நான் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

கனம் உறுப்பினர் புலவர் கோவிந்தன் அவர்கள், தஞ்சை பெரிய கோயிலைப் பற்றிச் சொன்னார்கள். அங்கு ஏதோ நல்ல அஜந்தா பாணியில் சித்திரம் இருக்கிறது, அதை வெள்ளையடித்து மூடிவிடுகிறார்கள் என்று சொன்னார்கள். யாரோ எழுதினார்கள் என்று சொன்னார்கள். யார் எழுதியிருந்தாலும் சரி—கனம் உறுப்பினர் புலவர் கோவிந்தன் அவர்களை நான் கேட்டுக்கொள்கிறேன்—அவர்கள் தயவு செய்து தஞ்சைக் கோயிலுக்குச் சென்று அந்த ஓவியத்தைப் பார்க்க வேண்டும். அந்த ஓவியத்தைப் பார்க்க வேண்டுமென்றால், சாமியைப் பார்க்காமல் போக முடியாது. சாமியைப் பார்க்கக் கூடாது என்று அவர் கருதினால், கண்ணை மூடிக்கொண்டே சென்று, சாமிக்கு எதிராகப் போய்த் திரும்பி, அந்த ஓவியத்தைப் பார்த்து வரவேண்டும். அந்த ஓவியத்தைப் பார்ப்பதற்கு முன் சாமியைப் பார்க்க வேண்டியிருக்கும். சாமியைப் பார்க்க வேண்டாம் என்றால், அது வேறு விஷயம். சாமியைப் பார்த்தாலும் ஒன்றும் தோஷம் இல்லை. பார்க்க வேண்டாமென்றால், சற்று நேரம் கண்ணைக் கட்டிக்கொண்டாவது போய், சாமியைக் கடந்து சென்று, ஓவியத்தைப் பார்க்க வேண்டும் என்று நான் அவர்களைக் கேட்டுக் கொள்ளுகின்றேன். நான் சில நாட்களுக்கு முன்பு அதைப் பார்த்திருக்கிறேன்.

புலவர் கா. கோவிந்தன்: அதைப் பார்த்தவர் யாரோ ஒருவர் அல்லர். அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் வரலாற்றுப் பேராசிரியராக இருந்தவர், நம்முடைய தமிழ்நாட்டில் துரதிருஷ்டவசமாக இளமையிலேயே இறந்துவிட்ட மு. கோவிந்தசாமி என்பவர் அவர்கள் கண்டுபிடித்தது. நானும் தஞ்சை பெரிய கோயிலுக்குப் போயிருக்கிறேன், ஓவியங்களையும் வண்ணங்களையும் பார்த்து வந்திருக்கிறேன் என்ற செய்தியைக் கனம் முதல் அமைச்சர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

கனம் திரு. எம். பக்தவத்சலம்: அதெல்லாம் எனக்குத் தெரியாது; நான் பார்த்ததைச் சொல்லுகிறேன். சாமியைப் பார்க்காவிட்டாலும் ஓவியத்தைப் பார்க்க வேண்டும். உள் பிராகாரத்தில் விஜய நகர சாம்ராஜ்ய காலத்தில் ஓர் ஓவியம் வைத்தார்கள் விஜய நகர ஓவியம்; முதலில் அந்த இடத்தில் 12-30 p.m.

இருந்தது சோழர் பெயின்டிங் தான். அவை ரொம்ப அற்புதமாக, அழகு பொருந்தியதாக இருக்கிறது. அந்த அருமையை விஜய நகர மன்னர்கள் ஏனோ காணவில்லை. விஜய நகர மன்னர் பரம்பரையில் வந்தவர்கள் யாராவது இருந்தால் என்னிடம் வருத்தம் கொள்ளக் கூடாது. (சிரிப்பு) யாராவது இருப்பார்கள். சோழர் காலத்து ஓவியங்களின் மீது ஒருவகையான காரையைப் பூசிவிட்டு—விஜய நகர ஓவியங்களை எழுதி வைத்துவிட்டார்கள். புதை பொருள் இலாகாவினர் தான் இதைக் கண்டு பிடித்தார்கள். இப்போது அந்தக் காரைகள் எல்லாம் பெயர்த்து எடுக்கப்பட்டு விட்டது. இப்போது இருப்பது அசல் சோழர் பெயின்டிங் தான். வெளிநாட்டில் இருந்தெல்லாம் கூட வந்து பார்க்க ஆசைப்படுகிறார்கள். அப்படி வந்து பார்க்கத்தான் வசதி எப்படிச் செய்வது என்று நானும் யோசித்துக் கொண்டிருக்கிறேன். காரணம் சாமியைத் தாண்டித்தான் போகவேண்டும். சாமியைப் பார்க்க விரும்பாதவர்கள் எப்படிப் போவது? அந்நிய மதத்தினர்கள் எப்படிப் போவது? இதுபற்றி எல்லாம் நானும் ஆலோசித்துக் கொண்டிருக்கிறேன்.

ஆசிரியர் பயிற்சிப் பள்ளிகளுக்கு மாணவர், மாணவிகளைத் தேர்ந்தெடுப்பதற்கு ஒரு கமிட்டி போடுவது பற்றிச் சொன்னார்கள். உத்தியோகத்தில் இருப்பவர்களுக்கு அரசியல் இல்லை என்று சொல்லலாம். சில ஆண்டுகளுக்கு முன் இருந்தது. இப்போது இல்லை. என்றாலும் உத்தியோகப் பற்றற்றவர் ஒருவரும் இருக்கவேண்டும் என்பது தான் யோசிக்கப்பட்டது. அந்த வகையில் போட்டு இருக்கிறோம்.

கனம் உறுப்பினர் திரு. கமலநாதன் அவர்கள் பேசுகின்ற போது நெருக்கடி நிலைமையில் பஞ்சாயத்து யூனியன்களில் எதற்காக ஏராளமான சிப்பந்திகளை வைத்துக் கொண்டிருக்க வேண்டும் என்றார். என்னுடைய கருத்தும் சிக்கன முறையைக் கையாள தேவைப்படாத உத்தியோகங்களை எடுத்துவிட வேண்டும் என்பது தான். இதை எல்லாம் மாற்றி அமைக்க வேண்டும். முன்பு கம்யூனிடி டெவலப்மெண்டாக இருந்தது. இப்போது பஞ்சாயத்து யூனியன்களே அந்தப் பொறுப்பை ஏற்று இருக்கின்றன. நான்கு நாட்களுக்கு முன்பாக டெல்லியிலும் கூட பிரதம மந்திரி அவர்கள் இதைப்பற்றித்தான் பிரஸ்தாபித்தார்கள். மத்திய அரசாங்கத் துறையிலும், மாநில அரசாங்கத் துறையிலும் சிக்கன முறையைக் கையாள தேவையற்ற பதவிகளை எடுத்துவிடவேண்டும் என்பது தான் பரிசீலனை செய்யப்பட்டு வருகிறது. இதை எல்லாம் பரிசீலனை செய்து கவனிக்க வேண்டிய விஷயம் என்று நான் கூறுவேன்.

மற்றொன்று. கனம் அங்கத்தினர் அவர்கள் சேலம் மாவட்டத்தை கிருஷ்ணகிரி, தர்மபுரி என்று இரண்டாகப் பிரித்தீர்களே, தர்மபுரியில் கட்டடம் கட்டுகிறார்கள், கிருஷ்ணகிரியில் ஒன்றும் [illegible] இல்லையே என்று சொன்னார்கள். தர்மபுரி, ஜில்லா தலைநகரம்

அங்கும் கூட மிகவும் அவசியமான கலெக்டர் காரியாலயம், சூப்பிரண்டெண்டெண்ட் ஆப் போலீஸ் காரியாலயம் ஆகியவை பற்றித் தான் கவனம் செலுத்தப்படுகிறது. நீதி பரிபாலனத் தலைமை இடம் கிருஷ்ணகிரியில் இருக்கிறது. யாராவது பொருத்தமான கட்டடம் கோர்ட்டுக்காகக் கொடுத்தால் அங்கே கோர்ட்டை உடனடியாக வைத்துவிடலாம். அதற்காக இப்போது உடனே கட்டடம் கட்டுவது என்பது முடியாது. அதுவரை சேலத்தில் தான் இருக்கவேண்டும். தவிர்க்க முடியாத காரியங்களைத் தான் இப்போது செய்கிறோம். அக்கறையுள்ளவர்கள் கிருஷ்ணகிரியில் கோர்ட்டுக்கான கட்டடம் கொடுத்துதவ முன் வரலாம்.

அடுத்து நாங்கள் லட்சம் ரூபாய் கொடுத்தோம், 75 லட்சத்திற்குக் கட்டடம் கொடுத்தோம், அங்கே கல்லூரி ஏற்படுத்தப்படவில்லையே என்று கனம் அங்கத்தினர் குறிப்பிட்டார். நான் அவர்களிடத்தில் சொன்னது 5 லட்சம் கொடுத்தால் கல்லூரி ஏற்படுத்தலாம் என்பது தான். எதிர்க்கட்சித் தலைவர் குறிப்பிட்டு, பாராட்டியது போல ஆரம்பக் கல்வியாக இருந்தாலும், உயர்தரக் கல்வியாக இருந்தாலும், கல்லூரிக் கல்வியாக இருந்தாலும் தவிர்க்க முடியாத செலவுகளைத்தான் செய்யக்கூடிய நிலையில் நாம் இருக்கிறோம். இவ்வளவு பணம் தாருங்கள் என்றால் அதைக் கொடுத்தால் உடனே அந்தக் காரியத்தைச் செய்து கொடுக்க வேண்டியது தான். சொன்னபடி எங்கே அவர்கள் பணம் கொடுத்திருக்கிறார்கள்? இதுபற்றி கனம் உறுப்பினர் திரு. கமலநாதன் அவர்கள் கொஞ்சம் முயற்சி எடுத்துக் கொள்ளவேண்டும். நாட்டின் பாதுகாப்புக்கு நிதி திரட்டுவதோடு கூட இதையும் கொஞ்சம் கவனிக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

கனம் உறுப்பினர் திரு. செல்வராஜன் அவர்கள் திருநெல்வேலி நிலைமையைப் பற்றிச் சொன்னார்கள். அந்த மாவட்டம் முக்கியமாகக் குறிப்பிடப்படவேண்டிய ஒன்று. அங்கு மழையே இல்லை. இப்போது பெய்த மழை கூட அங்கே பெய்யவில்லை. இதன் காரணமாக பல நிவாரண வேலைகள் அங்கே எடுக்கப்பட்டன. முன்பு எடுத்துக் கொண்டவை போல அல்ல.

'பவர் ட்ரில்'லைப் பற்றி திருமதி குழந்தையம்மாள் சொன்னார்கள். அது மிகவும் அவசியமானது. நானும் உணர்கிறேன். இது பற்றி டெல்லிக்குச் சென்றபோது கூட மத்திய அரசாங்கத்திடம் சொல்லிவிட்டு வந்தேன். அவர்கள் அந்நியச் செலாவணி நெருக்கடி காரணமாக வெளிநாட்டில் இருந்து இறக்குமதி செய்வது சங்கடமாக இருக்கிறது. இருந்தும் இந்த நாட்டிலேயே உற்பத்தி செய்யக்கூடிய பவர் ட்ரில்களை சப்ளை செய்கிறோம் என்றார்கள். நான் பிரதம மந்திரி அவர்களிடத்தில் கூடச் சொன்னேன், 'உங்களுக்கு பவர் ட்ரில்களை இறக்குமதி செய்யத் தேவைப்படுகிற அந்நிய செலாவணியைத் தங்கமாகவே கொடுக்கிறோம்' என்பதாக. கனம் அங்கத்தினர் அதற்குத் தேவையான பணத்தை தங்கமாகவே தருவதாகச் சொன்னது மிகவும் மகிழ்ச்சி. அதைவிட அவ்வளவு தங்கம் அவர்கள் வைத்துக் கொண்டிருக்கிறார்களே என்பது பாராட்டப்பட வேண்டிய விஷயம். பவர் ட்ரில்

[திரு. எம். பக்தவத்சலம்] [11th November 1965

கொடுத்தால் தான் தங்கம் தருவோம் என்று அவர்கள் சொல்லக் கூடாது. தங்கம் கொடுத்தாலும் கொடுக்காவிட்டாலும் நாங்கள் பவர் ட்ரில் தருவோம். அரசாங்கத்தை அவர்கள் நம்பலாம். ஆகவே இப்போது அவர்கள் பிரதம மந்திரி அவர்கள் குறிப்பிட்டதைப் போல ஏராளமான தங்கத்தை வாங்கித் தரவேண்டும். இப்போதும் அவர்கள் கொடுக்கிறார்கள். ஆண்கள் மட்டும் அல்ல. பெண்களும் கொடுக்கிறார்கள். இன்னும் அதிகமாக வாங்கித் தருவதற்கு கனம் அங்கத்தினர் முயற்சி எடுத்துக் கொள்ள வேண்டும்.

முக்கியமாக இன்று எனக்கு ஒரு அதிருஷ்ட நாள் என்று தான் சொல்வேன். கனம் உறுப்பினர் திரு. மதியழகன் அவர்கள் என் பேரில் குற்றஞ் சாட்டாமல் பேசினார்கள். அதோடு கொஞ்சம் பாராட்டிக் கூடப் பேசினார்கள். இன்றைக்கு நான் எழுந்த வேளை—விழித்த முகம்—சட்டசபைக்குள் நுழைந்த நேரம் நல்ல நேரம் என்று தான் நினைக்கிறேன். (சிரிப்பு) அவர்களுக்கு என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஆனால், கனம் உறுப்பினர் அவர்கள் ஒரு புதிய கருத்தைச் சொன்னார்கள். அதற்கு முன் பேசிய கனம் உறுப்பினர் திரு. கிருஷ்ணமூர்த்தி அவர்களும் அந்தக் கருத்தைச் சொன்னார்கள். கனம் உறுப்பினர் திரு. மதியழகன் சொன்னது—ஒரு புதிய தலைமை வேண்டும். நாட்டில் இருக்கிற நிலைமையைச் சமாளிப்பதற்கு ஒரு புதிய தலைமை வேண்டும் என்பது தான். அது தேசீய தலைமையாக இருக்கவேண்டும் என்று வருணித்தார்கள். இப்போது கட்சித் தலைமை இருக்கிறது. அது மாறி தேசீய தலைமையாக அது இருக்கவேண்டும் என்றார்கள். அது எப்படி வரும் என்று எனக்குப் புரியவில்லை. நானும் அதைப்பற்றி யோசித்துப் பார்த்தது உண்டு. எனக்குப் புரியவில்லை. ஆனால் ஒன்று. சென்ற உலக மகா யுத்தத்தின்போது கொஞ்சநாள் நாங்கள் சிறையில் இருந்தோம். அப்புறம் கொஞ்சம் நாள் வெளியில் இருந்தோம். அப்போது ஒன்றைக் கவனித்தோம். அவருக்கு எவ்வளவு வந்தது, இவருக்கு இவ்வளவு வந்தது என்பதாகத்தான். —குறிப்பாக வர்த்தக சமூகத்தினரிடையே பார்த்துக்கொள்ளும் பழக்கம் இருந்தது. அப்போது நாம் அடிமையாக இருந்தோம். "நாம் என்ன சம்பாதிக்கலாம், நமக்கு என்ன கிடைக்கும்" என்றே அப்போது பலர் கவனம் செலுத்தி வந்தார்கள். அப்பொழுது நாட்டைப் பாதுகாப்பதிலே மக்களுக்கு அக்கறையில்லாமல்தான் இருந்தது. நாட்டு மக்களுக்கு ஒற்றுமை உணர்ச்சி ஏற்படாமல் இருந்தது. ஆனால் இன்றைய நிலையிலே மேலும் என்ன கிடைக்கும் என்று எதிர்பார்க்காமல், என்ன கொடுப்போம், நாட்டைப் பாதுகாப்பதற்காக உயிரை வேண்டுமானாலும் கொடுப்போம், என்ற எண்ணம்தான் குடிகொண்டு இருக்கிறது. ஒரு அற்புதமான நிலை இது. இது நமக்கு எல்லாம் நம்பிக்கை அளிக்கக் கூடியதாக இருக்கிறது. உலகம் பாராட்டக்கூடியதாக இருக்கிறது. இது எதிரிகளைத் திடுக்கிடச் செய்கிறது. மேலும், இன்றைக்கு நடைபெறுவது மத்திய ஆட்சியாக இருந்தாலும் சரி, மாநில

11th November 1965] [திரு. எம். பக்தவத்சலம்]

ஆட்சியாக இருந்தாலும் சரி, சாதாரணமாக எதிர்க்கட்சிகள் ஒத்துக்கொண்டாலும் சரி, ஒத்துக்கொள்ளாவிட்டாலும் சரி, அவர்களுக்குக் குறைகள் இருக்கலாம், அவர்கள் வேண்டுகிற மாதிரியெல்லாம் அரசாங்கம் நடந்துகொள்ள முடியாது. ஆட்சியென்றால் கட்சியைப் புகுத்துவதில்லை. இந்த வகையில்தான் இப்பொழுது ஆட்சி நடைபெறுகிறது. பாதுகாப்பு முயற்சியென்றால், முக்கியமாக எல்லோரும் ஒரே மனத்தோடு, ஒருமுகப்பட்டு, ஒரே குரலிலே கட்சிப் பாகுபாடின்றி, கட்சி வித்தியாசங்கள் பாராட்டாமல், கட்சி விருப்பு வெறுப்புக்களை எடுத்துக் கொள்ளாமல், எல்லோருடைய உணர்ச்சியையும், சேவையையும், தியாகத்தையும் உதவியையும் பயன்படுத்திக் கொள்ளவேண்டுமென்ற வகையிலேதான் நாம் நடந்துகொள்ளவேண்டும். அப்படித்தான் நாம் நடந்துகொண்டு வருகிறோம். குறிப்பிட்ட வகையிலே, ஒரு கமிட்டியென்றால், கமிட்டி எப்படி அமைப்பது, இவரைப் போடலாமா, அவரைப் போடலாமா என்பதெல்லாம் வேறு விஷயம். சில பேர்கள் கமிட்டியில் இருக்கலாம், இல்லாமல் இருக்கலாம். கமிட்டி 'காம்பாக்ட்' டாக இருக்கவேண்டுமென்றால் உறுப்பினர்களாக காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்தவர்கள் இருக்கலாம், அல்லது வேறு கட்சியைச் சேர்ந்தவர்கள் இருக்கலாம். அது வேறு விஷயம். ஆனால் பாதுகாப்பு முயற்சியிலே எல்லாச் சக்தியையும் ஒன்று திரட்டி நாட்டின் பாதுகாப்பைப் பலப்படுத்தி சீக்கிரத்திலேயே வெற்றி பெறவேண்டுமென்பதில்தான் நாம் ஈடுபட்டிருக்கிறோம். இங்கிலாந்திலே அப்படி இருந்தது, அங்கே அப்படி இருந்தது, இங்கே இப்படி இருந்தது என்பதெல்லாம் பெரிய விஷயமல்ல.

ஒன்று நான் கூற விரும்புகிறேன். உடனடியாக எனக்குப் புலப்படுவது. இதையே காரணமாகக் காட்டுகிறேன் என்று யாரும் தவறுதலாக எடுத்துக்கொள்ளக் கூடாது. கனம் உறுப்பினர்கள் திரு. கிருஷ்ணமூர்த்தி அவர்களும் திரு. மதியழகன் அவர்களும் குறிப்பிட்டார்கள். இப்பொழுது நாம் பாதுகாப்பு விதிகளின்படி சிலரை 'டிடென்ஷன்' செய்து இருக்கிறோம் என்பதைப்பற்றிக் குறிப்பிட்டார்கள். கனம் உறுப்பினர் திரு. மதியழகன் அவர்கள் 'டிஃபென்ஸ் ஆஃப் இண்டியா ரூல்ஸை' ஆட்சேபிக்கவில்லை. அதை ஆட்சேபித்திருந்தால்கூட நான் உணர்ந்து கொள்ள முடியும். டிபென்ஸ் ஆப் இண்டியா வேண்டியதுதான், "டிபென்ஸ் ஆப் இண்டியா ரூல்ஸ் எதற்கு? அதுதான் நாம் இருக்கிறோமே" என்று சொன்னால்கூட உணர்ந்து கொள்ளமுடியும். ஆனால், அவர் டிஃபென்ஸ் ஆஃப் இண்டியா ரூல்ஸை ஆட்சேபிக்கவில்லை. ஆனால், அதைப் பிரயோகிக்காதீர்கள் என்று சொல்லுகிறார்கள். டிபென்ஸ் ஆப் இண்டியா ரூல்ஸ் இருக்கவேண்டும், ஆனால் அதைத் தொடாதீர்கள், இதுதான் அங்கத்தினர் அவர்களுடைய வாதம். அதற்கு மேலேயும் சொன்னார்கள். சில வழக்குகள் தொடரப்பட்டிருக்கின்றன. அவை ஆண்டி-ஹிந்தி சம்பந்தமான வழக்குகள் என்று சொல்வது தவறு. கலகம் செய்தவர்கள், கொலை செய்தவர்கள் எல்லாம்கூட

[திரு. எம். பக்தவத்சலம்] [11th November 1965

எங்கள் கட்சியைச் சேர்ந்தவர்கள் என்று பொருள்படும்படி சொல்வது தவறு. ஆனால் அந்தத் தவறை கனம் உறுப்பினர் செய்யமாட்டார் என்று நினைக்கிறேன். ஆண்டி-ஹிந்தி வழக்குகள் தான், அவைகளையெல்லாம் இந்த நெருக்கடி நிலையில் விட்டு விட வேண்டுமென்று சொல்வது சரியல்ல. மேலும் இதற்கு கோர்ட் இருக்கிறது, கோர்ட்டார் குற்றவாளி என்று சொல்லலாம், இல்லையென்று சொல்லலாம். ஆகவே நெருக்கடி நிலை வந்துவிட்டது, அதனால் வழக்குகளையெல்லாம் வாபஸ் பெறவேண்டுமென்று சொல்வது சரியல்ல. பத்திரிகைகள் மீதும் வழக்குகள் போடப்பட்டு கோர்ட்டிலே இருக்கின்றன. இனிமேலும் பத்திரிகைகள் மீது வழக்குகள் வரலாம். பத்திரிகைகள் மீது வழக்குகள் தொடரப்பட்டிருக்கலாம். தொடரப்பட வேண்டியிருக்கலாம். அதையெல்லாம் இந்த நிலையிலே நான் குறிப்பிடுவது முறையல்ல. நாட்டின் பாதுகாப்பிற்கு எதிராக, தவறுகளில் ஈடுபட்டால் பாதுகாப்பு விதிகளின்படி நடவடிக்கை எடுத்துக்கொள்ளப்படுகிறது. விசாரணைக்குக் கொண்டு வரப்படவேண்டிய வழக்குகள் சில இருக்கின்றன. விசாரணைக்குக் கொண்டுவரப்படாமல் சில இருக்கின்றன. "பத்திரிகைகள் மீது இன்னும் என்ன நடவடிக்கை?" என்று கேட்டார்கள். அதைக் கோர்ட்டார்தான் முடிவு செய்யவேண்டும். அரசாங்கம் என்ன செய்ய முடியும்? அரசாங்கத்தின் நிலைமையைத்தான் நான் விளக்குகிறேன். திரு. கிருஷ்ணமூர்த்தி அவர்களும், திரு. மதியழகன் அவர்களும், "முஸ்லீம் லீகை வைத்திருக்கிறீர்கள், லட்சக்கணக்கான பத்திரிகைகள் வெளியிடுபவரை வைத்திருக்கிறீர்கள்," என்றெல்லாம் சொன்னார்கள். திரு. கிருஷ்ணமூர்த்தி அவர்கள், "இடதுசாரிக் கம்யூனிஸ்டுகளை ஏன் வைத்திருக்கிறீர்கள்? அவர்களை விட்டுவிட வேண்டும்," என்று சொன்னார்கள். அதற்கு அவர் சொன்ன காரணம் இன்னும் விசித்திரமாக இருக்கிறது. இடதுசாரிக் கம்யூனிஸ்ட் தொழிலாளர்கள் இருக்கிறார்கள். அவர்களும் பணம் கொடுப்பார்கள், இப்பொழுது கொடுப்பதில்லை. பணத்தை வாங்குவதற்குத் தலைவர்களை விட்டுவிடுங்கள் என்று சொன்னார்கள். அவருக்கு இடதுசாரிக் கம்யூனிஸ்டுகளுடன் தொடர்பு இருக்கலாம், தொடர்பு இல்லாமல் அவர் அப்படிச் சொல்ல மாட்டார் என்று நினைக்கிறேன்.

திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி: கனம் முதலமைச்சர் அவர்கள் இடதுசாரிக் கம்யூனிஸ்டுகளோடு என்னையும் சேர்த்து எப்படியாகிலும் சில காரியங்களைச் செய்யவேண்டுமென்று ஆசைப்படுகிறார். உள்ளபடியே அவருக்கு அப்படி ஆசை இருந்தால் நான் அதற்குக் குறுக்கே நிற்கமாட்டேன். இடதுசாரிக் கம்யூனிஸ்டுகளாக இருக்கிற காரணத்தாலே அவர்களைப்பற்றிப் பேசக் கூடாது என்பது முறையல்ல.

கனம் திரு. எம். பக்தவத்சலம்: எனக்கு ஆசையில்லை, நிராசைதான். அது கனம் அங்கத்தினருடைய ஆசையாக இருக்கலாம். தவறுதலான வழியிலே செல்லக்கூடாது என்பதுதான் என்னுடைய ஆசை. இடதுசாரிக் கம்யூனிஸ்டுகளைத் தகுந்தபடி

11th November 1965] [திரு. எம். பக்தவத்சலம்]

தான் வைத்து இருக்கிறோம். அவர்களே என்னிடம் வருகிறார்கள். அவர்களிடம் கேட்டால் அவர்களால் இதை மறுத்துக்கூற முடியவில்லை. வெளியே இருப்பவர்கள் எப்படிப் பேசிவருகிறார்கள் என்பதையும் கனம் அங்கத்தினர் பார்த்திருப்பார்கள். சீனாக்காரர்களுடன் ஒப்பந்தம் செய்துகொள்ளவேண்டுமென்று சொல்லுகிறார்கள். நம்முடைய முன்னாள் பிரதம மந்திரி அவர்கள் உலக சமாதானத்திற்கு வழிகாட்டியவர்கள், உலக சமாதானத்தை மற்ற நாடுகள் எல்லாம் பின்பற்றச் செய்தார்கள். இப்பொழுது நமது பிரதம மந்திரி அவர்கள், "பாகிஸ்தான் மக்கள்மீது நமக்கு வெறுப்பு இல்லை, பாகிஸ்தான் மீது நாம் போர் தொடுக்கவில்லை" என்று சொல்லியிருக்கிறார்கள். சீனாவுடன் சமாதானம் செய்துகொள்ளவேண்டுமென்று சொன்னால், விட்டுக்கொடு என்று தான்—சிக்கிமை, பூடானை இல்லை மற்ற பகுதிகளை விட்டுக்கொடு என்றுதான்—சொல்கிறார்கள். சீனாக்காரனுடன் நாம் பேசவில்லை என்று சொல்லுகிறார்கள். இதிலிருந்தே நாம் இடதுசாரிக் கம்யூனிஸ்டுகளுடைய போக்கை நன்றாகப் புரிந்துகொள்ள முடியும். மத்திய அரசாங்கமும் புரிந்துகொள்கிறது, இந்த அரசாங்கமும் புரிந்துகொள்கிறது. அதன்பேரில் தான் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. அவர்களை விட்டு விடுங்கள் என்று சொல்லுகிறார்கள், இன்னும் முஸ்லீம் லீகைச் சேர்ந்தவர், மன்ற உறுப்பினர் இவர்களையெல்லாம் விட்டுவிடுங்கள் என்று சொல்லுகிறார்கள்.

பத்துப் பேர் இருபது பேரைச் சேர்த்து வைத்துக்கொண்டு 'கேட்டால் பாகிஸ்தான் ரேடியோவைக் கேளுங்கள், பாகிஸ்தான் ரேடியோவில்தான் உண்மை வரும்' என்று சொல்வதாகத் தகவல் வந்தால் அவர்கள் மீது நடவடிக்கை எடுத்துக் கொள்கிறோம். அப்படி இருந்தாலும் பரவாயில்லை அவர்களை விட்டு விடுங்கள் என்று கிருஷ்ணமூர்த்தி அவர்கள் சொல்லுகிறார்களா? சீனாக்காரன் மீது அனுதாபம் கொண்டிருந்தாலும் பரவாயில்லை, விட்டு விடுங்கள் என்று சொல்லுகிறார்களா? கனம் உறுப்பினர் திரு. கிருஷ்ணமூர்த்தி அவர்கள் இன்னும் அவர்களுக்குக் 'காரண்டி' கொடுக்கும் அளவுக்குச் சொல்லவில்லை. இன்னொருவர், "பாகிஸ்தான் ஜிந்தாபாத்" என்று பேசுகிறார் என்றால் அவரை விட்டு விட வேண்டுமா? இன்னொருவர் தமிழ் நாடு தனியாக வேண்டும், அதற்குத் தனி இராணுவம் வேண்டுமென்று இந்த நெருக்கடி நிலைமையில் பேசுவதா? தனி நாடாக வேண்டுமென்பதைத் தி.மு.க.வினர் விட்டுவிட்டார்கள். நான் விடப் போவதில்லை என்று இந்த நெருக்கடி நிலைமையில் பேசுவதை அனுமதித்துக் கொண்டிருப்பதா?

திரு கே. ஏ. மதியழகன்: அதற்குத் தகுந்த முறையில் வழக்குத் தொடரலாம். அந்தக் கட்சியைத் தடை செய்யலாம். அதைப் போய் ஏன் சிதம்பர ரகசியமாக மூடி வைக்கவேண்டும்?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: சிதம்பர ரகசியம், மூடு மந்திரம் எதுவுமில்லை. எது எதை எப்படி எப்படிச் செய்ய வேண்டுமென்பது அரசாங்கத்திற்குத் தெரியும். பிராசிக்யூஷன்

செய்ய வேண்டியவற்றைச் செய்கிறோம். அவ்வாறு செய்யாமல் இல்லை. டிஃபென்ஸ் ஆஃப் இந்தியா ரூல்ஸ் படி தகுந்த காரணத்தோடுதான் நடவடிக்கை எடுக்கிறோம். யார் மீதும் எங்களுக்கு விருப்பு, வெறுப்பு இல்லை. குறைந்தபட்ச அளவுக்குத்தான், தவிர்க்கக்கூடாத வகையிலேதான் நடவடிக்கை எடுத்துக் கொண்டு வருகிறோம். நெருக்கடி நிலைமையைச் சமாளிக்க இது அடிப்படையானது. நிதி கொடுப்பது பெரிதல்ல; தங்கம் கொடுப்பது பெரிதல்ல; விவசாய உற்பத்தியைப் பெருக்குவது பெரிதல்ல; ராணுவத்தினர் குடும்பங்களுக்கு உதவி அளிப்பது பெரிதல்ல. பாதுகாப்புக்கு அடிப்படையாக இருக்கக் கூடியதிலேயே வித்தியாசம் இருப்பதை எப்படி ஏற்றுக் கொள்ள முடியும்? அடிப்படை வித்தியாசம் கொண்டவர்களையும் எப்படிச் சேர்த்து வைத்துக் கொள்ள முடியும்? டிஃபென்ஸ் ஆஃப் இந்தியா ரூல்ஸை பிரயோகிக்கக் கூடாது என்பது எப்படிப் பாதுகாப்புக்கு உகந்ததாக இருக்க முடியும்? 'அடிப்படையில் கருத்து வேற்றுமையுள்ள எங்களையும் அரசாங்கத்தில் சேர்த்துக் கொள்ள வேண்டும்' என்று சொன்னால் அரசாங்கம் எப்படிப் பாதுகாக்க முடியும்?

கனம் சுதந்திராக் கட்சித் தலைவர் அவர்கள் இங்கே மௌனமாக வீற்றிருக்கிறார்கள். அவர்களுடைய பெருந்தலைவர், "காஷ்மீரத்தில் ஓட்டு எடுங்கள்" என்று சொல்லுகிறார். தளவாடங்களைப் பெற அந்நிய நாட்டுச் செலாவணி வேண்டுமென்று பிரதம மந்திரி அவர்கள் வற்புறுத்தி வருகிறார்கள். வேறு நாடுகளை எதிர் பார்க்காது நாட்டின் பாதுகாப்பைப் பலப்படுத்த வேண்டுமென்று கூறி வருகிறார்கள். விவசாய உற்பத்தியைப் பெருக்க வேண்டுமென்றாலும் சில கருவிகள் வாங்க அந்நிய நாட்டுச் செலாவணி வேண்டியிருக்கிறது. அந்த அந்நிய நாட்டுச் செலாவணி நம்மிடம் இல்லை. மத்திய அரசாங்க நிதியமைச்சர் கையை விரிக்கிறார். அதற்காகப் பிரதம மந்திரி அவர்கள் நாட்டு மக்களிடத்திலிருந்து தங்கத்தைப் பெற வேண்டுமென்று கூறுகிறார்கள். உடனே சுதந்திராக் கட்சிப் பெருந்தலைவர் அவர்கள் 'தங்கத்தைக் கொடுக்காதே' என்று கூறுகிறார்கள். பிரதம மந்திரி அவர்களுக்கு 'நல்லவர்' என்ற சர்டிபிகேட்டைக் கொடுத்து விட்டார்கள். அவர் நல்லவர்தான். நல்லவர் என்று சொல்லிவிட்டு எது வேண்டுமானாலும் செய்யலாம். "நான் சொல்கிற 14, 15 பேரை ஆலோசனைக்கு வைத்துக் கொள்" என்று இப்போது சொல்லுகிறார்.

திரு. சா. கணேசன்: கனம் ராஜாஜி அவர்கள் 'தங்கத்தைக் கொடுக்காதே' என்று எங்கு சொன்னார்கள் என்பதை நிரூபிக்க வேண்டிய பொறுப்பு மதிப்பு மிக்க முதலமைச்சர் அவர்களுக்கு உண்டு. சொல்லாததைச் சொன்னதாகப் பேசுவது சரியல்ல. 'பாகிஸ்தானுக்கு அடிமைப்படு' என்று சொன்னதாகவெல்லாம் கூடப் பலர் பேசிக் கொண்டிருக்கிறார்கள். கருத்து வேறுபாடுகள் இருக்கலாம். அதற்காகப் பலர் எதையாவது சொல்லலாம். கனம்

முதலமைச்சர் அவர்கள் 'கொடுக்காதே' என்று சொன்னார் என்று சொல்லாததைப் பற்றிச் சொல்வது பொருத்தமும் அல்ல, நியாயமும் அல்ல என்று கூறிக் கொள்கிறேன்.

கனம் திரு. எம். பக்தவத்சலம்: எனக்குப் பொறுப்பு இல்லாமல் இல்லை. சொல்லாததைச் சொன்னதாகச் சொல்லவில்லை. இதைப் பற்றித் திரு. கோசல்ராம் அவர்கள் பேசும்போது மறுக்கவில்லை.

திரு. கே. டி. கோசல்ராம்: காலையில் இரண்டு பத்திரிகைகளில் அவர் பேசியது வந்திருக்கிறது.

கனம் திரு. எம். பக்தவத்சலம்: எனக்கு விளக்கமாகச் சொல்லும் அளவுக்கு அவ்வளவு தமிழ் வரவில்லை. தங்கம் கொடுக்க வேண்டுமென்று சொல்வது பாதுகாப்புக்கு அவசியமான திட்டம். ரொம்ப அவசியமான திட்டம். அதை வேண்டாம் என்று சொல்லவேண்டாம். "த்ரோயிங் கோல்ட் வாட்டரே' போதும். சுதந்திராக் கட்சித் தலைவர் அவர்களுக்கு அவர்களுடைய பெருந்தலைவர் அவர்களிடத்திலே விஸ்வாசம் இருந்தாலும், அதை மறுக்காமல் இருந்தாலே போதுமானது. ஆதரிக்க வேண்டாம். 'டிடென்ஷனில் இருப்பவர்களை விட்டு விடுங்கள், டிபென்ஸ் ஆப் இந்தியா ரூல்ஸைப் பிரயோகிக்காதீர்கள்' என்றெல்லாம் சொல்கிறார்கள். நெருக்கடி நிலைமையில் குறை கூடச் சொல்லக் கூடாது என்று நான் ஒரு காலும் சொல்லமாட்டேன். குறை சொல்வதை வரவேற்கிறேன். நீங்கள் குறை சொல்வதைப் பற்றி நான் குறை சொல்லவில்லை. டிபென்ஸ் ஆப் இந்தியா ரூல்ஸைப் பிரயோகிப்பதிலேயே அடிப்படையான கருத்து வேற்றுமை இருக்கும்போது எப்படி அரசாங்கத்தில் எல்லோரையும் சேர்த்துக் கொள்வது? (குறுக்கீடு: நாங்கள் சொல்லவில்லை) கேட்டவர்களுக்குச் சொல்கிறேன். கேட்கிறவர்களுக்குச் சொல்கிறேன். என்னிடம் சில பேர் வருவது உண்டு. "நான் ரொம்ப நாளாகக் கதர் கட்டிக் கொண்டிருக்கிறேன்" என்பார். நான் கதரைக் குறை சொல்கிறேன் என்று கதர் அபிமானிகள் கருதக்கூடாது. ரொம்ப நாளாக நாலணா மெம்பர் என்று சொல்கிறார். பாதுகாப்புக்காகப் பத்தாயிரம் ரூபாய் கொடுத்திருக்கிறார்கள். அதைக் கொடுத்து விட்டு எதை வேண்டுமானாலும் செய்யலாமா? பத்தாயிரம் ரூபாயைக் கொடுத்து விட்டுப் பாதுகாப்புக்கு விரோதமாகக் குழி தோண்டலாமா? அதற்கு நேர் விரோதமாக நடந்து கொள்ளலாமா?

கனம் சபாநாயகர்: தங்களுடைய பாதுகாப்புக்காகக் கொடுத்திருப்பார்கள்.

கனம் திரு. எம். பக்தவத்சலம்: அது அவர்களுடைய பாதுகாப்புக்கும் நல்லதல்ல. பாதுகாப்புக்கு உரிய வகையில் நடந்து கொள்ளவேண்டும். தவறுதலான வகையில் நடந்து கொள்ளக் கூடாது. எதிர்க்கட்சி கனம் அங்கத்தினர்கள் திரு. மதியழகன் அவர்களும், திரு. கிருஷ்ணமூர்த்தி அவர்களும் இன்றைக்கு

[திரு. எம். பக்தவத்சலம்] [11th November 1965

வேண்டுமானாலும் அப்படிப்பட்டவர்களிடமெல்லாம் சொல்லி அவர்களுடைய கருத்தை மாற்றச் செய்யவேண்டும். தேசிய சர்க்கார் அமைக்க வேண்டும் என்று இங்கிலாந்தை எடுத்துக் காட்டுகிறார்கள். எதை எடுத்துக் கொண்டாலும் இங்கிலாந்து தானா? இங்கிலாந்தில் இப்படிச் சொல்பவர்கள் இல்லை. இங்கிலாந்து தேசிய சர்க்காரில் இருந்தவர்களுக்கு இப்படிப்பட்ட அடிப்படையான கருத்து வேறுபாடுகள் இல்லை. இங்கிலாந்திலும் ஐந்தாம் படையினர் இருந்தார்கள். ஆனால் அவர்கள் தேசிய சர்க்காரில் இல்லை. ஒருமுகமாகப் பாதுகாப்புக்கு என்ன செய்வது என்று திட்டமிட்டு ஒரே அபிப்பிராயத்தோடு ஏகோபித்து பாதுகாப்புக்காக எல்லா பலத்தையும் திரட்டினார்கள். அந்த வகையில் தேசிய சர்க்கார் ஏற்படுத்தினார்கள். தேசிய சர்க்கார் என்றால் என்ன என்று நன்றாகப் புரிந்து கொள்ளவேண்டும். இப்போதுள்ள அரசாங்கத்திற்குத் தாங்களே எல்லாவற்றையும் அனுபவிக்க வேண்டுமென்ற எண்ணம் இல்லை. நாட்டைப் பாதுகாக்க வேண்டுமென்ற எண்ணந்தான் இருக்கிறது. 'எல்லோரும் பாதுகாப்புக்காக கட்சி வேற்றுமைகளை மறந்து ஒருமுகமாகப் பாதுகாப்புப் பணிகளிலே கவனம் செலுத்துவோம்' என்று கட்சித் தலைவர்கள் எல்லாம் வழிகாட்டியிருப்பதற்காக நான் முதலிலேயே பாராட்டுத் தெரிவித்தேன். அந்த வழியைப் பின்பற்றி நடந்து வருகிறார்கள் என்றால் அது பெருமைப் படக் கூடிய விஷயம், திருப்திபட வேண்டிய விஷயம். அப்படிப்பட்டவர்கள் எல்லோரையும் அரசாங்கம் நல்ல முறையில் பயன்படுத்திக் கொள்ளும் என்பதில் ஐயமில்லை. அடிப்படை விஷயங்களில் வேறு கருத்துக்கள் தெரிவித்துக் கொண்டிருந்தால் அது நல்லதல்ல. அரசாங்கத்திற்குக் கடமை இருக்கிறது, பொறுப்பு இருக்கிறது. யார் நாட்டின் பாதுகாப்புக்குக் குந்தகமாக நடந்து கொண்டாலும் நிர்த்தாட்சண்யமாக நடவடிக்கை எடுத்துக் கொள்ளப்படுகிறது. விருப்பு வெறுப்பு இல்லை. கருத்து வேற்றுமை இருந்தாலும் பாதுகாப்பு முயற்சிகளில் எவ்வப்போது சேர்த்துக் கொள்ள வேண்டுமோ அவ்வப்போது எல்லோரையும் சேர்த்துக்கொள்கிறோம். மேலும் இந்த மன்றத்தின் காலத்தை எடுத்துக் கொள்ள நான் விரும்பவில்லை. வேறு பல கருத்துக்களையும் கனம் அங்கத்தினர்கள் தெரிவித்திருக்கிறார்கள். அவற்றையெல்லாம் சம்பந்தப்பட்ட இலாகா அமைச்சர்கள் கவனித்து நடவடிக்கை எடுத்துக் கொள்வார்கள் என்று கூறி உரையை முடித்துக் கொள்கிறேன்.

1-00 p.m. MR. SPEAKER: The question is—

'That the Madras Appropriation (No. 6) Bill, 1965 (L.A. Bill No. 44 of 1965), be taken into consideration.'

The motion was put and carried and the Bill was taken into consideration.

Clause 2 and the Schedule were put and carried.

Clause 1, the Enacting Formula and the Long Title were put and carried.

N211.51 N65
N65.32.2

11th November 1965]

THE HON. SRI M. BHAKTAVATSALAM: Sir, I move—

'That the Madras Appropriation (No. 6) Bill, 1965 (L.A. Bill No. 44 of 1965) be passed.'

The motion was put and carried and the Bill was passed.

IV.—ANNOUNCEMENTS—*cont.*

(2) THE MADRAS UNIVERSITY (AMENDMENT) BILL, 1965.

MR. SPEAKER: I have to announce to the House that the Governor has given his recommendation to the consideration by the Madras Legislative Assembly of the Madras University (Amendment) Bill, 1965.

VI.—GOVERNMENT BILLS—*cont.*

(3) THE MADRAS UNIVERSITY (AMENDMENT) BILL, 1965 (L.A. BILL NO. 42 OF 1965).

THE HON. SRI M. BHAKTAVATSALAM: Mr. Speaker, Sir, I move—

'That the concurrence of the Legislative Council be obtained for setting up a Joint Select Committee of both the Houses consisting of 18 Members (12 members of the Legislative Assembly and 6 Members of the Legislative Council) to consider the Madras University (Amendment) Bill, 1965 (L.A. Bill No. 42 of 1965) and that the following members of the Legislative Assembly be selected to serve on such a Joint Select Committee:—

1. The Hon. Sri M. Bhaktavatsalam.
2. Sri N. Mahalingam.
3. Sri K. S. Subramania Gounder.
4. Sri B. Parameswaran.
5. Srimathi T. N. Anandanayaki.
6. Sri K. B. Palani.
7. Sri T. Karcha Gowder.
8. Sri M. Kalyanasundaram
9. Sri Saw. Ganesan.
10. Sri K. A. Mathialagan.
11. Pulavar K. Govindan.
12. Sri N. Rajangam.

64928

Honourable Members are aware that the Madras University Act, 1923 was put up on the statute book in the year 1923 and that no amendment of a substantial nature was made to the Act since 1929. In the year 1947, the Senate of the Madras University made certain suggestions for amending the Act in the light of the experience gained in its working. In 1948, the Government constituted a high level committee to examine the provisions of the

a Published in the *Fort St. George Gazette* Extraordinary, dated 10th November 1965.

Act and to suggest such amendments as may be necessary. The committee considered the suggestions made by the Senate and recommended amendments to several sections of the Act. The recommendations of the committee were examined by the Syndicate of the Madras University and almost all the recommendations were accepted. The Government decided to undertake legislation to amend the Act to give effect to the recommendations of the committee.

In the meantime, certain changes have taken place in the field of local administration, in the pattern of University education and in the Directorate of Public Instruction. It was also decided to undertake legislation to establish a University at Madurai. The Madurai University Bill, 1965, which was introduced in the July session of this House was referred to a Joint Select Committee of both the Houses of the Legislature and the Bill as amended by the Committee has since been passed by this House.

Consequent on the changed set-up and the passing of the Madurai University Bill it has become necessary to undertake legislation to amend the Madras University Act not only to give effect to the recommendations of the high level committee but also to bring the provisions of the Act in conformity with the provisions of the Madurai University Bill as passed by this House.

I shall now briefly indicate the important changes proposed to be made in the existing Act. According to the scheme of the Madras University Act, there are two types of colleges recognised by the University. There are what are known as constituent colleges and other colleges affiliated to the University which provide courses of study for admission to the examinations for degrees of the University. There are certain other colleges which are known as oriental colleges which provide for courses of study for admission to the examinations for titles and diplomas of the University. Besides Oriental colleges, there are certain other colleges which provide for courses of study for admission to the Pre-University examination. These colleges are recognised by the University of Madras as approved colleges. It is now proposed to have only two broad categories of colleges, namely affiliated colleges and approved colleges. Affiliated colleges will be those colleges which provide for courses of study for admission to the examination for degrees of the University while approved colleges will be colleges which provide courses of study for admission to the examinations for titles and diplomas and the Pre-University examination of the University.

In regard to the appointment of the Vice-Chancellor of the University, the Madurai pattern is proposed to be adopted. A committee consisting of three members of whom one shall be nominated by the Senate, one shall be nominated by the Syndicate and the third shall be nominated by the Chancellor, will recommend a panel of three names. Out of this panel, the Chancellor will appoint a person as the Vice-Chancellor.

With the establishment of the Madurai University, the jurisdiction of the Madras University will be considerably reduced. The colleges and institutions situate in the four districts of Madurai, Ramanathapuram, Tirunelveli and Kanyakumari, which are either affiliated to or approved by the Madras University will hereafter be colleges or institutions affiliated to or approved by the Madurai University. Therefore, the Syndicate and the Academic Council of the Madras University need not have as much representation as in the existing Act. Hence, it is proposed to slightly alter the constitution of the University authorities not only with a view to making them compact bodies but also with a view to giving representations or greater representations to certain sections and interests on those bodies. All persons who make a donation of not less than Rs. 50,000 to the University will be life-members of the Senate. Headmasters of high schools and members of local authorities will have larger representations in the Senate.

It is proposed to have a Finance Committee as one of the authorities of the University, as in the Madurai University Bill. The Finance Committee will consist of the Vice-Chancellor, the Secretary to Government in charge of Education and three members nominated by th eSyndicate. The Finance Committee will scrutinise the annual estimates of income and expenditure prepared by the Syndicate.

With regard to registration of graduates, it is proposed to adopt the Madurai pattern. A graduate of any University in the territory of India who is ordinarily resident in the State of Madras except the districts of Madurai, Ramanathapuram, Tirunelveli and Kanyakumari will be eligible for registration for a period of five years. The registered graduates will have to renew the registration every five years.

With these words, I commend the motion for the acceptance of the House.

MR. SPEAKER: The motion is now before the House for discusssion.

* **திரு. இரா. நெடுஞ்செழியன்:** கனம் அவைத் தலைவர் அவர்களே, சென்னை பல்கலைக் கழகத் திருத்த மசோதாவைப் பொறுக்குக் குழுவிற்கு விட வேண்டுமென்று கனம் முதல் அமைச்சர் அவர்கள் இங்கு தீர்மானம் கொண்டு வந்திருக்கிறார்கள். சென்னை பல்கலைக் கழக சட்ட திட்டங்கள் இப்போதிருக்கிற நிலைக்கேற்ப திருத்தியமைக்கப்பட வேண்டுமென்ற நோக்கத்தோடும், அண்மையில் நிறைவேற்றப்பட்ட மதுரை பல்கலைக் கழகத்தினுடைய சட்டத்தில் செய்யப்பட்டிருக்கிற சில பல மாறுதல்களை சென்னை பல்கலைக் கழகத்தைப் பொறுத்தவரையிலும் பொருந்த வேண்டுமென்ற நோக்கத்தோடும் இந்த மசோதா கொண்டு வரப்பட்டுள்ளது, இதைப் பொறுக்குக் குழுவிற்கு விடுவதன்

[திரு. இரா. நெடுஞ்செழியன்] [11th November 1965

காரணத்தால் இந்த மசோதாவை நல்ல முறையில் ஆராய்ந்து சாதக பாதகங்களை எல்லாம் ஆய்ந்து அந்த முறையில் திருத்தங்கள் கொண்டு வருவதற்கு நல்ல வாய்ப்புகள் இருக்கின்றன.

மதுரை பல்கலைக் கழகச் சட்டத்தில் ஏற்படுத்தப்பட்ட சில பல மாறுதல்களையொட்டி அவற்றை சென்னை பல்கலைக் கழகத்திலும் கொண்டு வருவதற்காக இந்த மசோதா கொண்டு வரப்பட்டிருக்கிறது என்று கூறினார்கள். சிலவற்றிலே நாம் நல்ல அனுபவம் பெற்ற பிறகு நல்லதொரு முடிவு எடுப்பது கூட நன்றாக அமையும். சில பல முடிவுகளைப் பொறுத்தவரையிலே மதுரைப் பல்கலைக் கழகத்தின் அனுபவங்களை நாம் காணவேண்டியவர்களாக இருக்கிறோம். அது எந்த அளவு பணியாற்ற இருக்கிறது என்பதைக் கண்டறிந்து அந்த அனுபவத்தையொட்டி பிறகு சென்னை பல்கலைக் கழகத்தைப் பொறுத்து மாற்றினால் நல்லது. சென்னை பல்கலைக் கழகத்தையொட்டி நடப்பது நல்லது என்று அனுபவத்தை ஒட்டி வருமானால் அப்போது அந்த அளவிற்கு மதுரை பல்கலைக் கழக மசோதாவைத் திருத்தவேண்டிய அவசியம் ஏற்பட்டாலும் ஏற்படக்கூடும். பல்லாண்டு காலமாகவே திருத்தங்கள் பல இயற்ற வேண்டுமென்று, சென்னை பல்கலைக் கழக செனட் தீர்மானம் கொண்டு வந்து, அது நிறைவேறாத நிலையில் இப்போதுதான் கொண்டு வரப்படுகிறது என்றும் தெரிவித்தார்கள். ஆனால், சென்னை பல்கலைக். கழகத்தைப் பொறுத்தவரை காலத்திற்கேற்ற படி, இப்போது நாம் மேற்கொண்டிருக்கிற நோக்கங்கள், குறிக்கோள்கள் இவை ஈடேறுகிற வகையில் சில பல திருத்தங்களைச் செய்யவேண்டியிருக்கிறது என்பதை உணருகிறோம். சில பல மாறுதல்கள் தேவைப்படுகின்றன. சிலவற்றைப் பொறுத்த வரையில், மதுரைப் பல்கலைக் கழகத்தில் நாம் புதிதாக அனுபவம் பெற வேண்டியவர்களாக இருக்கிறோம். அந்த அனுபவத்தையொட்டி மாற்றக் கூடியவை இங்கு அமையக் கூடும். இந்தப் பிரச்சினைகளை எல்லாம் ஆராய்ந்து நல்ல முறையில் முடிவுகள் எடுக்க, எடுக்கப்பட்ட முடிவுகள் வேறு பல்கலைக்கழகங்களுக்கு எடுத்துக்காட்டாக விளங்கும் வகையில் அமையவேண்டும்.

இந்தியாவில் ஏற்பட்டிருக்கிற பழமையான பல்கலைக்கழகங்களில் பெயரோடும் புகழோடும், ஒழுங்கு முறைகளுக்கு அடிப்படையாக விளங்கி வருகிற பல்கலைக் கழகம் நம் சென்னைப் பல்கலைக் கழகமாகும். அந்தப் பெருமையையும், புகழையும் மேலும் நிலை நாட்டுகிற வகையில் மற்ற பல்கலைக் கழகங்களுக்கு ஒரு எடுத்துக் காட்டாக விளங்குகிற நிலையில் திருத்தியமைக்கப்பட வேண்டும். அதற்கு, பொறுக்குக் குழுவிற்கு இதை விட்டிருப்பது நல்ல வாய்ப்பை அளிப்பதாகும். மதுரைப் பல்கலைக்கழகம் அடுத்த ஆண்டு துவக்கத்தில் துவக்கப்படவேண்டும் என்ற அடிப்படையில் அவசரமாக மதுரைப் பல்கலைக் கழகத்தினுடைய திருத்த மசோதாவைப் பொறுக்குக் குழுவில் கண்டாராய்ந்து அதை நிறைவேற்றி அதற்காக நடவடிக்கைகளை எடுக்கவேண்டிய

11th November 1965] [திரு. இரா. நெடுஞ்செழியன்]

அவசியம் ஏற்பட்டது. ஆனால் சென்னை பல்கலைக் கழகத்தைப் பொறுத்தவரை, திருத்தங்கள் இயற்றும்போது மிக விரிவான முறையில் ஆராய்ந்து, செனட் அவையின் கருத்துக்களையும் ஆராய்ந்து, பல்வேறு கல்லூரி முதல்வர்களின் கருத்துக்களையும் ஆராய்ந்து கல்வித்துறையில் உள்ள வல்லுனர்களின் கருத்துக்களையும் ஆராய்ந்து அதற்கேற்றபடி வேறு பல பல்கலைக் கழகங்களையும் கண்டு ஆராய்ந்து, வேறு புதுத் துறைகளிலும் கவனம் செலுத்துவதற்கு அவற்றை ஏற்படுத்துகிற வகையிலும் ஆராய்ந்து இந்தத் திருத்த மசோதாவைச் சட்டமாகக் கொண்டு வருவது நல்லது. இந்தக் கருத்துக்களை மனத்தில் கொண்டு பொறுக்குக் குழுவினர் நல்ல முறையில் பரிசீலனை செய்து, சிறந்த முறையில் பல திருத்தங்களை உருவாக்கி, மீண்டும் இந்த மன்றத்திற்கு மசோதாவை வைப்பார்கள் என்று நம்பி என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

*** கனம் திரு. எம். பக்தவத்சலம்:** கனம் சபாநாயகர் அவர்களே, நான் முன்பு தெரிவித்தது போல் சென்னைப் பல்கலைக் கழகம் 1923-ல் ஏற்பட்டது. அப்போதிருந்தே பல திருத்தங்கள் செய்ய வேண்டும் என்று பல குழுக்கள் ஆராய்ந்திருக்கின்றன. அரசாங்கத்திற்கும் இது தெரிவிக்கப்பட்டிருந்தது. நீண்ட காலமாகவே இந்த ஆலோசனைகள் இருந்து வந்தன. இதற்கிடையே இரண்டு, மூன்று ஆண்டு காலமாகவே மதுரையில் பல்கலைக் கழகம் ஏற்படுத்துவது பற்றி ஆலோசிக்கப்பட்டது. . இதைப்பற்றி கனம் எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் குறிப்பிட்டார்கள். அடுத்த ஆண்டிலேயே இதை நடைமுறைக்குக் கொண்டு வர வேண்டும் என்பதற்காக அவசரமாக இதை இயற்றினோம் என்று சொன்னார்கள். அது சரியல்ல. பொறுக்கு கமிட்டியினர் பல நாட்களாக இதைப்பற்றி ஆலோசித்தனர். இப்போது அல்ல, நவம்பராக இருந்தாலும் சரி, டிசம்பராக இருந்தாலும் சரி, அப்போதும் கொண்டு வரலாம் என்று தான் இருந்தது. யாரும் அவசரப்படவில்லை. பொறுக்குக் கமிட்டியும் அவசரப்படவில்லை. துருவித் துருவிப் பார்த்து பல திருத்தங்களைச் செய்துதான் இந்த மசோதா கொண்டு வரப்பட்டது. அந்த முறையில் இதைக் கொண்டு வந்த பின்னால் சென்னை பல்கலைக் கழகத்தைப்பற்றிய திருத்தத்தை எடுத்துக்கொள்ளலாம் என்பது தான் நம்முடைய நோக்கமாக இருந்தது. எல்லோரையும் கேட்டு, நிரந்தரமான ஒரு முறையில் சட்டங்கள் இருக்க வேண்டும் என்பது முடியாத காரியம். அதோடு ஒரு பல்கலைக்கழகம் இன்னொரு பல்கலைக் கழகத்தோடு சிறிது வித்தியாசமாக இருக்கிறது. எல்லாப் பல்கலைக் கழகமும் ஒரே மாதிரியாக இருக்கவேண்டும் என்பதில்லை. பொறுக்குக் கமிட்டியினர் இதை நன்றாக ஆராயவில்லை என்று சொல்ல முடியாது. அடிப்படையான சில திருத்தங்கள் ஒரே மாதிரியாக இருக்க வேண்டும் என்பது தான் கருத்து. அந்த முறையில் தான் திருத்தங்களை மட்டும் இதில் செய்யலாம் என்று சொல்லப்பட்டிருக்கிறது. இல்லையென்றால், வேறு ஒரு சட்டமே கொண்டு வந்திருக்கலாம். ஆகவே, இதை அங்கத்தினர்கள்

[திரு. எம். பக்தவத்சலம்] [11th November 1965

ஏற்றுக்கொள்வதோடு, பொறுக்குக் குழுவினர் இதைப்பற்றி ஆலோசித்து நல்ல முடிவுகளைச் செய்வார்கள் என்றும் நம்பலாம் என்பதைத் தெரிவித்துக் கொண்டு முடித்துக்கொள்கிறேன்.

MR. SPEAKER : The question is—

"That the concurrence of the Legislative Council be obtained for setting up a Joint Select Committee of both the Houses consisting of 18 members (12 members of the Legislative Assembly and 6 members of the Legislative Council) to consider the Madras University (Amendment) Bill, 1965 (L.A. Bill No. 42 of 1965) and that the following members of the Legislative Assembly be selected to serve on such a Joint Select Committee :—

1. The Hon. Sri M. Bhaktavatsalam.
2. Sri N. Mahalingam.
3. Sri K. S. Subramania Gounder.
4. Sri B. Parameswaran.
5. Srimathi T. N. Anandanayaki.
6. Sri K. B. Palani.
7. Sri T. Karcha Gowder.
8. Sri M. Kalyanasundaram.
9. Sri Saw. Ganesan.
10. Sri K. A. Mathialagan.
11. Pulavar K. Govindan.
12. Sri N. Rajangam.

The motion was put and carried.

(4) THE MADRAS GENERAL SALES TAX (THIRD AMENDMENT) BILL, 1965 (L.A. BILL NO. 36 OF 1965).

THE HON. SRI R. VENKATARAMAN : Sir, I move—

"That the Madras General Sales Tax (Third Amendment) Bill, 1965 * (L.A. Bill No. 36 of 1965) be taken into consideration."

கனம் சபாநாயகர் அவர்களே, நிதிநிலையை அதிகரிக்க வேண்டும். நாட்டினுடைய பாதுகாப்பு, ராஜ்யத்தினுடைய வளர்ச்சி இதற்கான நிதி அவசியத்தையொட்டி சில வரிகளை விதிப்பது என்று நம்முடைய முதலமைச்சர் அவர்கள் குறிப்பில் கொடுத்திருக்கிறார்கள். அதையொட்டி விற்பனை வரி சட்டத்தைத் திருத்தி சில வரி விதிப்புகளுக்கு ஏற்பாடு செய்திருக்கிறோம். அந்த வரிவிதிப்பை இரண்டு மூன்று பிரிவுகளாகப் பிரித்து விளக்க முடியும். முதலாவது multi-point tax என்ற பலமுனை விற்பனை வரி இனத்தில் 2 சதவிகிதம் என்பதை 2½ சத விகிதம் என்று உயர்த்துவது என்று முடிவு செய்திருக்கிறோம்.

* Published in the *Fort St. George Gazette* Extraordinary, dated 6th November 1965.

11th November 1965] [திரு. ஆர். வெங்கட்டராமன்]

அடுத்தாற்போல், single-point tax என்ற அளவில், சில பொருள்கள் மீது, அதாவது 'லக்சுரி குட்ஸ்' என்று சொல்லப்படும் பொருட்கள் மீது, அதாவது ஷெட்யூலில் 1 முதல் 14 வரை சொல்லப்பட்டிருக்கும் மோட்டார் கார், ரேடியோ போன்ற பொருட்கள் மீது, 10 சத விகிதத்திலிருந்து 11 சத விகிதம் என்று ஒரு முனை வரி விதிப்பதாக இப்போது மசோதாவில் பிரேரேபித்து இருக்கிறேன். அடுத்து இதா ஒரு முனை வரியைப் பொறுத்தவரையில்—வேறுபட்ட பல பொருட்களுக்கும் 3 சத விகிதம், 5 சத விகிதம், ½ சத விகிதம் என்றெல்லாம் இருக்கின்றன. உதாரணமாக தங்கத்திற்கு ½ சத விகிதம் என்றிருக்கிறது. இதை மாற்றி 1 சத விகிதம் என்று போட்டிருக்கிறோம். ஷெட்யூலில் 1 முதல் 14 வரையில் உட்படாத மற்ற இனங்களுக்கு எல்லாம் ½ சத விகிதம் சேர்த்து உயர்வு என்று போட்டிருக்கிறோம். அதை ஒரு முனை வரியாகச் செய்திருக்கிறோம். இதில் குறிப்பாக இரண்டு விதிவிலக்கு கொடுத்திருக்கிறோம். ஒன்று, உணவுப் பொருட்களுக்கு 1 சத விகிதம் என்றிருக்கிறது. அதை உயர்த்தவில்லை. இரண்டாவது, சிறு வியாபாரிகளுக்கு இப்போது—அதாவது 50 ஆயிரம் ரூபாய் வரையிலும் வியாபாரம் செய்கின்றவர்களுக்கு விற்பனை வரியை 'கம்பௌண்ட்' செய்து கொள்ளலாம் என்றிருக்கிறது. ஆனால், இப்போது 2 சத விகிதம் என்றிருப்பதை 2½ சத விகிதம் என்று உயர்த்துவதின் காரணமாக இந்த 'கம்பௌண்ட்' செய்து கொள்வதிலும், கால் மடங்கு உயர்த்த வேண்டும். சிறு வியாபாரிகளுக்கு நிவாரணம் அளிக்க வேண்டும் என்பதற்காக, இதை நாம் உயர்த்தவில்லை. இப்போது என்ன ரேட்டில் கொடுத்துக் கொண்டிருக்கிறார்களோ அதையே கொடுத்தால் போதும் என்று சொல்லியிருக்கிறோம். 50 ஆயிரம் ரூபாய் வரை வியாபாரம் செய்கின்றவர்களுக்கு இப்போது இருக்கின்ற நிலையையே நாம் நீடிக்க வழி செய்திருக்கிறோம்.

அடுத்தாற்போல், சில புது பண்டங்களுக்கு வரி விதிக்க முன் வந்திருக்கிறோம். இப்போது நமது நாட்டில் அலுமினியத் தொழிற்சாலை ஏற்படுத்தி, அலுமினியம் உற்பத்தியாகி வெளியில் வந்து விட்டது. இதில் உற்பத்தியாகின்ற பொருட்களுக்கு முதலில் 5 சத விகிதம் போடலாம் என்று முடிவு செய்திருந்தோம். இதை இப்போது எல்லாப் பண்டங்களுக்கும் போட்டிருப்பது போல், அரை சத விகிதம் சேர்த்து 5½ சத விகிதம் என்று போட்டிருக்கிறோம். அதே போன்று தான் காஸ்டிக் சோடா உற்பத்தி செய்கிறோம். அதற்கும் 5½ சத விகிதம் என்று போட்டிருக்கிறோம். இந்தச் சட்டத்தைப்பற்றி சொல்லுகின்ற பொழுது, குறிப்பாக இதனால் விலைவாசிகள் ஏறத்தான் செய்யும். ஏறாது என்று என்னால் வாதிக்க முடியாது. நெருக்கடியான நேரம் ஏற்படுகிற பொழுது, எல்லா நாடுகளிலும் பொருட்களின் உபயோகத்தைக் குறைத்துக் கொண்டு நாட்டில் சிக்கனத்தைத்தான் கடைப்பிடிப்பார்கள். வேறு வழியில் இதைச் சமாளிக்க முடியாது. அதே போன்று தான் நம் நாட்டிலும் ஏற்பட்டிருக்கின்ற நெருக்கடியின் காரணமாக, வரி விதிக்க வேண்டிய கஷ்டமான நிலைமை ஏற்பட்டிருந்தாலும் கூட, அதைச் சமாளிப்பதற்கு மக்கள்

எல்லோரும் முன்வந்து, பண்டங்களை உபயோகிப்பதைக் குறைத்துக் கொண்டு நாட்டில் பெரிய சிக்கனத்தை, ஏற்படுத்துவதின் மூலமாக, அந்தப் பண்டங்களையெல்லாம் நம்முடைய நாட்டின் பாதுகாப்பிற்காக, இராணுவத் தேவைகளுக்காக அனுப்பிக் கொடுக்க வேண்டியது நம்முடைய கடமையாகும். ஆகவே, இந்த மசோதாவை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

MR. SPEAKER : Can we adjourn now?

SRI V. R. NEDUNCHEZHIYAN : Yes, Sir.

MR. SPEAKER : The House will now adjourn and meet again at 8-30 a.m. to-morrow.

1-20 p.m. The House then adjourned.

VII.—PAPERS LAID ON THE TABLE OF THE HOUSE.

A Statutory Rules and Orders.

'*Nil*'.

B. Reports, Notifications and other papers.

89. *Notification issued with G.O. Ms. No.* 3253, *Food and Agriculture, dated the 27th September* 1965, *amending the Regulation of Fishing in Palk's Bay Rules*, 1961, *published with Food and Agriculture Department Notification S.R.O. No. A-*987 *of* 1961, *dated the 22nd September* 1961, *at pages* 1029–1030 *of Part V of the* Fort St. George Gazette, *dated the 4th October* 1961, *the same having been previously published as required by sub-section* (6) *of section* 6 *of the Indian Fisheries Act*, 1897 (*Central Act IV* of 1897).

90. *List of Unstarred questions containing questions and answers from Nos.* 16 *to* 24.

91. *Report of the Committee of Privileges on 'Nathigam' case.*

92. *Eleventh and Twelfth Reports (Third Assembly) of the Committee on Subordinate Legislation.*

* 93. *The Glanders and Farcy (Amendment) Bill*, 1965 (*L.A. Bill No.* 39 *of* 1965) *with annexure.*

* 94. *The Madras University (Amendment) Bill*, 1965 (*L.A. Bill No.* 42 *of* 1965).

* 95. *The Madras Appropriation (No.* 5) *Bill*, 1965 (*L.A. Bill No.* 43 *of* 1965).

* 96. *The Madras Appropriation (No.* 6) *Bill*, 1965 (*L.A. Bill No.* 44 *of* 1965).

* 97. *The Madras Forest (Amendment) Bill*, 1964 (*L.A. Bill No.* 39 *of* 1964).

* Despatched to Members on 10th November 1965.

APPENDIX I.

[*Vide* answer to starred question No. 457 on page 803 supra]

74 Bridges have been completed. 8 bridges are in progress and 14 are yet to be taken up, as furnished in the list below :—

List of bridges proposed and constructed across Parambikulam Main Canal.

Serial number	and mileage.	Village to which connected.	Present stage of work.
	(1)	(2)	(3)
	M. F. Y.		
1	0—7— 00	..	Completed.
2	3—6—095	Dhali to Anamalai	Do.
3	4—7—330	..	Do.
4	5—3—390	..	Do.
5	5—7—440	..	Works for columns are in progress.
6	6—4— 00	..	Completed.
7	6—7— 00	Anamalai-Udamalpet	Do.
8	7—0— 00	..	Main works have been completed finishing items are in progress.
9	7—4— 00	..	Completed.
10	8—2—110	..	Do.
11	9—4—330	..	Do.
12	10—0—330	Dhali-Negamam	Do
13	10—1—625	..	Do.
14	10—4—403	Dhali-Negamam	Do.
15	11—4—110	Do.	Do.
16	11—6—110	..	Masonry completed. Centering is done.
17	12—0—190	Railway Bridge	Completed.
18	13—3—440	..	Do.
19	14—1— 00	Pollachi-Palani	Do.
20	14—5—220	..	Do.
21	15—2—319	..	Do.
22	15—6—390	Dhali-Negamam	Do.
23	16—3—220	..	Do.
24	17—2—526	..	Do.
25	18—3—110	..	Do.
26	19—0—550	Pollachi-Dharapuram	Deck slab has been laid. Further works are in progress.
27	20—0—330	..	Masonry work is in progress.

[11th November 1965

Serial number and mileage. (1)		Village to which connected. (2)	Present stage of work. (3)
	M. F. Y.		
28	21—4—110	..	Main works have been completed. Finishing items are in progress.
29	21—7—365	..	Completed.
30	22—3—390	..	Do.
31	23—6—495	Negamam—Dharapuram.	Do.
32	24—2—330	..	Do.
33	26—3—00	..	Do.
34	27—5—440	..	Do.
35	28—4—110	..	Do.
36	29—3—263	..	Do.
37	30—6—640	..	Do.
38	32—2—130	Nagarkolandi-Malayapalayam.	Do.
39	32—4—460	Do.	Do.
40	33—0—450	..	Do.
41	34—2—110	Pollachi-Tiruppur	Completed.
42	35—0—430	Pachapalayam-Poorhaldampalayam.	Do.
43	35—5—000	Pollachi-Tiruppur.	Do.
44	36—0—100	Senjeri-Pooran-dampalayam.	Do.
45	37—0—650	..	Do.
46	37—4—650	..	Do.
47	38—2—400	Komarapalayam—Sultanpet.	Do.
48	38—7—000	Vadavedampatti—Sultanpet.	Do.
49	39—4—650	Vadambacheri—Sultanpet.	Do.
50	40—3—650	..	Centering completed and reinforcement placed in position.
51	42—2—100	..	Completed.
52	43—1—320	..	Do.
53	43—4—540	..	Do.
54	44—3—35	..	Do.
55	45—2—265	..	Do.
56	46—3—260	Udumalpet—Palladam	Do.
57	47—0—490	Senjeri-Koduvai	Do.
58	47—3—60	Vavipalayam road	Do.
59	48—1—540	Kallampalayam-Vavipalayam.	Do.

11th November 1965]

Serial number and mileage. (1)		Village to which connected. (2)	Present stage of work. (3)
	M. F. Y.		
60	49—4—440	Kullampalayam—Muthur	Completed.
61	50—5—170	Kuttaiapalayam Road.	Do.
62	51—0—650	Kollapalayam—Natta goundanpalayam Road.	Do.
63	53—0—110	..	Do.
64	54—1—370	Palladam—Dharapuram	Do.
65	54—7—650	..	Do.
66	55—4—620	Kallimethupalayam—Pertharachall Road.	Do.
67	56—0—605	Gangainaickenpattnam—Itteri.	Do.
68	57—4—630	Kathur-Thirumalai-naickenpalayam.	Do.
69	58—5—190	..	Do.
70	59—0—330	Kathur Karuppalayam Road.	
71	61—3—610	Ittai—Thottampatti	Do.
72	62—2—610	Pongalur—Thottampatti	Work will be started shortly.
73	63—0—135	Kangayam to Palladam	Estimate under sanction.
74	63—2—80	..	Completed.
75	63—5—20	Devanampalayam Road.	Work will be started shortly.
76	64—2—80	..	Completed.
77	65—0—410	..	Do.
78	66—2—608	..	Do.
79	66—5—80	..	Do.
80	68—7—291	..	Do.
81	69—2—605	..	Do.
82	71—0—390	..	In progress.
83	71—2—562	..	Completed.
84	72—0—270	..	Do.
85	72—3—430	..	Do.
86	72—7—000	..	To be taken up.
87	73—2—110	..	Do.
88	74—1—500	..	Do.
89	74—3—440	..	Do.
90	74—6—250	..	Do.
91	75—3—440	..	Do.
92	75—7—00	..	Do.
93	76—3—110	..	Do.
94	77—0—380	..	Do.
95	77—2—220	..	Do.
96	78—1—320	..	Do.

[11th November 1965

பதில்—

பின் வரும் பட்டியலில் குறிப்பிட்டுள்ளவாறு—

74 பாலங்கள் கட்டி முடிக்கப்பட்டும், 8 பாலங்கள் கட்டப்பட்டும் வருகின்றன.

14 பாலங்கள் கட்டுவதற்கான ஆக்கவேலைகள் எடுத்துக்கொள்ளப்படும்.

மரம்பிக்குளம் தலைமைக் கால்வாயின் குறுக்கே கட்ட உத்தேசித்துள்ள, கட்டி முடித்துள்ள பாலங்களின் பட்டியல்.

	தொடரிலக்கமும் மைல்களும். (1) மை. பர். க.	எந்தக் கிராமத்துடன் சேர்க்கப்பட்டுள்ளது. (2)	தற்போதைய வேலை நிலை. (3)
1	0—7—000	..	வேலை முடிந்துவிட்டது.
2	3—6—095	தாளி—ஆனைமலை	,,
3	4—7—330	..	,,
4	5—3—390	..	,,
5	5—7—440	..	வேலை நடைபெற்று வருகிறது.
6	6—4— 00	ஆனைமலை—உடுமலைப் பேட்டை.	வேலை முடிந்து விட்டது.
7	6—7— 00	..	,,
8	7—0— 00	..	முக்கிய பணிகள் முடிந்து விட்டன. இறுதி வேலைகள் நடைபெற்று வருகின்றன.
9	7—4— 00	..	வேலை முடிந்துவிட்டது.
10	8—2—110	..	,,
11	9—4—330	..	,,
12	10—0—330	தாளி—நேகமம்	,,
13	10—1—625	..	,,
14	10—4—403	தாளி—நேகமம்	,,
15	11—4—110	தாளி—நேகமம்	,,
16	11—6—110	..	கட்டிட வேலை முடிந்து விட்டது. கட்டுமான ஆதாரம் முடிந்துள்ளது.
17	12—0—190	ரயில்பாலம்	வேலை முடிந்துவிட்டது.
18	13—3—440	..	,,
19	14—1— 00	பொள்ளாச்சி—பழனி	,,
20	14—5—220	..	,,
21	15—2—319	..	,,
22	15—6—390	தாளி—நேகமம்	,,
23	16—3—220	..	,,
24	17—2—526	..	,,
25	18—3—110	..	,,
26	19—0—550	பொள்ளாச்சி—தாராபுரம்	மேல் தளம் போடப்பட்டிருக்கிறது. மேற்கொண்டு வேலைகள் நடந்து வருகின்றன.
27	20—0—330	..	கட்டிட வேலை நடைபெற்று வருகிறது.
28	21—4—110	..	முக்கிய பணிகள் முடிந்து விட்டன. இறுதி வேலைகள் நடைபெற்று வருகின்றன.
29	21—7—365	..	,,
30	22—3—390	..	,,

11th November 1965]

	தொடரிலக்கமும் மைல்களும். (1) மை. பர். க.	எந்தக் கிராமத்துடன் சேர்க்கப்பட்டுள்ளது. (2)	தற்போதைய வேலை நிலை. (3)
31	23—6—495	நேகமம்—தாராபுரம்	வேலை முடிந்து விட்டது.
32	24— —330	..	,,
33	26—3— 00	..	,,
34	27—5—440	..	,,
35	28—4—110	..	,,
36	29—3—263	..	,,
37	30—6—640	..	,,
38	32—2—130	நாகர்குழந்தை—மலையபாளையம்	,,
39	32—4—460	,,	,,
40	33—0—450	..	,,
41	34—2—110	பொள்ளாச்சி—திருப்பூர்	,,
42	35—0—430	பாசபாளையம்—பூர்உறல்லம் பாளையம்.	,,
43	35—5—000	பொள்ளாச்சி—திருப்பூர்	,,
44	36—0—100	செஞ்சேரி—பூராண்டம் பாளையம்.	,,
45	37—0—650	..	,,
46	37—4—650	..	,,
47	38—2—400	குமாரபாளையம்—சுல்தான் பேட்டை.	,,
48	38—7—000	வடவேடம்பட்டி—சுல்தான் பேட்டை.	,,
49	39—4—650	வடம்பாசேரி—சுல்தான் பேட்டை.	,,
50	40—3—650	..	கட்டுமான ஆதாரம் முடிந்து விட்டது. வலுப்படுத்தப்பட்ட நிலையில் வைக்கப்பட்டுள்ளது.
51	42—2—100	..	வேலை முடிந்து விட்டது.
52	43—1—320	..	,,
53	43—4—540	..	,,
54	44—3—35	..	,,
55	45—2—265	..	,,
56	46—3—260	உடுமலைப் பேட்டை-பல்லடம்.	,,
57	47—0—490	செஞ்சேரி—கொடுவை.	,,
58	47—3—60	வாவிபாளையம் சாலை.	,,
59	48—1—540	குள்ளம்பாளையம்—வாவிபாளையம்.	,, ,,
60	49—4—440	குள்ளம்பாளையம்—முத்தூர்.	,,
61	50—5—170	குட்டைபாளையம் சாலை.	,,
62	51—0—650	கொள்ளப்பாளையம்—நோட்டா கவுண்டர் பாளையம் சாலை.	,,
63	53—0—110	..	,,
64	54—1—370	பல்லடம்—தாராபுரம்.	,,
65	54—7—650	..	,,
66	55—4—620	கள்ளிமேட்டுப் பாளையம் பெர்தாராசால் சாலை.	,,

[11th November 1965

	தொடரிலக்கமும் மைல்களும்	எந்தக் கிராமத்துடன் சேர்க்கப்பட்டுள்ளது.	தற்போதைய வேலை நிலை.
	(1)	(2)	(3)
	மை. பர். க.		
67	56—0—605	கங்கை நாய்க்கன் பட்டிணம்—இட்டேரி.	வேலை முடிந்து விட்டது.
68	57—4—630	காட்டூர்—திருமலை நாய்க்கன் பாளையம்.	,,
69	58—5—190	..	,,
70	59—0—330	காட்டூர்—கருப்பாளையம் சாலை.	,,
71	61—3—610	இட்டேரி—தோட்டம்பட்டி..	,,
72	62—2—610	பொங்கலூர்—தோட்டம் பட்டி..	விரைவில் வேலை தொடங்கப் படும்.
73	63—0—135	காங்கேயம்—பல்லடம்.	முன் மதிப்பு அனுமதிக்கப் படவிருக்கிறது.
74	63—2—80	..	வேலை முடிந்து விட்டது.
75	63—5—20	தெராணும் பாளையம் சாலை.	விரைவில் வேலை தொடங்கும்.
76	64—2—80	..	வேலை முடிந்து விட்டது.
77	65—0—410	..	,,
78	66—2—608	..	,,
79	66—5—80	..	,,
80	68—7—291	..	,,
81	69—2—605	..	,,
82	71—0—390	..	வேலை நடைபெற்று வருகிறது.
83	71—2—562	..	வேலை முடிந்து விட்டது.
84	72—0—270	..	,,
85	72—3—430	..	,,
86	72—7—000	...	மேற்படி வேலை எடுத்துக் கொள்ளப் படவிருக்கிறது.
87	73—2—110	..	,,
88	74—1—500	..	,,
89	74—3—440	..	,,
90	74—6—250	..	,,
91	75—3—440	..	,,
92	75—7—00	..	,,
93	76—3—110	..	,,
94	77—0—380	..	,,
95	77—2—220	..	,,
96	78—1—320	..	,,

APPENDIX II.

[*Vide* answer to unstarred question No. 24 on page 834 supra].

The total number of Gramasahayaks working in the State as on 15—3—1965 is 50,295.

The main functions of the Gramasahayaks are—

(*a*) They should carry out the instructions issued to them from time to time by the District Agricultural Officer or his subordinate regarding the preparation of land for sowing, raising nurseries, manuring, planting, irrigation, inter-cultivation, roguing and thrashing and any other agricultural operations necessary for the production of the best possible seeds which are pure in all respects.

(*b*) They should purchase only the departmental seeds produced from the State Seed Farms required for the entire area specified in the schedule of the Seed Farm agreement.

(*c*) They should carry out the roguing operations in the presence of the District Agricultural Officer or his subordinate.

(*d*) They should harvest the crop (when it is ripe) and do all necessary thrashing, drying and cleaning under the direct supervision of an officer of the Agricultural Department on a well made thrashing floor approved by the Agriculture Department. They should distribute the seeds only to the growers nominated by the panchayats and the seeds to be distributed should be pure, well dried, viable and clean having the prescribed specification of not less than 97 per cent purity and 90 per cent germination. The quantity of seed to be distributed is 350 kg. in the case of paddy and 110 kg. in respect of millets per acre.

[11th November 1965

பதில்.—இம்மாநிலத்தில் (1965-ம், வருடம் மார்ச் மாதம் 15-ந் தேதி வரை உள்ளபடி) அலுவலாற்றும் கிராம சகாயக்குகளின் எண்ணிக்கை 50,295 ஆகும். அவர்களுடைய முக்கிய அலுவல்களாவன—

(அ) விதைப்பதற்கு ஏற்ற வகையில் நிலத்தைப் பண்படுத்தல்; நாற்றுப்பண்ணைகளை ஏற்படுத்தல், எருவடித்தல், நடவு, பாசனம், இடைச் சாகுபடி, களையெடுத்தல், போரடித்தல், எல்லாவிதத்திலும் தூய்மையான சிறந்த விதைகளை உற்பத்தி செய்வதற்கு அவசியமான ஏனைய வேளாண்மை வேலை சம்பந்தமாக மாவட்ட வேளாண்மை அதிகாரி அல்லது அவருக்குக்கீழ் அதிகாரிகள் அவ்வப்போது அளிக்கும் உத்தரவுகளை நிறைவேற்ற வேண்டும்.

(இ) அவர்கள் விதைப்பண்ணை ஒப்பந்தத்தின் அட்டவணையில் குறிப்பிட்டுள்ள பகுதி முழுவதற்கும் தேவையான விதைகளை அரசாங்க விதைப் பண்ணைகளில் வேளாண்மைத் துறையினர் உற்பத்தி செய்கிற விதைகளிலிருந்துதான் வாங்க வேண்டும்.

(உ) அவர்கள் களையெடுக்கும் வேலையை மாவட்ட வேளாண்மை அதிகாரி அல்லது அவருடைய கீழ் அதிகாரியின் முன்னிலையில் செய்ய வேண்டும்.

(எ) அவர்கள் பயிர்களை (அவை முற்றியவுடன்) அறுவடை செய்து, வேளாண்மைத் துறையால் ஏற்றுக் கொள்ளப்பட்ட நன்கமைந்த போரடிக்கும் களம் ஒன்றில், போரடிக்கும் வேலை, உலர்த்தும் வேலை, தூய்மைப் படுத்தும் வேலை ஆகியவற்றைச் செய்யவேண்டும். இவ்வேலைகள் அனைத்தும் வேளாண்மைத் துறை அதிகாரி ஒருவரின் நேரடி மேற்பார்வையில் செய்யப்பட வேண்டும்.

(ஐ) கிராம சகாயக்குகள், பஞ்சாயத்துக்கள் நியமனம் செய்த சாகுபடியாளர்களுக்கு மட்டுமே விதைகளை வழங்க வேண்டும். வழங்கப்பட வேண்டிய விதைகள், நன்கு உலர்ந்தவையாகவும், உயிர்ச்சத்துள்ளவையாயும், தூய்மையானவையாயும் இருக்க வேண்டும். மேலும், 97 சதவிகிதத்துக்குக் குறையாத தூய்மையும், 90 சதவீதம் முளைக்கும் சக்தி கொண்டவையாயும் இருக்கவேண்டும். ஏக்கர் ஒன்றுக்கு நெல் 350 கிலோகிராம், புன்செய்த் தானியங்கள் 110 கிலோகிராம் என்ற கணக்கில் விதைகளை வழங்க வேண்டும்.

64928